
ஃபாரென்ஹீட் 451
ரே பிராட்பரி
க்ரியா

ஃபாரென்ஹீட் 451

ரே ப்ராட்பரி

ஆங்கிலத்திலிருந்து தமிழில்

வெ. ஸ்ரீராம்

பின்னுரை

டாக்டர் இ. அண்ணாமலை

க்ரியா

Fahrenheit 451**, a Tamil translation of the novel by **Ray Bradbury

© 1953 renewed 1981 by Ray Bradbury

Published by arrangement with Don Congdon Associates, Inc.,

Tamil translation copyright © Cre-A:

Tamil translation by V. Sriram

First Edition: November 2014

Published by
Cre-A:
New No. 2, Old No. 25
17th East Street
Kamarajar Nagar
Thiruvanmiyur
Chennai- 600 041
Phone: 72999 05956
Email: creapublishers@gmail.com
Website: www.crea.in

Printed at
Sudarsan Graphics Pvt. Ltd.,
Chennai- 600 017

ISBN: 978-93-82394-12-9

Price: Rs. 180

Cre-A: is a contributor to Bookshare, the world's largest online digital library for people with print disabilities.

நன்றி

- இந்த மொழிபெயர்ப்புக்கான கணிசமான காப்புரிமைக் கட்டணத்தை ஏற்றுக்கொண்ட கணேஷ்குமார் வெங்கடராமனுக்கு;

- மொழிபெயர்ப்பதில் சந்தித்த ஏராளமான பிரச்சினைகளைத் தீர்க்க வெவ்வேறு கட்டங்களில் ஆலோசனை வழங்கி உதவிய டாக்டர் தங்க. ஜெயராமன், டாக்டர் து. நரசிம்மன், டாக்டர் என். சிவராமன், டாக்டர் டி. கே. கோபாலன், என். ரமணி ஆகியோருக்கும், சொல் அவை (www.wordreference.com) நண்பர்கள்

  copyright, e2efour, cyberpedant Andygc, entangledbank owlman5 Giorgio Spizzi, PaulQ cagey SwissPete Parla Egmont, Keith Bradford velisarius wordnip Thomas Tompion

  ஆகியோருக்கும்;

- இந்த மொழிபெயர்ப்புக்குப் பின்னுரை தந்திருக்கும் டாக்டர் இ. அண்ணாமலைக்கு.

குறிப்பு:

- இந்த மொழிபெயர்ப்பில் விவிலியத்திலிருந்து கையாளப்பட்டுள்ள தொடர்கள், வாக்கியங்கள் இந்திய வேதாகமச் சங்கம் வெளியிட்டுள்ள 'பரிசுத்த வேதாகமம்' பதிப்பிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன.

- நாவலில் தடித்த எழுத்துகளில் தரப்பட்டிருக்கும் சொற்கள்/தொடர்கள் மூலத்தில் அழுத்தம் தரப்பட்டவை.

ஃபாரென்ஹீட் 451

புத்தகத் தாள் தீப்பற்றி எரியும் வெப்பநிலை.

“கோடு போட்ட தாள் உனக்குக் கொடுக்கப்பட்டால்
வேறு திசையில் எழுது.”

- ஹ்வான் ரமோன் ஹிமெனெஸ்
(Juan Ramon Jiménez)

பாகம் 1

கணப்பும் சலமாண்டரும்[1]

தீ வைத்து எரிப்பது மகிழ்ச்சியாக இருந்தது.

பொருள்கள் தீக்கிரையாவதைப் பார்ப்பது, அவை கறுத்துப்போவ தையும் மாற்றம் அடைவதையும் பார்ப்பது ஒருவித விசேஷ மகிழ்ச்சியை அளித்தது. தன் கை பற்றிக்கொண்டிருந்த பித்தளைக் குழாயின் குவிந்த வாயும், நச்சு மண்ணெண்ணெயைப் பரவலாகத் துப்பிக்கொண்டிருந்த இந்தப் பெரிய மலைப்பாம்பும் அவனுடைய மண்டையின் இரத்த நாளங் களை விண்விண்ணென்று தாக்கின. வரலாற்றின் இடிபாடுகளையும் சிதைவுகளையும் வீழ்த்திய தீக்கொழுந்துகளின் சிம்பொனிகள் அனைத் தையும் நிகழ்த்தும் ஒருவருடைய கைகளைப் போல இருந்தன அவ னுடைய கைகள். குறியீடாக இருந்த எண் 451 பொறிக்கப்பட்ட தலைக் கவசம் சுரணையற்ற அவனுடைய தலைமேல் இருக்க, அடுத்து வரப் போவதைப் பற்றிய நினைப்பில் ஆரஞ்சு நிறச் சுவாலைகளாக இருந்த கண்களுடன் தன்னுடைய தீமூட்டியை அவன் சுண்டினான்; இரவு நேர வானத்தைச் சிவப்பும் மஞ்சளும் கருப்புமாக எரித்த அகோரத் தீயில் அந்த வீடு எம்பித் துள்ளியது. மின்மினிப்பூச்சிக் கூட்டத்தின் மத்தியில் அவன் பெருமிதத்துடன் நடந்தான். எல்லாவற்றையும்விட, பழைய நகைச்சுவைத் துணுக்கு ஒன்றில் வருவதைப் போல, புறா இறக்கைகளாகப் படபடத்த புத்தகங்கள் வீட்டு வாசலின் முன்பும் புல்தரையிலும் அழிந்துகொண்டிருக்கும்போது, எரியும் சூளைக்குள் ஜவ்வு மிட்டாய் குச்சியைத் திணிக்க விரும்பினான். பொறி தெறிக்கும் சுழல்களாகப் புத்தகங்கள் மேலெழும்பிச் சென்று, தீயாய் இருண்டுவிட்டிருந்த காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

சுட்டுப் பொசுக்கப்பட்டு, சுவாலையால் பின்னுக்கு விரட்டப்பட்ட எல்லா மனிதர்களின் பயங்கரமான இளிப்பை மோன்டாகும் இளித் தான்.

---

[1] *சலமாண்டர்:* நெருப்பினால் பாதிக்கப்படாத விலங்கு என்று இலக்கியங்களிலும் புராணங்களிலும் கூறப்படும், பல்லி போன்ற சிறிய விலங்கு.

தீயணைப்பு நிலையத்துக்குத் திரும்பிப் போனவுடன் நாடோடிப் பாடகன் போல இருந்த தன்னுடைய கறுத்துப்போன முகத்தைக் கண்ணாடியில் பார்த்து, தனக்குத் தானே கண்ணடித்துக்கொள்வான் என்பது அவனுக்குத் தெரியும். பிறகு, தூங்கப்போகும்போது இருட்டில் அதே பயங்கரமான சிரிப்பு இன்னமும் அவனுடைய முகத்தின் தசைகளைப் பற்றியிருப்பதை உணர்வான். அது ஒருபோதும் அவனை விட்டுப் போனதே இல்லை. அந்தச் சிரிப்பு, அவனுக்கு ஞாபகம் இருந்தவரை ஒரு போதும் அவனை விட்டுப் போனதேயில்லை.

கருவண்டு நிறத்திலிருந்த அவனுடைய கறுப்புத் தலைக்கவசத்தைக் கழற்றி மாட்டிவிட்டு அதைப் பளபளப்பாக ஆக்கத் துடைத்தான். தன்னுடைய தீக்காப்புக் கோட்டைச் சீராக மாட்டினான்; பூவாளிக் குழாயடியில் தாராளமாகக் குளித்தபின், விசிலடித்துக்கொண்டே பாக்கெட்டுகளில் கையை நுழைத்துக்கொண்டு, தீயணைப்பு நிலையத்தின் மேல்தளத்தைக் குறுக்காகக் கடந்து, தரைத் திறப்பு வழியே கீழே விழுந்தான். கடைசித் தருணத்தில், விபத்து நேர்வது நிச்சயம் என்று தெரிந்தவுடன், பாக்கெட்டிலிருந்து கைகளை வெளியே எடுத்து, தங்க நிறத்திலிருந்த கம்பத்தைப் பிடித்துக்கொண்டு, தான் கீழே விழுவதைத் தடுத்தான். கிறீச்சிட்டபடி வழுக்கி வந்து, கீழே இருந்த கான்கிரீட் தரைக்கு ஒரு அங்குலத்துக்கு மேல் குதிகால் இருக்கும்போது நின்றுவிட்டான்.

தீயணைப்பு நிலையத்திலிருந்து வெளியே வந்து, நள்ளிரவுத் தெரு வழியாகச் சுரங்க ரயில் நிலையம்வரை சென்றான்; அங்கே, காற்றின் உந்துவிசையில் செல்லும் ஓசையற்ற ரயில், உயவு எண்ணெய் தடவப் பட்ட சுரங்கப்பாதைத் தடத்தில் சத்தமின்றி வழுக்கிச் சென்று, புறநகர்ப் பகுதியை நோக்கி மேலேறிப் போன, சந்தன நிறத் தரைக்கல் பதித்த நகரும் படிக்கட்டுக்கு, வெதுவெதுப்பாக வீசிய காற்றில், அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

சலனமற்று இருந்த இரவில், விசிலடித்துக்கொண்டே இருந்த தன்னை அந்த நகரும் படிக்கட்டு மென்மையாகத் தூக்கிச் செல்லும்படி விட்டான். குறிப்பாக எதைப் பற்றியும் எவ்விதச் சிந்தனையுமின்றி, தெரு முனைவரை நடந்தான். தெரு முனையைச் சென்றடையும் முன்பாகவே, காற்றலை ஏதோ ஒன்று எங்கிருந்தோ வீசியதைப் போல, யாரோ தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதைப் போலத் தன் வேகத்தைக் குறைத்தான்.

நட்சத்திரங்களின் ஒளியில் தன் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அவனுக்கு, கடந்த சில இரவுகளாகவே, தெரு முனையில் இருந்த நடைபாதையில் முற்றிலும் இனம் தெரியாத ஏதோ சில உணர்ச்சிகள் தோன்றிக்கொண்டே இருந்தன. அந்த முனையில் தான் திரும்புவதற்கு

முந்தையக் கணம்வரை யாரோ அங்கே இருந்ததைப் போலத் தோன்றியது. யாரோ அங்கே சத்தமின்றிக் காத்திருந்துவிட்டு, அவன் வருவதற்கு ஒரு நொடி முன்புதான் அங்கிருந்து நிழல் ஒன்றில் மறைந்து, அவனைக் கடந்து செல்ல விட்டதைப் போன்ற அசாதாரணமான ஒரு அமைதி அந்தச் சூழ்நிலையை ஆக்கிரமித்ததைப் போல இருந்தது. ஒருவேளை லேசான நறுமணம் ஒன்றை அவனுடைய மூக்கு இனம்கண்டுகொண்டிருந்திருக்கலாம்; அல்லது, அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவரால் ஒரு கணத்துக்கு, அந்தக் குறுகிய இடத்தைச் சுற்றிப் பத்து டிகிரிவரை உயர்ந்திருக்கக் கூடிய வெப்பத்தைத் தன் புறங்கைகளின் தோலின் மேல், தன் முகத்தில் ஒருவேளை அவன் உணர்ந்திருக்கலாம். அவனால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒவ்வொரு முறை அவன் திரும்பிய போதும், யாரும் இல்லாத, வளைந்து சென்ற, வெண்ணிற நடைபாதையை மட்டுமே பார்த்தான். ஒரே ஒரு நாள் இரவில், அவன் தன்னுடைய கண்களை இடுக்கிக்கொண்டு பார்க்கவோ பேசவோ முயல்வதற்கு முன், புல் தரையில் ஏதோ விரைந்து மறைவதைப் போலத் தோன்றியிருந்தது.

ஆனால் இன்றிரவோ, கிட்டத்தட்ட நின்றுவிடுவதைப் போல வேகத்தைக் குறைத்தான். தெரு முனையில் அவன் திரும்புவதற்கு முன் அதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த அவனுடைய உள்மனதுக்கு மிக லேசான கிசுகிசுப்புக் கேட்டிருந்தது. சுவாசமா? அல்லது யாரோ அங்கு நிசப்தமாக நின்று காத்துக்கொண்டிருந்ததால் இறுக்கமடைந்துவிட்டிருந்த சூழலா அது?

தெரு முனையில் திரும்பினான்.

நிலா வெளிச்சத்திலிருந்த நடைபாதைமேல் இலையுதிர் காலத்தின் காய்ந்த இலைகள் விழுந்து, அங்கே வீசிய காற்றிலும், பறந்து சென்ற இலைகளின் ஓட்டத்திலும் தூக்கிச் செல்லப்பட்டதைப் போலத் தோன்றிய ஒரு இளம் பெண், தான் நடந்துகொண்டிருந்தாலும் சறுக்கியபடி, நகரும் நடைபாதை ஒன்றில் பொருந்தி நிற்பதைப் போலத் தோன்றினாள். இலைகளைக் கிளறி, அவற்றைச் சுழலச் செய்த காலணிகளைப் பார்ப்பதற்காகச் சற்றே தலையைக் குனிந்தபடி இருந்தாள். மெலிந்த, பால் போன்ற வெண்மையான முகம்; சலிப்புறாத ஆர்வத்துடன் எல்லாவற்றையும் தொட்டுப்பார்க்கும் மென்மையான ஒருவிதப் பசி அந்த முகத்தில் இருந்தது. கிட்டத்தட்ட லேசான வியப்பு அவள் பார்வையில் தென்பட்டது; உலகின் மேல் அந்தக் கரிய விழிகள் குவிந்திருந்த விதத்தில் எந்த அசைவும் அவற்றிடமிருந்து தப்பவில்லை. அவளுடைய ஆடை வெண்மையாக இருந்தது, கிசுகிசுத்தது. அவள் நடக்கும்போது அவளுடைய கைகளின் அசைவைக்கூடத் தான் கேட்பதைப் போல அவன்

நினைத்தான்; இதோ, இப்போது நடைபாதையின் நடுவில் நின்றபடி காத்துக்கொண்டிருந்த மனிதனிடமிருந்து தான் ஒரு வினாடி தூரத்தில் தான் இருக்கிறோம் என்பதை அறிந்தவுடனேயே திரும்பிய அவளுடைய முகத்தின் கள்ளமற்ற சலனத்தின் அந்த மிக நுண்ணிய ஒலி.

தலைக்கு மேலே இருந்த மரங்கள் காய்ந்த இலைகளைப் பொழிந்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தின. நடப்பதை நிறுத்திவிட்டு ஒருவேளை வியப்பில் பின்வாங்கிவிடுவாளோ என்பதைப் போலத் தோன்றினாலும், அந்தப் பெண் தன்னுடைய ஆழ்ந்த கரிய, பளபளக்கும், துடிப்பான கண்களால் மோன்டாகைப் பார்த்தபடி நின்றாள்; அற்புதமாக எதையோ தான் சொல்லிவிட்டதைப் போல அவன் உணர்ந்தான். ஆனால் 'ஹலோ' என்று சொல்வதற்கு மட்டும் தன்னுடைய வாய் அசைந்தது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அவனுடைய கைகளிலிருந்த சலமாண்டர் உருவத்தையும், அவன் நெஞ்சின் மேல் இருந்த ஃபீனிக்ஸ் பறவை வில்லையையும் பார்த்து வசியப்பட்டதைப் போல அவள் தோன்றவே, அவன் மீண்டும் பேசினான்.

"நீ புதிதாக இந்தத் தெருவுக்கு வந்தவள் இல்லையா?" என்றான்.

"நீங்கள்—", அவனுடைய தொழில்ரீதியினால் ஆன அடையாளச் சின்னங்களிலிருந்து பார்வையை உயர்த்தினாள். "தீயணைப்பவர்". அவளுடைய குரல் தேய்ந்துகொண்டே போயிற்று.

"அதை எவ்வளவு விசித்திரமாக நீ சொல்கிறாய்."

"நானா—கண்களைத் திறக்காமலேயே எனக்கு அது தெரிந்திருக்கும்," என்றாள் அவள், மெதுவாக.

"என்ன—மண்ணெண்ணெய் வாடைதானே? என் மனைவியும் எப்போதும் இதே புகார்தான்," என்றபடி சிரித்தான். "அதை ஒருபோதும் முழுமையாகக் கழுவிவிட முடியவில்லை."

"இல்லை, உங்களால் முடியாது", என்றாள் அவள், வியப்பு மேலிட.

அவனைச் சுற்றிச்சுற்றி வந்து, மேலும் கீழுமாக அவனைப் புரட்டிப் பார்த்து, சத்தம் எதுவும் இல்லாமல் அவனை உலுக்கி, அவனுடைய பாக்கெட்டுகளைக் காலிசெய்து—தான் அசையாமலேயே இவை அனைத்தையும் அவள் செய்ததைப் போல அவன் உணர்ந்தான்.

"மண்ணெண்ணெய்," மௌனம் நீடித்துவிட்டதால் அவன் சொன்னான்: "எனக்கு ஒரு வாசனைத் திரவியம்."

"உண்மையிலேயே அது அப்படித்தான் தோன்றுகிறதா?"

"நிச்சயமாக. ஏன் கூடாது?"

அதைப் பற்றிச் சிந்தித்துப்பார்க்கச் சற்று நேரம் எடுத்துக்கொண்டாள். "எனக்குத் தெரியவில்லை." அவர்களுடைய வீடுகள்வரை போகும் நடைபாதையைப் பார்த்துத் திரும்பினாள். "உங்களுடன் நான் நடந்து வருவதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே? என் பெயர் க்லாரிஸ் மெக்லெல்லான்."

"க்லாரிஸ், நான் கை மோன்டாக். வா, போவோம். இந்த இரவு நேரத்தில் சுற்றிக்கொண்டு என்ன செய்கிறாய்? உனக்கு என்ன வயதாகிறது?"

வெள்ளிபோல் இருந்த நடைபாதையில், வெதுவெதுப்பும் குளுமையும் கலந்திருந்த இரவில் அவர்கள் நடந்தார்கள். ஆப்பிரிகாட், ஸ்ட்ராபெர்ரி பழங்களின் பசுமையான மணம் மென்மையாகக் காற்றில் மிதந்து வந்தது. அவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, வருட முடிவில் இவ்வளவு காலம் தாழ்ந்து இது சாத்தியமில்லை என்பதை உணர்ந்தான்.

இப்போது அங்கே இருந்தது, நிலவொளியின் கீழ் பனியைப் போன்ற பிரகாசமான முகத்துடன் அவனுடன் நடந்து வந்துகொண்டிருந்த இந்தப் பெண் மட்டுமே. தன்னுடைய கேள்வியை அலசி ஆராய்ந்து, அதற்குத் தன்னால் அளிக்க முடிந்த சிறந்த பதிலை அவள் தேடிக்கொண்டிருந்தாள் என்பது அவனுக்குத் தெரிந்தது.

அவள் சொன்னாள்: "எனக்கு வயது பதினேழு, நான் கொஞ்சம் கிறுக்கு. இந்த இரண்டும் சேர்ந்தேதான் இருக்கும் என்று என் மாமா சொல்வார். உன்னுடைய வயதை மற்றவர்கள் கேட்கும்போது 'பதினேழு', 'கிறுக்கு' இரண்டையும் சேர்த்தே சொல் என்று அவர் சொன்னார். இரவில் நடப்பதற்கு மிக உகந்த நேரம் அல்லவா இது? சுற்றிலும் இருப்பதை முகர்ந்து, கூர்ந்து கவனித்து, சில வேளை இரவு முழுவதும் விழித்திருந்து, நடந்து, சூரியன் உதிப்பதைப் பார்க்க எனக்குப் பிடிக்கும்."

மௌனமாக மேலும் சற்று நடந்த பிறகு, ஆழ்ந்த யோசனையுடன் அவள் கடைசியாகச் சொன்னாள்: "ஒன்று தெரியுமா, எனக்கு உங்களைப் பார்த்துப் பயமே இல்லை."

அவன் வியப்படைந்தான். "நீ ஏன் பயப்பட வேண்டும்?"

"பெரும்பாலானோர் அப்படித்தான். அதாவது, தீயணைப்பவர்களைப் பார்த்துப் பயம். ஆனால், பார்க்கப்போனால், நீங்களும் ஒரு சாதாரண மனிதர்தானே... "

அவளுடைய கண்களில் தன்னைப் பார்த்தான்: பளபளக்கும் இரண்டு பிரகாசமான நீர்த்துளிகளில் தொங்கவிடப்பட்டதைப் போல இருந்த தன் சிறிய கரிய உருவத்தை, தன் வாயின் கோட்டிலிருந்து தொடங்கி எல்லா நுண்ணிய விவரங்களும் அடங்கியிருந்த தன் உருவத்தைப் பார்த்

தான்: அவனைக் கைப்பற்றி, கவனமாகத் தன் வசம் வைத்திருக்கும் இரண்டு அற்புதமான ஊதா-மஞ்சள் நிறத் துண்டுகள்தான் அவளுடைய கண்களோ என்பதைப் போல. இதமான, அணையாத ஒளியுடன் இருந்த மென்மையான பால் படிகம் போல இப்போது அவனை நோக்கித் திரும்பிய அவளுடைய முகம் இருந்தது. மின்சார விளக்கின் கருகருவென்ற ஒளி அல்ல அது. அப்படியானால் வேறென்ன? வினோதமான ஆறுதல் அளித்து, மென்மையாக மயக்கும் அபூர்வமான மெழுகுவர்த்தியின் ஒளி அது. அவனுடைய குழந்தைப் பருவத்தில், மின்வெட்டு நிகழ்ந்த ஒரு சமயத்தில், வீட்டிலிருந்த கடைசி மெழுகுவர்த்தியைத் தேடிப் பிடித்து, அதை அவனுடைய தாய் ஏற்றி வைத்தாள்: தன்னுடைய பரந்த பரிமாணங்களை இழந்து, இதமாக அவர்களைச் சூழ்ந்துகொண்ட வெளியின் அந்த ஒளியலங்காரத்தை மீண்டும் கண்டுபிடித்துவிட்டிருந்த குறுகிய ஒரு மணி நேரப் பொழுதில், மாறுதலுக்கு ஆளாகித் தனியாக இருந்த தாயும் மகனும் மின்சாரம் சீக்கிரமாகவே வந்துவிடக் கூடாதே என்ற எதிர்பார்ப்புடன் இருந்தார்கள்...

அப்போது க்லாரிஸ் மெக்லெல்லான் சொன்னாள்:

"நான் உங்களை ஒன்று கேட்கலாமா? தீயணைப்பவராக எவ்வளவு காலமாக வேலைபார்க்கிறீர்கள்?"

"என்னுடைய இருபதாவது வயதிலிருந்து, பத்து ஆண்டுகளாக."

"நீங்கள் எரிக்கும் புத்தகங்களில் எதையாவது, எப்போதாவது படித்திருக்கிறீர்களா?"

அவன் சிரித்தான். "அது சட்டத்துக்குப் புறம்பானது."

"அட ஆமாம், சரிதான்."

"இது பிரமாதமான தொழில். திங்கட்கிழமை மில்லேவை எரிக்க வேண்டும், புதன்கிழமை விட்மன், வெள்ளிக்கிழமை ஃபாக்னர், எல்லோரையும் எரித்துச் சாம்பலாக்கி, பின்னர் சாம்பலை எரிக்க வேண்டும். அதுதான் அதிகாரபூர்வமான பிரகடனம்."

இன்னும் சற்று தூரம் நடந்த பின்னர், அந்தப் பெண் சொன்னாள்: "முன்பொரு காலத்தில் தீயணைப்பவர்கள் தீ வைப்பதற்குப் பதிலாகத் தீயை **அணைத்தார்கள்** என்பது உண்மையா?"

"இல்லை, தீயே பிடிக்காத வீடுகள்தான் எப்போதும் இருந்திருக்கின்றன. என் பேச்சை நம்பு."

"ஆச்சரியம். அந்தக் காலங்களில் தீ விபத்து ஏற்பட்டால் அந்தச் சுவாலைகளை **அணைக்கத்** தீயணைப்பவரின் உதவியை நாடுவார்கள் என்று முன்பு கேள்விப்பட்டிருக்கிறேன்."

அவன் சிரித்தான்.

அவள் சட்டென்று அவனைப் பார்த்தாள். "ஏன் சிரிக்கிறீர்கள்?"

"தெரியவில்லை." மீண்டும் சிரிக்க ஆரம்பித்த அவன் சிரிப்பதை நிறுத்தினான். "ஏன்?"

"தமாஷாக நான் எதுவும் சொல்லாதபோது சிரிக்கிறீர்கள், உடனேயே அலட்சியமாகப் பதில் சொல்லிவிடுகிறீர்கள். நான் என்ன கேட்டேன் என்று நிறுத்தி நிதானமாகச் சிந்திப்பதில்லை."

அவன் நடப்பதை நிறுத்தினான். "நீ விசித்திரமானவள்தான்" என்றான் அவன், அவளைப் பார்த்து. "உனக்கு மரியாதை உணர்வே கிடையாதா?"

"உங்கள் மனதைப் புண்படுத்த நான் நினைக்கவில்லை. மனிதர்களை அளவுக்கு மீறிக் கூர்ந்து கவனிப்பது எனக்குப் பிடித்திருக்கிறது என்று நினைக்கிறேன்."

"சரி, இது உனக்கு **எதையுமே** உணர்த்தவில்லையா?" கருகிய நிறத்திலிருந்த அவனுடைய சட்டையின் கைப்பகுதியில் தைக்கப்பட்டிருந்த '451' என்ற எண்ணின் மேல் தட்டிக் காட்டினான்.

"ஆமாம்," என்றாள் மெல்லிய குரலில். தன் நடையின் வேகத்தை அதிகரித்தாள். "அதோ, அங்கே இருக்கும் அகலமான நகர நிழற்சாலைகளில் அதிவேகமாக ஓடும் ஜெட் கார்களை எப்போதாவது கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா?"

"நீ பேச்சை மாற்றுகிறாய்."

"புல் எப்படி இருக்கும், மலர்கள் எப்படி இருக்கும் என்று கார் ஓட்டுபவர்களுக்குத் தெரியாது என்று சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு. ஏனென்றால், அவற்றை அவர்கள் நிதானமாகப் பார்ப்பதில்லை," என்றாள் அவள். "தெளிவற்ற பச்சை நிறத் திட்டு ஒன்றைக் கார் ஓட்டுபவர் ஒருவருக்குக் காட்டினால், அட, ஆமாம், அதுதான் புல் என்பார்! வெளிர் சிவப்புத் திட்டா? அது ரோஜா மலர்த் தோட்டம்! வெண் திட்டுகள், வீடுகள். பழுப்பு நிறத் திட்டுகள், பசு மாடுகள். ஒருமுறை என் மாமா நெடுஞ்சாலையில் மெதுவாக வண்டியை ஓட்டிச் சென்றார். மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் சென்றார். அவருக்கு இரண்டு நாட்கள் சிறைத் தண்டனை கொடுத்தார்கள். வேடிக்கையாக, ஏன், வருத்தமாகக்கூட இல்லை?"

"நீ ஏகப்பட்ட விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கிறாய்," என்றான் மோன்டாக், சற்றே சங்கடத்துடன்.

"நான் 'சுவர்தொலைக்காட்சியை' பார்ப்பதோ, குதிரைப் பந்தயங்கள் அல்லது பொழுதுபோக்குப் பூங்காக்களுக்குப் போவதோ மிக அரிது. ஆகவே, வினோதமான சிந்தனைகளுக்கு எனக்கு நிறைய அவகாசம் கிடைக் கிறது என்று நினைக்கிறேன். ஊருக்கு வெளியே 200 அடி நீளத்துக்கு அமைந்திருக்கும் விளம்பரப் பலகைகளைப் பார்த்திருக்கிறீர்களா? கார் கள் மிக வேகமாக ஓடத் தொடங்கியதால், அவர்கள் பார்வையில் கொஞ்ச நேரமாவது நீடிக்க வேண்டுமென்பதற்காகப் பலகைகளின் நீளத்தைக் கூட்ட வேண்டியதாயிற்று."

"எனக்கு அது தெரியாது!" மோன்டாக் திடீரென்று சிரித்தான்.

"உங்களுக்குத் தெரியாத வேறொன்றுகூட எனக்குத் தெரியும் என்று அடித்துச்சொல்வேன். காலையில் புற்களின் மேல் பனித்துளி இருக்கும்."

தனக்கு அது தெரியுமா, தெரியாதா என்று அவனால் உடனேயே நினைவுபடுத்திப்பார்க்க முடியவில்லை, அது அவனுக்கு மிகவும் எரிச்ச லூட்டியது.

"தவிர, நீங்கள் கவனித்துப் பார்த்தால்"—அவள் வானத்தை நோக்கித் தலையை அசைத்தாள்—"நிலவில் மனிதன் ஒருவன் இருக்கிறான்."

வெகு நாட்களாகவே அவன் பார்த்திருந்திருக்கவில்லை.

மீதி தூரம்வரை அவர்கள் மௌனமாக நடந்தார்கள்—சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட மௌனத்தில் அவள், அவ்வப்போது அவளை நோக்கிக் குற்றம் சுமத்தும் பார்வையை வீசிக்கொண்டு, ஒருவித இறுக்கமும் சங் கட உணர்வும் கலந்த மௌனத்தில் அவன். அவளுடைய வீட்டை அவர் கள் அடைந்தபோது அங்கே எல்லா விளக்குகளும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன.

"அங்கே என்ன நடக்கிறது?" அவ்வளவு விளக்குகள் எரிந்துகொண் டிருப்பதை மோன்டாக் பார்த்ததேயில்லை.

"அதுவா, என் அப்பா, அம்மா, மாமா எல்லோரும் சும்மா சுற்றி உட் கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். பாதசாரியாக இருப்பதைப் போலத்தான் இதுவும். இன்னும் கொஞ்சம் அபூர்வம், அவ்வளவுதான். வேறொரு சமயம்—உங்களிடம் நான் சொல்லியிருக்கிறேனா?—பாத சாரியாக இருந்ததற்காக என் மாமாவைக் கைது செய்தார்கள். உண் மையில், நாங்கள் ரொம்பவுமே விசித்திரமானவர்கள்."

"சரி, நீங்கள் அப்படி எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?"

அதற்கு அவள் சிரித்தாள். "குட் நைட்!" அவள் வீட்டுக்குப் போகும் பாதையில் நடக்கத் தொடங்கினாள். திடீரென்று ஏதோ ஞாபகம் வந்த

தைப் போலத் திரும்பி வந்து அவனை வியப்புடனும் ஆர்வத்துடனும் பார்த்தாள். "நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நான் என்னவாக?..." அவன் கத்தினான்.

ஆனால் அவளோ போய்விட்டிருந்தாள், நிலவொளியில் ஓடியபடியே. அவளுடைய வீட்டின் முன்கதவு மெதுவாகச் சாத்திக்கொண்டது.

"மகிழ்ச்சியாக! எல்லா மடத்தனத்தையும்விட மடத்தனம்."

அவன் சிரிப்பதை நிறுத்தினான்.

தன் வீட்டின் முன்கதவில் கையை வைக்கும் துளையில், தன்னுடைய ஸ்பரிசத்தை அது இனம் கண்டுகொள்ளும் வகையில், கையை நுழைத்தான். முன்கதவு பக்கவாட்டில் சறுக்கியவாறு திறந்துகொண்டது.

சந்தேகமில்லாமல் நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன். அவள் என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாள்? மகிழ்ச்சியாக இல்லையென்றா? நிசப்தமாக இருந்த அறைகளைப் பார்த்துக் கேட்டான். கூடத்தில் காற்றுப்போக்கியின் இரும்புக் கிராதியைப் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்கு, அதற்குப் பின்னால் ஏதோ ஒளித்து வைக்கப்பட்டிருந்தது நினைவுக்கு வந்தது—மேலேயிருந்து குனிந்தபடி அவனை இப்போது பார்த்த ஏதோ ஒன்று. சட்டென்று அதிலிருந்து தன் பார்வையை விலக்கினான்.

வினோதமான இரவில் என்ன வினோதமான சந்திப்பு. ஒரு ஆண்டுக்கு முன்னால், மதிய வேளையில் பூங்கா ஒன்றில் முதியவர் ஒருவரைப் பார்த்ததைத் தவிர, இது போன்ற சந்திப்பு எதுவும் அவன் நினைவில் இல்லை; அவர்கள் இருவரும் பேசினார்கள்.

மோன்டாக் தலையை ஆட்டினான். வெற்றுச் சுவரைப் பார்த்தான். அந்தப் பெண்ணின் முகம் அங்கே தெரிந்தது, நினைவுத் திரையில் மிக அழகாக. உண்மையிலேயே அசத்தும் அழகு. நடு இரவில் இருட்டறையில் மணி பார்ப்பதற்காக விழித்துக்கொண்டு தான் பார்க்கும் கடிகாரத்தைப் போல, வெண்மையான நிச்சயத்தின் முழுமையாகவும் எல்லாம் அறிந்ததாகவும், ஒளிர்ந்துகொண்டும், இன்னும் பல இருண்ட கணங்களைக் கடந்து விரையும் இரவைப் பற்றிச் சொல்ல வேண்டியதைச் சொல்லி, அதே சமயம் ஒரு புது சூரியனை நோக்கி நகர்ந்தவாறு மணி, நிமிடம், விநாடி இவற்றைச் சுட்டிக்காட்டும் அந்தச் சிறிய கடிகாரத்தின் வட்ட முகத்தைப் போல மெல்லியதாக இருந்தது அவளுடைய முகம்.

"என்ன?" என்று தன்னுடைய மற்ற ஆன்மாவைப் பார்த்துக் கேட்டான் மோன்டாக்: விருப்பு, பழக்கம், மனசாட்சி இவற்றுக்குச் சம்பந்த

மில்லாமல் சில சமயங்களில் உளறியபடி ஓடிக்கொண்டிருந்த தன்னுடைய ஆழ்மன மட ஆன்மாவைப் பார்த்து.

மீண்டும் சுவரைத் திரும்பிப் பார்த்தான். எப்படிக் கண்ணாடி போலவும் இருந்தது, அவளுடைய முகம். சாத்தியமில்லை; ஒருவருடைய ஒளியை அவரை நோக்கியே திருப்பிப் பாய்ச்சும் எவ்வளவு பேரை நமக்குத் தெரியும்? பெரும்பாலும்—நல்ல ஒரு உவமையைத் தேடிய அவன் இறுதியாக அதைத் தன்னுடைய தொழிலிலேயே கண்டுபிடித்தான்—அணைந்துபோகும்வரை கொழுந்துவிட்டெரியும் தீப்பந்தங்கள்தான் மனிதர்கள். உங்களுடைய முகபாவங்களையும், உங்களுடைய நடுங்கும் அந்தரங்க எண்ணங்களையும் உங்களிடமிருந்து பறித்துக்கொண்ட மற்றவர்களின் முகங்கள் அவற்றை மீண்டும் உங்களிடமே தூக்கியெறிவது என்பது எவ்வளவு அபூர்வம்?

இனம்காண்பதில்தான் அந்தப் பெண்ணுக்கு எப்பேர்ப்பட்ட திறன்! நம்பவே முடியாத திறன்; பொம்மலாட்டப் பாவையின் ஒவ்வொரு கண் இமைத் துடிப்பையும், அந்தக் கலைஞனின் ஒவ்வொரு அசைவையும், ஒவ்வொரு விரல் சொடுக்கலையும், அவை நடப்பதற்கு ஒரு கணம் முன்பாகவே எதிர்நோக்கும் ஆர்வம் மிக்க ஒரு பார்வையாளராக அவள் இருந்தாள்.

எவ்வளவு நேரம் அவர்கள் ஒன்றாக நடந்திருப்பார்கள்? மூன்று நிமிடங்களா? ஐந்தா? இருந்தாலும் இப்போது அந்தக் கால அளவு எவ்வளவு பெரியதாகத் தோன்றியது! அவனுக்கு முன்னால் இருந்த மேடையில் எவ்வளவு பிரம்மாண்டமான உருவமாக அப்போது அவள் இருந்தாள்; மெலிந்த உடல்தான்; ஆனால், சுவரின் மேல் எவ்வளவு பிரம்மாண்டமாக நிழலை விழச் செய்தாள். தனக்குக் கண்கள் உறுத்தினால், அவள் கண் இமைக்கக்கூடும் என்று நினைத்தான். மிகவும் நுணுக்கமாக அவனுடைய தாடைத் தசைகள் அசைந்தால், அவன் கொட்டாவி விடுவதற்கு மிகவும் முன்கூட்டியே அவள் கொட்டாவி விட்டுவிடுவாள்.

அவன் நினைத்தான்: ஏன், இப்போதுகூட அதை நான் நினைவுபடுத்திப்பார்க்கும்போது, அந்த இரவில், அவ்வளவு நேரம் தாழ்ந்து அவள் எனக்காக அந்தத் தெருவில் காத்திருந்ததைப் போலத் தோன்றுகிறது...

வீட்டின் படுக்கையறைக் கதவைத் திறந்தான்.

நிலவு அஸ்தமனம் ஆன பிறகு, பெரிய சமாதியின் குளிர்ந்த பளிங்கு அறைக்குள் நுழைவதைப் போல இருந்தது. முழுமையான இருள், வெளியே இருந்த வெள்ளி உலகின் சாயல் எதுவும் இல்லாமல். இறுக மூடியிருந்த ஜன்னல்கள், அந்தப் பெரிய நகரத்திலிருந்து எவ்வித ஓசையும் உள்ளே புக முடியாத கல்லறை-உலகம் அந்த அறை. அறை காலியாக இருக்கவில்லை.

அவன் உற்றுக் கேட்டான்.

கொசுவின் மென்மையுடன் காற்றில் ஆடிய சிறு ரீங்காரம், வெளிர் சிவப்பு நிறத்தில் கதகதப்புடன் இருந்த தன்னுடைய விசேஷக் கூண்டில் ஒடுங்கி ஒளிந்திருந்த குளவி ஒன்றின் மின்சார முனகல். அந்த மெட்டை இனம் கண்டுகொள்ள முடிந்த அளவுக்கு ஒலித்த இசை.

தன்னுடைய புன்முறுவல் நழுவி, உருகி மறைவதை உணர்ந்தான், வெகுநேரம் எரிந்து, அப்படியே தொய்ந்துபோய், இறுதியாக அணைந்து விடும் அற்புத மெழுகுவர்த்தி ஒன்றைப் போல, தானாகவே மடிந்துமடிந்து விழுந்து, சுருண்டுவிடும் கொழுப்புச் சதையைப் போல. இருள். அவன் மகிழ்ச்சியாக இல்லை. மகிழ்ச்சியாக இல்லை. இந்தச் சொற்களைத் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். இதுதான் உண்மையான நிலை என்பதைப் புரிந்துகொண்டான். மகிழ்ச்சியை ஒரு முகமூடியைப் போல அணிந்திருந்தான், அந்தப் பெண் முகமூடியை எடுத்துக்கொண்டு புல் தரையைக் கடந்து ஓடிவிட்டாள், அங்கே போய் அவளுடைய வீட்டுக் கதவைத் தட்டி, அதைத் திருப்பிக் கேட்பது என்பது நடக்காத விஷயம்.

விளக்கைப் போடாமலேயே இந்த அறை எப்படி இருக்கும் என் பதைக் கற்பனைசெய்துபார்த்தான். கட்டிலில் அவனுடைய மனைவி போர்த்திக்கொள்ளாமலும் குளிர்ந்தும், பார்வைக்காகக் கல்லறையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் உடலைப் போல, கண்ணுக்குப் புலப் படாத ஏதோ சில எஃகுக் கம்பிகளால் அவளுடைய கண்கள் மோட்டு வளையுடன் பொருத்தப்பட்டிருப்பதைப்போலச் சலனமற்று, நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய காதுகளில் குட்டிக் கிளிஞ் சல்கள், அங்குஸ்தான்-ரேடியோக்கள் அழுந்தத் திணிக்கப்பட்டு, இசை யும்-பேச்சும், இசையும்-பேச்சும் என்ற மாபெரும் மின்னணு ஒலிக் கடல், தூங்காமல் இருந்த அவளுடைய மனம் என்ற கடற்கரையில் மீண்டும்மீண்டும் வந்து மோதிக்கொண்டிருக்கும். உண்மையில் அறை காலியாகத்தான் இருந்தது. ஒவ்வொரு இரவும் அலைகளாக ஒலி உள்ளே வந்து, தூங்காமல் திறந்த கண்களுடன் இருந்த அவளை மிகப் பெரிய அலைகளின் மேல் மிதக்க வைத்தவாறு காலைப் பொழுதை நோக்கித் தூக்கிச் செல்லும். கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தக் கடலில் மில்ட்ரெட் நீந்திச் செல்லாத இரவே இருக்கவில்லை, அதற்குள் மகிழ்ச்சியுடன் முழுகிப்போகாத இரவே இல்லை.

அறை குளிர்ந்திருந்தாலும் தன்னால் சரியாக சுவாசிக்க முடியவில்லை என்று அவன் உணர்ந்தான். திரைச்சீலைகளையோ பிரெஞ்சு ஜன்னல் களையோ திறக்க அவன் விரும்பவில்லை, ஏனென்றால், அறைக்குள் நில வொளி வருவதை அவன் விரும்பவில்லை. மூச்சுவிடப் போதிய காற்று

இல்லாத நிலையில், விரிந்தும், தனியாகவும் இருந்த, அதனாலேயே செல்லிட்டுப்போயிருந்த தன்னுடைய கட்டிலை நோக்கி அவன் நகர்ந்தான், ஏதோ அடுத்த ஒரு மணி நேரத்தில் இறந்துவிட இருந்தவனைப் போல.

தரையிலிருந்த ஒரு பொருளின் மேல் தன்னுடைய கால் பட்டு இடறும் முன், அது போன்ற ஒரு பொருளின் மேல் கால் இடிக்கும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. தெரு முனையில் வேகமாக வந்து அந்தப் பெண்ணின் மேல் கிட்டத்தட்ட மோதிவிடுவதைப் போலத் திரும்பிய போது அவனுக்கு ஏற்பட்ட உணர்விலிருந்து வேறுபடாத அதே உணர்வு. தன் காலை அவன் வீசுவதற்கு முன்பே அவனுடைய காலிலிருந்து கிளம்பிய அதிர்வுகள் எதிர்ப்படவிருந்த சிறிய தடங்கலிலிருந்து கிளம்பிய எதிரொலிகளாகத் திரும்ப வந்தன. அவன் கால் உதைத்தது. கண்ணாடிப் புட்டி விழுவதைப் போன்ற மெல்லிய ஓசையுடன் அந்தப் பொருள் இருளில் நழுவிப் போயிற்று.

முற்றிலும் எவ்விதத் தன்மையும் இல்லாத இரவில் நன்றாக நிமிர்ந்து நின்றிருந்த அவன், இருட்டுக் கட்டிலில் படுத்திருந்தவளைக் காது கொடுத்துக் கேட்டான். அவளுடைய நாசித் துவாரங்களிலிருந்து சுவாசக் காற்று உயிரின் விளிம்புகளை மட்டுமே, சிறிய இலை ஒன்றையோ கரிய இறகு ஒன்றையோ முடியின் ஒற்றை இழையையோ மட்டுமே அசைக்கும் அளவுக்கு மிக சன்னமாக வெளிப்பட்டது.

வெளியிலிருந்து வெளிச்சம் வருவதை அவன் இன்னமும் விரும்பவில்லை. பாக்கெட்டிலிருந்து தன்னுடைய தியூட்டியை எடுத்து, அதன் வெள்ளி வில்லைமேல் பொறிக்கப்பட்டிருந்த சலமாண்டர் உருவத்தைத் தடவி, ஒரு முறை சுண்டினான்...

தன் கையில் பிடித்திருந்த சிறிய தீச்சுவாலையின் வெளிச்சத்தில் சந்திரகாந்தக் கற்கள் போல் இருந்த இரண்டு விலையுயர்ந்த கற்கள் அவனை நிமிர்ந்து பார்த்தன: சிறிய ஓடையின் தெள்ளிய நீரின் அடியில் புதைக்கப்பட்டு, உலக வாழ்க்கை அவற்றின் மேல் படாமல் ஓடிக்கொண்டிருந்த இரண்டு வெளிறிய சந்திரகாந்தக் கற்கள்.

"மில்ட்ரெட்!"

அதன் மேலேயே மழை பெய்துகொண்டிருந்தாலும், மழை பொழிவதை உணராத பனி போர்த்திய தீவைப் போலிருந்தது அவளுடைய முகம்; அதன் மேல் தங்கள் நிழலை ஓட விட்டு மேகங்கள் கடந்து போகலாம், ஆனால் எந்த நிழலையும் அவள் உணரவில்லை. அங்கு இருந்தவையெல்லாம் அவளுடைய காதுகளில் திணிக்கப்பட்டு மூடியிருந்த அங்குஸ்தான்-குளவிகளின் பாடல், அவளுடைய கண்ணாடிக் கண்கள், நாசித் துவாரங்களிலிருந்து மென்மையாகவும் சன்னமாகவும் உள்ளேயும் வெளி

யேயும் போய் வந்துகொண்டிருந்த சுவாசம், அந்த மூச்சுக் காற்றும் வந்ததா போயிற்றா அல்லது போயிற்றா வந்ததா என்று கவலையே படாத அவள்.

தன்னுடைய காலால் தட்டி உருட்டிய அந்தப் பொருள் இப்போது அவனுடைய கட்டிலின் விளிம்புக்கடியில் பளபளத்தது. சற்று நேரம் முன்புவரைகூட முப்பது தூக்க மாத்திரைகள் நிரம்பியிருந்த சிறிய படிகக் கண்ணாடிக் குப்பி, இப்போது மூடி கழற்றப்பட்டு, காலியாக, அந்தச் சிறிய பிழம்பில் தெரிந்தது.

அவன் அப்படி நின்றுகொண்டிருந்தபோது வீட்டுக்கு மேலே வானம் அலறியது. பத்தாயிரம் மைல் நீளம் இருந்த கறுப்பு லினன் துணியை இரண்டு ராட்சதக் கைகள் தையலின் வாட்டத்திலேயே கிழிப்பதைப் போல் வானம் பயங்கரமாகக் கிழியும் ஓசை கேட்டது. மோன்டாகை அது இரண்டு துண்டுகளாகப் பிளந்தது. தன் நெஞ்சை வெட்டி, தனித் தனியாகப் பிரித்துவிட்டதைப் போல அவன் உணர்ந்தான். தலைக்கு மேல் ஒன்றன்பின் ஒன்றாகப் பறந்த குண்டு வீசும் ஜெட் விமானங் கள், ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு என ஆறு விமானங்கள், ஒன்பது விமானங்கள், பன்னிரெண்டு விமானங்கள், ஒன் றன்பின் ஒன்றாக, மேலே பறந்து, மேலே பறந்து, மேலே பறந்து, அவ னுக்குப் பதிலாக அலறின. தன் வாயை அவன் பெரிதாகத் திறந்து, பல் வரிசைகளுக்கிடையே விமானங்களின் கிறீச்சிடும் சத்தம் உள்ளே போய், வெளியே வர விட்டான். வீடு அதிர்ந்தது. அவன் கைகளிலிருந்த தீச்சுவாலை அணைந்துவிட்டிருந்தது. சந்திரகாந்தக் கற்கள் மறைந்துவிட்டிருந்தன. தொலைபேசியை நோக்கித் தன் கை வேகமாக இறங்குவதை உணர்ந் தான்.

ஜெட் விமானங்கள் போய்விட்டன. தொலைபேசிக் கருவியின் பேசும் முனையில் உரசிய தன் உதடுகள் அசைவதை உணர்ந்தான். "அவசரம்; மருத்துவ உதவி." ஒரு பயங்கர முணுமுணுப்பு.

அந்தக் கறுப்பு ஜெட் விமானங்களின் அலறலில் நட்சத்திரங்கள் தூள்தூளாக ஆகிவிட்டன என்றும், அவற்றின் தூசி வினோதமான ஒரு பனிப்பொழிவைப் போலக் காலையில் தரையெங்கும் பரவிவிட்டிருக்கும் என்றும் அவன் நினைத்தான். அவனுடைய மனதில் ஏற்பட்ட மடத் தனமான சிந்தனை அது, உதடுகள் அசைய, அசைய, இருட்டில் நடுங்கிய வாறு நின்றுகொண்டிருந்தபோது.

***   ***   ***

அந்த ஆட்களிடம் இந்தக் கருவி இருந்தது. பார்க்கப்போனால் அவர்களிடம் இரண்டு கருவிகள் இருந்தன. அதில் ஒன்று, எதிரொலிக்கும் கிணற்றுக்குள் கருநாகம்போல் ஊர்ந்து இரைப்பையில் இறங்கி, அங்கே திரண்டிருந்த பழைய காலத்தையும் பழைய திரவங்களையும் தேடிப் போயிற்று. அங்கே மெதுவாகக் கொதித்தபடி மேலெழும்பி வந்த பச்சையான ஏதோ ஒன்றைக் குடித்தது. அது குடித்தது, இருளையா? பல ஆண்டுகளாகச் சேர்ந்திருந்த எல்லா நச்சுப் பொருள்களையும் அது உறிஞ்சியதா? குருட்டாம் போக்கில் தேடிக்கொண்டும், எப்போதாவது உள்ளுக்குள்ளேயே மூச்சுத் திணறும் ஒலியை எழுப்பிக்கொண்டும் மௌனமாக அவற்றை உட்கொண்டிருந்தது. அதனிடம் ஒரு கண்ணும் இருந்தது. அந்த இயந்திரத்தை இயக்கும் உணர்ச்சியற்ற ஒருவன், ஆடி பொருத்தப்பட்ட தலைக் கவசத்தின் உதவியுடன், யாரிடமிருந்து உறிஞ்சப்படுகிறதோ அவருடைய ஆன்மாவுக்குள் நன்றாகப் பார்க்க முடியும். அந்தக் கண் எதைப் பார்த்தது? அவன் சொல்லவில்லை. அவன் பார்த்தான், ஆனால் கண் பார்த்ததை அவன் காணவில்லை. இந்த வேலை முழுவதுமே வீட்டுக்கு வெளியே குழி வெட்டுவதைக் காட்டிலும் வேறுபட்ட வேலையாக இல்லை. கட்டிலில் படுத்திருந்த பெண்ணும் அந்த ஆட்கள் வந்து அடைந்துவிட்டிருந்த ஒரு கடினமான பளிங்கு அடுக்கைத் தவிர வேறெதுவுமில்லை. எதுவாக இருந்தாலும் வேலையைத் தொடருங்கள், துளையிடும் கருவியைக் கீழே இறக்குங்கள், உறிஞ்சும் பாம்பின் துடிப்பின் மூலம் கழிவுகளை அங்கிருக்கும் வெறுமையைக் குழப்பி வெளிக்கொண்டு வர முடியுமென்றால், அப்படியே செய்யுங்கள். கருவியை இயக்குபவன் சிகரெட் புகைத்துக்கொண்டு நின்றான். இன்னொரு கருவியும் வேலைசெய்துகொண்டிருந்தது.

கறை படிய முடியாத சிவந்த பழுப்பு நிற அங்கியில் முதலாமவனைப் போலவே உணர்ச்சியற்று இருந்த இன்னொருவன், அந்த மற்றொரு கருவியை இயக்கினான். இந்தக் கருவி அவளுடைய இரத்தத்தை முற்றிலுமாக உறிஞ்சி இறைத்துவிட்டு, அதற்குப் பதிலாகப் புது இரத்தத்தையும் பிளாஸ்மாவையும் உட்செலுத்தியது.

"இரண்டு வழிகளிலும் சுத்தம் செய்ய வேண்டும்," என்றான் இயந்திரத்தை இயக்குபவன். "வயிற்றை மட்டும் கவனித்துவிட்டு, இரத்தத்தைச் சுத்தம் செய்யாவிட்டால் பயனில்லை. அந்த நச்சுப் பொருளை இரத்தத்தில் விட்டுவிட்டால், இரத்தம் மரச் சுத்தியலைப் போல மூளையைத் தாக்கும், டமால்! பல ஆயிரம் முறைகள், அவ்வளவுதான், மூளையால் தாக்குப் பிடிக்க முடியாது, வேலை செய்யாது."

"நிறுத்து," என்றான் மோன்டாக்.

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன்," என்றான் மற்றவன்.

"முடித்துவிட்டீர்களா?" என்றான் மோன்டாக்.

தங்களுடைய கருவிகளை அவர்கள் இறுக மூடினார்கள். "நாங்கள் முடித்துவிட்டோம்." அவனுடைய கோபம் அவர்களைத் தொடக்கூட இல்லை. அவர்கள் புகைத்துக்கொண்டிருந்த சிகரெட் புகை அவர்களுடைய மூக்கைச் சுற்றிச் சுழன்று கண்களுக்குள் போய்க்கொண்டிருந்தாலும் அவர்கள் கண்களைச் சிமிட்டவோ இடுக்கிக்கொள்ளவோ இல்லை. "கட்டணம் ஐம்பது டாலர்கள்," என்றார்கள்.

"முதலில், அவளுக்குக் குணமாகிவிடுமா என்று சொல்லுங்கள்."

"நிச்சயமாக. அவள் குணமடைந்துவிடுவாள். எல்லாவித அசிங்கங்களையும் நாங்கள் இந்தப் பெட்டிகளுக்குள் அடைத்துவிட்டோம். இனி அவை அவளை அண்ட முடியாது. நான் சொன்னபடி பழையவற்றை வெளியே எடுத்துவிட்டுப் புதியவற்றை உள்ளே போடுங்கள், எல்லாம் சரியாகிவிடும்."

"உங்களில் யாரும் மருத்துவர் இல்லை. அவசரச் சிகிச்சைப் பிரிவிலிருந்து மருத்துவர் ஒருவரை ஏன் அனுப்பியிருக்கக் கூடாது?"

"அட கஷ்டமே!" கருவி இயக்குபவன் உதடுகளிடையே சிகரெட் ஆடியது. "இரவு நேரங்களில் இதைப் போல ஒன்பது அல்லது பத்து கேஸ்கள் எங்களிடம் வருகின்றன. அப்படி ஏகப்பட்டவை வந்ததனால் பல ஆண்டுகளுக்கு முன்பே சில விசேஷக் கருவிகளை உருவாக்கினோம். இந்த ஆடி மட்டும் புதிய வரவு என்பதென்னவோ உண்மைதான்; மற்றவை மிகப் பழையவை. இது போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவர் அவசியமில்லை; தேவையானவையெல்லாம் இரண்டு உதவியாட்கள் மட்டுமே. அரை மணி நேரத்தில் பிரச்சினையைத் தீர்த்துச் சுத்தமாக்கிவிடலாம். இங்கே பாருங்கள்"—அவன் கதவை நோக்கி நகர்ந்தான்—"நாங்கள் போயாக வேண்டும். இப்போதுதான் இந்தச் செவி-அங்குஸ்தானில் இன்னொரு அழைப்பு வந்தது. இங்கிருந்து பத்து கட்டடங்கள் தாண்டி. யாரோ மாத்திரைப் புட்டியைக் காலிசெய்திருக்கிறார்கள். எங்கள் உதவி மீண்டும் தேவைப்பட்டால் கூப்பிடுங்கள். அவளை அமைதியாக இருக்க விடுங்கள். மயக்கமுறியை அவளுக்குள் செலுத்தியிருக்கிறோம். பசியுடன் எழுந்திருப்பாள். போய்வருகிறோம்."

நேர்கோடாக இருந்த தங்கள் உதடுகளிடையே சிகரெட்டுகளுடன், ஆப்பிரிக்க நச்சுப் பாம்பினுடையதைப் போன்ற கண்களுடன், தங்கள் கருவி, குழாய்கள், பெயரற்ற பொருள்களால் குழம்பாய் இருந்த சகதியும் திரவ சோகமும் நிரம்பிய பெட்டி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அந்த மனிதர்கள் கதவைத் தாண்டிப் போனார்கள்.

நாற்காலியில் அமிழ்ந்த மோன்டாக், அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளுடைய கண்கள் இப்போது மூடியிருக்க, அவளுடைய சுவாசத்தின் கதகதப்பைத் தன் உள்ளங்கையில் உணர்வதற்காகத் தன் கையை நீட்டினான்.

"மில்ட்ரெட்," என்றான் அவன், இறுதியில்.

ஏகப்பட்டவர்கள் இங்கே இருக்கிறோம் என்று அவன் நினைத்தான். நாம் பல கோடிக்கணக்கில் இருக்கிறோம். அது மிகவும் அதிகம்தான். யாருக்கும் யாரையும் தெரிவதில்லை. அந்நியர்கள் வந்து நம்மிடம் அத்துமீறுகிறார்கள். அந்நியர்கள் வந்து நம் இதயத்தை வெட்டி எடுக்கிறார்கள். அந்நியர்கள் வந்து நம்முடைய இரத்தத்தை எடுக்கிறார்கள்.

கடவுளே, வந்தவர்கள் யார்? இதற்கு முன் என் வாழ்க்கையில் ஒருமுறைகூட நான் அவர்களைப் பார்த்ததேயில்லை!

அரை மணி நேரம் கழிந்தது.

இந்தப் பெண்ணுக்குள் இருந்த இரத்த ஓட்டம் புதிது, அது புதிதாக அவளுக்கு ஏதோ செய்திருந்தது. அவளுடைய கன்னங்கள் அதீத இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தன, உதடுகள் புத்துணர்ச்சியுடன் செழிப்பான வண்ணத்தில் இருந்ததோடு மென்மையாகவும் தளர்ந்தும் காணப்பட்டன. வேறு யாருடைய இரத்தமோ அங்கு இருந்தது. வேறு எவருடைய சதையோ, மூளையோ அல்லது ஞாபகமோ அங்கு இருக்கக் கூடாதா? அவளுடைய மனதை உலர் சலவையகத்துக்கு எடுத்துக்கொண்டுபோய், பாக்கெட்டுகளைக் காலி செய்து, நீராவியைச் செலுத்திச் சுத்தம்செய்து, பழையபடி மூடி, காலையில் திரும்பக் கொண்டுவந்திருக்கக் கூடாதா. இன்னும்...

அவன் எழுந்து, திரைச்சீலைகளை ஒதுக்கிவிட்டு, இரவின் காற்று உள்ளே வரும் வகையில் கதவை அகலமாகத் திறந்தான். அப்போது நள்ளிரவு இரண்டு மணி. எல்லாம் ஒரு மணி நேரத்துக்கு முன்புதானா, தெருவில் சந்தித்த க்லாரிஸ் மெக்லெல்லான், வீட்டுக்குள் நுழைந்த அவன், இருண்ட அறை, சிறிய படிகக் கண்ணாடிக் குப்பியை அவன் காலால் உதைத்தது...? ஒரு மணி மட்டுமே, ஆனால் அந்த உலகம் உருகி வழிந்து, புதிய வண்ணமற்ற வடிவமொன்றில் மேலெழும்பி வந்திருந்தது.

க்லாரிஸின் வீட்டிலிருந்து கிளம்பிய சிரிப்பொலி நிலவொளி வண்ணத்தில் இருந்த புல் தரையைக் கடந்து வந்தது. க்லாரிஸின் அப்பா, அம்மா, அவ்வளவு அமைதியாகவும் அவ்வளவு ஆத்மார்த்தமாகவும் புன்னகைத்த அவள் மாமா. எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய சிரிப்பு ஆசுவாசமாக, மனப்பூர்வமாக, எவ்வித நிர்ப்பந்தத்துக்கும் உட்படாததாக இருந்தது; மற்ற எல்லா வீடுகளும் இருளில் தங்களுக்குள்ளேயே முடங்கி

யிருந்தபோது, இரவில் இவ்வளவு நேரமாகியும் க்லாரிஸின் வீட்டில் பிர காசமாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. மோன்டாக் கேட்டான்: அந்தக் குரல்கள் பேசிக்கொண்டிருந்தன, தொடர்ந்து பேசிக்கொண் டிருந்தன, பகிர்ந்துகொண்டிருந்தன, மீண்டும் பேசிக்கொண்டிருந்தன, மற்றவர்களைக் கவரும் தங்கள் வலையை நெய்துகொண்டிருந்தன, மீண் டும் நெய்துகொண்டிருந்தன.

வீட்டின் பிரெஞ்சு ஜன்னல் வழியாக வெளியேறி, தான் செய்யப் போவதைப் பற்றி எண்ணிக்கூடப் பார்க்காமல் மோன்டாக் புல் தரை யைக் கடந்து சென்றான். பேச்சுச் சத்தம் வந்த வீட்டுக்கு முன்னால் நிழலில் நின்றுகொண்டு, கதவைத் தட்டலாமா என்றும், "என்னை உள்ளே அனுமதியுங்கள். நான் ஒன்றும் பேச மாட்டேன். வெறுமனே கேட்டுக்கொண்டு மட்டுமே இருக்க விரும்புகிறேன். நீங்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று மென்மையாகக் கேட்கலாமா என் றும்கூட நினைத்தான்.

ஆனால் அதற்குப் பதிலாக, சில்லிட்டுப்போயிருந்த அவன், பனிக் கட்டி முகம்போலத் தன் முகம் ஆகிவிட, தடை இல்லாமல் கச்சிதமான வேகத்தில் ஒலித்துக்கொண்டிருந்த ஒரு ஆணின் (அவளுடைய மாமாவா?) குரலைக் கேட்டபடி அங்கு நின்றான்.

"பார்க்கப்போனால், துடைத்துவிட்டுத் தூக்கியெறியப்படும் துணி களின் காலம் இது. மற்றவர்மேல் சளியைச் சிந்தி, பஞ்சில் ஒத்தி எடுத்து, தூக்கியெறியுங்கள், பிறகு இன்னொரு தாள், சளி, பஞ்சு, தூக்கியெறிவது. ஒவ்வொருவரும் தாங்கள் முன்னே போக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். என்ன விளையாட்டுப் போட்டி நடக்கிறது என்பது பற்றியோ, அதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களின் பெயர்கள் பற்றியோ தெரியவில்லையென்றால் உள்ளூர் அணியை எப்படி ஊக்குவிப்பது? களத்தில் இறங்கும்போது நம் அணியினர் எந்த வண்ணத்தில் உடைகள் அணிந்திருப்பார்கள் என்றுகூடத் தெரியாதபோது?"

மோன்டாக் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பி வந்து, ஜன்னலை அகலமாகத் திறந்து வைத்து, மில்ட்ரெட் எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவிட்டு, கவனமாக அவளைச் சுற்றிப் போர்வையை இழுத்து மூடிச் செருகி, தன்னுடைய கன்னக் கதுப்புகளிலும் நெற்றியின் கவலை தோய்ந்த சுருக்கங்கள்மீதும் நிலவொளி விழும்படியாக நிலவின் ஒளி வெள்ளி அருவியாக ஒவ்வொரு கண்ணிலும் வடியும் வகையில் படுத்துக் கொண்டான்.

ஒரு மழைத்துளி. க்லாரிஸ். மற்றொரு துளி. மில்ட்ரெட். மூன்றாவது. மாமா. நான்காவது. இன்றைய இரவு நெருப்பு. ஒன்று, க்லாரிஸ். இரண்டு,

மில்ட்ரெட். மூன்று, மாமா. நான்கு, நெருப்பு. ஒன்று, மில்ட்ரெட். இரண்டு, க்லாரிஸ். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, க்லாரிஸ், மில்ட்ரெட், மாமா, நெருப்பு, தூக்க மாத்திரைகள், ஆட்கள், துடைத்துத் தூக்கியெறியும் துணி, மற்றவர் ஆடை, சளி, பஞ்சு, அடித்துவிடும் நீர், க்லாரிஸ், மில்ட்ரெட், மாமா, நெருப்பு, மாத்திரைகள், துணிகள், சளி, பஞ்சு, நீர். ஒன்று, இரண்டு, மூன்று, ஒன்று, இரண்டு, மூன்று! மழை. புயல். சிரித்துக்கொண்டிருக்கும் மாமா. கீழே விழும் இடி. ஒரேயடியாகப் பொழிந்து விழும் மொத்த உலகம். எரிமலையில் பொங்கி எழும் திக்குழம்பு. பெரிய கர்ஜனையுடன் எல்லாமே சுற்றிலும் கீழே விழுந்து, காலைப் பொழுதை நோக்கி ஆறாகப் பெரும் ஒலியுடன் ஓடுகின்றன.

"இப்போதெல்லாம் எனக்கு எதுவுமே புரிபடுவதில்லை" என்ற அவன், தன் நாக்கில் தூக்க மிட்டாய் ஒன்றைக் கரைய விட்டான்.

காலை ஒன்பது மணிக்கு, மில்ட்ரெட்டின் படுக்கை காலியாக இருந்தது.

மோன்டாக் 'விருட்'டென்று எழுந்து, படபடக்கும் இதயத்துடன் கூடத்தில் ஓடி, சமையலறை வாசலில் வந்து நின்றான்.

வெள்ளியால் ஆன ரொட்டி வறுப்பானிலிருந்து துள்ளி வந்த வறுத்த ரொட்டித் துண்டை உலோகச் சிலந்திக் கை ஒன்று பற்றி எடுத்து உருகிய வெண்ணெயில் தோய்த்தது.

தன் தட்டில் வந்து விழுந்த ரொட்டித் துண்டை மில்ட்ரெட் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய இரண்டு காதுகளிலும் பொருத்தப்பட்டிருந்த மின்னணுத் தேனீக்கள் நேரத்தைக் கழிக்க முணுமுணுத்தன. சட்டென்று நிமிர்ந்த அவள், அவனைப் பார்த்துத் தலையை அசைத்தாள்.

"உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?" அவன் கேட்டான்.

பத்து ஆண்டுகளாகக் கிளிஞ்சல் காது அங்குஸ்தான்களை அணிந்து பழக்கமாகியிருந்ததால் உதட்டசைவைப் படிப்பதில் அவள் தேர்ச்சி பெற்றிருந்தாள். மீண்டும் தலையை ஆட்டினாள். ரொட்டி வறுப்பானில் இன்னொரு ரொட்டித் துண்டைச் செருகி, முடுக்கி விட்டாள்.

மோன்டாக் உட்கார்ந்தான்.

அவன் மனைவி சொன்னாள்: "எனக்கு ஏன் இப்படிப் பசிக்கிறதென்று தெரியவில்லை."

"நீ... வந்து..."

"எனக்குப் பசிக்கிறது."

"நேற்றிரவு....", அவன் ஆரம்பித்தான்.

"சரியாகத் தூங்கவில்லை. ரொம்ப மோசமாக இருக்கிறது," என்றாள் அவள். "கடவுளே, எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏன் என்றே எனக்குத் தெரியவில்லை."

"நேற்றிரவு..." அவன் மீண்டும் பேசத் தொடங்கினான்.

அவள் கவனமின்றி அவனுடைய உதட்டசைவைக் கவனித்தாள். "நேற்றிரவுக்கு என்ன?"

"உனக்கு ஞாபகம் இல்லையா?"

"என்ன? நம் வீட்டில் கூட்டம் சேர்ந்து கொட்டமடித்தோமா? எனக் குத் தலை கனக்கிறது. கடவுளே, எனக்கு இப்படிப் பசிக்கிறதே. யார் வந்திருந்தார்கள்?"

"கொஞ்சம் பேர்தான்," என்றான்.

"அதுதான் நானும் நினைத்தேன்." ரொட்டித் துண்டை மென்று கொண்டிருந்தாள். "வயிறு புண்ணாக இருக்கிறது. ஆனாலும், எல்லாம் வெளியேறிவிட்டதால் எனக்குப் பசியாக இருக்கிறது. எல்லோரும் வந் திருக்கும்போது நான் ஒன்றும் மடத்தனமாக நடந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன்."

"இல்லை," என்றான் அவன், அமைதியாக.

வறுப்பானின் சிலந்திக் கை வெண்ணெய் தடவிய ரொட்டித் துண்டு ஒன்றை அவனிடம் நீட்டியது. நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக அதைக் கையில் எடுத்துக்கொண்டான்.

"நீ ஒன்றும் அவ்வளவு சோர்வாக இருப்பதுபோல் தெரியவில்லையே'' என்றாள் அவள்.

பிற்பகல் முடியும்போது மழை பெய்தது. உலகமே ஆழ்ந்த சாம்பல் நிற வண்ணமாக மாறியது. ஆரஞ்சு நிறத்தில் கொழுந்துவிட்டுக்கொண்டிருந்த சலமாண்டர் படம் குறுக்கே பொறிக்கப்பட்டிருந்த வில்லையை அணிந்த படி தன் வீட்டின் கூடத்தில் மோன்டாக் நின்றுகொண்டிருந்தான். கூடத் தில் மேலே இருந்த குளிர்சாதனத்தின் காற்றுப்போக்கியை வெகு நேரம் பார்த்தவாறு இருந்தான். தொலைக்காட்சிக் கூடத்தில் தன்னுடைய பாத் திரத்திற்கான வசனத்தைப் படித்துவிட்டு, நீண்ட நேரத்திற்குப் பின் அவன் மனைவி நிமிர்ந்து பார்த்தாள். "அடேடே," என்றாள் அவள். "இந்த மனிதர் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்!"

"ஆமாம்," என்றான் அவன். "உன்னிடம் பேச வந்தேன்." அவன் தயங்கினான். "உன் குப்பியிலிருந்த அத்தனை தூக்க மாத்திரைகளையும் நேற்றிரவு நீ விழுங்கிவிட்டிருந்தாய்."

"அப்படியா, நான் அப்படிச் செய்திருக்க மாட்டேனே," என்றாள் அவள், வியப்படைந்தவளாக.

"குப்பி காலியாகிவிட்டது."

"நான் அப்படிச் செய்திருக்க மாட்டேன். எதற்காக நான் அப்படிச் செய்திருக்க வேண்டும்?" என்றாள்.

"ஒருவேளை நீ இரண்டு மாத்திரைகளை விழுங்கிவிட்டு, மறந்து போய், மீண்டும் இரண்டு விழுங்கிவிட்டு, மீண்டும் மறந்துபோய், மீண்டும் இரண்டு விழுங்கிவிட்டு, பின்னர் ஒரேயடியாக மயக்க நிலைக்குப் போய், முப்பது அல்லது நாற்பது மாத்திரைகளை விழுங்கும்வரை திரும்பத்திரும்ப அப்படியே செய்திருக்கலாம்."

"அட சே," என்றாள். "அப்படி ஒரு மடத்தனமான செயலை ஏன் நான் செய்ய வேண்டும்?"

"எனக்கென்ன தெரியும்?" என்றான் அவன்.

அவன் அங்கிருந்து போய்விட வேண்டும் என்று அவள் காத்திருந்தாள் என்பது தெளிவாகத் தெரிந்தது. "நான் அப்படிச் செய்யவில்லை" என்றாள் அவள். "ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டேன்."

"நீ சொன்னால் சரிதான்," என்றான் அவன்.

"அதைத்தான் இந்த மகாராணி சொல்கிறாள்." அவள் தன்னுடைய தொலைக்காட்சித் திரைக்கதை வசனத்துக்கே மீண்டும் திரும்பி வந்தாள்.

"இன்று பிற்பகல் என்ன நிகழ்ச்சி?" என்று அவன் கேட்டான், அயர்ச்சியுடன்.

தான் பார்த்துக்கொண்டிருந்த வசனத்திலிருந்து அவள் நிமிரவே இல்லை. "இன்னும் பத்து நிமிடங்களில், சுவர்தொலைக்காட்சியில் நாடகம் ஒன்று வரப்போகிறது. அதில் என்னுடைய பாத்திரத்திற்கான வசனத்தை இன்று காலை அஞ்சலில் அனுப்பியிருந்தார்கள். நான் சில சலுகை விலை அட்டைகளை அனுப்பியிருந்தேன். ஒரு பாத்திரத்தைத் தவிர, மற்ற எல்லோருடைய வசனங்களையும் எழுதியிருப்பார்கள். இது ஒரு புதுமையான முயற்சி. அதில் இல்லாத பாத்திரம்—அதாவது, நான்—ஒரு குடும்பத் தலைவி. வசன வரிகள் இல்லாத இடைவெளி வரும் போது, மூன்று சுவர்களிலிருந்தும் மற்றவர்கள் என்னைப் பார்க்க, என்னுடைய பாத்திரம் சொல்ல வேண்டிய வரிகளை நான் சொல்வேன். உதாரணமாக, இதோ, ஒருவர் சொல்கிறார், 'இந்தத் திட்டத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய், ஹெலென்?' இங்கே நாடக மேடையின் நடுவே உட்கார்ந்திருக்கும் என்னைப் பார்ப்பார், புரிகிறதா? அப்போது நான் சொல்வேன்... நான் சொல்வேன்..."—அவள் பேசுவதை நிறுத்திவிட்டு,

ஒரு வரியின் மீது தன் விரலை ஓட விட்டாள். " 'அது சரிதான் என்று நினைக்கிறேன்.' பின்னர் தங்கள் நாடகத்தைத் தொடர்வார்கள், 'உனக்கு அது சம்மதம்தானே, ஹெலென்?' என்று அவர் சொல்லும்வரை. அப்போது நான் 'ஆமாம், நிச்சயமாக!' என்று சொல்வேன். மிக சுவாரஸ்யமாக இல்லை, மோன்டாக்?"

அவளைப் பார்த்தபடியே கூடத்தில் அவன் நின்றுகொண்டிருந்தான்.

"நிச்சயமாக சுவாரஸ்யமான விஷயம்தான்," என்றாள் அவள்.

"இந்த நாடகம் எதைப் பற்றி?"

"இப்போதுதானே சொன்னேனே. பாப், ரூத், ஹெலென் என்று மூன்று பேரைப் பற்றி."

"அப்படியா?"

"உண்மையிலேயே சுவாரஸ்யமான பொழுதுபோக்கு. நான்காவது சுவரிலும் தொலைக்காட்சியைப் பொருத்திவிட்டோமென்றால் இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும். இன்னும் கொஞ்சம் பணம் சேமித்து, நான்காவது சுவரையும் பிரித்து, அங்கே நான்காவது சுவர்தொலைக்காட்சியைப் பொருத்த நமக்கு இன்னும் எவ்வளவு நாட்கள் ஆகுமென்று நினைக்கிறாய்? இரண்டாயிரம் டாலர்கள் மட்டுமே செலவாகும்."

"என்னுடைய வருட சம்பளத்தில் அது மூன்றில் ஒரு பங்கு."

"இரண்டாயிரம் டாலர்கள் மட்டும்தான்," அவள் பதிலளித்தாள். "என்னைப் பற்றியும் நீ கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டும் என்று நினைக்கிறேன். அது போன்ற நான்காவது சுவரும் அமைந்துவிட்டால், இந்த அறை நம்முடையது அல்ல என்றும், மாறாக, பலவிதமான விசித்திரமான அன்னியர்களுடையது என்றும் ஆகிவிடும். சில விஷயங்கள் இல்லாமலேயே நம்மால் இருக்க முடியும்."

"மூன்றாவது சுவருக்குப் பணம் கொடுத்ததில் ஏற்கனவே சில விஷயங்கள் இல்லாமல்தான் இருக்கிறோம். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் அதைப் பொருத்தினோம், நினைவிருக்கிறதா?"

"ஆக மொத்தம், அவ்வளவுதானா?" வெகு நேரம் அவனைப் பார்த்தவாறே அவள் உட்கார்ந்திருந்தாள். "சரி, போய்வா."

"போய்வருகிறேன்," என்ற அவன் நின்று, திரும்பிப் பார்த்தான். "சரி, நாடகம் மகிழ்ச்சியாக முடிகிறதா?"

"நான் இன்னும் அவ்வளவு தூரம் படிக்கவில்லை."

அவன் அவளிடம் வந்து, கடைசிப் பக்கத்தைப் படித்துவிட்டு, தலையை அசைத்து, அந்தக் காகிதத்தை மடித்து அவளிடம் திரும்பக் கொடுத்தான். வீட்டிலிருந்து வெளியே போய் மழையில் நடந்தான்.

மழை குறைந்துகொண்டுவந்தது. நடைபாதையின் நடுவே தலையை நிமிர்த்தித் தன் முகத்தில் சில மழைத்துளிகள் விழ, அந்தப் பெண் நடந்துகொண்டிருந்தாள். மோன்டாகைப் பார்த்தவுடன் புன்னகைத்தாள்.

"ஹலோ!"

அவனும் 'ஹலோ' என்று சொல்லிவிட்டு, "இப்போது என்ன உத்தேசம்?" என்றான்.

"இன்னமும் நான் பைத்தியக்காரத்தனமாகத்தான் இருக்கிறேன். மழை சுகமாக இருக்கிறது. மழையில் நடப்பது எனக்குப் பிடித்திருக்கிறது."

"எனக்கு அது பிடிக்கும் என்று தோன்றவில்லை," என்றான் அவன்.

"ஒரு முறை அனுபவித்துப்பார்த்தால், உங்களுக்கும் அது பிடிக்கலாம்."

"நான் அதைச் செய்ததே இல்லை."

தன் உதடுகளை அவள் நக்கிக்கொண்டாள். "மழை நீர் சுவையாகக் கூட இருக்கிறது."

"எல்லாவற்றையும் ஒரு முறை முயன்று பார்ப்பதன் மூலம் உனக்கு என்ன கிடைக்கிறது?" என்று அவன் கேட்டான்.

"சில சமயங்களில் இரண்டு முறை." தன் கையிலிருந்த ஏதோ ஒன்றைப் பார்த்தாள்.

"அங்கே என்ன வைத்திருக்கிறாய்?" என்றான் அவன்.

"இந்த ஆண்டின் கடைசி டான்டிலியன் மலர்கள் இவை என்று நினைக்கிறேன். இவ்வளவு பருவம் தவறிப் பூத்த ஒரு மலரைப் புல்வெளியில் பார்ப்பேன் என்று நினைக்கவில்லை. இதை முகவாயில் உரசிக் கொள்வதைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இங்கே பாருங்கள்." சிரித்துக்கொண்டே அந்த மலரால் தன் முகவாயைத் தடவிக்கொண்டாள்.

"ஏன்?"

"அதில் கொஞ்சம் என் முகவாயில் ஒட்டிக்கொண்டால், நான் யாரையோ நேசிக்கிறேன் என்று அர்த்தம். ஒட்டிக்கொண்டிருக்கிறதா?"

பார்ப்பதைத் தவிர அவனால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

"என்ன, இருக்கிறதா?" என்றாள் அவள்.

"உன் முகவாய்க்கடியில் மஞ்சளாக இருக்கிறது."

"சரி, இப்போது உங்களுக்குச் செய்துபார்ப்போம்."

"என் விஷயத்தில் அப்படி ஆகாது."

"இதோ." அவன் அசைவதற்கு முன்னால் அந்த டான்டிலியன் மலரை அவனுடைய முகவாய்க்கு அடியில் வைத்தாள். அவன் பின்வாங்க, அவள் சிரித்தாள். "அசையாமல் இருங்கள்!"

அவனுடைய முகவாய்க்கு அடியில் உற்றுப் பார்த்துவிட்டு லேசாக முறைத்தாள்.

"அப்படியானால்?" என்றான்.

"வெட்கக்கேடு," என்றாள் அவள். "நீங்கள் யாரையுமே நேசிக்க வில்லை."

"இல்லவே இல்லை, நான் நேசிக்கிறேன்."

"இது அப்படிக் காட்டவில்லையே."

"இல்லை, நான் உண்மையிலேயே நேசிக்கிறேன்!" தன்னுடைய சொற் களுக்குப் பொருந்தும் முகம் ஒன்றை மனத்தில் கொண்டுவர முயன்றான், ஆனால் முகம் எதுவும் அங்கே இல்லை. "ஆமாம், நேசிக்கிறேன்!"

"தயவுசெய்து, அப்படிப் பார்க்காதீர்கள்."

"எல்லாம் அந்த டான்டிலியன் மலரால்தான்" என்றான் அவன். "அதை முழுவதுமாக நீ தடவிக்கொண்டுவிட்டாய். அதனால்தான் எனக்கு அது வேலை செய்யவில்லை."

"நிச்சயமாக அப்படித்தான் இருக்க வேண்டும். ஐயோ, நான் உங்கள் மனதைப் புண்படுத்திவிட்டேன், அது எனக்கு நன்றாகத் தெரிகிறது; அதற்காக வருந்துகிறேன், உண்மையாகவே." அவனுடைய முழங்கை யைத் தொட்டாள்.

"இல்லை, இல்லை," என்றான் அவன் அவசரமாக. "எனக்கு ஒன்றும் ஆகவில்லை."

"நான் இப்போது போக வேண்டும், என்னை மன்னித்துவிட்டதாகச் சொல்லுங்கள். நீங்கள் என்மேல் கோபமாக இருப்பது எனக்குப் பிடிக் காது."

"கோபமில்லை, கொஞ்சம் மனவருத்தம். அவ்வளவே."

"இப்போது மனநல மருத்துவரை நான் போய்ப் பார்க்க வேண்டும். என்னைப் போகச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். நானும் எதையாவது இட்டுக்கட்டிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மருத்துவர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்றே தெரியவில்லை. சரியான வெங்காயம்போல நான் இருப்பதாக அவர் சொல்கிறார். ஒவ்வொரு அடுக்காகத் தோலை உரிப்பதில் அவரை மும்முரமாக இருக்கச் செய்கிறேன்."

"உனக்கு ஒரு மனநல மருத்துவர் அவசியம்தான் என்று நினைக்கிறேன்," என்றான் மோன்டாக்.

"உண்மையாகவேதான் அதைச் சொல்கிறீர்களா?"

அவன் நன்றாக மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்ட பிறகு சொன்னான்: "நான் அப்படிச் சொல்லவில்லை."

"நான் ஏன் வெளியே போய், காடுகளில் திரிந்து, பறவைகளைக் கவனித்துப் பார்த்து, பட்டாம்பூச்சிகளைச் சேகரிக்கிறேன் என்று மனநல மருத்துவர் அறிய விரும்புகிறார். என்னுடைய சேகரிப்புகளை உங்களுக்கு ஒருநாள் காட்டுகிறேன்."

"நல்லது."

"என் நேரம் முழுவதையும் நான் எப்படிக் கழிக்கிறேன் என்று அறிய விரும்புகிறார்கள். சில சமயங்களில், நான் வெறுமனே உட்கார்ந்து சிந்திக்கிறேன் என்று அவர்களிடம் சொல்வேன். ஆனால் எதைப் பற்றி என்று சொல்ல மாட்டேன். அவர்களை ஓடஓட விரட்டிக்கொண்டிருக்கிறேன். இன்னும் சில சமயங்களில், இதோ இதைப் போல, அண்ணாந்து பார்த்து மழை நீர் என்னுடைய வாயில் விழும்படி செய்வேன் என்றும் அவர்களிடம் சொல்வேன். அதன் சுவை 'வைனைப்' போல இருக்கும். நீங்கள் எப்போதாவது அப்படிச் செய்துபார்த்திருக்கிறீர்களா?"

"இல்லை... நான்"

"நீங்கள் என்னை மன்னித்துவிட்டீர்கள், இல்லையா?"

"ஆமாம்." அவன் அதைப் பற்றி யோசித்துப்பார்த்தான். "ஆமாம், மன்னித்துவிட்டேன். ஏன் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நீ விசித்திரமானவள், எரிச்சலூட்டுகிறாய், ஆனால் உன்னை மன்னிப்பது எளிது. உனக்குப் பதினேழு வயது என்றுதானே சொன்னாய்?"

"ஆமாம்—அடுத்த மாதம்."

"என்ன வினோதம்! எவ்வளவு அசாதாரணம்! என் மனைவிக்கு முப்பது வயதாகிறது, இருந்தாலும், சில சமயம் நீ அவளைவிட முதியவளாகத் தோன்றுகிறாய். என்னால் அதிலிருந்து மீள முடியவில்லை."

"நீங்களேகூட விசித்திரமானவர்தான் திரு. மோன்டாக். நீங்கள் தியணைப்பவர் என்பதையே அவ்வப்போது மறந்துவிடுகிறேன். சரி, உங்களை இப்போது மீண்டும் கோபப்பட வைக்கட்டுமா?"

"சரி, செய்."

"எல்லாம் எப்படி ஆரம்பித்தது? நீங்கள் எப்படி இந்த வேலைக்கு வந்தீர்கள்? உங்கள் வேலையை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்? நீங்கள் இப்போது செய்யும் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படித் தோன்றியது? நீங்கள் மற்றவர்களைப் போல இல்லை. நான் பலரைப் பார்த்திருக்கிறேன், எனக்குத் **தெரியும்**. நான் பேசும்போது நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள். நேற்றிரவு, நிலவைப் பற்றி நான் உங்களிடம் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தபோது, நீங்கள் நிலவைப் பார்த்தீர்கள். மற்றவர்கள் ஒருபோதும் அப்படிச் செய்வதில்லை.

நான் பேசிக்கொண்டே இருப்பேன். அவர்கள் போய்க்கொண்டே இருப்பார்கள். அல்லது என்னை மிரட்டுவார்கள். யாருக்கும் யாருக்காகவும் செலவிட இப்போதெல்லாம் நேரமில்லை. என்னைச் சகித்துக்கொள்ளும் மிகச் சிலரில் நீங்கள் ஒருவர். ஆகவேதான், நீங்கள் தீயணைப்பவராக இருப்பது விந்தை என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒருவகையில் அது உங்களுக்குப் பொருத்தமாக இல்லை."

அவனுடைய உடலே வெப்பமாகவும் குளிர்ந்தும், மென்மையாகவும் கடினமாகவும், நடுங்கியபடியும் நடுங்காமலும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து, இரண்டும் ஒன்றன்மேல் ஒன்று உரசி அரைபடுவதைப் போல உணர்ந்தான்.

"நீ போய் உன் வேலையைக் கவனி," என்றான்.

அவனை மழையிலேயே நிற்க விட்டுவிட்டு, அவள் ஓடிப்போய்விட்டாள். வெகு நேரம் கழித்துதான் அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

பிறகு, மிக மெதுவாக நடந்து சென்ற அவன், மழையை நோக்கிச் சில கணங்கள் மட்டுமே தன் தலையைப் பின்புறமாகச் சாய்த்து, வாயைத் திறந்தான்...

தீயணைப்பு நிலையத்தின் இருண்ட மூலை ஒன்றில் இதமாக ஒளியூட்டப்பட்ட கூண்டு ஒன்றில், மென்மையான ரீங்காரத்துடன், மென்மையான அதிர்வுகளுடன் அந்த இயந்திர வேட்டைநாய் உறங்கிக்கொண்டிருந்தாலும் உறங்காமல், உயிர் வாழ்ந்துகொண்டிருந்தாலும் உயிர் வாழாமல் இருந்தது. நள்ளிரவு ஒரு மணியின் மங்கிய வெளிச்சத்தில், லேசாக அதிர்ந்துகொண்டிருந்த அந்த இயந்திர மிருகத்தின் பித்தளை, செம்பு, எஃகின் மேல், வானத்தை நோக்கியிருந்த ஜன்னல் சட்டம் வழியாக வந்த நிலவொளி இங்குமங்குமாகப் பட்டது. ரப்பர் உறை போடப்பட்டு, சிலந்தியைப் போல் பரப்பியிருந்த தன்னுடைய எட்டு பாதங்களுடன் மென்மையாக, மென்மையாகத் துடித்துக்கொண்டிருந்த அந்த மிருகத்தினுடைய சிவப்புக் கண்ணாடித் துண்டுகளின் மீதும், அதனுடைய நாசித்துவாரங்களில் நைலான் இழைகளால் ஆன, நுண்ணுணர்வு மிகுந்த தந்துகிகளின் ரோமங்கள் மீதும் ஒளி மினுமினுத்தது.

மோன்டாக் பித்தளைத் தூண் வழியாக வழுக்கி, கீழே இறங்கி வந்தான். நகரத்தைப் பார்ப்பதற்காக வெளியே வந்தபோது மேகங்கள் கலைந்துவிட்டிருந்தன. ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு அந்த இயந்திர வேட்டைநாயைக் குனிந்து பார்ப்பதற்காகத் திரும்பி வந்தான். நச்சு மிக்க வெறித்தனம், பைத்தியம், கொடிய கனவுகள் எல்லாம் நிரம்பிய தேனை அளிக்கும் ஏதோ ஒரு வயலிலிருந்து வந்த பிரம்மாண்ட தேனீ

யைப் போல, அதீதச் செழிப்பான அந்த அமிர்தம் தன் உடலில் திணிக்கப்பட்டு அங்கே இருந்தது அந்த வேட்டைநாய். **தீமையைத்** தன்னிடமிருந்து வெளிப்படுத்தியவாறு அது தூங்கிக்கொண்டிருந்தது.

அந்த உயிரற்ற மிருகத்திடம், உயிருடன் இருந்த மிருகத்திடம் எப்போதுமே ஈர்க்கப்பட்டிருந்த மோன்டாக், 'ஹலோ' என்று மெதுவாகச் சொன்னான்.

இரவுகள் மந்தமாக இருக்குபோதெல்லாம், அதாவது ஒவ்வொரு இரவுமே, அங்கிருந்த ஆட்கள் பித்தளைத் தூண்களின் வழியாக வழுக்கிக் கீழே இறங்கி வந்து, இயந்திர வேட்டைநாயின் மோப்ப உணர்வு செயல்படும் அமைப்பை முடுக்கிவிட்டு, தீயணைப்பு நிலையத்தின் தரையில் சில எலிகளையும், சில சமயங்களில் கோழிக்குஞ்சுகளையும், சில சமயங்களில் எப்படியிருந்தாலும் மூழ்கடிக்கப்பட வேண்டிய பூனைகளையும் விடுவிப்பார்கள். அந்தப் பூனைகள், கோழிக்குஞ்சுகள், எலிகள் இவற்றில் வேட்டைநாய் முதலாவதாக எதைப் பிடித்துவிடும் என்று பந்தயம் கட்டுவது அங்கே நடக்கும். அந்தப் பிராணிகளைச் சுதந்திரமாக ஓட விடுவார்கள். மூன்றே நொடிகளில் அந்த விளையாட்டு முடிவுக்கு வந்துவிடும்; தரையில் பாதி தூரம் போவதற்குள்ளேயே மாட்டிக்கொண்டு, வேட்டைநாயின் மென்மையான பாதங்களில் இறுகப் பிடிக்கப்பட்டிருந்த எலியோ, பூனையோ, கோழிக்குஞ்சோ ஏதோ ஒன்றின் மேல், வேட்டைநாயின் நீண்ட வாயிலிருந்து தொங்கும் நாலு அங்குல நீளமுள்ள மெல்லிய குழல் ஊசி இறங்கி, மார்ஃபின் அல்லது ப்ரோகைன் மயக்க மருந்து பெருமளவு செலுத்தப்படும். பிறகு, அந்தப் பகடைக் காய் மின்எரியூட்டிக்குள் தூக்கியெறியப்படும். அடுத்த சுற்று விளையாட்டு தொடங்கும்.

இது போன்று நடக்கும் பெரும்பாலான இரவுகளில், மோன்டாக் மேலே, மாடியிலேயே இருப்பான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை அந்த விளையாட்டில் புலியான ஒருவனுடன் பந்தயம் கட்டி, ஒரு வாரச் சம்பளத்தைக் கோட்டைவிட்டு, மில்ட்ரெட்டின் ரத்த நாளங்களிலும் தழும்புகளிலும் தென்படும் அளவுக்கு வந்த மிதமிஞ்சிய கோபத்தை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இப்போது இரவுகளில், சுவருடன் பொருந்தியிருந்த தன்னுடைய கட்டிலில், சுவரை நோக்கித் திரும்பிப் படுத்துக்கொண்டு, கீழிருந்து வந்த சிரிப்பு வெடிகளையும், பியானோ தந்தியாய் ஒலித்த எலிக்கால்களின் ஓட்டத்தையும், சுண்டெலிகளின் வயலின்-கிறீச்சிடல்களையும், பெரும் நிழலாகப் பாய்ந்த வேட்டைநாயின் இயக்கப்பட்ட மௌனத்தையும் கேட்டுக்கொண்டிருந்தான்; பிரகாசமான நல்ல வெளிச்சத்தை நோக்கிப் பாயும் விட்டிலைப் போல அந்த வேட்டைநாய் பாய்ந்து, தன் இரையைக் கண்டுபிடித்து, அதைப்

பற்றிக்கொண்டு, ஊசியைச் செலுத்தி, ஏதோ விசையைத் தட்டிவிட்ட தைப் போல, இறப்பதற்காகத் தன்னுடைய கூண்டுக்குத் திரும்பிப் போய் விடும்.

அதனுடைய மூக்கு நுனியை மோன்டாக் தொட்டான்.

வேட்டைநாய் உறுமியது.

மோன்டாக் சரேலெனக் குதித்துப் பின்வாங்கினான்.

கூண்டுக்குள், சற்றே எழுந்த வேட்டைநாய் திடீரென்று இயக்கப் பட்ட தன்னுடைய குமிழ் விளக்குக் கண்களில் பச்சை-நீல நிற 'நியான்' ஒளி மின்ன அவனைப் பார்த்தது. மீண்டும் உறுமியது—ஒருவித மின்சாரச் சரசரப்பு, வறுபடும் சடசடப்பு, உலோகத்தின் உரசல், துருப்பிடித்து மிகப் புராதனமாகத் தோன்றும் பல் சக்கரத்தின் பற்கள் சுழலும் ஓசை, இவையெல்லாம் ஒன்றுசேர்ந்ததைப் போன்ற விநோதமான கரகரத்த உறுமல்.

"வேண்டாம் மகனே, வேண்டாம்" என்றான் மோன்டாக், நெஞ்சு படபடக்க.

அந்த வெள்ளி ஊசி ஒரு அங்குலம் மேல் நோக்கி நீண்டு, உள்ளிழுக் கப்பட்டு, நீண்டு, உள்ளிழுக்கப்பட்டது. அந்த மிருகத்தின் உறுமல் அடங்கி ஒலிக்க, அவனை அது பார்த்தது.

மோன்டாக் பின்வாங்கினான். நாய்க் கூண்டிலிருந்து வேட்டைநாய் வெளியே ஓரடி எடுத்து வைத்தது. பித்தளைத் தூணை மோன்டாக் ஒரு கையால் பற்றினான். அவன் கை பட்டதும் இயங்கிய தூண் மேல்நோக்கி நகர்ந்து, கூரை வழியாகச் சத்தமின்றி அவனை இட்டுச்சென்றது. அரை குறை வெளிச்சத்தில் இருந்த மேல்தளத்தில் அவன் அடியெடுத்து வைத் தான். அவன் நடுங்கிக்கொண்டிருந்தான். முகம் வெளிறிய பச்சை நிற மாக மாறியது. கீழே, வியப்பூட்டும் தன்னுடைய எட்டுக் கால்களின் மேல் வேட்டைநாய் அமிழ்ந்து உட்கார்ந்தது. அதனுடைய பன்முகக் கண்கள் சாந்தமாகிவிட, மீண்டும் தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

தன்னுடைய பய உணர்வு அடங்கும்வரை மோன்டாக் கீழ்த்தளத்தை நோக்கியிருந்த ஓட்டைக்கருகில் நின்றான். அவனுக்குப் பின்னால் ஒரு மூலையில் பச்சை நிற மூடியுடன் இருந்த விளக்கின் அடியில் சீட்டாட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த நான்கு ஆட்கள் ஒன்றும் பேசாமல் அவனைச் சற்றே தலைநிமிர்ந்து பார்த்தார்கள். இறுதியாக, ஃபீனிக்ஸ் பறவையின் சின்னம் பொறிக்கப்பட்ட, தலைவருக்குண்டான தொப் பியை அணிந்திருந்த ஒரே ஒருவர் மட்டும், ஆர்வத்துடன், தன் மெல்லிய

கைகளில் சீட்டுகளுடன், நீண்டிருந்த அந்த அறையின் மறுகோடியி லிருந்து பேசினார்.

"மோன்டாக்...?"

"அதற்கு என்னைப் பிடிக்கவில்லை," என்றான் மோன்டாக்.

"என்ன, வேட்டைநாய்க்கா?" கேப்டன் தன்னுடைய சீட்டுகளைக் கவனமாகப் பார்த்தார். "சும்மா கதை விடாதே. பிடிக்கும் பிடிக்காது என்று அதற்கு எதுவுமில்லை. அது 'இயங்கும்', அவ்வளவே. ஏவுகணை இயல் பாடம் ஒன்றைப் போன்றது அது. இலக்கு நோக்கிய அதனுடைய பாதையை நாம் நிர்ணயம் செய்கிறோம். அதை அந்த வேட்டைநாய் பின்பற்றும். தானாகவே இலக்கை அடைந்து, அதைத் தாக்கிவிட்டுத் தானாகவே திரும்பிவந்து, தொடர்பைத் துண்டித்துவிடும். அது வெறும் செம்புக் கம்பி, மின்கலங்கள், மின்சாரம் ஆகியவை மட்டுமே."

மோன்டாக் மென்று விழுங்கினான். "எந்த மாதிரி சேர்க்கையையும் உணரும் வகையில் அதனுடைய கணிப்பான்களை முடுக்கிவிடலாம் இல் லையா? இவ்வளவு அமினோ அமிலங்கள், இவ்வளவு கந்தகம், இவ்வளவு கொழுப்பு, இவ்வளவு காரம் என்று."

"அவையெல்லாம் நமக்குத் தெரியுமே."

"கீழ்த்தளத்தில் உள்ள பிரதானக் கோப்புகளில் இந்த அலுவலகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய சேர்க்கைகளும், விழுக்காடுகளும் பதிவாகி யிருக்கின்றன. வேட்டைநாயின் 'நினைவில்' அரைகுறையான ஏதாவ தொரு சேர்க்கையையோ, ஏதோ சில அமிலங்களையோ முடுக்கிவிடுவது யாருக்குமே எளிதாக இருக்கலாம். சற்று நேரத்துக்கு முன்பு அந்த மிருகம் ஏன் அப்படிச் செயல்பட்டது என்பதை அது விளக்கும். என்னிடம் அது மோசமான எதிர்வினை காட்டியது."

"அட கஷ்டமே," என்றார் தலைவர்.

"எரிச்சலுற்ற எதிர்வினை, ஆனால் முற்றிலும் கோபத்துடன் அல்ல. நான் அதைத் தொட்டவுடன் உறுமுவதற்கு மட்டும் தேவையான அள வுக்கு யாரோ முடுக்கிவிட்டிருந்த அதனுடைய 'நினைவு'."

"அப்படி ஒரு காரியத்தை இங்கே யார் செய்திருக்க முடியும்?" என் றார் தலைவர். "உனக்கு விரோதிகள் யாரும் இங்கே இல்லையே, மோன் டாக்."

"எனக்குத் தெரிந்தவரை அப்படி யாருமில்லை."

"நாளைக்கு நம்முடைய தொழில்நுட்ப உதவியாளர்களைக் கொண்டு இந்த வேட்டைநாயைப் பரிசோதித்துப் பார்க்கச் செய்வோம்."

"என்னை அது பயமுறுத்தியது இது முதல் முறையல்ல," என்றான் மோன்டாக். "போன மாதம் இரண்டு முறை இப்படி நடந்திருக்கிறது."

"அதற்கு ஒரு வழி செய்வோம். கவலைப்படாதே."

ஆனால், மோன்டாக் அசையாமல் இருந்தபடி தன் வீட்டின் கூடத்திலிருந்த காற்றுப்போக்கியின் கிராதியையும், அதற்குப் பின்னால் மறைத்துவைக்கப்பட்டிருந்ததையும் நினைத்துக்கொண்டு அங்கேயே நின்றிருந்தான். இந்தத் தீயணைப்பு நிலையத்தில் இருக்கும் யாருக்காவது அந்தக் காற்றுப்போக்கியைப் பற்றித் தெரிந்திருந்தால், வேட்டைநாய்க்கு அதை அவர்கள் 'சொல்லாமல்' இருப்பார்களா…?

கீழ்த்தளத்தை நோக்கியிருந்த ஒட்டைவரை நடந்து வந்த கேப்டன், மோன்டாகை வினவும் தோரணையில் பார்த்தார்.

"இரவு நேரங்களில் அங்கே கீழே, அந்த வேட்டைநாய் எதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது என்று ஊகித்துப்பார்க்க முயன்றேன்" என்றான் மோன்டாக். "உண்மையில் அது நம்மை வேவு பார்த்துக் கொண்டிருக்கிறதா? அந்த நினைப்பு என்னை உறையச் செய்கிறது."

"எதை அது நினைக்கக் கூடாது என்று நாம் விரும்புகிறோமோ, அந்த எதையுமே அது நினைக்காது."

"அது வருந்தத்தக்கது," என்றான் மோன்டாக் அமைதியாக. "ஏனென்றால், அதற்கு நாம் சொல்லிக்கொடுப்பதெல்லாம் வேட்டையாடுவது, கண்டுபிடிப்பது, கொல்வது இவை பற்றி மட்டுமே. அதற்குத் தெரிந்ததெல்லாமே அவ்வளவுதான் என்பது எவ்வளவு கேவலம்!"

பியாட்டி மெதுவாகச் சத்தத்துடன் மூச்சு விட்டார். "நாசமாய்ப் போயிற்று! இது திறமைமிக்க ஒரு தொழில் நுணுக்க வேலை; தன்னுடைய இலக்கைத் தானே நிர்ணயம் செய்துகொண்டு, இலக்கின் மையப்புள்ளியில் அடிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் நல்ல துப்பாக்கி."

"அதனால்தான் அதனுடைய அடுத்த பலியாக இருக்க நான் விரும்பவில்லை," என்றான் மோன்டாக்.

"ஏன்? உனக்கு எதையாவது குறித்து குற்றஉணர்வு இருக்கிறதா?"

மோன்டாக் சட்டென்று நிமிர்ந்து பார்வையை வீசினான்.

பியாட்டி அசையாமல் தன் கண்களால் அவனை உற்றுப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார்; மெதுவாகத் திறந்த அவருடைய வாய் மிக மென்மையாகச் சிரிக்கத் தொடங்கியது.

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு நாட்கள். எவ்வளவு முறை அவன் தன்னுடைய வீட்டிலிருந்து வெளியே வந்தாலும், அப்போ

தெல்லாம் உலகில் எங்கோ ஒரு இடத்தில் க்லாரிஸ் இருந்தாள். ஒரு முறை வால்நட் மரம் ஒன்றை உலுக்கிக்கொண்டிருந்தாள். ஒருமுறை புல் தரையில் உட்கார்ந்துகொண்டு நீலநிறக் கம்பளிச் சட்டை ஒன்றைப் பின்னிக்கொண்டிருந்தாள். மூன்று அல்லது நான்கு முறை அவன், தன் வீட்டின் நுழைவாயில் கூரைக்கடியில் பின்பருவக் காலப் பூக்களின் செண்டையோ, சிறிய பையிலிருந்த கையளவு செஸ்ட்நட்களையோ, அல்லது தன் வீட்டுக் கதவில் ஒட்டி வைக்கப்பட்டிருந்த, பழுத்த இலைகள் குத்திவைத்த வெள்ளைத் தாளையோ பார்த்தான். ஒவ்வொரு நாளும் தெருமுனைவரை க்லாரிஸ் அவனுடன் நடந்து வந்தாள். ஒரு நாள் மழை பெய்துகொண்டிருந்தது. அடுத்த நாள் வானம் தெளிவாக இருந்தது. அதற்கடுத்த நாள் காற்று பலமாக வீசியது. அதற்கடுத்த நாள் அமைதியான, மிதமான வானிலை. அமைதியான நாளுக்கு அடுத்த நாள், கோடையின் காளவாய் போன்ற நாள்; மதிய வேளையின் முடிவில் வெயிலில் சிவந்துவிட்டிருந்த க்லாரிஸின் முகம்.

"உன்னோடு எனக்குப் பல ஆண்டுகளாகவே பழக்கம் என்பதைப் போல ஏன் எனக்குத் தோன்றுகிறது?" என்று அவன் ஒருமுறை பாதாள ரயில் நிலைய வாசலில் இருக்கும்போது கேட்டான்.

"ஏனென்றால் உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது," என்றாள் அவள். "உங்களிடமிருந்து எதுவும் எனக்கு வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. மேலும், நமக்கு ஒருவரையொருவர் தெரியும் என்பதால்."

"நான் மிகவும் வயதானவன் போலவும், பெருமளவு ஒரு தந்தையைப் போல இருப்பதாகவும் என்னை உணர வைக்கிறாய்."

"இப்போது எனக்கு விளக்கமாகச் சொல்லுங்கள்," என்றாள் அவள். "உங்களுக்கு இந்த அளவுக்குக் குழந்தைகளைப் பிடிக்கும் என்றால், ஏன் உங்களுக்கு என்னைப் போல ஒரு மகள் இல்லை?"

"தெரியாது."

"விளையாடாதீர்கள்."

"நான் சொல்ல வந்தது—" அவன் பேசுவதை நிறுத்திவிட்டு, தலையை ஆட்டினான். "அதாவது, என் மனைவி... குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருபோதும் அவள் விரும்பியதே இல்லை."

அந்தப் பெண் புன்முறுவல் செய்வதை நிறுத்திக்கொண்டாள். "மன்னிக்கவும். உண்மையாகவே, நீங்கள் ஏதோ என்னை வைத்துக்கொண்டு விளையாடுகிறீர்கள் என்று நினைத்துவிட்டேன். நான் ஒரு முட்டாள்."

"இல்லவே இல்லை," என்றான் அவன். "இது ஒரு நல்ல கேள்வி. இப்படி ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும் என்று அக்கறை கொண்டவர்களைப் பார்த்து நீண்ட காலம் ஆகிவிட்டது. நல்ல கேள்வி."

"வேறு ஏதாவது பேசுவோம். முதிர்ந்த இலைகளை எப்போதாவது முகர்ந்திருக்கிறீர்களா? லவங்கப் பட்டையைப் போன்ற மணம் வரவில்லை? இதோ, முகர்ந்துபாருங்கள்."

"அட, ஆமாம், ஒருவிதத்தில் அது லவங்கப்பட்டையைப் போலத் தான் இருக்கிறது."

தெளிவான, கரிய விழிகளால் அவனைப் பார்த்தாள். "நீங்கள் எப் போதுமே திடுக்கிட்டவரைப் போலத் தோன்றுகிறீர்கள்."

"அதாவது, எனக்கு இதற்கெல்லாம் நேரம் இருந்திருக்கவில்லை—"

"நான் உங்களிடம் சொல்லியிருந்ததைப் போல, அந்த நீட்டிக்கப் பட்ட விளம்பரப் பலகைகளைப் பார்த்தீர்களா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். ஆமாம்." அவன் சிரித்தாக வேண்டியிருந்தது.

"முன்பைவிட இப்போது உங்கள் சிரிப்பு இன்னும் இனிமையாக ஒலிக்கிறது."

"அப்படியா?"

"முன்பைவிட ஆசுவாசத்துடன்."

அவன் மிக இயல்பாக, சௌகரியமாக இருப்பதாக உணர்ந்தான். "நீ ஏன் பள்ளிக்குப் போவதில்லை? தினமும் இங்கேயே நீ சுற்றித் திரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்."

"அதுவா? நான் பள்ளிக்கு வரவில்லையே என்று அவர்கள் கவலைப் படுவதில்லை," என்றாள் அவள். "நான் சமூக விரோதி என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் சகஜமாகப் பழகுவதில்லையாம். என்ன விசித்திரம்! பார்க்கப்போனால், நான் சமூகத்தைப் பெருமளவு விரும்புகிறேன். சமூக உறவு என்று நாம் எதைச் சொல்கிறோம் என்பதைப் பொறுத்தது எல் லாமே, இல்லையா? இது போன்ற விஷயங்களைப் பற்றி உங்களுடன் பேசுவது என்பது என்னைப் பொறுத்தவரை சமூக உறவுதான்." வீட் டுக்கு முன்னால் இருந்த மரத்திலிருந்து உதிர்ந்திருந்த செஸ்ட்நட் கொட் டைகளைச் சத்தமாக உலுக்கினாள்.

"அல்லது, உலகம் எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது என்று பேசு வதும்தான். மக்களுடன் சேர்ந்து இருப்பது இனிமையாக இருக்கிறது. ஆனால் மக்களைக் கொத்தாக ஓரிடத்தில் சேர்த்துவைத்து, அவர்களைப் பேச விடாமல் இருக்கச் செய்வதைச் சமூக உறவாக நான் கருதவில்லை. நீங்கள் எப்படி? ஒரு மணி நேரம் தொலைக்காட்சி வகுப்பு, ஒரு மணி நேரம் கூடைப்பந்து அல்லது பேஸ்-பால் அல்லது ஓட்டப் பந்தயம், இன்னொரு மணி நேரம் வரலாற்றைப் பிரதியெடுத்து எழுதுவது அல்லது

சித்திரம் வரைவது, பிறகு இன்னும் பல விளையாட்டுகள். ஆனால் ஒன்று தெரியுமா, நாங்கள் ஒருபோதும் கேள்வி கேட்பதே இல்லை, அல்லது, பொதுவாகப் பெரும்பாலானோர் கேட்பதில்லை; அவர்கள் வெறுமனே உங்களை நோக்கிப் பதில்களை வீசுவார்கள்; டமால், டமால், டமால். நாங்கள் இன்னும் நான்கு மணி நேரத்துக்குத் திரையில் தோன்றும் ஆசிரியருக்கு முன்னால் உட்கார்ந்திருப்போம். என்னைப் பொறுத்தவரை இதெல்லாம் சமூக உறவே அல்ல. நிறைய நீரை, நிறையப் புனல்களின் உதவியால் பாத்திரத்தின் மூக்கு வழியாகச் செலுத்தி, அடிப்பகுதி வழியாக வெளியேற்றிவிட்டு, இதுதான் 'வைன்' என்று, வைனாக இல்லாத ஒன்றைச் சொல்கிறார்கள். நாளின் முடிவில், எங்களால் ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு எங்களைச் சோர்வடையச் செய்துவிடுகிறார்கள்— ஒன்று, படுக்கப் போகலாம், அல்லது பொழுதுபோக்குப் பூங்காவுக்குப் போய் எல்லோரையும் விரட்டலாம், ஜன்னல்களை அடித்து நொறுக்கும் மையத்துக்குச் சென்று ஜன்னல் கண்ணாடிகளை உடைக்கலாம், அல்லது கார்களை உடைக்கும் பகுதிக்குப் போய், பெரிய இரும்புக் கோளத்தால் காரை உடைத்து நொறுக்கலாம். அல்லது கார்களில் ஏறி, தெருக்களில் தலைதெறிக்க அவற்றை ஓட்டிச் சென்று, விளக்குக் கம்பங்களுக்கு எவ்வளவு அருகில் போக முடியுமென்றும், 'சிக்கன்[2]' அல்லது 'நாக் ஹப் கேப்ஸ்[3]' விளையாடவும் முயற்சி செய்யலாம். நான் யார் என்றெல்லாம் அவர்கள் சொல்கிறார்களோ அப்படியே நான் இருக்கிறேனோ என்னவோ, இருந்துவிட்டுப் போகட்டும். எனக்கு நண்பர்கள் இல்லை. நான் இயல்புக்கு முரணானவள் என்பதற்கு அதுவே நிரூபணம் என்று நம்பப்படுகிறது. ஆனால் எனக்குத் தெரிந்த எல்லாருமே கூச்சல் போட்டுக்கொண்டோ, காட்டுத்தனமாக ஆடிக்கொண்டோ, அல்லது ஒருவரையொருவர் அடித்துக்கொண்டோ இருக்கிறார்கள். இப்போதெல்லாம் மனிதர்கள் ஒருவரையொருவர் எவ்வளவு புண்படுத்துகிறார்கள் என்பதைக் கவனித்தீர்களா?"

"நீ ரொம்ப வயதானவளைப் போலப் பேசுகிறாய்."

"சில நேரங்களில் நான் புராதனமானவள். என் வயதுக் குழந்தைகளை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. ஒருவரையொருவர் கொன்றுகொண்டிருக்கிறார்கள். எப்போதுமே இப்படித்தான் இருந்திருக்கிறதா? இல்லை என்கிறார் என் மாமா. கடந்த ஆண்டில் மட்டும் என்னுடைய நண்பர்களில் ஆறு பேர் சுடப்பட்டிருந்திருக்கிறார்கள். பத்து பேர் கார்

---

[2] சாலையின் நடுவில் எதிரெதிரே கார்களைப் படுவேகமாக ஓட்டி, ஒன்றையொன்று நெருங்கும் சமயத்தில் எதிராளியை விலகிப் போகுமாறு செய்யும் போட்டி.

[3] கார் பந்தயத்தில் இரண்டு கார்கள் ஒன்றுக்கொன்று சக்கரத்தின் நடுப்பகுதி (hub) உராயுமாறு ஓட்டி, ஒருவரை நிதானம் இழக்கச் செய்தல்.

இடித்து நொறுங்கி இறந்திருக்கிறார்கள். எனக்கு அவர்களைக் கண்டால் பயம். எனக்குப் பயமாக இருப்பதால் அவர்களுக்கு என்னைப் பிடிக் காது. குழந்தைகள் ஒருவரையொருவர் கொன்றுவிடாமல் இருந்த காலம் என் தாத்தாவுக்கு நினைவிருந்தது என்று என் மாமா சொல்வார். ஆனால் எல்லாமே வேறு மாதிரியாக இருந்த மிகப் பழைய காலம் அது. பொறுப் புணர்வில் அவர்களுக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது என்கிறார் என் மாமா. நான் பொறுப்பு மிக்கவள், தெரியுமா? பல ஆண்டுகளுக்கு முன், எனக்கு அவசியம் என்று கருதப்பட்டபோது அடி வாங்கியிருக்கிறேன். மேலும் கடைக்குப் போய் பொருள்கள் வாங்குகிறேன், என் கைகளா லேயே வீட்டைத் துப்புரவு செய்கிறேன்."

அவள் தொடர்ந்தாள்: "எல்லாவற்றுக்கும் மேலாக, எனக்கு மக்களைக் கவனித்துப் பார்ப்பது பிடிக்கும். சில சமயங்களில், பாதாள ரயில் வண் டியில் நாள் முழுவதும் பயணம் செய்து, மக்களைக் கவனித்து, அவர்கள் பேசுவதைக் கேட்பேன். அவர்கள் யார், அவர்களுக்கு என்ன வேண்டும், எங்கே போகிறார்கள் என்றெல்லாம் ஊகித்து அறிய முயல்வேன். சில சமயங்களில், பொழுதுபோக்குத் திடல்களுக்குக்கூடப் போய், ஊருக்கு வெளியே அவர்கள் அதிவேகமாக ஓட்டிச் செல்லும் 'ஜெட்' கார்களில் கூடப் போயிருக்கிறேன்; அவர்கள் எல்லோரும் காப்பீடு செய்துகொண் டிருக்கும்வரை காவல்துறையினர் அதைப் பற்றி அக்கறை கொள்வ தில்லை. எல்லோரிடமும் பத்தாயிரம் காப்பீடு உள்ளவரை எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். சில சமயங்களில் பாதாள ரயிலில் நான் மற்றவர்கள் கவனிக்காமல் போய் ஒட்டுக்கேட்பேன். அல்லது குளிர் பானக் கடைகளில் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்பேன், உங்களுக்கு ஒன்று தெரியுமா?"

"என்ன?"

"மக்கள் எதைப் பற்றியும் பேசிக்கொள்வதில்லை."

"இருக்காது. அவர்கள் பேசிக்கொண்டுதான் இருக்க வேண்டும்."

"இல்லவே இல்லை, ஒன்றுமில்லை. பெரும்பாலும் சில வகைக் கார் கள், ஆடைகள், அல்லது நீச்சல் குளங்களைக் குறிப்பிட்டு, 'ஆகா, என்ன பிரமாதம்!' என்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே விஷயத்தைதான் சொல்கிறார்கள், யாரும் மற்ற எவர் சொல்வதிலிருந்தும் மாறுபட்ட எதையும் சொல்வதில்லை. பெரும்பாலான சமயங்களில் காபி-உணவகங்களில் நகைச்சுவைப் பெட்டிகளை வைத்திருப்பார்கள், பெரும்பாலான நேரங்களில் அவற்றில் கேட்ட நகைச்சுவைத் துணுக்கு களே வரும். அல்லது சுவர்தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சி ஒளி பரப்பாகும், அதில் எல்லா வித வண்ணக் கோலங்களும் மேலும்கீழுமாக

ஓடிக் கொண்டிருக்கும், ஆனால் அவை வெறும் வண்ணக் கலவையும், முற்றிலும் அரூபமானதும்தான். தவிர, அருங்காட்சியகங்களில்... நீங்கள் எப்போதாவது அங்கே போவதுண்டா? எல்லாமே அரூபம். அவை மட்டும்தான் இப்போது அங்கே இருக்கின்றன. முன்பொரு காலம் வித்தியாசமாக இருந்தது என்கிறார் என் மாமா. வெகு நாட்களுக்கு முன்பு, சில சமயங்களில் எதையாவது தெரிவிக்கும் வகையில் ஓவியங்கள் இருக்கும் அல்லது மனிதர்களைக்கூடக் காட்டும்."

"உன் மாமா சொன்னார், மாமா சொன்னார். உன்னுடைய மாமா அற்புதமான ஒரு மனிதராக இருக்க வேண்டும்."

"ஆமாம். அவர் நிச்சயமாக அற்புதமான மனிதர்தான். சரி, நான் கிளம்பிப் போக வேண்டும். குட் பை, திரு. மோன்டாக்."

"குட் பை."

"குட் பை."

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு நாட்கள்: தீயணைப்பு நிலையம்.

"மோன்டாக், மரத்தின் மேல் இருக்கும் பறவையைப் போல, உன் கால்களின் குதிரை முகப் பகுதியால் நீ அந்தத் தூணைப் பற்றிக் கொண்டிருக்கிறாய்."

மூன்றாவது நாள்.

"மோன்டாக், இந்த முறை நீ பின்கதவு வழியாக வருவதைப் பார்த்தேன். அந்த இயந்திர வேட்டைநாய் உனக்குத் தொல்லையளிக்கிறதா?"

"இல்லை, இல்லை."

நான்காவது நாள்.

"மோன்டாக், வேடிக்கையான ஒரு செய்தி. இன்று காலை அதைக் கேள்விப்பட்டேன். சியாட்டில் நகரத்தில் தீயணைப்பவன் ஒருவன் தன்னுடைய சொந்த வேதியியல் சேர்மான அளவை இயந்திர வேட்டை நாய்க்கு ஊட்டி, அதை அவிழ்த்துவிட்டிருக்கிறான். என்ன மாதிரியான தற்கொலை என்று இதை நீ சொல்வாய்?"

ஐந்து ஆறு ஏழு நாட்கள்.

பிறகு, க்லாரிஸ் போய்விட்டாள். அன்றைய பிற்பகல் பொழுதில் குறிப்பிடும்படி அப்படி என்ன இருந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் எங்கேயும் அவளைப் பார்க்க முடியாமல் இருந்தது மட்டும் தெரிந்தது. புல் தரை காலியாக இருந்தது, மரங்கள் காலியாக இருந்தன, தெரு வெறுமையாக இருந்தது. அவள் இல்லாததை அவன்

உணர்ந்தான் என்பதோ, அவளைத் தேடிக்கொண்டுகூட இருந்தான் என்பதோ முதலில் அவனுக்கு உறைக்கவில்லை; பாதாள ரயில் நிலையத்தை அடைந்தபோது, நிலைகொள்ளாமல் இருந்த அவனுக்குள் ஏதோ ஒரு விதச் சலனம் இருந்தது என்பது நிதர்சனமாகியது. ஏதோ ஒரு உறுத்தல்; அன்றாடப் பழக்கம் கலைந்துவிட்டிருந்தது. சில நாட்களாக மட்டுமே படிந்துவிட்டிருந்த எளிய பழக்கம், உண்மைதான், இருந்தாலும்...? மீண்டும் நடந்துபோய் அவள் எங்காவது கண்ணில் தென்பட அவகாசம் கொடுக்க எண்ணி அவன் கிட்டத்தட்ட திரும்பிப் போகவிருந்தான். அதே பாதையில் அவன் மீண்டும் முயன்றுபார்த்தால், எல்லாமே நல்லபடி நடக்கும் என்று நிச்சயமாக இருந்தான். ஆனால், காலம் கடந்துவிட்டிருந்தது. நிலையத்துக்குள் வந்த ரயில், அவனுடைய திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

சீட்டுக்கட்டுச் சீட்டுகளின் படபடப்பு, கைகளின், இமைகளின் சலனம், தீயணைப்பு நிலையக் கூரையில் நேர அறிவிப்புக் குரலின் முணுமுணுப்பு "... ஒன்று முப்பத்தைந்து, வியாழன் காலை, நவம்பர் 4ஆம் தேதி... ஒன்று முப்பத்தாறு, ஒன்று முப்பத்தேழு, காலை..." மோன்டாக்கின் மூடிய கண்களுக்குப் பின்னாலிருந்து, தற்காலிகமாக அவன் எழுப்பிக்கொண்டிருந்த அந்தத் தடுப்புக்குப் பின்னாலிருந்து, மேஜையின் வழுவழுப்பான மேல்பகுதியில் விழும் சீட்டுகளின் 'டிக்' சத்தமும், மற்ற எல்லா ஒலிகளும் அவனுக்குக் கேட்டன. தீயணைப்பு நிலையத்தின் பெரும் பளபளப்பு ஜொலிப்பு, அதன் அமைதி, பித்தளையின் நிறம், தங்க, வெள்ளிக் காசுகளின் நிறம்—இவை அனைத்தையும் அவன் உணர்ந்தான். மேஜையின் மறுகோடியில் இவனுடைய பார்வையில் படாதவாறு உட்கார்ந்திருந்த ஆட்கள், தங்களிடமிருந்த சீட்டுகளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு காத்திருந்தனர். "... ஒன்று நாற்பத்தைந்து..." குளிர் முன்னைவிட அதிகமாகவே இருந்த ஆண்டின் குளிர் மிகுந்த ஒரு காலைப் பொழுதின் உயிரற்ற நேரத்தைப் புலம்பித்தள்ளியது ஒலிக் கடிகாரம்.

"என்ன பிரச்சினை, மோன்டாக்?"

மோன்டாக் கண்களைத் திறந்தான்.

எங்கேயோ வானொலி முனகிக்கொண்டிருந்தது. "... எந்தக் கணமும் போர் அறிவிக்கப்படலாம். தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இந்த நாடு தயாராக இருக்கிறது, தன்னுடைய..."

பெரிய ஜெட் விமானக் கூட்டம் ஒன்று, ஒரே ஸ்வரத்தில் உரக்க சீட்டியடித்தவாறு, காலைப் பொழுதின் கரிய வானில் குறுக்கே பறந்து சென்றது.

மோன்டாக் கண்ணைச் சிமிட்டினான். ஏதோ அருங்காட்சியகச் சிலை ஒன்றைப் பார்ப்பதைப் போல பியாட்டி அவனைப் பார்த்தார். எந்தக் கணத்திலும் பியாட்டி எழுந்து, அவனைச் சுற்றி வந்து, தொட்டுப் பார்த்து, அவனுடைய குற்ற உணர்வையும் சுயப் பிரக்ஞையையும் ஆராயலாம். குற்றமா? என்ன குற்றம்?

"விளையாட இது உன்னுடைய முறை, மோன்டாக்."

ஆயிரம் உண்மையான, பத்தாயிரம் கற்பனையான தீச்சம்பவங்களால் அக்னியின் கறுப்பு ஏறியிருந்த முகங்களுடனும், தங்களுடைய தொழிலால் சிவந்திருந்த கன்னங்களுடனும், சிவந்த காய்ச்சல் கண்களுடனும் இருந்த அந்த மனிதர்களை மோன்டாக் பார்த்தான். என்றும் அணையாமல் தாங்கள் புகைத்துக்கொண்டிருந்த தங்களுடைய கறுப்பு நிறச் சுங்கான்களைப் பற்ற வைத்த பிளாட்டினம் தீமூட்டியின் சுவாலைகளை விடாமல் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த மனிதர்கள். அவர்களுடைய கரிய முடி, தீய்ந்துபோன நிறத்திலிருந்த புருவங்கள், நன்றாக மழித்து விடப்பட்டிருந்த இடங்களில் நீலநிறச் சாம்பல் படிந்திருந்த கன்னங்கள்—ஆனால் அவர்களுடைய பாரம்பரியம் நன்றாகவே வெளிப்பட்டது. மோன்டாக் நினைவுக்குத் திரும்பினான், வாயைத் திறந்தான். கரிய முடியும், கரிய புருவங்களும், தீவிரத்துடன் காணப்படும் முக பாவமும், மழித்துவிடாததைப் போல இருந்தாலும் நன்றாக மழிக்கப்பட்ட, எஃகின் நீலநிற முகத் தோற்றமும் இல்லாத தீயணைப்பவர்கள் யாரையாவது அவன் எப்போதாவது பார்த்தது உண்டா? அவர்கள் எல்லோருமே கண்ணாடியில் பிரதிபலிக்கும் அவனுடைய பிம்பங்களே! தீயணைப்பவர்கள் எல்லோருமே முகத் தோற்றத்துக்காக மட்டுமன்றி, தங்களுடைய இயல்பான நாட்டங்களுக்காகவும் தேர்வுசெய்யப்பட்டார்களா? சாம்பல் நிறம், தீயில் கருகிப்போன நிறம், சுங்கான்களிலிருந்து கிளம்பிய பொசுங்கிய வாடை. புகையிலை எழுப்பிய புகை மேகங்களுக்கு மேலே கேப்டன் பியாட்டி தோன்றினார்—புதிய ஒரு புகையிலைப் பொட்டலத்தைப் பிரித்து, அந்தக் கண்ணாடித் தாளை நெருப்பின் சடசடப்பு ஒலியுடன் கசக்கிய பியாட்டி.

மோன்டாக் தன் கையிலிருந்த சீட்டுகளைப் பார்த்தான். "நானா?—நான் யோசித்துக்கொண்டிருந்தேன். போன வார நெருப்பைப் பற்றி. நாம் பற்ற வைத்த புத்தக அலமாரியின் சொந்தக்காரரைப் பற்றி. அவருக்கு என்ன ஆயிற்று?"

"கதறக்கதற, அவரை மனநல மருத்துவமனைக்கு இழுத்துச் சென்றார்கள்."

"அவர் பைத்தியம் இல்லையே."

பியாட்டி மௌனமாகத் தன் சீட்டுகளை ஒழுங்காக அடுக்கினார். "நம்மையும் அரசாங்கத்தையும் முட்டாளாக்க நினைக்கும் எவருமே பைத்தியம்தான்."

"அது எப்படி இருக்கும் என்று கற்பனைசெய்துபார்க்க நான் முயன்றிருக்கிறேன்," என்றான் மோன்டாக். "அதாவது, நம்முடைய வீடுகளும் நம்முடைய புத்தகங்களும் தீயணைப்பவர்களால் எரிக்கப்பட்டால்."

"நம்மிடம் புத்தகங்கள் இல்லையே."

"ஆனால், அப்படி இருந்துவிட்டால்..."

"நீ ஏதாவது வைத்திருக்கிறாயா?"

பியாட்டி மெதுவாகக் கண்ணைச் சிமிட்டினார்.

அவர்களுக்குப் பின்னால் சுவரில், தடைசெய்யப்பட்டிருந்த லட்சக் கணக்கான புத்தகங்களின் பெயர்களைக் கொண்ட, தட்டச்சு செய்யப் பட்டிருந்த பட்டியல் இருந்த சுவரை மோன்டாக் பார்த்தான். அவற்றின் பெயர்கள் நெருப்பில் மேலெழும்பிக் குதித்தன, நீருக்குப் பதிலாக மண் ணெண்ணெயைப் பீய்ச்சிய குழாய்க்கடியிலும் அவனுடைய கோடா லிக்கடியிலும் பல ஆண்டுகளை எரித்துப் பொசுக்கியபடி. "இல்லை." ஆனால் அவனுடைய வீட்டின் காற்றுப்போக்கியின் கிராதியிலிருந்து கிளம்பி ஒரு குளிர்ந்த காற்று அடிக்கத் தொடங்கி அவனுடைய முகத் தைச் சில்லிட வைத்தது. பூங்கா ஒன்றில் முன்பு முதியவர் ஒருவரு டன்—தொண்டு கிழவர்தான்—பேசிக்கொண்டிருந்ததை மனதில் நினைவு படுத்திப்பார்த்தான்; அந்தப் பூங்காவில் வீசியதும் நல்ல குளிர் காற்றுதான்.

மோன்டாக் தயங்கினான். "என்ன—எல்லாமே எப்போதும் இப்படித் தான் இருந்ததா? தீயணைப்பு நிலையம், நம்முடைய தொழில்? நான் சொல்லவருவது, அதாவது முன்பொரு காலத்தில்..."

"முன்பொரு காலத்தில்!" என்றார் பியாட்டி. "என்ன மாதிரியான பேச்சு அது?"

அட மடையா, மோன்டாக் நினைத்துக்கொண்டான், உன்னையே காட்டிக்கொடுத்துக்கொள்ளப்போகிறாய். போன முறை நடந்த நெருப்பு நிகழ்வில், தேவதைக் கதைகள் புத்தகம் ஒன்றில், ஒரே ஒரு வரியை மேலோட்டமாகப் பார்த்திருந்தான். "நான் சொல்லவந்தது" அவன் தொடர்ந்தான், "அந்த நாட்களில் தீப்பற்றிக்கொள்ளாத வீடுகள் கட்டப் படுவதற்கு முன்னால்" திடீரென்று, தனக்குப் பதிலாக மிக இளைய வயதுக் குரல் ஒன்று பேசுவதைப் போலத் தோன்றியது. அவன் பேச வாயைத் திறந்தபோது, க்லாரிஸ் மெக்லெல்லான் சொன்னாள்: "தீயணைப்பவர்கள் நெருப்பைத் தூண்டிவிட்டு, அது தொடர்ந்து எரியும்படி செய்வதற்குப் பதிலாக, எரிய விடாமல் தடுத்தார்கள் அல்லவா?"

"சரியான தமாஷ்!" அமெரிக்காவின் தீயணைப்பவர்களின் வரலாற்றுடன், தங்களுக்கான விதிமுறைகளும் இருந்த புத்தகத்தை ஸ்டோன்மேனும் ப்ளாக்கும் எடுத்து, வெகு நாட்களாகவே அவனுக்குப் பரிச்சயமாக ஆகியிருந்தாலும், மோன்டாகும் படித்துப்பார்க்கும் வகையில் ஒரு பக்கத்தை விரித்து வைத்தார்கள்:

*நிறுவியது: **1790**. ஆங்கிலேயத் தாக்கம் இருக்கும் புத்தகங்களை காலனிகளில் எரிப்பது. முதல் தீயணைப்பவர்: பெஞ்சமின் ஃப்ராங்க்லின்.*

விதி. 1. அபாய அறிவிப்பு மணி கேட்டவுடனேயே பதிலளி.

2. நெருப்பைத் துரிதமாக மூட்டு.

3. எல்லாவற்றையும் எரி.

4. தீயணைப்பு நிலையத்துக்கு உடனேயே தெரிவி.

5. மற்ற அபாய அறிவிப்பு மணிகளுக்காகத் தயார் நிலையில் இரு.

எல்லோரும் மோன்டாகைக் கவனித்தபடி இருந்தார்கள். அவன் அசையவில்லை.

அபாய மணி ஒலித்தது.

கூரையிலிருந்த மணி இருநூறு முறை தன்னைத் தானே உதைத்துக் கொண்டது. உடனேயே அங்கிருந்த நான்கு நாற்காலிகள் காலியாகின. பனிப் பொழிவைப் போலச் சீட்டுகள் கீழே விழுந்தன. பித்தளைத் தூண் நடுங்கியது. ஆட்கள் கிளம்பிப்போயிருந்தார்கள்.

மோன்டாக் தன்னுடைய நாற்காலியில் உட்கார்ந்தான். கீழே, ஆரஞ்சு நிற டிராகன் இருமலுடன் உயிர்பெற்றது.

கனவுலகில் இருந்த மனிதனைப் போல, மோன்டாக் தூணில் சறுக்கி இறங்கினான்.

இயந்திர வேட்டைநாய், கண்களில் பச்சை நிறச் சுவாலையுடன் தன்னுடைய கூண்டில் எம்பிக் குதித்தது.

"மோன்டாக், தலைக் கவசத்தை மறந்துவிட்டாய்!"

தனக்குப் பின்னாலிருந்த சுவரிலிருந்து அதைப் பற்றி இழுத்து, ஓடிப் போய்த் தாவினான்; அவர்களுடைய சங்கின் அலறல்மீதும், அவர்களுடைய சக்தி வாய்ந்த உலோக இடிச் சத்தத்தின் மீதும் இரவின் காற்று சம்மட்டியடித்தது.

நகரின் மிகப் புராதனமான பகுதி ஒன்றில், செதில்செதிலாக விழுந்து கொண்டிருந்த அந்த மூன்று அடுக்குக் குடியிருப்புக்குக் குறைந்தபட்சம் நூறு ஆண்டுகள் ஆகியிருக்கும்; ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்பேயே,

எல்லா வீடுகளையும் போல, தீப்பற்றிக்கொள்ளாத மெல்லிய பிளாஸ்டிக் பூச்சு ஒன்று அதற்குக் கொடுக்கப்பட்டிருந்ததால், அந்தப் பாதுகாப்பான கூடுதான் வானை நோக்கி அதைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது.

"இதோ, வந்துவிட்டோம்."

வண்டியின் எஞ்சின் சட்டென்று நின்றது. தீப்பற்றிக்கொள்ளாத தடி மனான அங்கியில் திடீரென்று குண்டாகவும், வெறுக்கும்படியாகவும் ஆகிவிட்ட பியாட்டி, ஸ்டோன்மேன், ப்ளாக் ஆகியோர் வீட்டின் பக்க வாட்டில் ஓடிப்போனார்கள். மோன்டாக் பின்தொடர்ந்தான்.

முன்கதவை இடித்துத் திறந்து, அங்கிருந்த ஒரு பெண்ணை, அவள் ஓடாமலேயே இருந்தாலும்கூட, பிடித்தார்கள்; அவள் தப்பி ஓட முயல வும் இல்லை. தலையில் யாரோ பலமாக அடித்துவிட்டதைப் போல, வெற்றுச் சுவரை வெறித்துப் பார்த்துக்கொண்டு, பக்கவாட்டில் அசைந்த படி, வெறுமனே நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய வாயின் உள்ளே நாக்கு அசைந்துகொண்டிருந்தது. எதையோ நினைவுக்குக் கொண்டுவர முயல்வதைப் போலத் தோன்றின அவளுடைய கண்கள். பிறகு, அவற் றுக்கு ஞாபகம் வந்தவுடன், நாக்கு மறுபடியும் அசையத் தொடங்கியது.

"ஆண்மகனைப் போல நடந்துகொள், மாஸ்டர் ரிட்லி; கடவுளின் அருளால், ஒருபோதும் அணைத்துவிட முடியாது என்று நான் நம்பும் ஒரு மெழுகுவர்த்தியை இங்கிலாந்தில் இன்று நாம் ஏற்றிவைப்போம்."

"போதும், நிறுத்து," என்றார் பியாட்டி. "அவை எங்கே?"

வியக்கத்தக்க வகையில், கச்சிதமாகக் குறிவைத்து அவளுடைய முகத் தில் அறைந்து, அந்தக் கேள்வியை மீண்டும் கேட்டார். முதிய பெண்ணின் கண்கள் பியாட்டியின் முகத்தை நோக்கிக் குவிந்தன. "அவை எங்கே என்று உங்களுக்குத் தெரியும். இல்லாவிட்டால் நீங்கள் இங்கே வந்திருக்க மாட்டீர்கள்," என்றாள் அவள்.

தொலைபேசி அபாயமணி அட்டையை ஸ்டோன்மேன் நீட்டினான்; அதன் பின்புறத்தில் தொலைபேசி மொழியில் கையெழுத்திடப்பட்டிருந்த புகார் இருந்தது:

"எண் 11, எல்ம். நகர். இ.பி. பரண் சந்தேகத்துக்கு இடமளிக்கிறது."

"அது என் அண்டை வீட்டு திருமதி ப்ளேக் ஆக இருக்கலாம்." என் றாள் அந்தப் பெண் பெயரின் முதலெழுத்துகளைப் பார்த்துவிட்டு.

"சரி, நண்பர்களே, அதைக் கண்டுபிடிப்போம்."

அடுத்த கணம், மக்கிய கருப்பு நிறத்திற்குள் புகுந்து, பூட்டப்படாம லேயே இருந்த கதவுகளை நோக்கிச் சிறிய வெள்ளி நிறக் கோடாலிகளை

வீசிக்கொண்டு, சிறுவர்களைப் போலக் கூச்சலும் கும்மாளமுமாக முண்டி யடித்தார்கள். "ஹையா!" கிட்டத்தட்ட செங்குத்தான படிக்கட்டுகளில் நடுங்கியவாறே ஏறிய மோன்டாகின் மேல் புத்தகங்கள் நீரூற்றைப் போல் பாய்ந்து பொழிந்தன. என்ன தொந்தரவு! முன்பெல்லாம் அது ஒரு மெழுகுவர்த்தியை அணைப்பதைப் போலத்தான் எப்போதும் இருக்கும். முதலில் காவலர்கள் சென்று, குற்றவாளியின் வாயின் மேல் பிசின்-நாடாவை ஒட்டி, அவரைக் கட்டிப்போட்டு, பளபளக்கும் கருவண்டு நிறக் காரில் அவரை ஏற்றிக்கொண்டு போய்விடுவார்கள். ஆகவே, இவர் கள் வரும்போது ஆளில்லாத வீடுதான் அங்கே இருக்கும். இவர்கள் யாரையும் அடித்துத் துன்புறுத்தவில்லை, பொருள்களை மட்டுமே அடித்து உடைத்தார்கள். ஆகவே, பொருள்களை உண்மையிலேயே துன்புறுத்த முடியாது என்பதால், பொருள்கள் எதையுமே உணராததால், கூச்ச லிடவோ கத்தவோ தொடங்கக்கூடிய இந்தப் பெண்ணைப் போலப் பொருள்கள் கூச்சலிடவோ முனகவோ செய்யாததால், இவர்களுடைய மனசாட்சியை உசுப்பிவிட எதுவுமே இருக்காது. இவர்கள் வெறுமனே சுத்தம் செய்தார்கள். அடிப்படையில் துப்புரவு செய்யும் வேலை. எல்லாம் அதனதன் இடத்தில் இருக்கட்டும். சீக்கிரமாக மண்ணெண்ணெயை ஊற் றுங்கள்! தீக்குச்சி யாரிடம் இருக்கிறது?

ஆனால் இப்போது, இன்றிரவு, யாரோ தவறு செய்துவிட்டிருக்கிறார் கள். அந்தப் பெண் இந்தச் சடங்கைக் கெடுத்துக்கொண்டிருக்கிறாள். கீழே இருக்கும் அவளுடைய பயங்கரமான, குற்றம்சாட்டும் மௌனத்தை மூடி மறைக்க, இந்த ஆட்கள் சிரித்துக்கொண்டும், தமாஷ் செய்துகொண்டும் அளவுக்கு மீறிச் சத்தம் போட்டுக்கொண்டும் இருந்தார்கள். காலியான அறைகளை அவள் குற்றச்சாட்டுகளால் அலற வைத்து, உதிர்த்துவிட் டிருந்த நுண்ணிய குற்றத் தூசி, தங்களுடைய வேலையில் இறங்கிவிட் டிருந்த அந்த ஆட்களின் நாசிகளில் உறிஞ்சிக்கொள்ளப்பட்டது. அது நியாயமானதல்ல, சரியுமல்ல. மோன்டாக் தாங்க முடியாத எரிச்சல் அடைந்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, அவள் இங்கு இருந்திருக்கவே கூடாது!

அவனுடைய தோள்களில், புஜங்களில், நிமிர்ந்த முகத்தில் புத்தகங் கள் வந்து தாக்கின. இறக்கைகள் படபடக்கும் வெண்புறாவைப் போல, கிட்டத்தட்ட பணிவுடன் எரிந்துகொண்டிருந்த ஒரு புத்தகம் அவனு டைய கைகளில். மங்கலாக, ஆடிக்கொண்டிருந்த அந்த ஒளியில் புத்தகத் தின் ஒரு பக்கம் திறந்து தொங்கியது; சொற்கள் நுணுக்கமாகத் தீட்டப் பட்டிருந்த வெண்மையான பனிச் சிறகைப் போல அது தோன்றியது. அந்த அவசரத்திலும், உத்வேகத்திலும் ஒரு வரியைப் படிக்க ஒரு கணம் மட்டுமே மோன்டாகுக்குக் கிடைத்தது; ஆனால் அடுத்த ஒரு நிமிடத்

துக்கு, பழுக்கக் காய்ச்சிய எஃகினால் முத்திரை குத்தப்பட்டதைப் போல அவன் மனதில் அது கொழுந்துவிட்டது. "பிற்பகலின் சூரிய வெளிச்சத்தில் காலம் உறங்கிவிட்டிருந்தது." புத்தகத்தைக் கீழே போட்டான். உடனேயே இன்னொன்று அவன் கையில் விழுந்தது.

"மோன்டாக், இதோ இங்கே, மேலே!"

வாயை மூடிக்கொள்வதைப் போல மோன்டாகின் கை புத்தகத்தை மூடி, கண்மூடித்தனமான பக்தியுடனும், சிந்தனைக்கு இடமளிக்காத பைத்தியக்காரத்தனத்துடனும் புத்தகத்தை நெஞ்சோடு சேர்த்து அழுத்திக்கொண்டான். மேலே இருந்த ஆட்கள், பத்திரிகைகளை மண்வெட்டிகளில் அள்ளித் தூசி நிறைந்த காற்றில் எறிந்தார்கள். வெட்டப்பட்ட பறவைகளைப் போல அவை விழுந்தன, கீழே அந்தச் சடலங்களின் மத்தியில் ஒரு சிறுமியைப் போல அந்தப் பெண் நின்றிருந்தாள்.

மோன்டாக் எதையும் செய்திருக்கவில்லை. அவனுடைய கை எல்லாவற்றையும் செய்துவிட்டிருந்தது. தனக்கென்று ஒரு மூளையையும், மனசாட்சியையும், நடுங்கும் தன் ஒவ்வொரு விரலிலும் ஆவலையும் கொண்டிருந்த கை திருடனாக மாறியது. இப்போது அது அந்தப் புத்தகத்தை அவனுடைய அக்குளுக்குள் புதைத்தது; வியர்வை தோய்ந்த அக்குளில் அமுக்கி, ஒரு மந்திரவாதியின் சாமர்த்தியத்துடன் வெறும் கையாக வெளிப்பட்டது! இதோ பார்! நிரபராதி! பார்!

அந்த வெண்ணிறக் கையை உற்றுப் பார்த்தான். தூரப் பார்வை கொண்டவன்போல் அதைத் தூரமாக நீட்டிப் பிடித்தான். கண் பார்வையற்றவன்போல் அதை அருகில் வைத்துக்கொண்டான்.

"மோன்டாக்!"

அவன் உடல் உதறியது.

"அங்கேயே நிற்காதே, மடையா!"

காயப் போட்டிருந்த மீன் குவியல்களைப் போலப் புத்தகங்கள் கிடந்தன. அந்த ஆட்கள் ஆடிக்கொண்டு, கால் தடுக்கி அவற்றின் மேல் சரிந்துகொண்டிருந்தார்கள். தலைப்புகளின் தங்கக் கண்கள் மின்னி, விழுந்து, மறைந்துபோயின.

"மண்ணெண்ணெய்!"

அவர்களுடைய தோள்பட்டைகளில் இருந்த 451 என்ற எண் குறிக்கப்பட்டிருந்த கலன்களிலிருந்து குளிர்ந்த திரவத்தைக் குழாய் வழியே பீச்சியடித்தார்கள். ஒவ்வொரு புத்தகத்திலும் அதைப் பூசினார்கள், அறைகளில் முற்றிலுமாக அதைப் பீச்சியடித்தார்கள்.

மடமடவென்று கீழே விரைந்தார்கள். மண்ணெண்ணெயின் புகை மூட்டத்தில் தடுமாறியபடி மோன்டாக் அவர்களின் பின்னால் வந்தான்.

"வெளியே வந்து விடு, பெண்ணே!"

புத்தகங்களின் நடுவே மண்டியிட்டிருந்த அந்தப் பெண், நனைந்திருந்த புத்தகங்களின் தோல் கட்டையும் அட்டையையும் தொட்டுப் பார்த்து, அவள் கண்கள் மோன்டாகைக் குற்றம் சொல்ல, முலாம் பூச்சு பொறிக்கப்பட்ட தலைப்புகளைத் தன்னுடைய விரல்களால் படித்தாள்.

"என்னுடைய புத்தகங்களை நீங்கள் ஒருபோதும் அடைய முடியாது," என்றாள்.

"சட்டம் என்னவென்று உங்களுக்குத் தெரியும்," என்றார் பியாட்டி. "உங்களுடைய பொதுப் புத்தி எங்கே போயிற்று? இந்தப் புத்தகங்கள் எவையுமே ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை. சரியான, பாழாய்ப் போன 'பேபல்' கோபுரத்தில் பல ஆண்டுகளாகச் சிறைப்பட்டு இருந்திருக்கிறீர்கள். விடுபட்டு வெளியே வாருங்கள்! அந்தப் புத்தகங்களில் இருக்கும் எவருமே உண்மையாக வாழ்ந்தவர்கள் அல்ல. இப்போது வெளியே வாருங்கள்!"

அவள் தலையை ஆட்டி மறுத்தாள்.

"வீடு முழுவதுமே தீப்பற்றிக்கொள்ளும்," என்றார் பியாட்டி.

ஆட்கள் தட்டுத்தடுமாறி, கதவை நோக்கிப் போனார்கள். பெண்ணுக்கு அருகில் நின்றிருந்த மோன்டாகைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"நீங்கள் அவளை இங்கேயே விட்டுவிடப்போவதில்லையே?" என்று அவன் மன்றாடினான்.

"அவள் வர மாட்டேன் என்கிறாள்."

"அப்படியானால், வலுக்கட்டாயமாக இழுத்துச்செல்வோம்."

தீமூட்டி மறைந்திருந்த தன் கையை பியாட்டி உயர்த்தினார். "நாம் அலுவலகத்துக்குத் திரும்பிப் போயாக வேண்டும். மேலும், இந்தப் பைத்தியங்கள் எப்போதுமே தற்கொலை செய்துகொள்ள முயல்வார்கள்; வழக்கமாக நடப்பதுதான்."

அந்தப் பெண்ணின் முழங்கைமேல் மோன்டாக் தன் கையை வைத்தான். "நீங்கள் என்னுடன் வாருங்கள்."

"வேண்டாம்," என்றாள் அவள். "இருந்தாலும், உங்களுக்கு நன்றி."

"நான் பத்துவரை எண்ணுவேன்," என்றார் பியாட்டி. "ஒன்று. இரண்டு."

"தயவுசெய்து," என்றான் மோன்டாக்.

"தொடருங்கள்" என்றாள் பெண்.

"மூன்று. நான்கு."

"இப்படி வாருங்கள்." மோன்டாக் பெண்ணை இழுத்தான்.

பெண் அமைதியாகப் பதிலளித்தாள்: "நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன்."

"ஐந்து. ஆறு."

"எண்ணுவதை நீங்கள் நிறுத்தலாம்." என்றாள் அவள். தன் ஒரு கையின் விரல்களை லேசாகத் திறந்தாள். அவளுடைய உள்ளங்கையில் மெல்லிய ஒரு பொருள் இருந்தது.

சாதாரண சமையலறைத் தீக்குச்சி.

அந்தக் காட்சி அவர்களை வெளியே விரையச் செய்து, வீட்டிலிருந்து இறங்கிப் போக வைத்தது. கேப்டன் பியாட்டி, தன்னுடைய கண்ணிய பாவத்தைக் கைவிடாமல், மெதுவாக முன்கதவு வழியாகப் பின்வாங்கினார்: ஆயிரக்கணக்கான நெருப்பு நிகழ்வுகளினாலும், இரவு வேளையின் ஆர்வங்களாலும் தகதகப்புடன் பளபளத்தது அவருடைய வெளிர் சிவப்பு முகம். "கடவுளே, அது எவ்வளவு உண்மை!" என்று நினைத்தான் மோன்டாக். அபாய அழைப்பு எப்போதும் இரவில்தான் வருகிறது. ஒரு போதும் பகலில் அல்ல! இரவில்தான் நெருப்பு அழகாக இருக்கும் என்பதாலா? கவர்ச்சி அதிகமாக இருப்பதால், இன்னும் சிறப்பான நிகழ்ச்சியா? கதவருகில் வந்துவிட்ட பியாட்டியின் முகத்தில் இப்போது பதற்றத்தின் ரேகை தோன்றியது. தன் கையிலிருந்த தீக்குச்சியின் மீது அந்தப் பெண்ணின் விரல் சுருண்டது. அவளைச் சுற்றிலும் மண்ணெண்ணெய்ப் புகை சூழ்ந்திருந்தது. தான் ஒளித்துவைத்திருந்த புத்தகம் தன் மார்புக்கு மேல் ஒரு இருதயத்தைப் போல அடித்துக்கொண்டிருந்ததை மோன்டாக் உணர்ந்தான்.

"ஆகட்டும்." என்றாள் அந்தப் பெண். மோன்டாக் பின்புறமாக நடந்து, கதவைத் தாண்டி வெளியே போய், பியாட்டியைத் தொடர்ந்து படிகளில் இறங்கி, கொடிய நத்தை ஒன்றின் சுவடைப் போல இருந்த மண்ணெண்ணெயின் தடம் தென்பட்ட புல்வெளி வழியாகத் தான் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

தன் வீட்டின் முகப்பின் கீழ், தன் பார்வையால் மௌனமாக அவர்களை எடைபோடுவதற்காக வந்திருந்த பெண்—அவளுடைய மௌனமே ஒரு கண்டனம்—சலனமின்றி அங்கே நின்றுகொண்டிருந்தாள்.

மண்ணெண்ணெய் தீப்பிடித்துக்கொள்வதற்காக பியாட்டி தன் விரல்களைச் சொடுக்கினார்.

அவர் மிகவும் தாமதித்துவிட்டிருந்தார். மோன்டாகுக்கு மூச்சிரைத்தது.

வாயில் முகப்பின் கீழ் நின்றுகொண்டு, அனைவரையும் துச்சமாகக் கருதிய அந்தப் பெண், கிராதியின் மேல் தீக்குச்சியை உரசினாள்.

எல்லா வீடுகளிலிருந்தும் மக்கள் தெருவில் இறங்கி ஓடினார்கள்.

தீயணைப்பு நிலையத்துக்குப் போகும் வழியில் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. யாரும் வேறு யாரையும் பார்க்கவும் இல்லை. பியாட்டி, ப்ளாக் இவர்களுடன் மோன்டாக் முன்புற இருக்கையில் உட்கார்ந்திருந்தான். தங்களுடைய சுங்கான்களைக்கூட அவர்கள் புகைக்கவில்லை. அந்தப் பெரிய சலமாண்டர் வண்டி தெருமுனையில் திரும்புவதை முன்புறமாக உட்கார்ந்து பார்த்துக்கொண்டு, மௌனமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

"மாஸ்டர் ரிட்லி," என்றான் மோன்டாக், இறுதியாக.

"என்ன?" என்று கேட்டார் பியாட்டி.

"அவள் 'மாஸ்டர் ரிட்லி' என்று சொன்னாள். கதவைத் தாண்டி நாம் உள்ளே போனபோது, பைத்தியக்காரத்தனமாக ஏதோ சொன்னாள். 'ஆண்மகன் போல நடந்துகொள், மாஸ்டர் ரிட்லி' என்று சொன்னாள். இன்னும் என்னென்னவோகூடச் சொன்னாள்."

" 'ஒருபோதும் அணைத்துவிட முடியாது என்று நான் நம்பும் ஒரு மெழுகுவர்த்தியை இங்கிலாந்தில் இன்று நாம் ஏற்றிவைப்போம்,' " என்றார் பியாட்டி. தலைவரைப் பார்த்து ஸ்டோன்மேன் பார்வையை வீசினான், அதிர்ச்சியடைந்திருந்த மோன்டாகைப் போலவே.

பியாட்டி முகவாயைத் தேய்த்துக்கொண்டார்: "லாடிமர், நிகலஸ் ரிட்லி என்ற இருவரும், மாற்று மதக்கருத்தை ஆதரித்த குற்றத்துக்காக 1555ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி உயிருடன் எரிக்கப்பட்டபோது, லாடிமர் நிகலஸ் ரிட்லியிடம் சொன்ன சொற்கள் இவை."

மோன்டாகும் ஸ்டோன்மேனும் தீயணைப்பு வண்டிக்குக் கீழே விரைந்து கொண்டிருந்த தெருவை மீண்டும் பார்க்க ஆரம்பித்தார்கள்.

"எனக்கு எல்லாவற்றிலும் கொஞ்சம்கொஞ்சமாக நிறையவே தெரியும்," என்றார் பியாட்டி. "பெரும்பாலான தீயணைப்புத் துறைத் தலைவர்களுக்கு அது அவசியம். சில சமயங்களில் எனக்கே வியப்பாக இருக்கும். ஸ்டோன்மேன், கவனமாய் ஓட்டு!"

ஸ்டோன்மேன் பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினான்.

"அட சே!," என்றார் பியாட்டி. "தீயணைப்பு நிலையத்துக்குப் போகும் திருப்பத்தைத் தாண்டிப் போய்விட்டாய்."

"யார் அங்கே?"

"யாராக இருக்க முடியும்?" என்றான் மோன்டாக், இருளில், மூடிய கதவின் மேல் சாய்ந்தபடி.

இறுதியில் அவன் மனைவி சொன்னாள், "சரி, விளக்கைப் போடு."

"எனக்கு விளக்கு வேண்டாம்."

"கட்டிலுக்கு வா."

பொறுமையின்றி அவள் புரண்டு படுப்பதும், கட்டிலின் சுருள்வில்கள் கிறீச்சிடுவதும் அவனுக்குக் கேட்டன.

"போதையில் இருக்கிறாயா?" என்றாள் அவள்.

ஒருவழியாகக் கைகள்தான் எல்லாவற்றையும் தொடங்கிவைத்தன. தன்னுடைய ஒரு கை முதலிலும், பிறகு இன்னொரு கையும் கோட்டைக் கழற்றுவதையும், அதைத் தரையில் நழுவவிடுவதையும் உணர்ந்தான். அதலபாதாளம் ஒன்றின் மேல் தன் கால்சட்டையை நீட்டிப் பிடித்து அவை இருளில் விழும்படி செய்தான். அவனுடைய கைகளில் தொற்று ஏற்பட்டிருந்தது, விரைவில் அது புஜங்களுக்குப் பரவிவிடும். மணிக் கட்டுகள் வழியாக அந்த நச்சு ஊர்ந்து சென்று, முழங்கைக்கும் தோள் களுக்கும் போய், ஒரு தோள்பட்டையிலிருந்து இன்னொரு தோள்பட் டைக்கு, இடைவெளியைத் தாண்டித் தாவும் தீப்பொறியைப் போல, தாவிச் செல்வதையும் உணர்ந்தான். அவனுடைய கைகள் அகோரப் பசி யில் இருந்தன. அவனுடைய கண்களும் பசியை உணரத் தொடங்கின—ஏதாவதொன்றை, எதையோ, எல்லாவற்றையுமேகூட அவை பார்த்துத் தான் ஆக வேண்டும் என்பதைப் போல.

அவன் மனைவி கேட்டாள்: "என்ன செய்துகொண்டிருக்கிறாய்?"

வியர்த்துச் சில்லிட்டிருந்த விரல்களில், புத்தகத்தைப் பிடித்தபடி அந்த ரத்தில் நின்றான்.

ஒரு நிமிடத்துக்குப் பிறகு அவள் சொன்னாள்: "சரி, அறையின் நடுவே சும்மா நின்றுகொண்டு இருக்காதே."

அவனிடமிருந்து சிறிய சத்தம் ஒன்று வந்தது.

"என்ன அங்கே?" என்று அவள் கேட்டாள்.

இன்னும் சில மென்மையான ஓசைகள் வந்தன. கட்டிலை நோக்கித் தடுமாறிச் சென்று, சில்லிட்டிருந்த தலையணைக்கு அடியில் அந்தப் புத்த கத்தைக் காமாசோமாவென்று தள்ளினான். படுக்கையில் பொத்தென்று விழுந்தான், அவன் மனைவி திடுக்கிட்டுக் கத்தினாள். குளிர்காலத்தில், நீரில்லாத கடல் ஒன்றால் பிரிக்கப்பட்டிருந்த தீவைப் போல, அந்த

அறையில் அவளிடமிருந்து மிகத் தொலைவில் அவன் படுத்திருந்தான். நீண்ட நேரம் நீடித்ததைப் போல அவனுக்குத் தோன்றும் அளவுக்கு அவள் பேசிக்கொண்டிருந்தாள்—இதைப் பற்றிப் பேசினாள், அதைப் பற்றியும் பேசினாள், அவை எல்லாமே வெறும் சொற்கள் மட்டுமே. ஒருமுறை தன் நண்பன் வீட்டில், மழலையர் பள்ளி ஒன்றில், இரண்டு வயதுக் குழந்தை ஒன்று வார்த்தைக் கோலங்களை அமைத்து, கொச்சை யாகப் பேசி, அழகான ஓசைகளைக் காற்றில் மிதக்க விட்டபோது அவன் கேட்டிருந்ததைப் போல இருந்த சொற்கள். மோன்டாக் எதுவும் பேச வில்லை. வெகு நேரம் கழித்து, அவனிடமிருந்து சிறு ஓசைகள் மட்டும் வந்தபோது, அவள் அந்த அறையில் நடந்து வந்து, அவனுடைய கட்டிலை நோக்கி வந்து, அவனருகே நின்று, அவனுடைய கன்னத்தைத் தொட்டுப் பார்ப்பதற்காகக் கையைக் கீழே கொண்டுவந்தாள். அவனுடைய முகத் திலிருந்து தன் கையை அவள் பின்னுக்கு இழுத்துக்கொண்டபோது, அது ஈரமாக இருந்தது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.

இரவில் வெகு நேரம் கழித்து அவன் மில்ட்ரெட்டைப் பார்த்தான். அவள் விழித்துக்கொண்டு இருந்தாள். சூழலில் ஒரு சிறிய பாடல் மெட் டின் நடனம் இருந்தது. அவளுடைய காதுகளில் கிளிஞ்சல்-அங்குஸ்தான் பொருத்தப்பட்டிருந்தது. எங்கேயோ இருந்தவர்களை மிகத் தொலை விலிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள், மேலே கூரை இருளின் ஆழங்களை அவளுடைய விரிந்த விழிகள் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன.

ஒருவனுடைய மனைவி சதா தொலைபேசியில் பேசிக்கொண்டே இருந்ததால், வேறு வழி தெரியாத அவளுடைய கணவன், அருகிலிருந்த ஒரு கடைக்கு விரைந்து, அன்றிரவு சாப்பாட்டுக்கு வீட்டில் என்ன இருந்தது என்று தொலைபேசியில் அவளிடம் விசாரித்ததாக வேடிக்கைக் கதை ஒன்று இருந்ததல்லவா? சரி, அப்படியானால் அவன் ஏன் ஒரு கிளிஞ்சல் ஒலிபரப்பு நிலையத்தை வாங்கி, இரவில் நேரங்கழித்துத் தன் னுடைய மனைவியுடன் பேசி முணுமுணுத்து, கிசுகிசுத்து, கத்தி, கிறீச் சிட்டு, கூப்பாடு போடவில்லை? ஆனால் அவன் என்ன கிசுகிசுக்க முடியும், என்ன கத்த முடியும்? அவன் என்னதான் சொல்ல முடியும்?

திடீரென்று அவள் வினோதமாக ஆனதில், அவனுக்கு அவளைத் தெரிந்திருக்க முடியும் என்பதையே அவனால் நம்ப முடியவில்லை. அவன் வேறு யாருடைய வீட்டிலேயோ இருந்தான்—போதையிலிருந்த ஒரு மனிதர், இரவில் நேரம் தாழ்ந்து வீட்டுக்குத் திரும்பி, தவறான வீட்டின் கதவைத் திறந்து, தவறான அறைக்குள் நுழைந்து, அன்னியர் ஒருவருடன் உடலுறவு கொண்டு, காலையில் சீக்கிரமே எழுந்து வேலைக்குப் போய், அந்த இருவருக்குமே நடந்தது என்னவென்று தெரிந்திருக்கவில்லை என்று அடிக்கடி சொல்லப்படும் நகைச்சுவைத் துணுக்கைப் போல.

"மில்லி...?" கிசுகிசுக்கும் குரலில் சொன்னான்.

"என்ன?"

"நான் உன்னைத் திடுக்கிட வைக்க நினைக்கவில்லை. நான் தெரிந்து கொள்ள நினைப்பது என்னவென்றால்..."

"என்ன?"

"நாம் எப்போது சந்தித்தோம்? **எங்கே?**"

"நாம் எங்கே சந்தித்தோமா, **எதற்காக?**" அவள் கேட்டாள்.

"நான் சொல்ல வந்தது—முதல்முதலாக."

அந்த இருட்டில் அவள் முகம் சுளித்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியும்.

அவன் விளக்கினான். "நாம் இருவருமே முதல் முதலாகச் சந்தித்துக் கொண்டது, அது எங்கே நடந்தது, எப்போது?"

"அதுவா, அது வந்து—"

அவள் நிறுத்தினாள்.

"எனக்குத் தெரியவில்லை" என்றாள்.

அவன் உணர்ச்சியற்றுக் காணப்பட்டான். "உன்னால் நினைவுபடுத்திப்பார்க்க முடியாதா?"

"நீண்ட காலம் ஆகிவிட்டது."

"பத்து வருடங்கள் மட்டுமே, அவ்வளவுதான், பத்தே பத்து!"

"உணர்ச்சிவசப்படாதே, நான் யோசித்துப்பார்க்க முயன்றுகொண்டிருக்கிறேன்." அவள் விசித்திரமான சிரிப்பைச் சிரித்தாள். அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து மேலே போயிற்று. "வேடிக்கை, என்ன வேடிக்கை, தன்னுடைய கணவனையோ மனைவியையோ எப்போது எங்கே சந்தித்தோம் என்று நினைவுபடுத்திப்பார்க்க முடியாமல் இருப்பது!"

அவன் தன்னுடைய கண்களை, புருவத்தை, பிடரியை மெதுவாக நீவிவிட்டுக்கொண்டு படுத்திருந்தான். கண்களின் மேல் இரண்டு கைகளையும் வைத்து, தன்னுடைய நினைவுகளை அவற்றின் இடத்துக்கு அழுத்தித் தள்ளிவிடுவதைப் போலச் சீராக அழுத்தினான். மில்ட்ரெட்டை அவன் எங்கே சந்தித்தான் என்பது திடீரென்று அவனுடைய வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும்விட மிக முக்கியமானதாக ஆகிவிட்டது.

"அது ஒன்றும் முக்கியமல்ல." அவள் எழுந்து போய், இப்போது குளியலறையில் இருந்தாள்; கொட்டும் நீரின் சத்தத்தையும், அவள் எதையோ விழுங்கும் சத்தத்தையும் கேட்டான்.

"இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை," என்றான்.

அவள் எத்தனை முறை விழுங்கினாள் என்பதை எண்ண முயன்றான். நேர்கோடாக அமைந்திருந்த வாய்களில் தொங்கிய சிகரெட்டுடன் தன் வீட்டுக்கு வந்திருந்த, துத்தநாக ஆக்ஸைடு நிற முகத்துடன் இருந்த இரண்டு பேரை நினைத்துப்பார்த்தான். அடுக்கடுக்கான படிவங்களாக இருந்த இரவு, பாறை, தேங்கியிருந்த ஊற்றுநீர் இவற்றினூடே நெளிந்துநெளிந்து கீழே போன மின்னனுக் கண் கொண்ட பாம்பும் நினைவுக்கு வந்தது. **இன்றிரவு,** நீ எவ்வளவு விழுங்கியிருக்கிறாய், என்று அவளிடம் உரக்கக் கேட்க விரும்பினான். குழாய் மாத்திரைகள்! இதற்குப் பிறகு இன்னும் எவ்வளவு விழுங்கிவிட்டு, அதைப் பற்றித் தெரியாமலேயே இருக்கப்போகிறாய்? இப்படியே, ஒவ்வொரு மணி நேரத்துக்கும்! அல்லது இன்றிரவு அல்லாமல், நாளை இரவில்! இந்த விவகாரம் இப்போது தொடங்கிவிட்டதால், இன்றிரவோ அல்லது நாளை இரவோ அல்லது தொடர்ந்து இன்னும் பல இரவுகளோ நானும் தூங்காமல்! கட்டிலில் படுத்திருந்த அவளையும் அவளுக்கருகில் நிமிர்ந்து நின்றபடி, அக்கறையோடு குனிந்தவாறு இல்லாமல் கைகளைக் கட்டிக்கொண்டு நிமிர்ந்து நின்றிருந்த இரண்டு தொழில்நுட்ப ஊழியர்களையும் பற்றிச் சிந்தித்தான். அவள் இறந்துவிட்டால் தான் நிச்சயமாக அழப்போவதில்லை என்று தான் நினைத்ததை ஞாபகப்படுத்திப்பார்த்தான். ஏனென்றால், முன்பின் தெரியாத ஒருவரின், தெருவில் பார்க்கும் முகத்தின், தினசரியில் வெளியாகும் படத்தின் சாவாகத்தான் அது இருக்கும். திடீரென்று இதெல்லாமுமே மிகவும் தவறாகப் பட்டதில் அவன் அழத் தொடங்கிவிட்டான்; சாவைக் குறித்து அல்ல, **சாவைக் குறித்து அழாமல்** இருக்கிறோமே என்ற நினைப்பில். அற்பமான, சூனியமான ஒரு பெண்ணுக்கருகில், அற்பமான, சூனியமான ஒரு மனிதன்—பசியில் இருந்த பாம்பு இன்னும் சூனியமாக்கிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணுக் கருகில்.

எப்படி நீ இவ்வளவு சூனியமாக ஆனாய்? அவன் வியந்தான். உன்னிடமிருந்து அதை வெளியே எடுப்பவர் யார்? அன்றொரு நாள், அந்த மோசமான மலர், டாண்டிலியன்! அது எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டதே, இல்லையா? "வெட்கம்! நீங்கள் யாரையுமே நேசிக்கவில்லை!" சரி, ஏன் நேசிக்கவில்லை?

ஆமாம், கூட்டிக் கழித்துப் பார்த்தால், மில்ட்ரெட்டுக்கும் அவனுக்கும் இடையில் சுவர் ஒன்று இருக்கவில்லையா? இன்னும் சரியாகச் சொல்வதானால், ஒரு சுவர் மட்டுமல்ல, இதுவரை மூன்று! அதுவும் நல்ல விலை கொடுத்து! போதாதென்று அந்தச் சுவர்களில் உயிர்பெற்றிருந்த மாமாக்கள், அத்தைகள், அவர்களுடைய குழந்தைகள், கூடப் பிறந்தவர்களின் குழந்தைகள். தவிர, ஒன்றுமில்லாதவற்றையே திரும்பத்

திரும்ப, அதுவும் மேலும்மேலும் உரக்கத் கத்திக்கொண்டிருந்த மரமந்திகள். தொடக்கத்திலிருந்தே இவர்களை அவன் 'உறவினர்கள்' என்றுதான் அழைப்பான். "மாமா லூயிஸ் இன்று எப்படி இருக்கிறார்?" "அத்தை மோட் நலமா?" மில்ட்ரெட்டைப் பற்றி அதிகம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு அவனுடைய ஞாபகத்தில் இருந்தது இதுதான்: மரங்கள் இல்லாத (என்ன விசித்திரம்!) காட்டில் ஒரு குட்டிப் பெண் அல்லது முன்பொரு முறை மரங்கள் இருந்த (அவற்றின் வடிவங்களின் நினைவை உணர முடிந்தது) பீடபூமியில் வழி தவறி, 'வரவேற்பறையின்' நடுவே உட்கார்ந்திருக்கும் பெண். வரவேற்பறை; இப்போதெல்லாம் அப்படி முத்திரை குத்தி அழைப்பது எவ்வளவு வேடிக்கை! எந்த நேரத்தில் அவன் உள்ளே வந்தாலும், சுவர்கள் எப்போதும் மில்ட்ரெட்டுடன் பேசிக்கொண்டிருக்கும்.

"ஏதாவது செய்தாக வேண்டும்!"

"ஆமாம், ஏதாவது **செய்தே** ஆக வேண்டும்!"

"சரி, வெறுமனே நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்க வேண்டாம்!"

"அதைச் செய்வோம்!"

"**காறித் துப்ப** வேண்டும் போல எனக்குக் கோபமாக இருக்கிறது!"

இதெல்லாம் எதைப் பற்றி? மில்ட்ரெட்டினால் சொல்ல முடியவில்லை. யாருக்கு யாரிடம் கோபம்? மில்ட்ரெட்டுக்குச் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் என்ன செய்வதாக இருந்தார்கள்? "ம்..." என்றாள் மில்ட்ரெட், "பொறுத்திருந்து பார்".

பார்க்கலாம் என்று அங்கேயே பொறுத்திருந்தான்.

ஒலியால் ஆன மாபெரும் புயல் ஒன்று சுவர்களிலிருந்து சீறியது. அவனைத் தாக்கிய இசையின் பிரம்மாண்ட ஒலி, கிட்டத்தட்ட அவனுடைய எலும்புகளையே தசைநாண்களிலிருந்து பிய்த்தெடுத்தது. தன்னுடைய தாடை அதிர்ந்ததையும், தலைக்குள் கண்கள் ஆடியதையும் உணர்ந்தான். அடிபட்டு மூளை கலங்கியவனாக இருந்தான். எல்லாம் முடிந்தபோது, மலையின் முகட்டிலிருந்து தூக்கியெறியப்பட்டவனைப் போல, சுழலில் மாட்டிக்கொண்டு போய் நீர்வீழ்ச்சியில் அடித்துச் செல்லப்பட்டு, சூனியத்தில், சூனியத்தில் விழுந்து—ஒருபோதும்—அடியைத் தொடாமல்—ஒருபோதும்—ஒருபோதும்—இன்னும்கூட—உண்மையிலேயே இன்னும்கூட—அடியை—தொடாமல்—விழுந்த வேகத்தில் பக்கவாட்டிலும் எதிலும் படாமல்—ஒருபோதும்—உண்மையிலேயே—எதிலும்—படாமல்... ....

புயல் ஓய்ந்தது. இசை நின்றது.

"இதோ" என்றாள் மில்ட்ரெட்.

உண்மையாகவே பிரமாதம்! ஏதோ ஒன்று நிகழ்ந்திருந்தது. அறையின் சுவர்களிலிருந்த ஆட்கள் பெரிதும் அசையாமல் இருந்தாலும், எந்த முடிவுக்கும் வராமல் இருந்தாலும், துணி வெளுக்கும் இயந்திரம் ஒன்றை முடுக்கிவிட்டு அல்லது பிரம்மாண்டமான ஒரு சூனியத்துக்குள் அவனை யாரோ உறிஞ்சிவிட்டிருந்ததைப் போல உணர்ந்தான். இசையிலும் பெரும் இரைச்சலிலும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டான். மோன்டாக் அறையிலிருந்து வியர்த்துக்கொட்டி வெளியே வந்து, மயங்கி விழும் நிலையில் இருந்தான். அவனுக்குப் பின்னால், மில்ட்ரெட் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். குரல்கள் மீண்டும் தொடர்ந்து ஒலித்தன.

"சரி, இனி எல்லாமே சரியாகிவிடும்" என்றாள் ஒரு 'அத்தை'.

"அவ்வளவு நிச்சயமாக இருக்காதீர்கள்" என்றான் ஒரு 'ஒன்றுவிட்ட சகோதரன்.'

"சரி, கோபித்துக்கொள்ளாதே!"

"யாருக்குக் கோபம்?"

"உனக்குத்தான்!"

"எனக்கா?"

"உனக்குப் பயங்கரக் கோபம்!"

"நான் ஏன் கோபப்பட வேண்டும்?"

"ஏனென்றால்!"

"அதெல்லாம் சரி," என்று கத்தினான் மோன்டாக். "ஆனால் அவர்கள் எதைக் குறித்துக் கோபமாக இருக்கிறார்கள்? யார் இந்த ஆட்கள்? அந்த ஆண் யார், அந்தப் பெண் யார்? அவர்கள் கணவன்-மனைவியா, விவாகரத்து ஆனவர்களா, அல்லது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறார்களா? என்ன? அட கடவுளே, எதுவுமே தொடர்பில்லாமல் இருக்கிறதே."

"அவர்கள்," என்றாள் மில்ட்ரெட். "அதாவது அவர்கள் வந்து... அந்தச் சண்டை போட்டுக்கொண்டார்களே, தெரியுமா? அவர்கள் ரொம்பவும் சண்டை போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். நீ கவனமாகக் கேட்க வேண்டும். அவர்கள் திருமணமானவர்கள் என்று நினைக்கிறேன். ஆமாம், அவர்கள் திருமணமானவர்கள், ஏன்?"

விரைவில், இந்த மூன்று தொலைக்காட்சிச் சுவர்கள் நான்காக ஆகாவிட்டால், கனவு நிறைவேறாவிட்டால், திறந்த காரில் நகரத்துக்குள் மணிக்கு நூறு மைல் வேகத்தில் மில்ட்ரெட் ஓட்டிச் செல்ல, அவளைப் பார்த்து இவன் கத்த, அவள் திரும்பிக் கத்த, என்ன சொல்கிறார்கள் என்

பதைக் கேட்க இருவருமே முயல, காரின் அலறல் மட்டுமே கேட்கும். "குறைந்தபட்ச வேகத்துக்காவது அதைக் குறை!" அவன் கூச்சலிட்டான். "என்ன?" அவள் கத்தினாள். "குறைந்தபட்ச வேகமான ஐம்பத்தைந்து மைலுக்கு இறக்கு." அவன் கத்தினான். "குறைந்த... என்ன?" அவள் கிறீச்சிட்டாள். "வேகம்!" அவன் கத்தினான். மணிக்கு நூற்றி ஐந்து மைல் என்று மேலும் அவள் வேகத்தைக் கூட்ட, அவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட சுவாசம் கிழிபட்டது.

காரிலிருந்து அவர்கள் கீழே இறங்கியபோது, அவளுடைய காதுகளில் கடல் கிளிஞ்சல் திணிக்கப்பட்டிருந்தது.

அமைதி. மென்மையாக வீசும் காற்று மட்டுமே.

"மில்ட்ரெட்" கட்டிலில் அவன் நெளிந்தான்.

கையை நீட்டி, அவளுடைய காதிலிருந்து அந்தச் சிறிய இசைப் பூச்சியை வெளியே இழுத்தான்.

"மில்ட்ரெட், மில்ட்ரெட்?"

"ம்." அவளுடைய குரல் சன்னமாக ஒலித்தது.

ஒலி நிறச் சுவர்களில் இருந்த துளைகள் ஒன்றில் மின்னணுத் தொழில் நுட்பத்தால் செருகப்பட்ட பிராணிகளில் தானும் ஒன்றாக இருப்பதாக நினைத்தான்; பேசினாலும், அவனுடைய பேச்சு அந்தப் படிகத் தடுப் பைத் துளைக்கவில்லை. அபிநய மொழியைத்தான் கையாள வேண்டி யிருந்தது. தன் பக்கம் திரும்பினால் அவள் தன்னைப் பார்ப்பாள் என்ற நம்பிக்கையில். கண்ணாடியின் ஊடாக அவர்கள் ஒருவரையொருவர் தொட முடியவில்லை.

"மில்ட்ரெட், நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேனே, அந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?"

"எந்தப் பெண்?" அவள் கிட்டத்தட்ட தூங்கிவிட்டிருந்தாள்.

"அடுத்த வீட்டுப் பெண்."

"எந்த அடுத்த வீட்டுப் பெண்?"

"மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் அந்தப் பெண். அவளுடைய பெயர் க்லாரிஸ்."

"ஓ, தெரியுமே" என்றாள் அவன் மனைவி.

"நான் அவளைப் பார்த்துச் சில நாட்கள் ஆகின்றன—சரியாகச் சொன் னால், நான்கு நாட்கள். நீ அவளைப் பார்த்தாயா?"

"இல்லை."

"உன்னிடம் அவளைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைக்கிறேன். விசித்திரமானவள்."

"ஓ அவளா, நீ சொல்லும் அவளை எனக்குத் தெரியும்."

"உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்."

"அவள், வந்து..." அந்த இருட்டறையில் மில்ட்ரெட் சொன்னாள்.

"அவளுக்கு என்ன?" என்றான் மோன்டாக்.

"உன்னிடம் சொல்ல நினைத்தேன். மறந்துவிட்டேன், மறந்துவிட்டேன்."

"இப்போது சொல், என்ன?"

"அவள் போய்விட்டாள் என்று நினைக்கிறேன்."

"போய்விட்டாளா?"

"அந்தக் குடும்பமே வேறெங்கோ குடிபெயர்ந்துவிட்டது. ஆனால், அவள் நிரந்தரமாகப் போய்விட்டாள். அவள் இறந்துவிட்டாள் என்று நினைக்கிறேன்."

"நாம் இருவரும் அந்த ஒரே பெண்ணைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க வாய்ப்பில்லை."

"இல்லை, அதே பெண்தான். மெக்லெல்லான். மெக்லெல்லான். காரில் அடிபட்டு இறந்துவிட்டாள். நான்கு நாட்களுக்கு முன். எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், அவள் இறந்துவிட்டாள் என்று நினைக்கிறேன். எப்படியானாலும், அந்தக் குடும்பம் வீடு மாறிப் போய்விட்டது. எனக்குத் தெரியாது. ஆனால், அவள் இறந்துவிட்டாள் என்று நினைக்கிறேன்."

"உனக்கு நிச்சயமாகத் தெரியவில்லையே!"

"வெறும் நிச்சயம் மட்டும் அல்ல, உறுதியாகத் தெரியும்."

"என்னிடம் ஏன் முன்னமேயே சொல்லவில்லை?"

"மறந்துவிட்டேன்."

"நான்கு நாட்களுக்கு முன்!"

"நான் சுத்தமாக எல்லாவற்றையும் மறந்துவிட்டேன்."

"நான்கு நாட்களுக்கு முன்," என்றான் அவன், அமைதியாக, படுத்தவாறே.

அந்த இருட்டறையில் இருவருமே சலனமின்றிப் படுத்திருந்தார்கள். "குட் நைட்" என்றாள் அவள்.

மெல்லிய சலசலப்பு ஓசை கேட்டது. அவளுடைய கை அசைந்தது. அவளுடைய கை பட்டு, கும்பிடுசாமிப் பூச்சி போலத் தோன்றிய மின்

அங்குஸ்தான் தலையணையில் நகர்ந்தது. இப்போது அது அவளுடைய காதுக்குள் இருந்தது. ரீங்காரம் செய்துகொண்டு.

அவன் காதுகொடுத்துக் கேட்டான். தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி அவன் மனைவி பாடிக்கொண்டிருந்தாள்.

வீட்டுக்கு வெளியே நிழல் ஒன்று அசைந்தது. இலையுதிர்காலக் காற்று மேலெழும்பி, பிறகு ஓய்ந்துவிட்டிருந்தது. ஆனால், அவன் காதில் ஒலித்த அமைதியில் வேறு ஏதோ ஒன்று இருந்தது. அது கண்ணாடிமீது யாரோ மூச்சுவிட்டதைப் போல இருந்தது. ஒளிரும் பச்சை நிறப் புகை ஒன்று மென்மையாகக் கடந்து சென்றதைப் போல, புல்வெளியைக் கடந்து பறந்து வந்து, காற்றில் அடித்துச் செல்லப்படும் பெரிய, அக்டோபர் மாத ஒற்றை இலையின் சலனத்தைப் போல அது இருந்தது.

அந்த வேட்டைநாய்தான் என்று நினைத்தான். இன்றிரவு அது வெளியே விடப்பட்டிருக்கிறது. அது அங்கேதான் வெளியே இருக்கிறது. அவன் ஜன்னலை திறந்து மட்டும் விட்டால்... ...

அவன் ஜன்னலைத் திறக்கவில்லை.

காலையில் அவனுக்குக் குளிரெடுத்து, காய்ச்சலும் இருந்தது.

"உடம்புக்கு சரியில்லையா என்ன?"

எரிச்சல் தந்த கண்களை மூடிக்கொண்டான். "ஆமாம்."

"ஆனால் நேற்றிரவு நன்றாகத்தானே இருந்தாய்."

"இல்லை, நான் நன்றாக இருக்கவில்லை." சுவர்தொலைக்காட்சி 'உறவினர்கள்' கத்திக்கொண்டு இருந்ததைக் கேட்டான்.

என்ன ஆச்சரியம், மில்ட்ரெட் அவனுடைய கட்டிலருகே நின்றாள். அவள் நிற்பதை உணர்ந்தான், கண்களைத் திறக்காமலேயே அவளைப் பார்த்தான். வேதிப்பொருள்களால் பொடிந்துவிழும் வைக் கோலைப் போலப் பொசுங்கிய முடி, கண்களின் பாவைகளுக்குப் பின் னால், புலப்படாத, ஆனால் இருந்திருக்கக்கூடிய ஒருவிதக் கண்புரை, சிவப்பேறிய, பிதுங்கிய உதடுகள், உடலை இளைக்க வைக்கும் ஆகாரத்தினால் கும்பிடுசாமிப் பூச்சி போல மெலிந்துவிட்ட உடல், வெளிறிய பன்றிக்கறி போன்ற அவளுடைய சதை. வேறு எந்த விதத்திலும் அவனால் அவளை நினைவுபடுத்திப்பார்க்க முடியவில்லை.

"எனக்கு ஆஸ்பிரின் மாத்திரையும் தண்ணீரும் கொண்டுவர முடியுமா?"

"நீ இப்போது எழுந்திருக்க வேண்டும்," என்றாள் அவள். "இப்போது நண்பகல். வழக்கத்தைவிட நீ ஐந்து மணி நேரம் அதிகமாகத் தூங்கியிருக்கிறாய்."

"அந்த சுவர்தொலைக்காட்சியை நிறுத்துவாயா?"

"அது என் குடும்பம்."

"உடம்பு சரியில்லாமல் இருக்கும் ஒருவனுக்காக அதை நிறுத்துவாயா?"

"சரி, அதை நிறுத்துகிறேன்."

அவள் அறையிலிருந்து வெளியே போய், சுவர்தொலைக்காட்சியை ஒன்றும் செய்யாமல் திரும்பி வந்தாள்.

"இப்போது பரவாயில்லையா?"

"நன்றி."

"அது எனக்கு மிகவும் பிடித்த நிகழ்ச்சி," என்றாள் அவள்.

"ஆஸ்பிரின் எங்கே?"

"உனக்கு இதற்கு முன்னால் காய்ச்சல் வந்ததே இல்லை." அவள் மறுபடியும் வெளியே போனாள்.

"சரி. இப்போது எனக்குக் காய்ச்சல். இன்றிரவு நான் வேலைக்குப் போகப்போவதில்லை. எனக்காக பியாட்டியைத் தொலைபேசியில் கூப்பிடு."

"நேற்றிரவு நீ வினோதமாக நடந்துகொண்டாய்," பாட்டு ஒன்றை முணுமுணுத்துக்கொண்டே திரும்பி வந்தாள்.

"ஆஸ்பிரின் எங்கே?" அவள் அவனிடம் நீட்டிய தண்ணீர் இருந்த கிளாஸைப் பார்த்தான்.

"அடடா." அவள் மீண்டும் குளியலறைக்குப் போனாள்.

"என்ன நடந்தது?"

"ஒரு தீச்சம்பவம், அவ்வளவுதான்."

"என் மாலைப் பொழுது இனிமையாகக் கழிந்தது," என்றாள் அவள் குளியலறையிலிருந்து.

"என்ன செய்தாய்?"

'சுவர்தொலைக்காட்சி."

"அதில் என்ன இருந்தது?"

"நிகழ்ச்சிகள்."

"என்ன நிகழ்ச்சிகள்?"

"மிகச் சிறந்த சில."

"யார்?"

"ஓ, உனக்குத்தான் தெரியுமே, அந்தக் கும்பல்."

"ஆமாம், அந்தக் கும்பல், கும்பல், கும்பல்." கண்களில் வலி இருந்த இடத்தில் கையை வைத்து அழுத்தினான். திடீரென்று, மண்ணெண்ணெயின் வாடை அவனை வாந்தியெடுக்க வைத்தது.

மில்ட்ரெட் பாட்டை முணுமுணுத்துக்கொண்டே அறைக்குள் வந்தாள். அவளுக்கு ஒரே வியப்பு. "ஏன் வாந்தி எடுத்தாய்?"

வருத்தம் தோய்ந்த ஆச்சரியத்துடன் அவன் தரையைப் பார்த்தான். "ஒரு முதியவளை அவளுடைய புத்தகங்களுடன் சேர்த்துக் கொளுத்திவிட்டோம்."

"நல்ல வேளை. கழுவ முடிந்த தரைவிரிப்பு." வீடு துடைக்கும் துணியைக் கொண்டுவந்து துடைத்தாள். "நேற்றிரவு நான் ஹெலென் வீட்டுக்குப் போயிருந்தேன்."

"உன்னுடைய தொலைக்காட்சியில் அந்த நிகழ்ச்சிகள் வராதா?"

"வருமே, ஆனாலும் ஒருவரைப் பார்க்கப் போவது மகிழ்ச்சியாக இருக்கிறது."

தொலைக்காட்சி அறைக்குள் போனாள். அவள் பாடுவதை அவன் கேட்டான்.

"மில்ட்ரெட்."

அவள் திரும்பிவந்தாள், பாடிக்கொண்டு, விரல்களை லேசாகச் சொடுக்கிக்கொண்டு.

"நேற்றிரவு என்ன நடந்தது என்பதைப் பற்றி நீ என்னிடம் கேட்க மாட்டாயா?" என்றான்.

"என்ன ஆயிற்று?"

"ஆயிரம் புத்தகங்களை எரித்தோம். ஒரு முதியவளை எரித்தோம்."

"அப்படியா?"

சத்தத்தில் வீட்டுக் கூடம் வெடித்துக்கொண்டிருந்தது.

"டான்டே, ஸ்விஃப்ட், மார்கஸ் ஆரெலியஸ் இவர்களின் புத்தகங்களை எரித்தோம்."

"அவர் ஒரு ஐரோப்பியர் அல்லவா?"

"அப்படித்தான் ஏதோ ஒன்று."

"அவர் புரட்சிவாதி அல்லவா?"

"நான் அவரைப் படித்ததேயில்லை."

"அவர் ஒரு புரட்சிவாதி." மில்ட்ரெட் தொலைபேசியைக் கையில் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தாள். "கேப்டன் பியாட்டியை நான் கூப்பிட வேண்டாம் என்று நினைக்கிறாய், இல்லையா?"

"நீ கூப்பிட்டாக வேண்டும்."

"கத்தாதே!"

"நான் கத்தவில்லை." கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான், கோபத்தில் திடீரென்று முகம் சிவக்க, நடுங்கியபடி. அனல் காற்றில் தொலைக்காட்சி அறை அலறிக்கொண்டிருந்தது. "நான் அவரைக் கூப்பிட முடியாது. எனக்குக் காய்ச்சல் என்று நான் அவரிடம் சொல்ல முடியாது."

"ஏன்?"

'ஏனென்றால் உனக்குப் பயம்,' என்று அவன் நினைத்துக்கொண்டான். காய்ச்சல் வந்ததைப் போல நடிக்கும் ஒரு குழந்தை அவன். கூப்பிட ஏன் பயமாக இருந்ததென்றால், கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, அவர்கள் பேச்சு இப்படித்தான் போகும்: "ஆமாம், கேப்டன். எனக்கு ஏற்கனவே சரியாகிவிட்டதைப் போல இருக்கிறது. இன்றிரவு பத்து மணிக்கு நான் அங்கே இருப்பேன்."

"உனக்குக் காய்ச்சல் இல்லை" என்றாள் மில்ட்ரெட்.

மோன்டாக் படுக்கையில் விழுந்தான். தலையணைக்கடியில் கையை நீட்டிப் பார்த்தான். ஒளித்து வைத்திருந்த புத்தகம் இன்னும் அங்கேயே இருந்தது.

"மில்ட்ரெட், வந்து... நான், கொஞ்ச காலம் என் வேலையை நான் விட்டுவிட்டால் எப்படி இருக்கும்?"

"நீ எல்லாவற்றையும் விட்டுவிடப்போகிறாயா? இவ்வளவு ஆண்டுகளாக உழைத்துவிட்டு, ஒரு இரவில், யாரோ ஒரு பெண்ணுக்காகவும், அவளுடைய புத்தகங்களுக்காகவுமா—?"

"அவளை நீ பார்த்திருக்க வேண்டும், மில்லி!"

"எனக்கு அவள் ஒரு பொருட்டே இல்லை; புத்தகங்களை அவள் வைத்திருந்திருக்கக் கூடாது. அது அவளுடைய கடமை, அதைப் பற்றி அவள் யோசித்துப்பார்த்திருக்க வேண்டும். அவளை நான் வெறுக்கிறேன். அவள் உன்னைப் பாதித்து ஏய்த்திருக்கிறாள், அதற்கு அடுத்தபடியாக நமக்கு நடக்கப்போவது என்னவென்றால், நாம் நடுத்தெருவில் நிற்போம், வீடு இல்லை, வேலை இல்லை, எதுவுமில்லை."

"நீ அங்கே இருக்கவில்லை, நீ பார்க்கவில்லை," என்றான் அவன். "எரிந்துகொண்டிருக்கும் வீட்டில் ஒரு பெண்ணை அங்கேயே இருக்கும்படி செய்ய வேண்டுமென்றால், நாம் கற்பனைசெய்துபார்க்க முடியாத ஏதோ ஒன்று புத்தகங்களில் இருக்க வேண்டும். அவற்றில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும். ஒன்றுமில்லாத விஷயத்துக்காக யாரும் அங்கேயே இருந்துவிட மாட்டார்கள்."

"அவள் அசடாக இருக்க வேண்டும்."

"உன்னையும் என்னையும் போலவே அவளும் பகுத்தறிவு உள்ளவள் தான், ஒருவேளை இன்னும் அதிகமாகவேகூட. அவளை நாங்கள் எரித்து விட்டோம்."

"அதெல்லாம் நடந்து முடிந்த கதை. ஓடிவிட்ட நீர்."

"இல்லை, நீரல்ல; நெருப்பு. எரிந்த வீட்டை நீ எப்போதாவது பார்த் திருக்கிறாயா? நாள்கணக்காக அது கனன்றுகொண்டே இருக்கும். இந்த நெருப்போ என் வாழ்நாள் முழுவதும் இருந்துகொண்டே இருக்கும். கடவுளே! இரவெல்லாம் அதை அணைக்க நான் முயன்றுகொண்டே இருந்தேன், என் மனதில், இரவெல்லாம். முயன்றுமுயன்றுபார்த்தே நான் பைத்தியமாகிவிட்டேன்."

"தீயணைப்பவனாக ஆவதற்குமுன் நீ அதைச் சிந்தித்துப்பார்த்திருக்க வேண்டும்."

"சிந்தித்தா!" என்றான் அவன். "மாற்றுத் தேர்வு ஏதாவது எனக்குக் கொடுக்கப்பட்டதா? என் தாத்தாவும், அப்பாவும் தீயணைப்பவர்கள். என் தூக்கத்தில் நான் அவர்கள் பின்னால் ஓடிக்கொண்டிருந்தேன்."

தொலைக்காட்சியில் நடன மெட்டு ஒன்று ஒலித்துக்கொண்டிருந்தது.

"உன் வேலை நேரம் சீக்கிரமே ஆரம்பிக்கும் நாள் இன்று" என்றாள் மில்ட்ரெட். "இரண்டு மணி நேரத்துக்கு முன்பே நீ கிளம்பியிருக்க வேண்டும். இப்போதுதான் நான் கவனித்தேன்."

"இறந்துபோன அந்தப் பெண்ணைப் பற்றியது மட்டுமல்ல என்னு டைய பிரச்சினை," என்றான் மோன்டாக். "கடந்த பத்து ஆண்டுகளாக எவ்வளவு மண்ணெண்ணெயை நான் பயன்படுத்தியிருக்கிறேன் என்று நேற்றிரவு நான் நினைத்துப்பார்த்தேன். தவிர, புத்தகங்களையும் பற்றி நினைத்துப்பார்த்தேன். ஒவ்வொரு புத்தகத்துக்கும் பின்னால் ஒருவர் இருந்திருக்கிறார் என்பதை முதல் முறையாக உணர்ந்தேன். அவற்றை எழுத ஒருவர் சிந்திக்க வேண்டியிருந்தது. அவற்றைக் காகிதத்தில் பதிவு செய்ய அவருக்கு நீண்ட நேரம் தேவைப்பட்டிருக்கும். இதற்கு முன்பு இந்தச் சிந்தனையை ஒருபோதும் நான் சிந்தித்துப்பார்த்ததுகூட இல்லை." அவன் படுக்கையை விட்டு எழுந்தான்.

"தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் வாழ்க்கையையும் கவனித்துப் பார்த்து, தன்னுடைய கருத்துகளை எழுத்தில் பதிவுசெய்ய ஒருவேளை வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு வேண்டியிருந்திருக்கும். பிறகு, நான் அங்கு போய், இரண்டே நிமிடங்களில், பூம்! எல்லாம் முடிந்துவிடும்."

"என்னைத் தனியாக விடு," என்றாள் மில்ட்ரெட். "நான் ஒன்றும் செய்யவில்லையே."

"உன்னைத் தனியாக விடுவதா! நீ சொல்வதெல்லாம் சரிதான், என்னை நானே எப்படித் தனியாக விடுவது? நம்மை யாரும் தனியே விட்டுவிடத் தேவையில்லை. எப்போதாவது ஒருமுறை நாம் உண்மையிலேயே கவலைப்பட வேண்டியது அவசியம். நிஜமாகவே நீ கவலையுடன் இருந்து எவ்வளவு காலம் இருக்கும்? முக்கியமான ஏதோ ஒன்றைக் குறித்து, உண்மையான எதையாவதைப் பற்றி?"

அதன் பிறகு, அவன் பேசுவதை நிறுத்தினான். கடந்த வாரம் அவனுடைய நினைவுக்கு வந்தது. கூரையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த இரண்டு வெண்ணிறக் கற்கள், துழாவிப் பார்க்கும் கண்களுடன் இருந்த குழல்-பாம்பு, உதடுகளில் ஆடிக்கொண்டிருந்த சிகரெட்டுகளுடன், சோப்பு தடவியதைப் போன்ற முகத்துடன் பேசிக்கொண்டிருந்த இரண்டு ஆட்கள்—எல்லாம் அவனுடைய நினைவுக்கு வந்தன. ஆனால், அது வேறொரு மில்ட்ரெட், இந்த மில்ட்ரெட்டுக்குள் அவ்வளவு ஆழத்தில் இருந்த மில்ட்ரெட், மிகவும் அக்கறையுடன், உண்மையிலேயே அவ்வளவு அக்கறையுடன் இருந்த மில்ட்ரெட். இந்த இரண்டு பெண்களும் சந்தித்துக் கொண்டதேயில்லை. அவன் மறுபுறம் திரும்பினான்.

மில்ட்ரெட் சொன்னாள்: "சரிதான் போ. இப்போது நீயே அதைச் செய்துவிட்டாய். வீட்டுக்கு வெளியே போய்ப் பார். யார் வந்திருக்கிறது என்று பார்."

"யாராயிருந்தால் எனக்கென்ன?"

"ஒரு ஃபீனிக்ஸ் கார் இப்போதுதான் வந்தது. கருப்புச் சட்டையின் கைப்பகுதியில் ஆரஞ்சு நிறப் பாம்பின் படத்துடன் ஒருவர் வீட்டின் முன்புறப் பாதை வழியாக வந்துகொண்டிருக்கிறார்."

"கேப்டன் பியாட்டியா?"

"கேப்டன் பியாட்டிதான்."

மோன்டாக் அசையவில்லை. ஆனால் தனக்கு முன்னால் வெகு அருகிலிருந்த தோழமையற்ற சுவரின் வெண்மையைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"போய் அவரை உள்ளே வரச் சொல், சொல்கிறாயா? எனக்கு உடம்பு சரியில்லை என்று சொல்."

"நீயே அதை அவரிடம் சொல்!" அவள் இங்குமங்குமாகச் சில அடிகள் ஓடி, பின்னர் நின்று, கண்கள் விரிந்திருக்க, நுழைவாயிலின் ஒலிபெருக்கியில் மென்மையாக அவளுடைய பெயர் ஒலித்தது; மென்மையாக, திருமதி மோன்டாக், திருமதி மோன்டாக், யாரோ வந்திருக்கிறார், யாரோ வந்திருக்கிறார், திருமதி மோன்டாக், திருமதி மோன்டாக், யாரோ வந்திருக்கிறார். ஒலி தேய்ந்து மறைந்தது.

தலையணைக்கடியில் புத்தகம் நன்றாக ஒளித்துவைக்கப்பட்டிருக் கிறதா என்று மோன்டாக் உறுதி செய்துகொண்டு, மெதுவாகக் கட்டி லில் ஏறி, போர்வையை முழங்கால்களுக்கு மேலேயும் நெஞ்சுக்குக் குறுக் கேயும் இழுத்துவிட்டுக்கொண்டு, பாதி உட்கார்ந்த நிலையில் இருக்க, சிறிது நேரம் கழித்து மில்ட்ரெட் அறையை விட்டு வெளியேறிய பின், பாக்கெட்டுகளில் கையை நுழைத்துக்கொண்டு கேப்டன் பியாட்டி மெதுவாக உள்ளே வந்தார்.

"அந்த 'உறவினர்களின்' வாயை மூடுங்கள்," என்றார் பியாட்டி, மோன் டாகையும் அவனுடைய மனைவியையும் தவிர மற்ற எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு.

இம்முறை மில்ட்ரெட் ஓடினாள். தொலைக்காட்சி அறையில் உரத் துப் பேசிக்கொண்டிருந்த குரல்கள் கத்துவதை நிறுத்திவிட்டன.

தன் சிவந்த முகத்தில் சாந்தமான பார்வையுடன், இருந்ததிலேயே மிக வசதியான நாற்காலியில் பியாட்டி உட்கார்ந்தார். தன்னுடைய பித்தளைச் சுங்கானைச் சுத்தம் செய்து நிரப்பி, அதைப் பற்றவைத்து, பெரிய புகை மேகத்தைக் காற்றில் விடப் போதுமான அவகாசத்தை எடுத்துக்கொண்டார். "உங்கள் வீட்டுக்கே வந்து, காய்ச்சலில் இருப் பவரைப் பார்த்துப் போகலாமே என்று தோன்றியது."

"நீங்கள் அதை எப்படி ஊகித்தீர்கள்?"

பியாட்டி தன்னுயை ஈறுகளின் மிட்டாய் வெளிர் சிவப்பு நிறத்தை யும், சிறிய பற்களின் மிட்டாய் வெண்மையையும் வெளிப்படுத்திய புன்முறுவல் ஒன்றைப் புன்னகைத்தார். "நான் எல்லாவற்றையும் முன் கூட்டியே ஊகித்தேன். ஒரு இரவுக்கு விடுப்புக் கோரும் எண்ணத்தில் நீ இருந்தாய் என்று தெரியும்."

மோன்டாக் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"சரி, ஒருநாள் இரவு வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக்கொள்!" அவர் தன்னுடைய நிரந்தரத் தீப்பெட்டியைப் பார்த்தார். அதன் மூடியில் **'உத்தரவாதம்: இந்தத் தீயூட்டியைப் பத்து லட்சம் முறை பயன்படுத் தலாம்!'** என்று இருந்தது. ஏதோ யோசித்தபடி அந்த வேதிப்பொருள் தீக்குச்சியைச் சொடுக்க ஆரம்பித்தார்; பிறகு ஊதி அணைத்து, சொடுக்கி, ஊதி அணைத்து, சொடுக்கி, சில வார்த்தைகள் பேசி, மீண்டும் ஊதி அணைத்தார். சுவாலையைப் பார்த்தார். ஊதி அணைத்தபின், புகையைப் பார்த்தார். "நீ எப்போது உடல்நிலை தேறி வருவாய்?"

"நாளை, ஒருவேளை அடுத்த நாள். வாரத் தொடக்கத்தில்."

பியாட்டி தன்னுடைய சுங்கானைப் புகைத்தார். "தீயணைப்பவர்கள் ஒவ்வொருவரும், என்றாவது ஒரு நாள், இந்த நிலையை வந்து அடைகி

றார்கள். சரியாகப் புரிந்துகொள்வது அவர்களுக்கு அவசியம். எல்லாம் எப்படி முறைப்படி நடக்கின்றன என்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய தொழிலின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். முன்பு செய்ததைப் போல இப்போதெல்லாம் குத்துக்குட்டிகளுக்கு யாரும் அதைப் புகட்டுவதில்லை. வெட்கப்பட வேண்டிய விஷயம்." புகை வெளியேற்றம். "தீயணைப்பு நிலையத் தலைவர்களுக்கு மட்டும் அது இன்னும் நினைவிருக்கிறது." புகை. "அது என்ன என்பதைச் சொல்கிறேன்."

மில்ட்ரெட் நிலைகொள்ளாமல் நெளிந்தாள்.

ஆற அமர உட்கார்ந்து, என்ன சொல்ல வந்தாரோ அதை நினைவுபடுத்திப்பார்த்துக்கொள்ள ஒரு நிமிடம் முழுவதையும் எடுத்துக்கொண்டார்.

"இதெல்லாம் எப்போது தொடங்கியது, நம்முடைய இந்தத் தொழில் என்று நீ கேட்கலாம்; எப்படி இது உருவானது, எங்கே, எப்போது? பார்க்கப்போனால், உள்நாட்டுப் போர் என்று சொல்லப்படுவதை ஒட்டித்தான் இது உண்மையிலேயே தொடங்கியது என்பேன். நம்முடைய விதிமுறைகள் புத்தகத்தில் அதற்கு முன்பே ஏற்படுத்தப்பட்டிருந்தது என்று வாதிடப்பட்டாலும். உண்மை என்னவென்றால் புகைப்படத் தொழில்நுட்பம் நன்றாக வளர்ந்து நிலைபெறும்வரை, நம்முடைய வாழ்க்கை அவ்வளவு நன்றாக அமையவில்லை. அதன் பிறகு, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரைப்படம் தோன்றியது. வானொலி, தொலைக்காட்சி எல்லாம் **கனபரிமாணம்** பெற ஆரம்பித்தன."

மோன்டாக் படுக்கையில் உட்கார்ந்திருந்தான், அசையாமல்.

"மேலும் எல்லாமும் கனபரிமாணத்தைப் பெற்றதால், அவை இன்னும் எளிமையாக ஆயின," என்றார் பியாட்டி. "முன்பெல்லாம் புத்தகங்கள் சில மனிதர்களை ஈர்த்தன, இங்கே, அங்கே, எல்லா இடங்களிலும். அவர்கள் மாறுபட்டு இருக்க முடிந்தது. உலகத்தில் எல்லோருக்கும் இடம் இருந்தது. ஆனால் பிறகு கண்களும் கைகளும் வாய்களும் உலகெங்கும் பெருகிவிட்டிருந்தன. மக்கள்தொகை இரண்டு, மூன்று, நான்கு மடங்காகப் பெருகியது. திரைப்படங்களும் வானொலியும் பத்திரிகைகளும் புத்தகங்களும் ஒருவிதமான கொழகொழவென்ற அளவுகோல்களாகச் சரிந்தன, நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?"

"புரிகிறதென்று நினைக்கிறேன்."

சுங்கானிலிருந்து காற்றில் விட்டிருந்த புகையின் வடிவத்தைப் பார்த்தவாறு இருந்தார் பியாட்டி. "கற்பனைசெய்து பார். தன்னுடைய குதிரைகள், நாய்கள், வண்டிகளுடன், பத்தொன்பதாம் நூற்றாண்டு மனிதன்.

மிக மெதுவான இயக்கம். பிறகு, இருபதாம் நூற்றாண்டில் உன்னுடைய காமெராவை வேகமாக முடுக்கு. நீளம் வெட்டப்பட்ட புத்தகங்கள். சுருக்கங்கள். வாசகருக்குக் கிளுகிளுப்பூட்டும் குற்றேடுகள். எல்லாவற்றின் வாயையும் அடைத்து, திடீர் முடிவுக்கு வர வேண்டும் என்றாகி விட்டது."

"திடீர் முடிவு" தலையை அசைத்தாள் மில்ட்ரெட்.

"செவ்விலக்கியப் படைப்புகள் பதினைந்து நிமிட வானொலி ஒலிச் சித்திரங்களாகி, இன்னும் கொஞ்சம் வெட்டப்பட்டு, இரண்டு நிமிட நேரப் புத்தக அறிமுகமாகி, இறுதியில் அகராதி ஒன்றில் பத்து அல்லது பன்னிரெண்டு வரிகளில் அடங்கும் சுருக்கமாக முடிகின்றன. பார்க்கப் போனால், நான் மிகைப்படுத்துகிறேன். சுட்டிக்காட்டுவது மட்டுமே அகராதியின் பொறுப்பு. ஆனால் நிறைய பேருக்கு ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்டைப்' பற்றிய அவர்களுடைய முழுஅறிவுமே (மோன்டாக், அந்தத் தலைப்பு உனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்; திருமதி மோன்டாக், உங்களுக்கு ஒருவேளை அந்தத் தலைப்பு அரசல்புரசலான வதந்தியாகத் தெரிந்திருக்கலாம்), நான் சொல்லிக்கொண்டிருந்தபடி, அவர்களுக்கு 'ஹாம்லெட்டைப்' பற்றித் தெரிந்ததெல்லாம் ஒரு புத்தகத்தில் கிடைக்கும் ஒரு பக்கச் சுருக்கமான வடிவம்; '**இப்போது நீங்களும் ஒருவழியாக, செவ்விலக்கியப் படைப்புகள் அனைத்தையுமே படிக்கலாம்; உங்கள் அண்டை வீட்டாருக்கு இணையாகத் திகழலாம்**' என்று அந்தப் புத்தகம் பெருமையடித்துக்கொள்ளும். பார்த்தாயா? மழலையர் பள்ளியிலிருந்து கல்லூரிக்குப் போய், மீண்டும் மழலையர் பள்ளிக்கு; இதுதான், கடந்த ஐந்து அல்லது அதற்கும் அதிகமான நூற்றாண்டுகளில் உன்னுடைய அறிவின் போக்கு."

மில்ட்ரெட் எழுந்து, அறைக்குள் அங்குமிங்குமாகப் போய்க்கொண்டு, ஏதோ ஒன்றை எடுப்பதும் ஏதோ ஒன்றைக் கீழே வைப்பதுமாக இருந்தாள். பியாட்டி அவளை சட்டைசெய்யாமல் தொடர்ந்தார்.

"திரைப்படச் சுருளை வேகமாக ஓட்டு, மோன்டாக், சீக்கிரம். க்ளிக், பார், கண், இந்தக் கணம், சொடுக்கு, இங்கே, அங்கே, மளமளவென்று, வேகம், மேலே, கீழே, உள்ளே, வெளியே, ஏன், எப்படி, யார், என்ன, எங்கே, என்னது? அடி, டமால், பளார், அடி, டுமீல், பூம்! சுருக்கு—மேலும் சுருக்கு, சுருக்கத்தைச் சுருக்கிய சுருக்கங்கள், அரசியலா? ஒரு பத்தி, இரண்டு வாக்கியங்கள், ஒரு தலைப்பு! பிறகு, எல்லாம் நடுவானில் மறைந்துவிடும்! பதிப்பாளர்கள், சுரண்டல்காரர்கள், ஒலிபரப்பாளர்கள் இவர்களின் வேகமாக இயங்கும் கைகள். மனிதனின் மூளையை அவ்வளவு வேகமாகச் சுழலச் செய்து, தேவையில்லாத, நேரத்தை வீணாக்கும் எண்ணங்களைக் கடைந்து வெளிப்புறம் தள்ளிவிடுகின்றன!"

மில்ட்ரெட் படுக்கை விரிப்புகளை நீவிச் சீராக்கினாள். மோன்டாகின் தலையணையை அவள் தட்டியபோது அவனுடைய இதயம் எம்பிஎம்பிக் குதித்தது. இப்போது அவள் அவனுடைய தோளைப் பற்றி இழுத்து, அவன் கொஞ்சம் நகரும்போது தலையணையை எடுத்து, அதன் உறையைச் சீராக்கி மறுபடியும் அங்கேயே வைக்கலாம் என்பதற்காக முயன்றாள். 'இது என்ன?' என்று கேட்டு, ஒருவேளை சத்தம் போட்டு முறைத்தோ அல்லது தன் கையைக் கீழே கொண்டு போய் ஒளித்துவைக்கப்பட்டிருந்த புத்தகத்தை மனதைத் தொடும் அப்பாவித்தனத்துடன் எடுத்துக்காட்டவோ செய்யலாம்.

"பள்ளிப் படிப்பு நேரம் குறைக்கப்பட்டது, ஒழுக்கக் கட்டுபாடு தளர்த்தப்பட்டது, தத்துவச் சிந்தனை, வரலாறு, மொழிகள் கைவிடப்பட்டன, ஆங்கில மொழி, சொற்களின் எழுத்து குறித்த அறிவு இவை கொஞ்சம்கொஞ்சமாக ஒதுக்கப்பட்டு, இறுதியில் கிட்டத்தட்ட முழுவதுமாகக் கண்டுகொள்ளப்படவில்லை. வாழ்க்கை என்பது அந்தந்தக் கணம்தான், பிழைப்புக்கான வேலைதான் முக்கியம், வேலை நேரம் முடிந்ததும் எல்லாவிதக் களிப்பும் சுற்றிலும் இருக்கும். விசைகளை அமுக்குவது, இழுப்பது, பொருத்துவதைத் தவிர வேறெதையும் எதற்காகக் கற்றுக்கொள்ள வேண்டும்?"

"உன் தலையணையைச் சீராக்க விடு" என்றாள் மில்ட்ரெட்.

"வேண்டாம்" என்று கிசுகிசுத்தான் மோன்டாக்.

"ஆடைகளில் பித்தான்களுக்குப் பதிலாக 'ஸிப்' வந்துவிட்டது. அதிகாலையில் ஆடை அணியும்போது, தத்துவச் சிந்தனையின் நேரமாக, அதனாலேயே சோகமாக இருக்கும் அந்த வேளையில், அந்தக் குறைந்த அவகாசம்கூட அவனுக்கு இல்லாமல் ஆகிவிட்டது."

மில்ட்ரெட் சொன்னாள்: "இதோ"

"இங்கிருந்து போ" என்றான் மோன்டாக்.

"வாழ்க்கையே மல்லாக்க விழும் பெரிய வீழ்ச்சியாகிவிட்டது; எல்லாமே டமால், டுமீல், ஆஹா!"

"ஆஹா" என்றாள் மில்ட்ரெட், தலையணையைப் பலமாகத் தட்டி.

"கடவுளே, என்னைக் கொஞ்சம் சும்மா விடுகிறாயா?" என்று கத்தினான் மோன்டாக், ஆவேசமாக.

பியாட்டி தன் கண்களை விரித்துப் பார்த்தார்.

தலையணைக்குப் பின்னால் மில்ட்ரெட்டின் கை உறைந்துபோய்விட்டிருந்தது. அவளுடைய விரல்கள் புத்தகத்தின் ஓரங்களின் மேல் ஓடிக்கொண்டிருந்தன. அதன் வடிவம் அவளுக்குப் பரிச்சயமான ஒன்றாக

இருந்ததில் வியப்படைந்த அவள் முகம், பின்னர் அதிர்ச்சியடைந்து காணப்பட்டது. ஏதோ கேள்வியைக் கேட்பதற்காக அவள் வாயைத் திறந்தாள்...

"நாடக மேடைகளிலிருந்து கோமாளிகளைத் தவிர, மற்றவர்களை அப்புறப்படுத்திவிடுங்கள். அறைகளில் கண்ணாடிச் சுவர்களைப் பொருத்தி, அவற்றில் மணமக்கள் மேல் சொரியப்படும் வண்ணக் காகிதங்கள் அல் லது இரத்தம் அல்லது ஸ்பெயின் நாட்டின் பழுப்பு வைன் அல்லது சோடெர்ன் போன்றவற்றின் அழகிய வண்ணங்களை மேலும்கீழுமாக ஓடச் செய். மோன்டாக், உனக்கு பேஸ்பால் விளையாட்டு பிடிக்குமே, இல்லையா?"

"பேஸ்பால் ஒரு பிரமாதமான விளையாட்டு."

இப்போது பியாட்டி கிட்டத்தட்ட கண்ணுக்குப் புலப்படாமல் ஆகி விட்டிருந்தார், புகைத் திரை ஒன்றின் பின்னால் எங்கிருந்தோ வந்தது குரல்.

"இது என்ன?" என்றாள் மில்ட்ரெட், கிட்டத்தட்ட குதூகலத்துடன். மோன்டாக் பின்னோக்கி அவளுடைய புஜங்களின் மேல் சாய்ந்தான். "இங்கே இருப்பது என்ன?"

"கீழே உட்கார்" மோன்டாக் கத்தினான். வெறும் கையுடன் அவள் குதித்து விலகினாள். ''நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம்.''

எதுவுமே அங்கு நடந்திருக்கவில்லை என்பதைப் போல பியாட்டி பேசிக்கொண்டே போனார். "பௌலிங் விளையாட்டும் உனக்குப் பிடிக் கும் இல்லையா, மோன்டாக்?"

"பௌலிங், ஆமாம்."

"கோல்ஃப்?"

"கோல்ஃப் அபாரமான விளையாட்டு."

"கூடைப் பந்து?"

"அபாரமான விளையாட்டு."

"பில்லியர்ட்ஸ்? நீச்சல் குளம்? கால்பந்தாட்டம்?"

"எல்லாமே அபாரமான விளையாட்டுகள்."

"ஒவ்வொருவருக்கும் இன்னும் நிறைய விளையாட்டுகள், குழு உணர்வு, களிப்பு; யாரும் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை, இல் லையா? இன்னும் மேலும்மேலும் அபாரமான விளையாட்டுகளை நடத்தி, நடத்தி, இன்னும் திறம்பட நடத்த வேண்டும். புத்தகங்களில் இன்னும் அதிகமாக சித்திரக் கதைகள். நிறைய படங்கள். போகப்போக குறைவாக,

இன்னும் குறைவாகவேதான் மூளை பருகும். பொறுமையின்மை. நெடுஞ் சாலைகள் முழுவதும் மக்கள் கூட்டமாக எங்கேயோ, எங்கேயோ, எங் கேயும் இல்லாமலும் போய்க்கொண்டு. பெட்ரோல் அகதிகள். நகரங் கள் தங்கும் விடுதிகளாக மாறும், நாடோடிக் கூட்டங்களாக மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு, நிலவின் பிறைகளைப் பின் பற்றிப் போவார்கள், இன்று மதியம் நீயும், அதற்கு முந்தைய இரவில் நானும் படுத்துறங்கிய அறையில் இன்றிரவு யாரோ தங்குவார்கள்."

மில்ட்ரெட் அறையை விட்டு வெளியேறிக் கதவை அடித்துச் சாத் தினாள். தொலைக்காட்சி அறை 'அத்தைகள்', தொலைக்காட்சி அறை 'மாமாக்களைப்' பார்த்துச் சிரிக்கத் தொடங்கினார்கள்.

"அடுத்தபடியாக, நம்முடைய நாகரிகத்தில் சிறுபான்மையினரை எடுத்துக்கொள்வோம், சரியா? மக்கள்தொகை அதிகமாக ஆக, சிறுபான் மைக் குழுக்கள் அதிகமாகிவிடுகின்றன. நாய்-பிரியர்கள், பூனை-பிரி யர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வியாபாரிகள், தலைவர்கள், மோர்மோன்கள், பாப்டிஸ்ட்டுகள், யூனிடேரியன்கள், இரண்டாம் தலை முறை சீனர்கள், ஸ்வீடன் நாட்டவர்கள், இத்தாலியர்கள், ஜெர்மானியர் கள், டெக்ஸாஸைச் சேர்ந்தவர்கள், ப்ரூக்லின்காரர்கள், அயர்லாந்தவர் கள், ஓரேகான் அல்லது மெக்ஸிகோவிலிருந்து வந்தவர்கள்—இவர்கள் யாரையுமே புண்படுத்தாதீர்கள். இந்தப் புத்தகம், இந்த நாடகம், இந்தத் தொலைக்காட்சித் தொடரில் வரும் மக்கள் வேறு எங்கு இருக் கும் நிஜ ஓவியர்களையோ, வரைபட நிபுணர்களையோ, இயந்திரம் பழுதுபார்ப்பவர்களையோ குறிப்பிடவில்லை. மோன்டாக், உன்னு டைய சந்தை எத்தனைக்கெத்தனை விரிவாக இருக்கிறதோ, அத்தனைக் கத்தனை குறைவாகத்தான் வீண் சச்சரவுகளுக்கு இடம்தர வேண்டும், அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்! எல்லாவிதச் சிறுசிறு சிறுபான்மை யினரின் தொப்புள்களும் சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். நிறைய தீய கருத்துகளைக் கொண்ட எழுத்தாளர்களே! உங்களுடைய தட்டச்சுச் சாதனங்களைப் பூட்டி வையுங்கள். அவர்களும் அப்படியே செய்தார் கள். பத்திரிகைகள் ஒரே மாதிரியான மணம் கொண்ட குச்சிக்கிழங்கு இனிப்புப் பண்டங்களாக மாறின. பாத்திரங்களைக் கழுவிவிட்ட தண் ணீர்தான் புத்தகங்கள் என்றார்கள் 'மோஸ்தர்' விமர்சகர்கள். புத்தகங் கள் விற்காமல் நின்றுபோனதில் வியப்பு ஒன்றுமில்லை என்றார்கள் விமர் சகர்கள். ஆனால் மகிழ்ச்சியாகச் சுற்றிக்கொண்டிருந்த பொதுமக்கள், தங் களுக்கு என்ன தேவை என்பதை அறிந்திருந்த பொதுமக்கள், சித்திரக் கதைப் புத்தகங்களை மட்டும் பிழைத்துப்போகட்டும் என்று விட்டு விட்டார்கள். முப்பரிமாணங்களில் வரும் பாலியல் பத்திரிகைகளையும் தான். வேறென்ன? இதுதான் விஷயம், மோன்டாக். இதெல்லாம்

அரசு மேலிடத்திலிருந்து வரவில்லை. தொடக்கத்தில் கருத்து வெளிப்பாடோ, பிரகடனமோ, தணிக்கையோ எதுவுமே இருக்கவில்லை, இல்லவே இல்லை. தொழில்நுட்பம், வெகுஜனச் சுரண்டல், சிறுபான்மையினரின் வற்புறுத்தல்—இவையே இந்த மாயஜாலத்தைச் சாதித்துவிட்டன, நல்ல வேளை! இன்று அவற்றின் தயவால், நீ எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது—சித்திரத் தொடர்கதைகளையோ, அந்தக் காலத்து ஒப்புதல் கதைகளையோ, வணிகப் பத்திரிகைகளையோ படிக்க முடிகிறது."

"சரி, அப்படியானால் தீயணைப்பவர் இதில் எங்கு வருகிறார்?" என்று கேட்டான் மோன்டாக்.

"ஆ, அதுவா?" தன்னுடைய சுங்கானின் மெல்லிய புகை மூட்டத்திலிருந்து பியாட்டி முன்புறமாக எட்டிப் பார்த்தார். "இதைவிட எளிமையாக விளக்கக் கூடியதும் இயல்பானதுமாக வேறென்ன இருக்க முடியும்? ஆய்வாளர்கள், விமர்சகர்கள், அறிவாளிகள், கற்பனை வளம் மிக்க படைப்பாளிகள் ஆகியவர்களுக்குப் பதிலாக ஓட்டக்காரர்கள், உயரம் தாண்டுபவர்கள், ஓட்டப் பந்தய வீரர்கள், உலோகத் தொழிலாளிகள், பிடுங்கிக்கொள்பவர்கள், பறித்துக்கொள்பவர்கள், பறப்பவர்கள், நீச்சல் வீரர்கள் இவர்களையே கல்விக்கூடங்கள் உருவாக்கி அனுப்பிக்கொண்டிருந்ததால், 'அறிவுஜீவி' என்ற சொல், ஒரு வசைச் சொல்லுக்கு உண்டான தகுதியைப் பெற்றதாக ஆகிவிட்டிருந்தது; அந்தச் சொல்லுக்கு அந்த அந்தஸ்து கிடைக்க வேண்டியது நியாயம்தான். நமக்குப் பரிச்சயம் இல்லாதவற்றைக் குறித்து எப்போதுமே பயமாகத்தான் இருக்கும். பள்ளிக்கூடத்தில் உன்னுடைய வகுப்பிலிருந்த அசாத்தியப் 'புத்திசாலிப்' பையனை ஈயச்சிலையைப் போல உட்கார்ந்துகொண்டிருக்கும் மற்ற மாணவர்கள் வெறுக்கும்போது, பெரும்பாலும் அந்தப் பையனே எல்லாவற்றையும் மனப்பாடமாக ஒப்பித்து, கேள்விகளுக்கும் பதிலளித்துக் கொண்டிருந்த அந்தப் பையனை நிச்சயமாக உனக்கு நினைவிருக்கும் இல்லையா? பள்ளிக்கூடம் முடிந்த பிறகு அடித்து, இம்சை செய்வதற்கு இந்தப் புத்திசாலிப் பையனைத்தானே எல்லோரும் தேர்ந்தெடுத்தார்கள், இல்லையா? ஆமாம், நிச்சயம் அப்படித்தான் இருந்தது. நாம் எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எல்லோருமே, அரசியல் சட்டத்தில் இருப்பதைப் போல, சுதந்திரமாகவும் சமமாகவும் பிறப்பதில்லை, ஆனால் எல்லோருமே சமமாக **ஆக்கப்படுகிறார்கள்.** ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவரின் பிம்பம்; அந்த விதத்தில், எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஏனென்றால், தங்களை அவற்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து மதிப்பிடவோ, அவற்றுக்கு முன்னால் பயந்து குனிய வைக்கவோ போதுமான உயர்நிலைகள் எதுவுமில்லை. ஆகவே, புத்தகம் என்பது பக்கத்து

வீட்டில் இருக்கும் குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கி. அதைக் கொளுத்து. ஆயுதத்திலிருந்து குண்டை நீக்கிவிடு. மனிதனின் மனதைத் தகர்த்துவிடு. நன்கு படித்த மனிதனின் இலக்காக இருக்கப்போவது யார் என்று யாருக்குத் தெரியும்? நானா? நான் அவர்களை ஒரு நிமிடம்கூடப் பொறுத்துக்கொள்ள மாட்டேன். ஆகவே, கடைசியில், எல்லா வீடுகளும் முற்றிலும் நெருப்புப் பற்றிக்கொள்ளாதபடி அமைக்கப்பட்ட பிறகு, உலகம் முழுவதிலும் (நீ அன்றிரவு சொன்ன அனுமானம் சரியானதே) முன்பு பயன்பட்ட தீயணைப்பாளர்களுக்குத் தேவையே இல்லாமல் ஆகிவிட்டது. மக்களுடைய மனஅமைதியின் பாதுகாவலர்களாக, மற்ற வர்களைவிடத் தாழ்ந்தவர்களாக இருப்போமோ என்கிற நியாயமான, புரிந்துகொள்ளக் கூடிய பயத்தின் குவிமையமாக இருப்பதற்காக அவர் களுக்குப் புதிய ஒரு வேலை கொடுக்கப்பட்டது: அதிகாரபூர்வத் தணிக் கையாளர்கள், நீதிபதிகள், உயிர்பறிப்பாளிகள். அதுதான் நீ, மோன்டாக்; அதுதான் நானும்."

தொலைக்காட்சி அறையின் கதவு திறந்தது. அவர்களை, முதலில் பியாட்டியையும் பிறகு மோன்டாகையும் பார்த்தவாறு மில்ட்ரெட் அங்கே நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னால் முழுக்கமுழுக்க முரசுகள், தண்டோராக்கள், பெரிய ஜால்ராக்கள் இவற்றைக் கொண்டு அமைக்கப் பட்ட இசைக்கேற்ப வெடித்துக்கொண்டும் ஜொலித்துக்கொண்டும் இருந்த பச்சை, மஞ்சள், ஆரஞ்சு நிற வாண வேடிக்கைகளால் அந்த அறையின் சுவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. அவளுடைய வாய் அசைந் தது, ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள், ஆனால் அந்தச் சத்தத்தில் அது அடிபட்டுவிட்டது.

தன்னுடைய வெளிர்சிவப்பு நிற உள்ளங்கையில் பியாட்டி தன்னு டைய சுங்கானை வேகமாகத் தட்டினார்; ஏதோ நன்கு ஆராய்ந்து அதனுடைய உள்ளர்த்தம் கண்டுபிடிக்கப்பட வேண்டிய குறியீடுதான் அது என்பதைப் போலத் தன் கையிலிருந்த சாம்பலை உற்றுப் பார்த்தார்.

"நம்முடைய நாகரிகம் இவ்வளவு பரந்து இருப்பதால், சிறுபான்மை யினரைக் கலங்கச் செய்து கொந்தளிக்கவைக்கக் கூடாது என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக, நமக்கெல்லாம் என்ன வேண்டும் என்று உன்னையே கேட்டுக்கொள். மக்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறார்கள், அதுதானே உண்மை! உன்னுடைய வாழ்நாள் முழுவதும் அதை நீ கேட்டதில்லையா? தான் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவதாகத்தான் எல்லோரும் சொல்கிறார்கள். சரி, அவர்கள் மகிழ்ச்சியாக இல்லையா, என்ன? அவர்களை ஏதாவது செய்தபடி இருக்க வைத்திருக்கிறோம் அல்லவா? அவர்களுக்கு நாம் களிப்பை அளிக்கவில்லையா? அவர்கள் உயிர்வாழ்வதே அதற்குத்தான்,

இல்லையா? மகிழ்ச்சிக்காக, கிளுகிளுப்புக்காக? நம்முடைய பண்பாடு அவர்களுக்கு இவற்றை வாரி வழங்குகிறது என்பதை நீ ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்."

"ஆமாம்."

மில்ட்ரெட்டின் உதட்டசைவிலிருந்து அவள் என்ன சொல்கிறாள் என்பதை மோன்டாகால் படிக்க முடிந்தது. அவளுடைய வாயைப் பார்க்காமல் இருக்க மோன்டாக் முயன்றான், ஏனென்றால், பியாட்டியும் திரும்பிப் பார்த்து அதில் என்ன தென்பட்டது என்பதைப் படிக்கக் கூடும்.

கறுப்பர்களுக்கு *Little Black Sambo* பிடிக்காது. அதை எரித்துவிடு. வெள்ளையரை *Uncle Tom's Cabin* சங்கடப்படுத்துகிறது. அதை எரித்து விடு. புகையிலையைப் பற்றியும், நுரையீரல் புற்றுநோயைப் பற்றியும் யாரோ ஒரு புத்தகம் எழுதியிருக்கிறாரா? சிகரெட் விரும்பிகள் அழுது கொண்டிருக்கிறார்களா? அந்தப் புத்தகத்தை எரித்துவிடு. சாந்தம், மோன்டாக். அமைதி, மோன்டாக். உன்னுடைய போராட்டத்தை வெளியே தள்ளு. அதைவிட நல்லது, எரியூட்டிக்குள் தள்ளு. ஈமச் சடங்குகள் சோகமாக, இயற்கை வழிபாடாக இருக்கின்றனவா? அவற்றையும் விலக்கி விடு. இறந்த ஐந்தே நிமிடங்களில் மனிதன் **பெரும் புகைப்போக்கியை** நோக்கிப் போய்க்கொண்டிருப்பான், எரியூட்டிகளுக்கு அழைத்துச்செல்ல நாடு முழுவதும் ஹெலிகாப்டர்கள் இருக்கின்றன. இறந்த பத்து நிமிடங்களில் மனிதன் ஒரு சிறிய கறுப்புத் தூசி மட்டுமே. தனிமனிதர்களுக்கான நினைவுச் சின்னங்களைக் குறித்து வாக்குவாதங்கள் வேண்டாம். அவற்றை மறப்போம். எல்லாவற்றையும் எரிப்போம், ஒவ்வொன்றையும் எரிப்போம். நெருப்பு பிரகாசமானது, நெருப்பு சுத்தமானது."

மில்ட்ரெட்டுக்குப் பின்னாலிருந்த தொலைக்காட்சி அறையில் வாண வேடிக்கைகள் ஓய்ந்துவிட்டன. அதே சமயத்தில் அவளும் பேசுவதை நிறுத்தியிருந்தாள்; ஆச்சரியமான தற்செயல். மோன்டாக் மூச்சை இழுத்துப் பிடித்தபடி இருந்தான்.

"பக்கத்து வீட்டில் ஒரு பெண் இருந்தாள்," என்றான் மெதுவாக. "இப்போது அவள் போய்விட்டாள், இறந்துவிட்டாள் என்று நினைக்கிறேன். அவளுடைய முகம்கூட இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அவள் வித்தியாசமாக இருந்தாள். எப்படி—எப்படி அவளைப் போல் ஒருத்தி **நிகழ்ந்திருக்கக்கூடும்?**"

பியாட்டி புன்முறுவல் செய்தார்: "ஆங்காங்கே, இவை போல நிகழத் தான் செய்யும். க்லாரிஸ் மெக்லெல்லான்தானே? அவளுடைய குடும்பத்தைப் பற்றிய தகவல்கள் எங்கள் கோப்பில் இருக்கின்றன. அவர்களை

நாங்கள் கவனமாகக் கண்காணித்தோம். பாரம்பரியமும் சூழலும் வேடிக்கையான விஷயங்கள். வினோதமான எல்லாக் கிழட்டு ஜந்துக் களையும் சில ஆண்டுகளிலேயே ஒழித்துக்கட்ட முடியாது. பள்ளிக் கூடத்தில் செய்ய முயல்வதை ஒருவரின் குடும்பச் சூழல் இல்லாமல் ஆக்கிவிட முடியும். ஆகவேதான், ஒவ்வொரு ஆண்டும் மழலையர் பள்ளிக்குச் செல்லும் வயதைக் குறைத்துக்கொண்டேவந்திருக்கிறோம்—இப்போது கிட்டத்தட்ட தொட்டிலிலிருந்தே அவர்களைப் பிடுங்கி எடுத்துச் செல்லும்வரை. அவர்கள் சிகாகோவில் வசித்தபோது மெக்லெல் லான் குடும்பத்தைப் பற்றி எங்களுக்கு நிரூபிக்கப்படாத சில எச்சரிக் கைகள் வந்தன. ஆனால் புத்தகம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாமாவைப் பற்றிய தகவல்கள் நல்லதும் கெட்டதுமாகக் கலந்து இருந் தன; சமூக விரோதி. அந்தப் பெண்ணா? வெடிக்கக் காத்திருக்கும் வெடி குண்டு. அவளுடைய பள்ளி ஆவணங்களிலிருந்து நான் தெரிந்து கொண்டவரை, அவளுடைய குடும்பத்தினர் அவளுடைய ஆழ்மனதை நன்றாகக் கெடுத்திருந்தார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எந்த ஒன்றுமே **எப்படி** நடந்தது என்று தெரிந்துகொள்ள அவள் விரும்பவில்லை; ஆனால் ஏன் நடந்தது என்று கேட்டாள். நிறையவற் றைக் குறித்து ஏன் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தால் இறுதியில் அது ஒருவரை மகிழ்ச்சியற்றவராகத்தான் ஆக்கிவிடும். பாவம், அந்தப் பெண், அவள் இறந்துபோனதே மேல்."

"ஆமாம், இறந்துவிட்டாள்."

"அதிர்ஷ்டவசமாக, அவளைப் போன்ற விசித்திரமானவர்கள் அடிக் கடி நேர்வதில்லை. ஆரம்பத்திலேயே, எப்படி அவர்களை முளையிலேயே கிள்ளியெறிவது என்று எங்களுக்குத் தெரியும். ஆணிகளும் மரமும் இல் லாமல் நம்மால் வீடு கட்ட முடியாது. வீடு கட்ட நாம் விரும்பவில்லை யென்றால், ஆணிகளையும் மரத்தையும் ஒளித்துவைத்துவிட வேண்டும். அரசியல்ரீதியாக ஒருவர் வருத்தப்படாமல் இருக்க வேண்டுமென்றால், ஒரு பிரச்சினையின் இரண்டு பக்கங்களையும் அவருக்குக் கொடுத்து, அவரைக் கவலைக்குள்ளாக்காதே; ஒரே ஒரு பக்கத்தை மட்டும் அளி. அதைவிடச் சிறந்தது, எதையுமே கொடுக்காமல் இருப்பது. போர் என்று ஒன்று இருப்பதை அவர் மறக்கும்படி செய்துவிடு. அரசாங்கம் திறமை யற்றதாக, அதிக எண்ணிக்கையில் மேலதிகாரிகளைக் கொண்டதாக, வரிவெறி கொண்டதாக இருந்தால் அதைப் பற்றி மக்கள் கவலைப்படு வதைவிட அதை அப்படியே இருக்க விட்டுவிடு. அமைதி, மோன்டாக். மக்களிடையே போட்டிகளை நடத்து; அவற்றில் வெற்றிபெற வேண்டு மென்றால், பெருமளவு பிரபலமாகியிருக்கும் பாடல் வரிகள், அல்லது மாவட்டத் தலைநகர்கள், அல்லது இயோவா மாவட்டத்தில் போன

வருடம் விளைந்த சோளத்தின் அளவு இவற்றை நன்றாக ஞாபகம் வைத்திருக்க வேண்டும். அவர்களை உசுப்பிவிடாத தரவுகளை அவர்களுக்குள் திணி; ஏகப்பட்ட உதவாக்கரை 'விவரங்க'ளால் அவர்கள் மூச்சுமுட்டுவதாக உணரட்டும்; ஆனால் இந்தத் தகவல்களின் உதவியால் தாங்கள் 'அதிபுத்திசாலி'களாக இருப்பதாக உணர்வார்கள். அப்போதுதான் தாங்கள் சிந்திப்பதாக அவர்கள் நினைத்துக்கொள்வார்கள். தாங்கள் சற்றும் அசையாமலேயே ஓடும் **உணர்வைப்** பெறுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், ஏனென்றால், அவற்றைப் போன்ற தகவல்கள் மாறுவதில்லை. ஒன்றோடு ஒன்றைப் பொருத்திப் பார்க்க, எளிதில் பிடிப்பில் அடங்காமல் நழுவும் தத்துவச் சிந்தனை அல்லது சமூகவியல் போன்றவற்றை அவர்களுக்குத் தராதே. அது துக்கத்துக்குப் போகும் வழி. சுவர்தொலைக்காட்சி ஒன்றை அக்கக்காகப் பிரித்து மீண்டும் அதை ஒன்றுசேர்க்கத் தெரிந்த எந்த மனிதனும்—இப்போதெல்லாம் பெரும்பாலானோருக்கு அது தெரியும்—தான் மிருகமாகி, தனிமைப் பட்டுப்போனால் ஒழிய, எதற்கும் ஒப்பிட்டுச் சொல்லவோ, சறுக்கு அளவு கோலால் அளந்து பார்க்கவோ முடியாததாக இருக்கும் பிரபஞ்சத்தைச் சறுக்கு அளவுகோலால் அளந்து, மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முற்படும் மனிதனைவிட மகிழ்ச்சியாகவே இருப்பான். எனக்குத் தெரியும், நான் அதையெல்லாம் முயன்றுபார்த்திருக்கிறேன்; எப்படியோ ஒழியட்டும். ஆகவே உன்னுடைய மனமகிழ் மன்றங்கள், கேளிக்கை விருந்துகள், உன்னுடைய வீர சாகசக்காரர்கள், மந்திரவாதிகள், உன்னுடைய துணிச்சல் வீரர்கள், ஜெட் கார்கள், மோட்டார் சைக்கிள் ஹெலிகாப்டர்கள், உன்னுடைய பாலியல், போதை மருந்து—இவற்றையெல்லாம் கொண்டுவா; அதாவது, மேலும்மேலும் தானியங்கி அனிச்சைச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும். நாடகம் மோசமாக இருக்கிறதா, திரைப்படம் எதையுமே சொல்லவில்லையா, மேடை நாடகம் சத்தில்லாமல் இருக்கிறதா, அப்படியானால் தெரெமின்[4] ஒலியால் என்னைக் கொட்டு, சத்தமாக. அதிர்வுகளுக்கு எதிர்வினையாக ஸ்பரிச உணர்வு ஏற்படும்போதுதான் நாடகம் என்னைத் தொடுகிறது என்று நினைக்கிறேன். ஆனால், அதைக் குறித்து நான் கவலைப்படவில்லை. எனக்கு வேண்டியது முழுமையான பொழுதுபோக்கு மட்டுமே."

பியாட்டி எழுந்து நின்றார். "நான் இப்போது போக வேண்டும். சொற்பொழிவு முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன் என்று நம்புகிறேன். நீ முக்கியமாக நினைவில் வைத்

---

4 லியோன் தெரெமின் என்பவரால் 1920இல் வடிவமைக்கப்பட்ட இசைக்கருவி. வெவ் வேறு அலைவரிசைகளில் அதிக வீச்சு கொண்ட ஒலியை உண்டாக்கும் திறன் கொண்டது. பெரும்பாலும் ராக் இசையில் பயன்படுத்தப்படுவது.

திருக்க வேண்டியது என்னவென்றால், நீயும் நானும் மற்ற எல்லோருமே, நாம்தான் மகிழ்ச்சியின் புதல்வர்கள்[5] டிக்ஸி இரட்டையர்கள்.[6] முரண்பாடான கருத்துகளால், சிந்தனைகளால் எல்லோரையும் வருத்தத்தில் ஆழ்த்துபவர்களின் சிறிய அலையை எதிர்த்து நாம் நிற்கிறோம். நீரைத் தடுக்கும் தடுப்பணைமேல் நம் விரல்கள் பதிந்திருக்கின்றன. கைகள் தளரக் கூடாது. சோகம், வறட்டுத் தத்துவம் இவற்றின் வெள்ளம் நம் உலகை மூழ்கடித்துவிடக் கூடாது. நாங்கள் உன்னை நம்பியிருக்கிறோம். இன்று இருப்பதைப் போல மகிழ்ச்சியாக இருக்கும் இந்த உலகத்துக்கு நீ எவ்வளவு முக்கியம், நாம் எவ்வளவு முக்கியம் என்பதை நீ உணரவில்லை என்று நினைக்கிறேன்."

மோன்டாகின் துவண்டுவிட்டிருந்த கையைப் பியாட்டி குலுக்கினார். தன்னுடைய வீடே இடிந்து விழுந்துகொண்டு, தன்னால் நகரவும் முடியாமல் இருப்பவனைப் போல மோன்டாக் இன்னமும் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். மில்ட்ரெட் கதவிலிருந்து விலகிச் சென்று மறைந்துவிட்டிருந்தாள்.

"கடைசியாக ஒரு வார்த்தை," என்றார் பியாட்டி. "தீயணைப்பவன் ஒவ்வொருவனுக்கும் தன் தொழிலில் குறைந்தபட்சம் ஒருமுறையாவது ஒரு அரிப்பு ஏற்படும். புத்தகங்கள் என்னதான் சொல்கின்றன என்று யோசிப்பான். அப்படியா, அந்த அரிப்புக்குச் சொரிந்துகொள்ள வேண்டும், அவ்வளவுதானே? இதோ பார் மோன்டாக், என் பேச்சை நம்பு. ஒருகாலத்தில் நானும் சில புத்தகங்களைப் படிக்க வேண்டியிருந்தது. நான் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்துகொள்வதற்காக. புத்தகங்கள் சொல்வதில் ஒன்றுமில்லை! சொல்லிக்கொடுக்கவோ, நம்பிக்கை வைக்கவோ அவற்றில் ஒன்றுமில்லை. புனைவு எழுத்தாக அவை இருந்தால், நிஜமாக இல்லாதவர்களைப் பற்றி, கற்பனைப் பாத்திரங்களைப் பற்றியதாக இருக்கும். யதார்த்தப் படைப்பாக இருந்தால் இன்னும் மோசம்: ஒரு பேராசிரியர் இன்னொரு பேராசிரியரை மடையன் என்பார், ஒரு தத்துவச் சிந்தனையாளர் இன்னொரு தத்துவச் சிந்தனையாளரின் தலைமேல் கூவிக்கொண்டிருப்பார். எல்லோரும் இங்குமங்குமாக ஓடிக்கொண்டு, நட்சத்திரங்களை அணைத்து, சூரியனையும் இல்லாமல் ஆக்கிவிடுகிறார்கள். என்ன நடக்கிறது என்பது கொஞ்சமும் தெரியாமல் நாம் இருக்க வேண்டியதாகிறது."

---

5 அமெரிக்காவில் 1920களில் பிரபலமாக இருந்த வானொலி நிகழ்ச்சி (The Happiness Boys) யில் பங்கேற்ற இரண்டு பாடகர்கள்.

6 அமெரிக்காவில் 1920களில் தொடங்கி, பல ஆண்டுகள் மிகப் பிரபலமாகி இருந்த ஜாஸ் கலைஞர்கள் இணை.

"சரி, தீயணைப்பவன் ஒருவன் தற்செயலாக, எந்த நோக்கமும் இல்லாமல், ஒரு புத்தகத்தைத் தன்னுடன் தன் வீட்டுக்கு எடுத்துச்சென்றால் என்ன நடக்கும்?"

மோன்டாக் நெளிந்தான். திறந்த கதவு தன்னுடைய வெறுமையான பெரிய கண்ணால் அவனைப் பார்த்தது.

"இயல்பான ஒரு தவறு. ஆர்வத்தால் மட்டுமே நிகழ்கிறது," என்றார் பியாட்டி. "நாங்கள் மிதமிஞ்சிக் கவலைப்படுவதோ, கோபமடைவதோ கிடையாது. தீயணைப்பவன் இருபத்திநாலு மணி நேரம் அந்தப் புத்தகத்தைத் தன்னிடம் வைத்துக்கொள்ள அனுமதிப்போம். அதற்குள் அவன் அதைக் கொளுத்தியிருக்கவில்லை என்றால், நாங்களே வந்து அவனுக்காக அதைக் கொளுத்திவிடுவோம், அவ்வளவே."

"சரிதான்." மோன்டாகின் வாய் உலர்ந்துவிட்டிருந்தது.

"சரி, மோன்டாக், நீ வேண்டுமானால் இன்றிரவு நேரம் கழித்துவரும் அடுத்த அணியுடன் வேலைக்கு வருகிறாயா? ஒருவேளை, இன்றிரவு நாம் சந்திப்போமா?"

"தெரியாது" என்றான் மோன்டாக்.

"என்ன?" பியாட்டி சற்றே வியப்படைந்து காணப்பட்டார்.

மோன்டாக் கண்களை மூடிக்கொண்டான். "ஒருவேளை நான் சற்றுத் தாமதமாக வரலாம்."

"நீ வரவில்லையென்றால் நீ இல்லாதது என்னவோ போலிருக்கும்," என்றார் பியாட்டி, சிந்தனையில் ஆழ்ந்தபடியே சுங்கானைப் பாக்கெட்டில் போட்டவாறு.

நான் இனி ஒருபோதும் போக மாட்டேன், என்று மோன்டாக் நினைத்துக்கொண்டான்.

"சீக்கிரம் குணமடைந்து உடம்பைப் பார்த்துக்கொள்," என்றார் பியாட்டி.

திரும்பி, திறந்திருந்த கதவு வழியாக வெளியே போனார்.

கறுப்பாக, கருகிய நிறத்திலிருந்த டயர்களுடன், பளபளக்கும் மஞ்சள் சுவாலை நிறத்திலிருந்த வண்டு போன்ற தன்னுடைய காரை பியாட்டி ஓட்டிச் செல்வதை மோன்டாக் ஜன்னல் வழியாகப் பார்த்தான்.

தெருவுக்கு மறுபுறமும், தெரு நெடுகிலும் இருந்த மற்ற வீடுகள் எல்லாமே தட்டையான முகப்புக் கொண்டவையாக இருந்தன. முன்பொரு நாள் மதியம், க்லாரிஸ் சொன்னாளே, அது என்ன? "முகப்பு நிழற்குடை இல்லாத வீடுகள். முன்பெல்லாம் முகப்புகள் நிழற்குடையுடன் இருக்கும். வீட்டிலிருந்தவர்கள் சில சமயம் அங்கே உட்கார்ந்துகொண்டு,

பேச விரும்பினால் பேசிக்கொண்டும், ஆடும் நாற்காலியில் முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டும், பேசும் எண்ணம் இல்லையென்றால் பேசாமலும் இருப்பார்கள். சில சமயங்களில் வெறுமனே அங்கே உட்கார்ந்துகொண்டு, எதையாவது யோசித்துக்கொண்டு, அசைபோட்டுக் கொண்டு இருப்பார்கள். முகப்பு நிழற்குடைகள் அழகாக இல்லை என்று கருதியதால் கட்டடக் கலைஞர்கள் அவற்றைக் கைவிட்டுவிட்டார்கள் என்று என் மாமா சொல்கிறார். ஆனால், அறிவுரீதியாக ஒரு நியாயப் படுத்தும் முயற்சி மட்டுமே அது என்கிறார் என் மாமா. அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மையான காரணம் என்னவென்றால், மக்கள் அப்படி உட்கார்ந்துகொண்டு, எதுவும் செய்யாமல் நாற்காலிகளில் ஆடிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருப்பதை அவர்கள் எவருமே விரும்பவில்லை; அது தவறான **வகையில்** செயல்பட்ட சமூக வாழ்க்கை. மக்கள் அதிகம் பேசினார்கள். சிந்திக்க அவர்களுக்கு நேரம் இருந்தது. ஆகவே, அவர்களுடைய முகப்பு நிழற்குடைகளை அகற்றிவிட்டார்கள். பூங்காக்களையும்கூட. வெறுமனே உட்கார்ந்து பொழுதுபோக்கப் பூங்காக்கள் இப்போதெல்லாம் இல்லை. அறைகலன்களைப் பாருங்கள். ஆடும் நாற்காலிகளும் இப்போதெல்லாம் இல்லை. அவை தேவை இல்லாமல் சௌகரியமாக இருக்கும். மக்கள் நாற்காலியிலிருந்து எழுந்து, ஓடியபடி இருக்கும்படி செய்யுங்கள். என் மாமா சொல்வார்... இன்னும்... என் மாமா... மேலும்... என் மாமா..." அவளுடைய குரல் தேய்ந்துகொண்டே போயிற்று.

மோன்டாக் திரும்பி, தன் மனைவியைப் பார்த்தான். தொலைக்காட்சி அறை நடுவில் உட்கார்ந்துகொண்டு, அறிவிப்பாளர் ஒருவரிடம் அவள் ஏதோ பேச, அவளுக்கு அவர் பதிலளித்துக்கொண்டிருந்தார். "திருமதி மோன்டாக், இது, அது..." என்று என்னவோ சொல்லிக்கொண்டிருந்தார் அவர். மறுபடியும் "திருமதி மோன்டாக்" என்று கூப்பிட்டு, வேறு ஏதோ சொல்லி, அதற்குப் பிறகு இன்னும் வேறு ஏதோ சொன்னார். பொருத்தமான ஒலிக்குறிப்புகளை இட்டு நிரப்புவதற்காக, சில காலி இடங்களை விட்டுவிட்டு அறிவிப்பாளர் முகம் தெரியாத பார்வையாளரை நோக்கிப் பேசும்போது, திருமதி மோன்டாகின் பெயரை அந்த இடங்களில், நூறு டாலர்கள் கொடுத்து அவர்கள் வாங்கியிருந்த 'கன்வெர்டர் அட்டாச்மென்ட்' சாதனம் தானே இயங்கி நிரப்பிற்று. அறிவிப்பாளரின் தொலைக்காட்சிப் படிமத்தில், அவருடைய உதடுகளை ஒட்டி மேலே இருந்த இடத்தில், உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் அழகாக உச்சரிக்க ஒரு பிரத்தியேக 'ஸ்பாட்-வேவெக்ஸ்-ஸ்காரம்ப்லெர்' சாதனம் உதவியது. அவர் ஒரு தோழர், சந்தேகமில்லாமல், ஒரு நல்ல தோழர்தான். "திருமதி மோன்டாக், இப்போது நேராக இங்கே பாருங்கள்."

அவள் தன் தலையைத் திருப்பினாள், அவள் கேட்டுக்கொண்டிருக்க வில்லை என்பது தெளிவாக இருந்தபோதிலும்.

மோன்டாக் சொன்னான்: "இன்று வேலைக்குப் போகாமல் இருப்ப தற்கும், நாளை வேலை செய்யாமல் இருப்பதற்கும் அல்லது இனி எப் போதுமே தீயணைப்பு நிலையத்தில் வேலை செய்யாமல் இருப்பதற்கும், இவை எல்லாவற்றுக்கும் இடையில் இருப்பது ஒரு எட்டுதான்."

"இருந்தாலும் இன்று நீ வேலைக்குப் போகப்போகிறாய், அப்படித் தானே?" என்றாள் மில்ட்ரெட்.

"நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கி, எல்லாவற்றையும் கொன்றுவிட வேண்டும் என்ற மோசமான ஒரு உணர்வுதான் தற்சமயம் என்னிடம் இருக்கிறது."

"அந்தக் கருவண்டு காரை எடுத்து ஓட்டிக்கொண்டு போ."

"இல்லை, வேண்டாம். நன்றி."

"கருவண்டு காரின் சாவிகள் கட்டிலருகே உள்ள மேஜைமேல்தான் இருக்கின்றன. உனக்கிருப்பதைப் போல எனக்கு வரும்போதெல்லாம், நான் காரை வேகமாக ஓட்டிக்கொண்டு போக வேண்டும்போல் இருக் கும். மணிக்குத் தொண்ணூற்றைந்து மைல் வேகம்வரை அதை விரைவாக ஓட்டும்போது குதூகலமான உணர்வு ஏற்படும். சில சமயங்களில், நான் இரவு முழுவதும் ஓட்டிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பி வருவேன்; உனக்கு அதைப் பற்றித் தெரிந்தே இருக்காது. ஊருக்கு வெளியே போய் விட்டால் வேடிக்கையாக இருக்கும். முயல்களும், சில சமயம் நாய்களும் கூட வண்டியில் அடிபடும். கருவண்டு காரை எடுத்துக்கொண்டு போ."

"வேண்டாம். இம்முறை அப்படிச் செய்ய எனக்கு விருப்பவில்லை. என் பிடியைத் தளர்த்தாமல் இந்த விசித்திரமான நிலையிலேயே இருக்க விரும்புகிறேன். கடவுளே, இது என்னைப் பெருமளவு பற்றிக்கொண்டு விட்டது. என்னவென்றே எனக்குத் தெரியவில்லை. தாங்க முடியாத அள வுக்கு மகிழ்ச்சியற்று இருக்கிறேன். பயங்கரக் கோபம் வருகிறது, ஏன் என்று தெரியவில்லை. என் எடை கூடிக்கொண்டேபோவதைப் போல உணர்கிறேன். குண்டாக இருப்பதாக உணர்கிறேன். நான் எதையோ நிறைய சேமித்து வைத்திருந்ததைப் போல உணர்கிறேன், ஆனால் எதை என்று தெரியவில்லை. நான் புத்தகங்கள் படிப்பதைக்கூட ஆரம்பித்து விடுவேனோ என்னவோ."

"உன்னைச் சிறையில் அடைத்துவிடுவார்களே, மாட்டார்களா?" ஏதோ ஒரு கண்ணாடிச் சுவருக்குப் பின்னால் அவன் இருந்தான் என் பதைப் போல, அவள் அவனைப் பார்த்தாள்.

அவன் தன்னுடைய உடைகளைப் போட்டுக்கொள்ளத் தொடங்கினான். படுக்கையறையில் நிலைகொள்ளாமல் போய்வந்துகொண்டிருந்தான். "ஆமாம், அது ஒரு நல்ல யோசனையாகவும் இருக்கும், யாருக்காவது நான் தீங்கிழைப்பதற்கு முன்னால். பியாட்டி சொன்னதைக் கேட்டாயா? அவர் சொன்னதைக் கவனித்தாயா? எல்லாவற்றுக்கும் அவருக்குப் பதில் தெரிந்திருக்கிறது. அவர் சொல்வது சரி. மகிழ்ச்சி மிகவும் முக்கியம். வேடிக்கைதான் எல்லாமுமே. இருந்தாலும் நான் இங்கே உட்கார்ந்துகொண்டு, நான் மகிழ்ச்சியாக இல்லை, நான் மகிழ்ச்சியாக இல்லை என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டிருந்திருக்கிறேன்."

"நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன்," மில்ட்ரெட்டின் வாய் முழங்கியது. "எனக்கு அதில் பெருமையும்கூட."

"நான் எதையோ செய்யப்போகிறேன்," என்றான் மோன்டாக். "என்னவென்றுதான் இன்னும் எனக்குத் தெரியவில்லை, ஆனாலும் பெரிதாக எதையோ செய்யப்போகிறேன்."

"இந்தக் குப்பையைக் கேட்டுக்கேட்டு எனக்கு அலுத்துவிட்டது," என்றாள் மில்ட்ரெட், மீண்டும் அறிவிப்பாளரைப் பார்ப்பதற்காக அவனிடமிருந்து திரும்பியவாறே.

சுவர்தொலைக்காட்சியின் ஒலிக்கட்டுப்பாட்டுப் பித்தானை மோன்டாக் தொட்டான்; அறிவிப்பாளர் வாயடைத்துப்போனார்.

"மில்லி," என்றழைத்த மோன்டாக் சற்று நிறுத்தினான். "எந்த அளவுக்கு இது என் வீடோ, அதே அளவுக்கு உன் வீடும்கூட. இதற்கு முன்பேயே நான் உன்னிடம் சொல்லியிருக்க வேண்டிய, ஆனால் என்னிடமேகூட நான் ஒப்புக்கொண்டிருக்காத ஒரு சங்கதியை உன்னிடம் சொல்வதுதான் நியாயம் என்று எனக்குத் தோன்றுகிறது. கடந்த ஒரு வருஷமாக அவ்வப்போது, ஏதாவது ஒரு முறை, நான் தனியே ஒதுக்கி ஒளித்து வைத்திருந்த ஒன்றை நீ பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதை ஏன் செய்தேன் என்று தெரியாது, ஆனால் செய்தேன். உன்னிடம் ஒருபோதும் சொல்லவில்லை."

நேர்முதுகு கொண்ட நாற்காலி ஒன்றை மோன்டாக் எடுத்து, கூடத்தின் முன்கதவுவரை மெதுவாகவும் சீராகவும் தள்ளிச் சென்று, அதன் மேல் ஏறி, பீடத்தில் இருக்கும் சிலையைப் போல ஒரு கணம் அசையாமல் நின்றான்; அவன் காலுக்கடியில் அவன் மனைவி காத்துக்கொண்டிருந்தாள். அவன் எம்பி, தன் கையை நீட்டி, குளிர்சாதனப் பெட்டியின் கிராதியை இழுத்து, உள்ளே வலதுபுறமாக இன்னும் பின்னால்வரை கையை நீட்டி, மீண்டும் நகரும் உலோகத் தகடு ஒன்றைத் தள்ளி, அங்கிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். அதைப் பார்க்காமலேயே கீழே

தரையில் போட்டான். இன்னும் உள்புறமாகத் தன் கையை நீட்டி, இரண்டு புத்தகங்களை எடுத்து, கையைக் கீழே தொங்கவிட்டு, அந்த இரண்டு புத்தகங்களைத் தரையில் போட்டான். இப்படியே கையை மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டு, சிறியதும், கொஞ்சம் பெரியதுமான புத்தகங்களை, மஞ்சள், சிவப்பு, பச்சை நிறப் புத்தகங்களைக் கீழே தரையில் போட்டுக்கொண்டிருந்தான். அவன் இதை முடித்தபோது, தன் மனைவியின் காலுக்கடியில் சுமார் இருபது புத்தகங்கள் இருப்பதைப் பார்த்தான்.

"நான் இதைப் பற்றி யோசித்துப்பார்க்கவில்லை என்று வருந்து கிறேன்," என்றான் அவன். "ஆனால் இப்போது இந்த விவகாரத்தில் நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கிறோம் என்று தோன்றுகிறது."

எங்கிருந்தோ தரைக்குள்ளிருந்து வந்துவிட்ட சுண்டெலிக் கும்பல் ஒன்றைத் திடீரென்று எதிர்கொள்பவளைப் போல மில்ட்ரெட் பின்வாங்கினாள். அவளுக்கு மூச்சிரைத்துக்கொண்டிருந்ததை அவனால் கேட்க முடிந்தது. கண்கள் விரிந்த நிலையில் அப்படியே இருக்க, அவளுடைய முகம் வெளிறியது. அவனுடைய பெயரை அவள் ஒரு முறை, இரு முறை, மூன்று முறை சொன்னாள். பிறகு, புலம்பிக்கொண்டே முன்புறமாக ஓடி, ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, சமையலறையின் மின்னெரியூட்டியை நோக்கி விரைந்தாள்.

கிறீச்சிட்ட அவளை அவன் எட்டிப் பிடித்தான். அவனைக் கீறி விட்டு, அவனிடமிருந்து திமிறிக்கொண்டு போக முயற்சி செய்த அவளை அவன் பிடித்துக்கொண்டு இருந்தான்.

"வேண்டாம் மில்லி, வேண்டாம்! பொறு! இப்போது நிறுத்தப்போகி றாயா இல்லையா? உனக்குத் தெரியாது... நிறுத்து!" அவள் முகத்தில் அறைந்து, மீண்டும் அவளைப் பிடித்து உலுக்கினான்.

அவனுடைய பெயரை உச்சரித்தபடி அவள் அழத் தொடங்கினாள்.

"மில்லி!" என்றான் அவன். "கவனமாகக் கேள். எனக்குக் கொஞ்ச நேரம் கொடு, என்ன? நாம் எதுவும் செய்ய முடியாது. இவற்றை நாம் கொளுத்த முடியாது. நான் இவற்றைப் பார்க்க வேண்டும், குறைந்தபட் சம் ஒரு முறையாவது. அதற்குப் பிறகு, கேப்டன் பியாட்டி சொல்வ தெல்லாம் உண்மையென்றால், நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அவற் றைக் கொளுத்தலாம், நான் சொல்வதை நம்பு, ஒன்றாகச் சேர்ந்து அவற் றைக் கொளுத்தலாம். எனக்கு நீ உதவ வேண்டும்." அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்து, அவளுடைய முகவாயைத் தன் கையில் ஏந்தி அவளை இறுகப் பிடித்துக்கொண்டிருந்தான். அவன் அவளை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கவில்லை, தனக்காகவும் தான் என்ன செய்ய

வேண்டும் என்பதையும் அவளுடைய முகத்தில் தேடினான். "நமக்கு இது பிடித்திருக்கிறதோ இல்லையோ, இதில் நாம் சம்பந்தப்பட்டிருக் கிறோம். இத்தனை ஆண்டுகளாக நான் உன்னிடம் ஒருபோதும் பெரி தாக எதையும் கேட்டதில்லை, ஆனால் இப்போது கேட்கிறேன், மன் றாடுகிறேன். இது போன்ற குழப்பத்தில் ஏன் மாட்டிக்கொண்டோம் என்பதை நாம் எங்கேயாவது ஒரு இடத்திலிருந்து தொடங்கி எண்ணிப் பார்க்க வேண்டும்; நீயும் உன்னுடைய மருந்துண்ணும் இரவுகளும், கார், நான், என்னுடைய தொழில், எல்லாவற்றையுமே. உயர்ந்த மலை யின் விளிம்பை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம், மில்லி. இன் னும் மேலே போக எனக்கு விருப்பமில்லை. இது எளிதான ஒரு விவ காரமாக இருக்காது. மேற்கொண்டு எதையும் நோக்கிப் போவதற்கு இனி நமக்கென்று எதுவும் இல்லை, ஆனால் நம்மிடம் இருப்பவற்றை ஒன்று சேர்த்து, யோசித்து, ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம். இப் போது எந்த அளவுக்கு நீ எனக்குத் தேவைப்படுகிறாய் என்று என் னால் சொல்ல முடியவில்லை. கொஞ்சமாவது நீ என்னை நேசிக்கிறாய் என்றால் இருபத்திநாலு அல்லது நாற்பத்தியெட்டு மணி நேரம் இவற்றை யெல்லாம் நீ பொறுத்துக்கொள்ள வேண்டும், நான் கேட்பதெல்லாம் அதுதான், பிறகு எல்லாம் முடிந்துவிடும், வாக்களிக்கிறேன், சத்தியம் செய் கிறேன்! அப்படியும் இங்கு ஏதாவது இருந்தால், இந்த மொத்த சுந்தர கோளத்தில் சிறிதாக ஏதாவது ஒன்று இருந்தாலும், அதை வேறு யாருக்காவது தருவோம்."

அவள் மேலும் திமிறாமல் இருந்ததால், தன் பிடியிலிருந்து அவளை அவன் விடுவித்தான். அவனிடமிருந்து விலகித் தொய்ந்துபோய், சுவரில் உரசிக்கொண்டே சரிந்து, புத்தகங்களைப் பார்த்தவாறு அவள் தரையில் உட்கார்ந்தாள். தன்னுடைய பாதம் ஒரு புத்தகத்தின் மேல் பட்டவுடன், அதைப் பார்த்த அவள் தன் பாதத்தை இழுத்துக்கொண்டாள்.

"அன்றிரவில் அந்த முதியவள், மில்லி, நீ அங்கு இல்லையே. அவளு டைய முகத்தை நீ பார்க்கவில்லை. அப்புறம், க்ளாரிஸ். ஒருபோதும் நீ அவளிடம் பேசியதில்லை. நான் அவளுடன் பேசியிருக்கிறேன். பியாட் டியைப் போன்றவர்கள் அவளைக் கண்டு பயப்படுகிறார்கள். ஏனென்று எனக்குப் புரியவில்லை. அவளைப் போன்ற ஒருத்தியிடம் ஏன் அவர் கள் அவ்வளவு பயப்பட வேண்டும்? நேற்றிரவு என் மனதில், தீயணைப் பவர்களின் பக்கத்தில் அவளை இருத்திப் பார்த்தேன், அவர்கள் யாரை யுமே எனக்குப் பிடிக்கவில்லை என்பதை திடீரென்று உணர்ந்தேன்; அதற்குப் பிறகு என்னையே எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. தவிர, ஒருவேளை தீயணைப்பவர்களையே கொளுத்திவிடுவதே மிகச் சிறந்த தாக இருக்குமென்றுகூட நினைத்தேன்."

"மோன்டாக்!"

வாசல் கதவுக் குரல் மென்மையாக ஒலித்தது: "திருமதி மோன்டாக், திருமதி மோன்டாக், யாரோ வந்திருக்கிறார், யாரோ வந்திருக்கிறார், திருமதி மோன்டாக், திருமதி மோன்டாக், யாரோ வந்திருக்கிறார்..."

மென்மையாக.

கதவை வெறித்துப் பார்க்க அவர்கள் திரும்பியபோது, சுற்றிலும் புத்தகங்கள் சரிந்து விழுந்தன, சுற்றிலும் குவியலாக.

"பியாட்டி!" என்றாள் மில்ட்ரெட்.

"அவராக இருக்க முடியாது."

"அவர்தான் திரும்ப வந்திருக்கிறார்," அவள் கிசுகிசுத்தாள்.

வாசல் கதவுக் குரல் மீண்டும் மென்மையாக அழைத்தது: "யாரோ வந்திருக்கிறார்..."

"பதில் சொல்லாமல் இருப்போம்." மோன்டாக் சுவரோடு முதுகை ஒட்டியபடி, கொஞ்சம்கொஞ்சமாகக் குந்தி உட்காரும் நிலைக்குச் சரிந்து, திகைப்புற்றவனாய், புத்தகங்களைத் தன் கட்டை விரலால், ஆள்காட்டி விரலால் மெதுவாகத் தள்ளினான். அவனுடைய உடல் நடுங்கியது. எல்லாவற்றுக்கும் மேலாக, காற்றுப்போக்கி வழியாகப் புத்தகங்களை மீண்டும் திணித்துவிட விரும்பினான்; ஆனால் பியாட்டியை மீண்டும் எதிர்கொள்ள முடியாது என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. குந்துக்கா லிட்டான், பிறகு உட்கார்ந்தான். வாசல் கதவுக் குரல் மீண்டும் அழைத்தது, விடாப்பிடியாக. மோன்டாக் தரையிலிருந்து ஒரே ஒரு சிறிய புத்தகத்தை எடுத்தான். "நாம் எங்கே தொடங்கப்போகிறோம்?" புத்தகம் ஒன்றை நடுவில் திறந்து, உற்றுப் பார்த்தான். "தொடக்கத்திலிருந்து தொடங்கலாம் என்று நினைக்கிறேன்."

"அவர் உள்ளே வந்து நம்மையும் புத்தகங்களையும் எரிக்கப்போகிறார்!" என்றாள் மில்ட்ரெட்.

வாசல் கதவுக் குரல் ஒருவழியாகத் தேய்ந்து மறைந்துவிட்டிருந்தது. மௌனம் நிலவியது. கதவுக்கு மறுபுறத்தில் யாரோ ஒருவர் காத்துக்கொண்டு, கேட்டுக்கொண்டு இருப்பதை மோன்டாக் உணர்ந்தான். பிறகு, நடைபாதை வழியாக, புல்வெளியைக் கடந்து தொலைவில் விலகிப் போய்க்கொண்டிருக்கும் காலடியோசை கேட்டது.

"இது என்னவென்று பார்ப்போம்" என்றான் மோன்டாக்.

ஒரு விதமான பயங்கர சுயஉணர்வுடன் சொற்களை நிறுத்தி, நிறுத்தி உச்சரித்தான். இங்குமங்குமாகப் பன்னிரெண்டு பக்கங்களைப் படித்துவிட்டு, இறுதியில் இந்த இடத்துக்கு வந்தான்:

"முட்டைகளைக் குவிந்த முனையில் உடைப்பதற்கு ஒத்துக்கொள் வதைவிட உயிரை விடுவதே மேல் என்று பதினோராயிரம் பேர் பல தருணங்களில் நினைத்திருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது."

அவனுக்கெதிரே மறுபுறம் மில்ட்ரெட் உட்கார்ந்திருந்தாள். "அதற்கு என்ன பொருள்? அதற்கு **எவ்வித** அர்த்தமும் இல்லை! கேப்டன் பியாட்டி சொன்னது சரிதான்!"

"இதோ பார்," என்றான் மோன்டாக். "நாம் மறுபடியும் தொடங்கு வோம், தொடக்கத்திலிருந்து."

பாகம் 2

சல்லடையும் மழையும்

குளிர்கால நவம்பர் மாத மழை வானத்திலிருந்து அமைதியான அந்த வீட்டின் மேல் பொழிந்துகொண்டிருந்த, பிற்பகல் முழுவதும் அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். சுவரில் ஆரஞ்சு, மஞ்சள் மிட்டாய் வண்ண விளக்குகளோ, வாணவேடிக்கைகளோ இல்லாமல், வலைவலையான தங்க நிற உடையில் பெண்களோ அல்லது ஜிகினாத் தொப்பிகளிலிருந்து நூறு பௌண்டு எடை கொண்ட முயல்களை வரவழைத்த, கறுப்பு வெல்வெட் உடை ஆண்களோ இல்லாமல் இருந்த சுவர்தொலைக் காட்சி அறை சாம்பல் நிறத்தில் வெறுமையாக இருந்ததால், அவர்கள் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். சுவர்தொலைக்காட்சி அறை உயிரற்று இருந்தது. வெறுமையான முகபாவத்துடன் மில்ட்ரெட் அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தபோது, மோன்டாக் குறுக்கும்நெடுக்குமாக நடந்து, திரும்பி வந்து கீழே உட்கார்ந்து, குறிப்பிட்ட ஒரு பக்கத்தைக் கிட்டத்தட்ட பத்து முறை உரத்த குரலில் படித்தான்:

" 'நட்பு வடிவம் பெறும் தருணத்தைத் துல்லியமாகச் சொல்ல நம்மால் முடியாது. சொட்டு சொட்டாக ஒரு பாத்திரத்தை நிரப்பும்போது, அதைத் ததும்பி விழச் செய்யும் துளி ஒன்று கடைசியில் வரும்; அதே போன்று அன்பை வெளிப்படுத்தும் பல நிகழ்வுகளில் இதயத்தை நிரப்பித் ததும்பச் செய்யும் ஒன்று இறுதியில் வரும்.' "

மழையின் ஓசையைக் கேட்டபடி மோன்டாக் உட்கார்ந்திருந்தான்.

"அடுத்த வீட்டுப் பெண்ணிடம் இருந்த அம்சம் அதுதானா? அதைப் புரிந்துகொள்ள நான் மிகவும் சிரமப்பட்டிருக்கிறேன்."

"அவள் இறந்துவிட்டாள். தயவுசெய்து உயிருடன் இருப்பவர் யாரைப் பற்றியாவது பேசுவோம்."

படபடப்புடன் கூடத்திலிருந்து சமையலறைவரை போன மோன்டாக் தன் மனைவியைத் திரும்பிப் பார்க்காமல், சமையலறையின் ஜன்னல் கதவில் மழை அடிப்பதை வெகுநேரம் பார்த்திருந்துவிட்டு, மங்கிய ஒளி

யிலிருந்த கூடத்துக்குத் திரும்ப வந்து, படபடப்பு அடங்குவதற்காகக் காத்திருந்தான்.

இன்னுமொரு புத்தகத்தைத் திறந்தான்.

" 'எனக்கு மிகப் பிடித்த விஷயம் : நான்.' "

கண்களை இடுக்கிக்கொண்டு சுவரைப் பார்த்தான். " 'எனக்கு மிகப் பிடித்த விஷயம் : நான்.' "

"**அது** எனக்குப் புரிகிறது," என்றாள் மில்ட்ரெட்.

"ஆனால், க்லாரிஸுக்குப் பிடித்த விஷயம் தன்னைப் பற்றியது அல்ல. அது எல்லோரையும் பற்றியது, என்னைப் பற்றியது. கடந்த பல ஆண்டுகளில் எனக்கு உண்மையாகவே மிகவும் பிடித்திருந்தது அவளைத்தான். எனக்கு நினைவு தெரிந்தவரை நானும் கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட வேண்டியவன் என்பதைப் போல என்னை நேருக்கு நேர் பார்த்த முதல் நபர் அவள்தான்." மோன்டாக் அந்த இரண்டு புத்தகங்களைக் கையில் எடுத்தான். "இந்த இரண்டு மனிதர்களும் இறந்து எவ்வளவோ காலம் ஆகிறது, ஆனாலும் அவர்களுடைய சொற்கள் ஏதோ ஒருவிதத்திலாவது க்லாரிஸைச் சுட்டிக்காட்டுகின்றன என்பது எனக்குத் தெரிகிறது."

வாசல் கதவுக்கு வெளியே, மழையில், லேசாக ஒரு கீறல் சத்தம்.

மோன்டாக் உறைந்துபோனான். மில்ட்ரெட் சுவரில் அழுந்தச் சாய்ந்துகொண்டு மூச்சிரைப்பதைப் பார்த்தான்.

"யாரோ—அந்தக் கதவு—கதவுக் குரல் ஏன் யாரென்று அறிவிப்பு செய்யவில்லை—"

"நான் அதைத் துண்டித்துவிட்டேன்."

வாசல் படிக்குக் கீழே, மெதுவாக, எதையோ தேடி மோப்பமிடும் ஓசை, மின்சார ஆவியை வெளியே விடும் சத்தம்.

மில்ட்ரெட் சிரித்தாள். "அது சாதாரண நாய்தான், அதுதான் அங்கே இருக்கிறது! நான் போய் அதை எட்டி விரட்டட்டுமா?"

"இங்கேயே இரு."

அமைதி. குளிர்ந்த மழை பெய்கிறது. பூட்டிய கதவுக்கடியில் நீல நிற மின்சாரம் வீசுவதன் மணம்.

"நாம் நம்முடைய வேலையைப் பார்ப்போம்," என்றான் மோன்டாக் அமைதியாக.

மில்ட்ரெட் புத்தகம் ஒன்றைக் காலால் உதைத்தாள். "புத்தகங்கள் மனிதர்கள் இல்லை. நீ படிக்கிறாய், நான் சுற்றுமுற்றும் பார்க்கிறேன். ஆனால், இங்கே **யாரும்** இல்லை!"

மின்னனுச் சூரியன் ஒன்றின் விசையைத் தட்டி முடுக்கினால் மட்டுமே உயிர்பெற்று அலைபாயக் கூடிய கடலின் நீரைப் போலச் சாம்பல் நிறத்தில் உயிரற்று இருந்த சுவர்தொலைக்காட்சி அறையை அவன் வெறித்துப் பார்த்தான்.

"இதோ பார்," என்றாள் மில்ட்ரெட். 'என் குடும்பம்' என்பது மனிதர்கள். அவர்கள் என்னிடம் ஏதாவது சொல்வார்கள். நான் **சிரிப்பேன்**, அவர்கள் **சிரிப்பார்கள்**! தவிர, எவ்வளவு வண்ணங்கள்!"

"ஆமாம், எனக்குத் தெரியும்."

"மேலும், கேப்டன் பியாட்டிக்கு இந்தப் புத்தகங்களைப் பற்றித் தெரிய வந்தால்" அவள் அதை எண்ணிப்பார்த்தாள். அவளுடைய முகம் வியப்படைந்து, பிறகு பீதிக்குள்ளாகியது. "அவர் இங்கே வந்து வீட்டையும் இந்தக் 'குடும்பத்தை'யும் எரிக்கக்கூடும். என்ன கொடுமை! நம்முடைய முதலீட்டை நினைத்துப்பார். நான் ஏன் படிக்க வேண்டும்? எதற்காக?"

"எதற்காக! ஏன்!," என்றான் மோன்டாக். "அன்றொரு இரவில், உலகிலேயே மிகவும் கொடிய பாம்பு ஒன்றைப் பார்த்தேன். செத்த பாம்பு, ஆனால் உயிருடன் இருந்தது. அதற்குப் பார்வை இல்லை, ஆனால் பார்க்கும். நீ அந்தப் பாம்பைப் பார்க்க விரும்புகிறாயா? அவசர சிகிச்சை மருத்துவமனையில் அது இருக்கிறது. உன் உடலிலிருந்து அந்தப் பாம்பு வெளியே எடுத்த அத்தனை கழிவுகளையும் பற்றிய அறிக்கையை அங்கேதான் பதிவுசெய்துவைத்திருக்கிறார்கள்! அங்கே போய் அந்தக் கோப்பைப் படித்துப்பார்க்க விரும்புகிறாயா? 'கை மோன்டாக்' அல்லது 'பயம்' அல்லது 'போர்' என்ற தலைப்பின் கீழ் தேடிப் பார்த்தால் கிடைக்கலாம். நேற்றிரவு எரிந்துபோன வீட்டுக்குப் போக வேண்டுமா? தன் சொந்த வீட்டுக்கே நெருப்பு வைத்துத் தானும் எரிந்துபோன முதியவளின் எலும்புகளை அந்தச் சாம்பலைக் கிளறித் தேடப்போகிறாயா? க்லாரிஸ் மெக்லெல்லானுக்கு என்ன ஆயிற்று, அவளை நாம் எங்கே தேடுவது? சவக்கிடங்கிலா! கவனமாகக் கேள்!"

குண்டுவீச்சு விமானங்கள் வானத்தில் குறுக்கே பறந்து சென்றன. வீட்டுக்கு மேலே, மூச்சிரைத்து முணுமுணுத்துக்கொண்டு, சூனியத்தில் சுற்றிச்சுற்றி வரும் பிரம்மாண்ட, கண்ணுக்குப் புலப்படாத விசிறியைப் போல விசிலடித்துக்கொண்டே வானத்தில் குறுக்கே பறந்தன.

"ஆண்டவனே," என்றான் மோன்டாக். "ஒவ்வொரு மணியும் நாசமாய்ப்போன இந்த விமானங்கள் வானத்தில் எத்தனைதான் போகும்! எப்படித்தான் அந்த நாசமாய்ப்போன குண்டுவீச்சு விமானங்கள் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் மேலே ஏறி அங்கே போகின்

றனவோ! இதைப் பற்றியெல்லாம் பேச ஏன் யாருமே முன்வருவதில்லை? 2022க்குப் பிறகு, இரண்டு அணு ஆயுதப் போர்களைத் தொடங்கி வெற்றி கண்டுவிட்டோம்! நம் வீடுகளில் இவ்வளவு கேளிக்கை கிடைப் பதால்தான் உலகத்தை நாம் மறந்துவிட்டோமா? நாம் இவ்வளவு பணக் காரர்களாக இருப்பதாலும், உலகில் மற்றவர்கள் ஏழைகளாக இருப்ப தாலும் நாம் அவர்களைப் பற்றிக் கவலைப்படாததாலுமா? சில வதந் திகளைக் கேட்டிருக்கிறேன்: உலகம் பட்டினியாகக் கிடக்கிறது. ஆனால் நாம் நன்றாகச் சாப்பிடுகிறோம். உலகம் கடுமையாக உழைக்கிறது என் பதும் நாம் உல்லாசமாக இருக்கிறோம் என்பதும் உண்மையா? அதனால் தான் நாம் இந்த அளவுக்கு வெறுக்கப்படுகிறோமா? பல ஆண்டுகளாக, எப்போதாவது ஒருமுறை இந்த வெறுப்பைப் பற்றிய வதந்திகளைக்கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன் என்று உனக்குத் தெரியுமா? எனக்குத் தெரியாது, அது நிச்சயம்! புத்தகங்கள் ஒருவேளை குகையிலிருந்து நம் மைப் பாதி தூரம்வரை வெளியே கொண்டு வர முடியும். அதே நாச மாய்ப்போன பைத்தியக்காரத் தவறுகளைச் செய்வதிலிருந்து நம்மைத் தடுக்க மட்டுமாவது அவற்றால் முடியலாம்! உன்னுடைய சுவர்தொலைக் காட்சியில் வரும் அந்த மடத் தேவடியாள் மகன்கள் அதைப் பற்றிப் பேசி நான் கேட்டதேயில்லை. கடவுளே, மில்லி, உனக்கு இதெல்லாம் தெரியவில்லையா? ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம், இந்தப் புத்தகங்களுடன், ஒருவேளை..."

தொலைபேசி மணி அடித்தது. மில்ட்ரெட் தொலைபேசியை 'டக்' என்று எடுத்தாள்.

"ஆன்!" அவள் சிரித்தாள். "ஆமாம், இன்றிரவுதான் அந்த வெண்ணிறக் கோமாளி வருகிறான்!"

மோன்டாக் சமையலறைக்குப் போய், புத்தகத்தைக் கீழே விட்டெறிந் தான். "மோன்டாக்," அவன் சொல்லிக்கொண்டான், "உண்மையாகவே நீ முட்டாள். இனி, இங்கிருந்து எதை நோக்கிப் போகப்போகிறாய்? புத் தகங்களைக் கொடுத்துவிடலாமா, மறந்துவிடலாமா?" மில்ட்ரெட்டின் சிரிப்பொலிக்கும் மேலே, ஒரு புத்தகத்தைத் திறந்து படிக்கத் தொடங்கி னான்.

பாவம், மில்லி, அவன் நினைத்தான். பாவம் மோன்டாக், உனக்கும் அது—ஆனால் உனக்கு எங்கிருந்து உதவி கிடைக்கும், இவ்வளவு காலம் தாழ்ந்து எங்கிருந்து உன்னுடைய குருவைக் கண்டுபிடிப்பாய்?

கொஞ்சம் பொறு. கண்களை மூடிக்கொண்டான். ஆமாம், ஒரு ஆண்டுக்கு முன்பு, தான் பார்த்திருந்த பசுமையான பூங்கா தன் நினை வுக்கு வந்ததை உணர்ந்தான். அண்மையில், பல முறை இந்த நினைப்பு

அவனுக்கு வந்துகொண்டிருந்தது. ஆனால் அந்த நகரத்துப் பூங்காவில் கறுப்புக் கோட் அணிந்திருந்த ஒரு முதியவர் அன்றொரு நாள் ஏதோ ஒன்றைத் தன்னுடைய கோட்டுக்குள் அவசரமாக ஒளித்து வைத்துக் கொண்டது இப்போது நினைவுக்கு வந்தது.

... அந்த முதியவர் ஓட முயல்வதைப் போல எம்பினார். மோன்டாக் சொன்னான்: "பொறுங்கள்!"

"நான் ஒன்றும் செய்யவில்லையே!" என்று நடுங்கியபடியே அந்த முதியவர் கத்தினார்.

"நீங்கள் எதுவும் செய்ததாக யாரும் சொல்லவில்லை."

மென்மையான அந்தப் பச்சை நிற விளக்கொளியில் ஒன்றும் பேசாமல் சற்று நேரம் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு மோன்டாக் வானிலையைப் பற்றி ஏதோ சொல்ல, அந்த முதியவர் ஈனமான குரலில் பதிலளித்தார். அமைதியான வினோத சந்திப்பு. தான் ஓய்வுபெற்ற ஒரு ஆங்கிலப் பேராசிரியர் என்றும், போதுமான மாணவர்களும் ஆதரவும் இல்லாததால் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால், இலக்கியம், வரலாறு போன்ற கலைத்துறைப் படிப்புக்கான கடைசிக் கல்லூரி மூடப்பட்ட பிறகு, இந்தப் பரந்த உலகில் தான் தூக்கியெறியப்பட்டுவிட்டதாகவும் அவரே முன்வந்து சொன்னார். அவருடைய பெயர் ஃபேபர். மோன்டாகிடம் தனக்கிருந்த பயம் ஒருவழியாக நீங்கியவுடன், வானத்தையும் மரங்களையும் பசுமையான பூங்காவையும் பார்த்தபடி ஏற்ற இறக்கங்களுடன் இருந்த குரலில் பேசினார். ஒரு மணி நேரம் ஆன பிறகு மோன்டாகிடம் ஏதோ சொன்னார்; அது சந்தமற்ற ஒரு கவிதை என்பதை மோன்டாக் உணர்ந்தான். இன்னும் கொஞ்சம் தைரியம் வரப்பெற்ற முதியவர், இன்னும் வேறு ஏதோ சொன்னார். அதுவும்கூட ஒரு கவிதை. தன்னுடைய கோட்டின் இடது பாக்கெட்டின் மேல் ஃபேபர் தன்னுடைய கையை வைத்துக்கொண்டு, இந்தச் சொற்களையெல்லாம் மென்மையாகச் சொன்னார். கையை நீட்டி எட்டிப் பிடித்தால், முதியவரின் கோட்டிலிருந்து கவிதைப் புத்தகம் ஒன்றை எடுக்க முடியும் என்று மோன்டாகுக்குத் தெரியும். ஆனால் அவன் எட்டிப் பிடிக்கவில்லை. அவனுடைய கைகள் முழங்கால்களின் மேல் படிந்திருந்தன, உணர்ச்சியற்றும் பயனற்றும். "நான் எந்தப் **பொருளையும்** பற்றிப் பேசவில்லை," என்றார் ஃபேபர். "பொருள்களின் ***அர்த்தத்தைப்*** பற்றிப் பேசுகிறேன். இங்கே உட்கார்ந்துகொண்டு, நான் உயிருடன் இருக்கிறேன் என்ற **பிரக்ஞையுடன்** இருக்கிறேன்."

அவ்வளவுதான் நடந்திருந்தது, உண்மையிலேயே. ஒரு மணி நேரத் தனியுரை, ஒரு கவிதை, ஒரு விளக்கம், பிறகு மோன்டாக் ஒரு நியணைப்ப

வன் என்ற உண்மையை இருவரில் எவருமே கண்டுகொள்ளாமல், காகி தத் துண்டு ஒன்றில் ஃபேபர் தன்னுடைய முகவரியைச் சற்றே நடுக்கத் துடன் எழுதினார். "உங்களுடைய கோப்புக்காக," என்றார் அவர், "என் மேல் நீங்கள் கோபம் கொள்வதாகத் தீர்மானிக்கும் பட்சத்தில்."

"எனக்குக் கோபமில்லை," என்றான் மோன்டாக், சற்று வியப்புடன்.

கூடத்தில் மில்ட்ரெட் உரக்கச் சிரித்துக்கொண்டிருந்தாள்.

மோன்டாக் தன்னுடைய படுக்கையறை அலமாரிக்குப் போய், கோப் புகள் அடங்கிய உறைக்குள் பக்கங்களைத் திருப்பி **"இனி மேற்கொள்ள விருக்கும் புலனாய்வுகள்"** என்ற தலைப்பில் தேடினான்.

ஃபேபரின் பெயர் அதில் இருந்தது. அவன் அதை மேலதிகாரிகளிடம் கொடுத்துவிடவில்லை. அழித்துவிடவுமில்லை.

தன்னுடைய இரண்டாவது தொலைபேசியில் அழைப்பதற்காக எண் களைச் சுழற்றினான். மறுகோடியில் இருந்த தொலைபேசியில் ஃபேபரின் பெயர் பன்னிரெண்டு முறை அழைக்கப்பட்ட பிறகு, ஈனமான குரலில் பேராசிரியர் பேசினார். தன்னுடைய அடையாளத்தை அறிவித்த மோன் டாக் நீண்டதொரு மௌனத்தை எதிர்கொண்டான். "ஓ, மிஸ்டர் மோன் டாக்."

"பேராசிரியர் ஃபேபர் அவர்களே, உங்களிடம் நான் விசித்திரமான கேள்வியைக் கேட்க வேண்டும். இந்த நாட்டில் விவிலியத்தின் பிரதிகள் இன்னும் எத்தனை இருக்கின்றன?"

"நீங்கள் எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரிய வில்லை!"

"ஏதாவது சில பிரதிகளாவது மிஞ்சியிருக்குமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்."

"இது ஒருவிதப் பொறி! யாரென்று தெரியாமல் நான் தொலைபேசி யில் யாரிடம் வேண்டுமானாலும் பேச முடியாது!"

"ஷேக்ஸ்பியர், பிளேட்டோவின் பிரதிகள் எவ்வளவு?"

"எதுவுமேயில்லை! என்னைப் போலவே உங்களுக்கும் இது நன் றாகவே தெரியும். எதுவுமேயில்லை!"

ஃபேபர் தொலைபேசியை வைத்துவிட்டார்.

மோன்டாகும் தொலைபேசியைக் கீழே வைத்தான். எதுவுமே இல்லை. பார்க்கப்போனால், தீயணைப்பு நிலையப் பட்டியல்கள் மூலமாக அவ னுக்குத் தெரியும்தான். ஆனால், எப்படியாவது, ஃபேபரிடமிருந்தே அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டான்.

கூடத்தில் மில்ட்ரெட்டின் முகத்தில் குதூகலம் நிரம்பியிருந்தது. "ஆஹா! எல்லாத் தோழிகளும் வந்துகொண்டிருக்கிறார்கள்!"

மோன்டாக் அவளிடம் ஒரு புத்தகத்தைக் காட்டினான். "இது பழைய, புதிய ஏற்பாடு, தவிர..."

"மறுபடியும் அதை ஆரம்பிக்காதே!"

"உலகத்தின் இந்தப் பகுதியில் இதுவே கடைசிப் பிரதியாகக்கூட இருக்கலாம்."

"இதை இன்றிரவு நீ திருப்பிக்கொடுக்க வேண்டும், இல்லையா? உன்னிடம் இது இருக்கிறது என்று கேப்டன் பியாட்டிக்குத் தெரியும், தெரியாதா என்ன?"

"எந்தப் புத்தகத்தை நான் திருடினேன் என்று அவருக்குத் தெரியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அதற்கு மாற்றாக எதைத் தேர்ந்தெடுப்பது? திரு. ஜெஃபர்சனைக் கொடுத்துவிடுவதா? திரு. தோரோவையா? இவற்றில் மிகவும் மதிப்புக் குறைந்தது எது? நான் மாற்றுப் புத்தகம் ஒன்றைத் தேர்வுசெய்து, எந்தப் புத்தகத்தை நான் திருடியிருந்தேன் என்பது பியாட்டிக்குத் தெரிந்திருந்தால், இங்கே ஒரு முழு நூலகமே இருக்கிறது என்று அவர் ஊகித்துவிடுவார்!"

மில்ட்ரெட்டின் வாய் கோணியது. "நீ என்ன செய்கிறாய் என்று பார்த்தாயா? நம்மை அழித்துவிடப்போகிறாய்! யார் உனக்கு முக்கியம்—நானா, விவிலியமா?" தன்னுடைய சூட்டிலேயே உருகி வழிந்தோடும் மெழுகுப் பொம்மையைப் போல உட்கார்ந்துகொண்டிருந்த அவள், இப்போது கூச்சலிடத் தொடங்கினாள்.

பியாட்டியின் குரலை அவனால் கேட்க முடிந்தது. "உட்கார், மோன்டாக். கவனமாகக் கேள். மென்மையாக. மலரின் இதழ்களைப் போல. முதல் பக்கத்தைக் கொளுத்து. இரண்டாம் பக்கத்தைக் கொளுத்து. ஒவ்வொன்றும் ஒரு கறுப்புப் பட்டாம்பூச்சியாக மாறுகிறது. அழகாக இருக்கிறது, இல்லையா? இரண்டாம் பக்கத்திலிருந்து மூன்றாம் பக்கம் என்று ஒன்றன் பின் ஒன்றாக, புகை—சங்கிலித் தொடராக, எல்லாப் பொய்யான வாக்குறுதிகளையும், இரண்டாம் கை வாயிலாக வரும் எல்லா விதக் கருத்துகளையும், காலத்தில் மக்கிப்போய்விட்ட சிந்தனைகளையும் கொளுத்து." அவனுடைய கண்ணுக்கு முன்னால் லேசாக வியர்த்துக் கொண்டிருந்த பியாட்டி உட்கார்ந்திருந்தார்—புயல் காற்றின் ஒரே வீச்சில் இறந்துபோன கறுப்பு விட்டில் பூச்சிகளின் கூட்டம் தரையில் குப்பையாய்க் கொட்டிக்கிடக்க.

கூச்சலிடுவதை எவ்வளவு விரைவாக ஆரம்பித்தாளோ, அதே வேகத்தில் மில்ட்ரெட் நிறுத்திவிட்டாள். மோன்டாகும் கேட்டுக்கொண்டிருக்க

வில்லை. "இனி ஒரே ஒரு வழிதான் இருக்கிறது," என்றான் அவன். "இன்றிரவு பியாட்டியிடம் அந்தப் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால், இதனுடைய நகல் ஒன்றைத் தயார்செய்துகொள்ள வேண்டும்."

"இன்றிரவு 'வெண்ணிறக் கோமாளி' வரும்போது, வீட்டுக்கு என் தோழிகள் வரும்போது நீ இங்கு இருப்பாய் அல்லவா?" என்று மில்ட்ரெட் அழுதுகொண்டே கேட்டாள்.

முதுகைக் காட்டியபடி கதவருகே மோன்டாக் நின்றான். "மில்லி?"

சிறு மௌனம். "என்ன?"

"மில்லி? 'அந்த வெண்ணிறக் கோமாளி' உன்னை நேசிக்கிறானா?"

பதில் இல்லை.

"மில்லி," தன் உதட்டை நக்கிக்கொண்டே அவன் தொடர்ந்தான், "உன் 'குடும்பம்' உன்னை நேசிக்கிறதா, மிகவும் நேசிக்கிறதா, இதயபூர்வமாகவும் ஆத்மபூர்வமாகவும் உன்னை நேசிக்கிறதா, மில்லி?"

தன்னுடைய பிடரியில் அவளுடைய பார்வை மெல்லப் படிவதை அவன் உணர்ந்தான்.

"இது போன்ற முட்டாள்தனமான கேள்வியை நீ ஏன் கேட்க வேண்டும்?"

அவனுக்கு அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அவனுடைய கண்களிலும் வாயிலும் எதுவும் நிகழவில்லை.

"வெளியே அந்த நாயைப் பார்த்தால், என் சார்பில் ஒரு உதை விடு," என்றாள் மில்ட்ரெட்.

கதவருகே காதுகொடுத்துக் கேட்டுச் சற்றுத் தயங்கினான். கதவைத் திறந்து வெளியே அடியெடுத்து வைத்தான்.

மழை நின்றுவிட்டிருந்தது. நிர்மலமான வானத்தில் சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது. தெருவும் புல்தரையும் முகப்பு நிழற்குடையும் வெறுமையாகக் காட்சியளித்தன. நீண்ட பெருமூச்சு அவனிடமிருந்து வெளிப்பட்டது.

கதவை அறைந்து சாத்தினான்.

சுரங்கப் பாதை ரயிலை வந்தடைந்தான்.

நான் மரத்துப்போயிருக்கிறேன், என்று அவன் நினைத்துக்கொண்டான். மரத்துவிட்ட இந்த உணர்வு என் முகத்தில் எப்போது ஆரம்பித்தது? என் உடலிலும்கூட? மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடியை உதைப்பதைப் போல மாத்திரைப் புட்டியை இருட்டில் உதைத்தேனே, அன்றிரவு ஆரம்பித்தது.

மரத்துவிட்ட இந்த உணர்வு போய்விடும். அதற்கு நேரமாகலாம், ஆனால் நான் அதைச் செய்வேன், அல்லது எனக்காக ஃபேபர் அதைச் செய்வார். முன்பு எனக்கிருந்ததைப் போன்ற பழைய முகத்தையும் பழைய கைகளையும் எங்கேயாவது வந்து யாராவது திரும்பத் தருவார்கள். அந் தப் புன்சிரிப்பு, அந்தப் பழைய எரிந்துபோன புன்சிரிப்பு, அதுவும் மறைந்துவிட்டது என்றும் நினைத்தான். அது இல்லாமல் நான் ஒன்று மில்லை.

எதிர்த் திசையில் சுரங்கப் பாதை அவனைக் கடந்து விரைந்துகொண் டிருந்தது. சந்தனக் கலர் தரை ஓடு, அட்டக் கறுப்பு, சந்தனக் கலர் தரை ஓடு, அட்டக் கறுப்பு, எண்கள், இருட்டு, இன்னும் அதிக இருட்டு, எல்லாம் ஒன்றுசேர்ந்தது.

முன்பு ஒருமுறை தன் குழந்தைப் பருவத்தில், வெப்பம் நிறைந்த நீல நிறக் கோடைகாலத்தின் மத்தியில் கடற்கரையில் ஒரு மஞ்சள் மணல் மேட்டின் மேல் உட்கார்ந்துகொண்டு, மோன்டாக் சல்லடையில் மணலை நிரப்ப முயன்றுகொண்டிருந்தான். "இந்தச் சல்லடையை மண லால் நிரப்பிவிட்டால் உனக்குக் காசு தருகிறேன்!" என்று பொல்லாத ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவன் இவனிடம் சொல்லியிருந்தான். எவ் வளவு வேகவேகமாக மணலை நிரப்பினாலும், சூடான முணுமுணுப்புடன் அதே வேகத்தில் அது சல்லடையிலிருந்து கீழே கொட்டியது. கைகள் அயர்ந்துவிட்டன, மணல் கொதித்தது, சல்லடை காலியாக இருந்தது. ஜூலை மாத நடுவில் அங்கே சத்தமில்லாமல் உட்கார்ந்திருந்த அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்ததை உணர்ந்தான்.

இப்போது, நகரத்தின் சுரங்கப் பாதை வழியே, பாதாள வெற்றி டத்தில் இயங்கும் ரயிலில் உலுக்கப்பட்டுப் போய்க்கொண்டிருந்த அவ னுக்கு, அந்தச் சல்லடையின் பயங்கர தர்க்கரீதியான உண்மை ஞாபகம் வந்தது. விவிலியத்தைத் தான் திறந்தபடி வைத்துக்கொண்டிருந்ததையும் குனிந்து அவன் கவனித்தான். வெற்றிட உறிஞ்சு-விசை ரயிலில் மக்கள் இருந்தாலும் புத்தகத்தை அவன் தன் கையிலேயே வைத்திருந்தான். அவனுக்கு மடத்தனமான ஒரு யோசனையும் வந்தது; அதிவேகமாகவும், முழுமையாகவும் படித்துவிட்டால், ஒருவேளை கொஞ்ச மணலாவது சல்லடையிலேயே தங்கிவிடலாம். ஆனால் அவன் படிக்கப்படிக்க, இன் னும் பல விஷயங்கள் வெளிப்பட்டன. அவன் நினைத்தான்: இன்னும் சில மணி நேரத்தில் பியாட்டி அங்கு இருப்பார், நானும் இதை அவரிடம் ஒப்படைப்பேன், ஆகவே ஒரு சொற்றொடரைக்கூடத் தவற விடாமல் ஒவ்வொரு வரியையும் மனப்பாடம் செய்ய வேண்டும். தனியாகவே நான் இதைச் செய்யப்போகிறேன்.

புத்தகத்தைத் தன் கைக்குள் இறுகப் பிடித்தான்.

தாரைகள் முழங்கின.

"டென்ஹாம் பற்பசை."

வாயை மூடு, மோன்டாக் நினைத்தான். காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக் கவனித்துப் பாருங்கள்.

"டென்ஹாம் பற்பசை."

"அவை உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை.—"

"டென்ஹாம்—"

காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்பதைக் கவனித்துப் பாருங்கள், வாயை மூடு, வாயை மூடு.

"பற்பசை!"

புத்தகத்தை வெறித்தனமாக விரித்து, பக்கங்களைத் திருப்பி, பார்வையற்றவனைப் போல அவற்றைத் தடவிப் பார்த்து, ஒவ்வொரு எழுத்தின் வடிவத்தையும் கண்களைக் கொட்டாமல் கண்டுபிடித்தான்.

"டென்ஹாம், டெ...ன்..."

"அவை உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதும் இல்லை.—"

காலிச் சல்லடை வழியே வெளியேறிய சூடான மணலின் ஆவேச முணுமுணுப்பு.

"டென்ஹாம் செயலாற்றுகிறது."

காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப் பாருங்கள், காட்டுப் புஷ்பங்கள், காட்டுப் புஷ்பங்கள்...

"டென்ஹாமின் பல் சுத்திகரிப்பு மருந்து."

"வாயை மூடு, வாயை மூடு, வாயை மூடு!" அது ஒரு மன்றாடல், மோன்டாகை எழுந்து நிற்கச் செய்யும் அளவுக்குப் பயங்கரமான அலறல். பைத்தியக்காரத்தனமாக, கோபம் வெடிக்கும் முகத்துடன், உளறிக் கொட்டி, உலர்ந்துவிட்டிருந்த வாயுடன், கைகளில் படபடக்கும் புத்தகத்துடன் இருந்த இந்த மனிதனை முறைத்தபடி ரயிலில் இருந்த மற்ற அதிர்ச்சியுற்ற பயணிகள் பின்வாங்கினார்கள். சற்று நேரம் முன்புவரை கூட அங்கே உட்கார்ந்திருந்தவர்கள். டென்ஹாம் பற்பசை, டென்ஹாமின் அற்புதப் பல் சுத்திகரிப்பு மருந்து, டென்ஹாம் பற்பசை, பற்பசை பற்பசை, ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு மூன்று, ஒன்று இரண்டு, ஒன்று இரண்டு மூன்று என்று போய்க்கொண்டிருந்த தாளக்கட்டுக்கு ஏற்றபடி தங்களுடைய பாதங்களைத் தட்டிக்கொண்டிருந்தவர்கள். பற்பசை பற்பசை பற்பசை என்ற சொற்களையே லேசாகத் துடிக்கும் வாயு

டன் சொல்லிக்கொண்டிருந்த மக்கள். தகரம், செம்பு, வெள்ளி, குரோமியம், பித்தளை ஏற்படுத்திய இசையின் பிரம்மாண்ட சுமையை, மோன்டாகுக்குப் பதிலளிக்கும் வகையில் ரயிலின் வானொலிப் பெட்டி மோன்டாகின் மேல் வாந்தியெடுத்தது. பணிந்து செல்லும்படி மக்கள் தாக்கப்பட்டார்கள்; அவர்கள் ஓடவில்லை, ஓடிப் போக இடம் இருக்கவில்லை; காற்று மெத்தையில் ஓடும் ரயிலின் அச்சு தரையில் விழுந்தது.

"வயல்வெளிகளின் காட்டுப் புஷ்பங்கள்."

"டென்ஹாம்"

"**காட்டுப் புஷ்பங்கள்** என்று சொன்னேன்"

மக்கள் முறைத்தார்கள்.

"நடத்துநரைக் கூப்பிடுங்கள்"

"இந்த மனிதருக்கு மூளை—"

"நால் வியூ நிலையம்!"

ரயில் புஸ்ஸென்று ஒலியுடன் நின்றது.

"நால் வியூ நிலையம்!" ஒரு கூவல்.

"டென்ஹாமின்." ஒரு கிசுகிசுப்பு.

மோன்டாகின் உதடுகள் அசையக்கூட இல்லை. "காட்டுப் புஷ்பங்கள்..."

ரயில் கதவு விசிலடித்துத் திறந்தது. மோன்டாக் எழுந்து நின்றான். திறந்த கதவு மூடத் தொடங்கியது. அப்போதுதான் மற்ற பயணிகளையெல்லாம் தாண்டி, மனதுக்குள்ளேயே அலறிக்கொண்டு, கத்தரிப்பதைப் போல மூடிக்கொள்ளும் கதவுகளுக்கிடையே கடைசி நொடியில் தாவிக் குதித்தான். தானியங்கிப் படிக்கட்டுகளைத் தவிர்த்து, வெண்ணிறத் தரை ஓடுகளின் மேல் சுரங்கப் பாதை வழியாக ஓடினான். ஏனென்றால், தன் கால்களின் அசைவு, கைகளின் வீச்சு, நுரையீரல்களின் மூடி விரிதல் இவற்றை உணர, காற்றில் தன் தொண்டை வறண்டுபோவதை உணர விரும்பினான். அவனுக்குப் பின்னால் ஒரு குரல் மிதந்து வந்தது, "டென்ஹாம், டென்ஹாம், டென்ஹாம்," பாம்பைப் போல ரயில் சீற்றத்துடன் சத்தமிட்டது. அதனுடைய பொந்தில் ரயில் மறைந்துவிட்டது.

"யாரங்கே?"

"நான்தான் மோன்டாக்."

"உனக்கு என்ன வேண்டும்?"

"என்னை உள்ளே விடுங்கள்."

"நான் ஒன்றும் செய்யவில்லையே!"

"கடவுளே நான் தனியாகத்தான் வந்திருக்கிறேன்!"

"சத்தியமாகச் சொல்கிறாயா?"

"சத்தியம் செய்கிறேன்."

முன்கதவு மெதுவாகத் திறந்தது. அந்த ஒளியில் மிக முதியவராகவும், மிக நோஞ்சானாகவும், மிகவும் மிரண்டுபோயும் காணப்பட்ட ஃபேபர் எட்டிப் பார்த்தார். பல ஆண்டுகளாக வீட்டை விட்டு வெளியே வந்தே இருக்காதவரைப் போல அந்த முதியவர் தோன்றினார். அவரும், உள்ளே இருந்த வெண்ணிறக் காரை பூசிய சுவர்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி யாகவே இருந்தன. அவருடைய வாயின் சதை வெண்மையாக இருந்தது, கன்னங்களும் முடியும் வெண்மையாக இருந்தன, கண்களும் மங்கிப் போய், அவற்றின் நீல நிறத்திலும் இனம்தெரியாத வெண்மை தென்பட்டது. பிறகு, மோன்டாகின் அக்குளுக்கு அடியில் இருந்த புத்தகத்தின் மேல் அவருடைய பார்வை பட்டவுடன், இனிமேலும் அவர் அவ்வளவு வயதானவராகவோ, அப்படியொன்றும் நோஞ்சானாகவோ காணப்படவில்லை. மெதுவாக, அவருடைய பயம் விலகியது.

"மன்னிக்க வேண்டும். ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது."

மோன்டாகின் அக்குளுக்கு அடியில் இருந்த புத்தகத்தைப் பார்த்தார். அவரால் சும்மா இருக்க முடியவில்லை. "அப்படியானால், இது நிஜம் தான்."

மோன்டாக் உள்ளே அடியெடுத்து வைத்தான். கதவு மூடியது.

"உட்கார்." புத்தகத்திலிருந்து தன் பார்வையைத் திருப்பினால் அது எங்கே மறைந்துபோய்விடுமோ என்று பயப்பட்டவரைப் போல அவர் பின்னால் நகர்ந்தார். அவருக்குப் பின்னால் படுக்கையறைக் கதவு திறந்தபடி இருந்தது, அந்த அறையில் ஒரு மேஜைமேல் சில இயந்திரச் சாதனங்களும் எஃகுக் கருவிகளும் இறைந்துகிடந்தன. மோன்டாகின் கவனம் திசை திரும்புவதைப் பார்த்த ஃபேபர் திடீரென்று திரும்பி, படுக்கையறைக் கதவைச் சாத்தி, நடுங்கும் கையில் அதன் கைப்பிடியைப் பிடித்தபடி நிற்பதற்கு முன்னால், மோன்டாகால் அந்த அறையை நோக்கி ஒரு அவசரப் பார்வையை வீச மட்டுமே முடிந்தது. இப்போது மடியில் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்த மோன்டாகை நிலைகொள்ளாமல் அகலக் கண்களால் பார்த்தார். "அந்தப் புத்தகம்—உனக்கு அது எங்கே—?"

"நான் அதைத் திருடினேன்."

முதல் முறையாக ஃபேபர் தன் பார்வையை உயர்த்தி, மோன்டாகின் முகத்தை நேருக்கு நேர் பார்த்தார். "நீ தைரியசாலி."

"இல்லை." என்றான் மோன்டாக். "என் மனைவி செத்துக்கொண் டிருக்கிறாள். என் சிநேகிதி ஒருத்தி ஏற்கனவே இறந்துவிட்டாள். என் நண் பராக இருந்திருக்கக்கூடிய ஒரு பெண்மணி எரிக்கப்பட்டு இருபத்தி நான்கு மணி நேரம்கூட ஆகவில்லை. எனக்குத் தெரிந்தவர்களில் எனக்கு உதவக்கூடியவர் நீங்கள் ஒருவர்தான். நான் பார்ப்பதற்கு... பார்ப் பதற்கு..."

ஃபேபரின் கைகள் அவருடைய முழங்கால்களின் மேல் அரித்துக் கொண்டிருந்தன. "நான் பார்க்கலாமா?"

"மன்னியுங்கள்." மோன்டாக் புத்தகத்தை அவரிடம் கொடுத்தான்.

"ரொம்ப காலம் ஆகிவிட்டது. நான் மதத்தில் ஈடுபாடு உடையவன் அல்ல. இருந்தாலும் இதைப் பார்த்தே ரொம்ப காலம் ஆகிவிட்டது." ஃபேபர் பக்கங்களைத் திருப்பினார், நடுநடுவே இங்குமங்குமாகப் படிப் பதற்காக நிறுத்தியபடி. "என் நினைவில் இருப்பதைப் போலவே அவ் வளவு நன்றாக இருக்கிறது. கடவுளே, இப்போதெல்லாம் நம்முடைய 'சுவர்தொலைக்காட்சி அறைகளில்' எல்லாவற்றையும் எப்படி மாற்றி விட்டிருக்கிறார்கள்? இப்போது, ஏசு கிறிஸ்துவும் 'குடும்பத்தில்' ஒருவர். கடவுளுடைய மகனுக்கு நாம் ஆடை அணிவித்திருக்கும் நிலையில்— அல்லது நிந்தனைசெய்திருக்கும் நிலையிலா—கடவுளேகூடத் தன்னு டைய மகனை அடையாளம் தெரிந்துகொள்வாரா என்று எனக்கு அடிக்கடி தோன்றும். வழிபடுபவர்களுக்கு **அத்தியாவசியத்** தேவையான நுகர்பொருள்களில் ஏதாவதொன்றை மறைமுகமாக அவர் உணர்த்திக் கொண்டிருக்காத வேளைகளில், கடவுளே சீனியும் செயற்கைச் சர்க்க ரையும் சேர்ந்த சாதாரண மிட்டாய்க் குச்சிதான்." ஃபேபர் புத்தகத்தை முகர்ந்துபார்த்தார். "சாதிக்காய் அல்லது அந்நிய நாடுகளிலிருந்து வரும் வாசனைப் பொருள்களைப் போல புத்தகங்கள் மணக்கும் என்று உனக் குத் தெரியுமா? சிறுவனாக இருந்தபோதெல்லாம் அவற்றை முகர்ந்து பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். கடவுளே, நாம் அவற்றை இழப் பதற்கு முன், அந்த நாட்களில் எவ்வளவோ அருமையான புத்தகங்கள் இருந்தன." ஃபேபர் பக்கங்களைத் திருப்பினார். "மோன்டாக், நீ ஒரு கோழையைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய். ரொம்ப காலத்துக்கு முன் பேயே, உலகம் போகிற போக்கை நான் பார்த்துவிட்டிருந்தேன். நான் எதுவும் சொல்லவில்லை. 'குற்றவாளிகள்' பேச்சை யாரும் கேட்காமல் இருந்தபோது, வெளிப்படையாக முன்வந்து பேசியிருக்கக்கூடிய குற்ற மற்றவர்களில் நானும் ஒருவனாக இருந்தாலும், அப்போது பேசாமல் இருந்ததால் குற்றவாளி ஆகிவிட்டேன். தீயணைப்பவர்களைப் பயன் படுத்திப் புத்தகங்களை எரிப்பதற்கான அமைப்பை அவர்கள் நிறுவிய போது, சில முறை உறுமிவிட்டு அடங்கிப்போய்விட்டேன்; ஏனென்

றால், அந்த நிலையில் என்னுடன் உறுமுவதற்கும் கத்துவதற்கும் யாரும் இருக்கவில்லை. இப்போது காலம் கடந்துவிட்டது." ஃபேபர் விவிலியத்தை மூடினார். "சரி—நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய் என்று சொல்."

"யாரும் இனியும் காது கொடுத்துக் கேட்பதில்லை. தொலைக்காட்சிச் சுவர்களுடன் நான் பேச முடியாது, ஏனென்றால் அவை என்னைப் பார்த்துக் கத்துகின்றன. என் மனைவியுடன் நான் பேச முடியாது; அவள் அந்தச் சுவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். நான் சொல் வதைக் கேட்பதற்கு எனக்கு யாராவது வேண்டியிருக்கிறது. ஒருவேளை போதுமான அளவு நான் நிறையப் பேசினால், என் பேச்சில் பொருள் இருக்கும். மேலும் நான் படிப்பதைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள்தான் எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

மோன்டாகின் மெல்லிய, நீலநிறத் தாடைத் தசைகள் இருந்த முகத்தை ஃபேபர் கவனித்துப் பார்த்தார். "நீ எப்படி உலுக்கப்பட்டாய்? தீப்பந் தத்தை உன் கையிலிருந்து பலமாகத் தட்டிவிட்டது எது?"

"தெரியவில்லை. மகிழ்ச்சியாக இருப்பதற்குத் தேவையான எல்லாம் நம்மிடம் இருக்கின்றன. ஆனால் நாம் மகிழ்ச்சியாக இல்லை. ஏதோ ஒன்று இல்லாமல் இருக்கிறது. சுற்றுமுற்றும் பார்த்தேன். எனக்குத் திட்ட வட்டமாகத் தெரிந்தவரை காணாமல் போய்விட்டவை இந்தப் பத்து அல்லது பன்னிரெண்டு ஆண்டுகளில் நான் எரித்துவிட்ட புத்தகங்கள் தான். ஆகவே, புத்தகங்கள்தான் காப்பாற்ற முடியும் என்று நினைத் தேன்."

"நீ ஒரு வெட்டிக் கனவுலகவாதி," என்றார் ஃபேபர். "தீவிரம் மட் டும் இல்லாமல் இருந்தால், இது ஒரு வேடிக்கையாக இருக்கும். உனக்கு வேண்டியது புத்தகங்கள் அல்ல, மாறாக, ஒருகாலத்தில் அவற் றில் கிடைக்கப்பெற்ற விஷயங்கள்தான் உனக்குத் தேவை. அதே விஷ யங்கள் இன்றைய 'சுவர்தொலைக்காட்சிக் 'குடும்பங்க'ளில் இருக்கக் கூடும். வானொலி மூலமாகவும் தொலைக்காட்சி மூலமாகவும் கணக் கற்ற அதே விவரங்களையும் அதே பிரக்ஞையையும் அளிக்க முடியும். ஆனால், அளிக்கப்படுவதில்லை. இல்லை, இல்லவே இல்லை, நீ தேடிக் கொண்டிருப்பவை புத்தகங்களே அல்ல! அந்த விஷயங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கிருந்து எடுத்துக்கொள்: பழைய இசைத்தட்டு களில், பழைய நண்பர்களிடத்தில், பழைய திரைப்படங்களில். அவற்றை இயற்கையில் தேடிப் பார். அவற்றை உனக்குள்ளேயே தேடிப் பார். நமக்கு மறந்துபோய்விடுமோ என்று நாம் பயந்த நிறைய விஷயங்களை நாம் பாதுகாத்து வைத்த பெட்டகங்களில் ஒரு வகைதான் புத்தகங்கள். அவற்றில் மாயம் எதுவும் இல்லை. இல்லவே இல்லை. புத்தகங்கள் என்ன

சொல்கின்றனவோ அதில்தான் இருக்கிறது மாயம்—பிரபஞ்சத்தின் துண்டுகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நமக்கு எப்படி அவை ஒரு ஆடையைத் தைத்துக்கொடுத்திருக்கின்றன என்பதில். உனக்கு அது தெரிந்திருக்க முடியாதுதான், நான் இப்படியெல்லாம் சொல்லும்போது அதற்கு என்ன அர்த்தம் என்பதை உன்னால் நிச்சயமாக இன்னும் புரிந்து கொள்ள முடியாது. உள்ளுணர்வுரீதியாக நீ சொல்வது சரி, அதுதான் முக்கியம். இல்லாமல் இருப்பவை மூன்று விஷயங்கள்.

"முதலாவது: இவை போன்ற புத்தகங்கள் ஏன் இவ்வளவு முக்கியமாக இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா? ஏனென்றால், அவற்றுக்கு என்று ஒரு தன்மை உண்டு. தவிர, தன்மை என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்? என்னைப் பொறுத்தவரை, அது தொட்டு உணரக்கூடியது. புத்தகத்துக்கு நுண்ணிய துவாரங்கள் உண்டு. அதற்கே உரிய லட்சணங்கள் இருக்கின்றன. புத்தகத்தை நுண்ணோக்கியின் கீழ் வைத்துப் பார்க்கலாம். அந்தக் கண்ணாடிக்கு அடியில் உயிரோட்டம் இருப்பதைக் காண்பாய்; முடிவற்ற பெரும் வெள்ளமாக ஓடிக்கொண்டே இருக்கும் உயிரோட்டம். நுண்ணிய **துவாரங்கள்** எவ்வளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ, காகிதத் தாள் ஒன்றில் ஒரு சதுர அங்குலத்தில் நேர்மையாகப் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு நீ 'இலக்கியபூர்வமாக' இருப்பாய். இதுதான் **என்னுடைய** வரையறை. **விவரங்களை அளிப்பது. புது விவரங்கள்.** நல்ல எழுத்தாளர்கள் மனிதர்களின் வாழ்க்கையைப் பெரும்பாலும் தொட்டுவிடுகிறார்கள். சாதாரணமானவர்கள் அதன் மேல் அவசரமாகக் கையை ஓட விடுகிறார்கள். மோசமான எழுத்தாளர்கள் அதனுடன் வன்புணர்ச்சி கொண்டு, அதன் மேல் ஈக்களை மொய்க்கவிடுகிறார்கள்.

"ஆகவே, புத்தகங்கள் ஏன் வெறுக்கப்பட்டு, பயமளிக்கின்றன என்று உனக்குத் தெரிகிறதா? வாழ்க்கையின் முகத்திலுள்ள நுண்ணிய துவாரங்களை அவை காட்டுகின்றன. நுண்ணிய துவாரங்கள் இல்லாத, உணர்ச்சிகள் இல்லாத, ரோமம் இல்லாத, நிலாவைப் போன்ற மெழுகு முகங்கள்தான் வசதியாக இருக்க விரும்பும் மனிதர்களுக்கு வேண்டியிருக்கிறது. நல்ல மழையிலும், செழிப்பான கரிய மண்ணிலும் வளர்வதற்குப் பதிலாக, மற்ற மலர்களை உறிஞ்சி உயிர்வாழும் மலர்களின் காலத்தில் நாம் இருக்கிறோம். மிக அழகாக இருக்கும் வாணங்கள்கூட பூமியின் வேதியியலிலிருந்துதான் கிடைக்கின்றன. எனினும், சுழற்சியை யதார்த்தத்திற்குக் கொண்டுவந்து முடிக்காமல் மலர்களையும், வாணங்களையும் உணவாகக் கொண்டு, நாம் வளர முடியும் என்று நினைத்துக்கொள்கிறோம். ஹெர்குலிஸ், அண்டாயிஸ் பற்றிய கதை தெரியுமா? தரையில் கால்களை நன்றாகப் பதித்திருக்கும் வரையில் அண்டாயிஸ் என்ற

ராக்ஷஸ மல்யுத்த வீரனின் வலிமை நம்ப முடியாத அளவுக்கு இருந்தது. ஆனால் ஹெர்குலிஸ் அவனை வேரோடு பிடுங்கி அந்தரத்தில் நிறுத்திய போது அவன் எளிதில் அழிந்துவிட்டான். இந்தக் காலத்தில், இந்த நகரத்தில், இந்தப் புராணக் கதையில் நமக்கு அவசியமானது எதுவும் இல்லையென்றால், நான் ஒரு முற்றிய பைத்தியமாகத்தான் இருப்பேன். ஆகவேதான், நமக்குத் தேவை என்று நான் குறிப்பிட்ட முதல் அம்சம் இதுதான்: தன்மை, தகவலின் தொட்டுணரும் தன்மை."

"இரண்டாவது?"

"ஓய்வு நேரம்."

"ஓ, அதுவா, பணியிலிருந்து ஓய்வு நேரம் நமக்கு நிறைய இருக்கிறதே?"

"பணியிலிருந்து ஓய்வு நேரம், சரிதான். ஆனால் சிந்தனை செய்வதற்கான நேரம்? மணிக்கு நூறு மைல் வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டிருக்காதபோது, ஆபத்தைத் தவிர வேறெதையும் நினைத்துப்பார்க்க முடியாத அந்த அசுர வேகத்தில் நீ காரை ஓட்டிக்கொண்டிருக்காதபோது, ஏதோ ஒரு விளையாட்டை விளையாடிக்கொண்டோ அல்லது நான்கு சுவர்தொலைக்காட்சியருடன் வாக்குவாதம் செய்ய முடியாத அறையில் உட்கார்ந்துகொண்டோ இருக்கும்போது. ஏன்? தொலைக்காட்சியர் ஒரு 'நிஜம்'. உடனடியாகக் கிடைக்கிறது, அதற்கு ஒரு பரிமாணம் இருக்கிறது. நீ என்ன செய்ய வேண்டும் என்பதை உனக்குச் சொல்லி, அதை உன் மண்டைக்குள் அலறிக்கொட்டுகிறது. அது சரியாகத்தான் **இருக்க வேண்டும்.** அவ்வளவு சரியாக அது **தோன்றுகிறது.** தன்னுடைய முடிவுகளை நோக்கி உன்னை அது அவ்வளவு அவசரமாக விரட்டிவிடுவதால், "இது என்ன மடத்தனம்?" என்று எதிர்ப்புத் தெரிவிக்கக்கூட உன் மூளைக்கு நேரம் இருப்பதில்லை."

" 'குடும்பம்' மட்டும்தான் 'மனிதர்கள்'."

"என்ன சொல்கிறாய்?"

"புத்தகங்கள் 'உண்மையானவை' அல்ல என்கிறாள் என் மனைவி."

"நல்ல வேளை, ஆண்டவனுக்கு நன்றி. புத்தகங்களை நீ மூடிவிட்டு, 'கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்ல முடியும். அவற்றை உன் பிடியில் வைத்திருக்க முடியும். ஆனால் சுவர்தொலைக்காட்சி அறையில் ஒரு முறை விதையாகப் பதிந்துவிட்ட எந்த ஒருவரால் தன்னைச் சுற்றி வளைத்துக்கொள்ளும் இடுக்கிப் பிடியிலிருந்து பிய்த்துக்கொண்டு வர முடிந்திருக்கிறது? தான் இஷ்டப்பட்ட வடிவத்தில் உன்னை அது வளர்த்துவிடுகிறது! உலகத்தைப் போலவே நிஜத் தன்மை கொண்ட ஒரு சூழல் அது. அது உண்மையாக ஆகி, **அதுதான்** உண்மை என்றும்

ஆகிவிடுகிறது. தர்க்கத்தால் ஒரு புத்தகத்தை வலுவிழக்கச் செய்ய முடியும். இவ்வளவு அறிவும், எதையும் எளிதில் நம்பிவிடாத குணமும் எனக்கு இருந்தபோதும், முப்பரிமாணத்தில் வண்ணமயமாக இருக்கும் நூறு-இசைக் கருவிகள் கொண்ட சிம்ஃபனிக் குழுவுடன் வாதம் செய்யவோ அல்லது நம்ப முடியாத அந்தச் சுவர்தொலைக்காட்சி அறைகளுக்குள் இருக்கவோ, அவற்றின் ஒரு பகுதியாக ஆகவோ என்னால் ஒருபோதும் முடிந்ததில்லை. வெண்ணிறக் காரை பூசிய நான்கு சுவர்கள் மட்டுமே என்னுடைய சுவர்தொலைக்காட்சி அறை. இதோ இங்கே பார்." இரண்டு சிறிய ரப்பர் அடைப்பான்களை எடுத்து நீட்டினார். "ஜெட் வேகப் பாதாள ரயில் வண்டிகளில் பயணம் செய்யும்போது என்னுடைய காதுகளுக்காக."

"டென்ஹாமின் பற்பசை; அவை உழைக்கிறதும் இல்லை; நூற்கிறதும் இல்லை" என்றான் மோன்டாக். "எதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம்? புத்தகங்களால் உதவ முடியுமா?"

"அத்தியாவசியமான மூன்றாவது ஒன்றும் நமக்குக் கொடுக்கப்பட்டால்தான். நான் ஏற்கனவே சொன்னபடி முதலாவது, தகவலின் தன்மை. இரண்டாவது: அதை ஜீரணிக்கத் தேவையான ஓய்வு நேரம். மூன்றாவது: இவை இரண்டின் உறவிலிருந்து நாம் கற்றுக்கொண்டதன் அடிப்படையில் செயல்பாடுகளை மேற்கொள்ளும் உரிமை. மிக வயதான ஒரு முதியவரும், வெறுப்படைந்துவிட்டிருக்கும் ஒரு தீயணைப்பவரும் இவ்வளவு காலம் தாழ்ந்து இந்த விளையாட்டில் ஏதாவது செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை...'

"என்னால் புத்தகங்களைத் தேடிப் பிடிக்க முடியும்."

"நீ ஆபத்தைத்தான் மேற்கொள்கிறாய்."

"சாவதில் சிறந்த அம்சமே அதுதான்; இழப்பதற்கு நம்மிடம் எதுவும் இல்லாதபோது நமக்குப் பிடித்த எந்த ஆபத்தையும் மேற்கொள்ளலாம்."

"இதோ, சுவாரஸ்யமான ஒன்றை நீ சொல்லியிருக்கிறாய்" ஃபேபர் சிரித்தார், "அதை எங்கேயும் படித்திருக்காமலேயே!"

"புத்தகங்களில் எல்லாமே இப்படித்தான் இருக்குமா? ஏதோ மனதில் பட்டதைச் சொன்னேன்!"

"இன்னும் நல்லது. எனக்காகவோ அல்லது பிறருக்காகவோ, ஏன் எவருக்காகவுமே, குறிப்பாக உனக்காகவோகூட இதை நீ சிந்தித்துப்பார்த்திருக்கவில்லை."

மோன்டாக் முன்நோக்கிக் குனிந்தான். "புத்தகங்கள் உண்மையில் மதிப்பு வாய்ந்தவையாகவே இருக்கின்றன என்றால், நாம் ஏதாவது ஒரு

அச்சகத்தை வைத்துச் சில கூடுதல் பிரதிகளைப் பெறலாமே என்று எனக்கு இன்று மதியம் தோன்றியது—"

"நாமா?"

"நீங்களும் நானும்."

"இல்லை. முடியாது." ஃபேபர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என் திட்டத்தைச் சொல்லக் கொஞ்சம் விடுங்கள்—"

"உன் திட்டத்தை நீ சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால், நான் உன்னைக் கிளம்பிப் போகச் சொல்ல வேண்டியிருக்கும்."

"ஆனால், உங்களுக்கு இதில் அக்கறை இல்லையா?"

"நான் மேற்கொள்ளும் முயற்சியால், எரிக்கப்படும் நிலைக்குத்தான் உன்னுடைய பேச்சு என்னைக் கொண்டுபோய்விடுமென்றால், அக்கறை இல்லைதான். தீயணைப்பவர்கள் என்ற அமைப்பையே எப்படியாவது எரிக்க முடியும் என்றால்தான் நான் உன்னுடைய பேச்சை ஒருவேளை கேட்கலாம். கூடுதலான புத்தகங்களை அச்சடித்து நாடு முழுவதிலும் உள்ள நியணைப்பவர்களின் வீடுகளில் ஒளித்துவைக்க ஏற்பாடு செய்து, அதன் மூலம் தீ வைப்பவர்களிடையே சந்தேகத்தை விதைக்கலாம் என்று நீ யோசனை சொல்வதானால், சபாஷ் என்பேன்!"

"வேண்டுமென்றே அவர்களுடைய வீடுகளில் புத்தகத்தைப் பதுக்கி வைத்து, அபாய மணியை ஒலித்து, தீயணைப்பவர்களின் வீடுகள் எரி வதைப் பார்க்க வேண்டும். அதுதானே நீங்கள் சொல்வது?"

ஃபேபர் புருவங்களை உயர்த்தி, புது மனிதர் ஒருவரைப் பார்ப்பதைப் போல மோன்டாகைப் பார்த்தார். "நான் வேடிக்கையாகச் சொன்னேன்."

"முயன்றுபார்க்கத் தகுதி வாய்ந்த திட்டமாக இதை நீங்கள் கருதி னால், அது பயனளிக்கக் கூடும் என்ற உங்கள் பேச்சை நாம் நம்பத்தான் வேண்டும்."

"இது போன்றவற்றுக்கு யாரும் உத்தரவாதம் அளிக்க முடியாது! பார்க்கப்போனால், தேவையான அத்தனை புத்தகங்களுமே நம்மிடம் இருந்தபோதுகூட, எம்பிக் குதித்து மாய்ந்துவிட எல்லாவற்றையும்விட மிக உயர்ந்த மலை விளிம்பைத் தேடுவதிலேயே குறியாக இருந்தவர்கள் தானே நாம்! ஆனால், நமக்கும் இளைப்பாறிப் புத்துணர்ச்சி பெற சிறிய அவகாசம் வேண்டியிருக்கிறது. நமக்கு அறிவும் வேண்டியிருக் கிறது. ஒருவேளை, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, எம்பிக் குதித்து மாய்த்துக்கொள்ளக் குன்றுகளின் விளிம்புகளையே தேர்ந்தெடுப் போமோ என்னவோ. நாம் எப்பேர்ப்பட்ட கழுதைகள், மடையர்கள் என்பதை நமக்கு நினைவூட்டவே புத்தகங்கள் இருக்கின்றன. பேரரசர்

சீசரின் படை அகன்ற நிழற்சாலையில் அணிவகுத்துப் போகும்போது, 'சீசர், நீயும் ஒருநாள் இறந்துவிடுவாய்' என்று அவருடைய காதில் கிசு கிசுத்த மெய்க்காப்பாளரைப் போலத்தான் புத்தகங்களும். நம்மால் எல்லா இடங்களுக்கும் ஓடித் திரிய முடியாது; பேச வேண்டிய எல்லோருடனும் பேச முடியாது; பார்க்க வேண்டிய நகரங்களையெல்லாம் பார்க்க முடியாது. நம்மில் பெரும்பாலானோருக்கு நேரமோ, பண வசதியோ அல்லது அத்தனை நண்பர்களோ இல்லை. நீ தேடிக்கொண்டிருப்பவை எல்லாமே, மோன்டாக், இந்த உலகத்தில் இருக்கின்றன, ஆனால் அவற்றில் தொண்ணூற்றொன்பது சதவீதத்தை ஒரு சராசரி மனிதன் புத்தகம் ஒன்றில் பார்த்து அறிந்துகொள்வதுதான் ஒரே ஒரு வழி. உத்தரவாதங்களைக் கோராதே. ஒரு நபர், ஒரு இயந்திரம் அல்லது ஒரு நூலகம் போன்ற ஏதாவது ஒன்றில் நீ பாதுகாக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்காதே. உன்னால் முடிந்த அளவு உன்னைப் பாதுகாத்துக்கொள்; அதையும் மீறி நீ மூழ்கிவிட நேர்ந்தால், கரையை நோக்கித்தான் நீ போய்க்கொண்டிருந்தாய் என்ற பிரக்ஞையுடன் இறந்து விடு."

ஃபேபர் எழுந்து அறையில் குறுக்கும்நெடுக்குமாக நடக்கத் தொடங்கினார்.

"அப்படியானால்?" என்று மோன்டாக் கேட்டான்.

"உண்மையாகவே நீ தீவிரமாக இருக்கிறாயா?"

"முற்றிலுமாக."

"நானே இந்த யோசனையைச் சொல்வதானாலும், மறைந்திருந்து கொஞ்சம்கொஞ்சமாகக் கொல்வதற்கான திட்டம்தான் இது." தன்னுடைய படுக்கையறையை நோக்கி ஃபேபர் பதற்றத்துடன் பார்வையை வீசினார். "நாடு முழுவதும் தீயணைப்பு நிலையங்கள் எரிவதை, தேசத் துரோகத்தின் விளைச்சல் நிலங்களான அவை அழிக்கப்படுவதைப் பார்ப்பது... தன்னுடைய வாலையே சலமாண்டர் மிருகம் விழுங்குகிறது! ஆ, கடவுளே!"

"எல்லா இடங்களிலும் உள்ள தீயணைப்பவர் வீடுகளின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. ஒருவிதத் தலைமறைவு இயக்கத்தின் உதவியுடன்—"

"மனிதர்களை நம்பிவிட முடியாது, அதுதான் மோசமான விஷயம். உன்னையும் என்னையும் தவிர இன்னும் வேறு யார் நெருப்பு வைப்பார்கள்?"

"உங்களைப் போன்ற பேராசிரியர்கள், மாஜி எழுத்தாளர்கள், வரலாற்றாசிரியர்கள், மொழியியலாளர்கள் இல்லையா...?"

"இறந்துவிட்டவர்கள் அல்லது அந்தக் காலத்தவர்கள்."

"எவ்வளவுக்கெவ்வளவு வயதானவர்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது; அவர்கள் கவனிக்கப்பட மாட்டார்கள். அவர்களை உங்களுக்கு டஜன் கணக்கில் தெரியும், ஒப்புக்கொள்ளுங்கள்!"

"உலகத்தைப் பற்றிய பிரக்ஞை மிகப் பெரும் அளவில் இருக்கும். பிராண்டெல்லோ அல்லது பெர்னார்ட் ஷா அல்லது ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நடிப்பதையே விட்டுவிட்டிருக்கும் நடிகர்கள் மட்டுமே பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய கோபத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், நாற்பது ஆண்டுகளாக ஒரு வரியைக்கூட எழுதியிருக்காத வரலாற்றாசிரியர்களின் நேர்மையான கோபாவேசத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும். உண்மைதான், சிந்திப்பதற்கும் வாசிப்பதற்கும் வகுப்புகளைக்கூட நாம் நடத்தலாம்."

"ஆமாம்!"

"ஆனால் அது விளிம்புகளில் கொறிப்பதாக மட்டுமே இருக்கும். கலாச்சாரம் முழுவதுமே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. எலும்புக் கூட்டை உருக்கி, அதை மீண்டும் வார்க்க வேண்டியிருக்கிறது. கடவுளே, அரை நூற்றாண்டுக்கு முன் மூடி, கீழே வைக்கப்பட்டுவிட்ட புத்தகத்தை மீண்டும் எடுப்பதைப் போன்ற எளிய விஷயம் அல்ல இது. ஞாபகமிருக்கட்டும், தீயணைப்பவர்கள் உண்மையிலேயே தேவையில்லை. படிப்பதை மக்கள் தாங்களாகவே நிறுத்திவிட்டார்கள். உன்னைப் போன்ற தீயணைப்பவர்கள் அவ்வப்போது கட்டடங்களை எரித்து ஒரு சர்க்கஸ் வேலை செய்கிறீர்கள், அழகான அந்தத் தீக்கொழுந்தைப் பார்ப்பதற்குக் கூட்டம் கூடுகிறது, ஆனால் அது ஒரு சிறிய உபநிகழ்ச்சி மட்டுமே, எல்லாவற்றையும் கட்டுக்குள் வைத்திருக்க அப்படியொன்றும் தேவையானதும் அல்ல, இப்போதெல்லாம் கிளர்ச்சியாளனாக இருக்க வெகு சிலரே விரும்புகிறார்கள். அந்த மிகச் சிலரிலும் என்னைப் போன்ற பெரும்பாலானோர் எளிதில் பயந்துவிடுகிறார்கள். 'வெண்ணிறக் கோமாளி'யைவிட வேகமாக உன்னால் நடனமாட முடியுமா, 'திரு. கிம்மிக்' அல்லது சுவர் தொலைக்காட்சி 'குடும்பத்தினரை'விட உரக்கக் கத்த முடியுமா? அப்படி உன்னால் செய்ய முடிந்தால், நீ போகும் வழியில் வெற்றி கிடைக்கும். மோன்டாக், எப்படிப் பார்த்தாலும் நீ ஒரு மடையன். மக்கள் களிப்படைவதில் மும்முரமாக இருக்கிறார்கள்."

"தற்கொலை செய்துகொண்டு! கொலைசெய்து!"

அவர்கள் பேசிக்கொண்டிருந்த நேரம் முழுவதும் குண்டுவீச்சு விமானம் ஒன்று கிழக்குத் திசையை நோக்கி நகர்ந்துகொண்டே இருந்தது. ஆனால் இப்போதுதான் இருவரும் பேசுவதை நிறுத்தி, அந்தப் பிரமாண்ட ஜெட் ஒலி தங்கள் உடலுக்குள் நடுங்கியதை உணர்ந்தார்கள்.

"பொறுத்திரு, மோன்டாக். 'கவர்தொலைக்காட்சிக் குடும்பங்களை' போரே இழுத்துமூடிவிட விடு. நம்முடைய நாகரிகம் துண்டுதுண்டாகத் தன்னைத் தானே பிய்த்து எறிந்துகொண்டிருக்கிறது. அந்தச் சுழலின் விசையிலிருந்து விலகி நில்."

"அது வெடித்துச் சிதறும்போது அங்கே வேறு யாராவது தயாராக இருக்க வேண்டுமே."

"என்ன? மில்டனை மேற்கோள் காட்டுபவர்களா? கிரேக்கக் கவிஞன் சோஃபோக்ளிஸ் எனக்கு நினைவிருக்கிறது என்று சொல்பவர்களா? மனிதனிடம் சிரிய குணமும் உண்டென்பதைப் பிழைத்திருப்பவர்களுக்கு நினைவுபடுத்துபவர்களா? அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் வீசியடிப்பதற்குத் தேவையான கற்களைப் பொறுக்கிக்கொண்டுதான் இருப்பார்கள். மோன்டாக், வீட்டுக்குப் போ. போய்ப் படு. நீ ஒரு அணிலைப் போலத் தான் என்பதை மறுத்து, கூண்டுக்குள் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருப்பதில் உன்னுடைய கடைசிக் காலத்தை ஏன் வீணடிக்கிறாய்?"

"இனிமேல் என்ன நடக்கும் என்பதைப் பற்றி உங்களுக்குக் கவலை இல்லையா?"

"நான் மிகவும் கவலைப்பட்டு, நொந்துபோய் இருக்கிறேன்."

"ஆக, நீங்கள் எனக்கு உதவ மாட்டீர்கள்?"

"குட் நைட், குட் நைட்."

மோன்டாகின் கைகள் விவிலியத்தைப் பற்றி எடுத்தன. அவன் கைகள் என்ன செய்தன என்பதைப் பார்த்து அவனே வியப்படைந்ததைப் போலக் காணப்பட்டான்.

"இதை உங்களுக்காகவே வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறீர்களா?"

ஃபேபர் சொன்னார்: "என்னுடைய தலையைக் கொடுத்தாவது இதை எடுத்துக்கொள்ளத் தயார்."

மோன்டாக் அங்கேயே நின்றபடி, அடுத்து நடக்கப்போவதற்காகக் காத்திருந்தான். இரண்டு பேர் சேர்ந்து ஒரே வேலையை ஒன்றாகச் செய்வதைப் போல, அவனுடைய இரண்டு கைகளும் தாமாகவே புத்தகத்திலிருந்து பக்கங்களைக் கிழிக்கத் தொடங்கின. புத்தகத்தின் முதல் வெற்றுத் தாளையும், பின்னர் முதல் பக்கம், அடுத்து இரண்டாம் பக்கம் என்று அந்தக் கைகள் கிழித்தன.

"முட்டாளே, என்ன செய்கிறாய்!" அடி வாங்கியவரைப் போல ஃபேபர் துள்ளி எழுந்தார். மோன்டாகின் மேல் சாய்ந்தார். மோன்டாக் அவரைத் தடுத்துவிட்டு, தன்னுடைய கைகள் தொடர்ந்து செயல்பட விட்டான். இன்னும் ஆறு தாள்கள் தரையில் விழுந்தன. அவற்றைப்

பொறுக்கியெடுத்து, கத்தையாக்கி, அதை ஃபேபரின் கண்ணெதிரில் சுருட்டினான்.

"வேண்டாம், அப்படிச் செய்யாதே!" என்றார் முதியவர்.

"என்னை யார் தடுக்க முடியும்? நான் ஒரு தீயணைப்பாளன். என்னால் உங்களை எரிக்க முடியும்!"

அவனைப் பார்த்தவாறு நின்றார் முதியவர். "நீ அப்படிச் செய்ய மாட்டாய்."

"என்னால் முடியும்."

"அந்தப் புத்தகம். அதை மேலும் கிழிக்காதே." முகம் மிகவும் வெளிறி, வாய் துடிக்க, ஃபேபர் ஒரு நாற்காலியில் அமிழ்ந்து உட்கார்ந்தார். "என்னை இனியும் சோர்வடையச் செய்யாதே. உனக்கு வேண்டியது என்ன?"

"நீங்கள்தான் எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்."

"சரி, செய்கிறேன். சரி, செய்கிறேன்."

மோன்டாக் புத்தகத்தைக் கீழே வைத்தான். சோர்வுடன் பார்த்துக் கொண்டிருந்த முதியவரின் கண்ணெதிரில், அந்தக் கசங்கிய கத்தையைப் பிரித்து, சுருக்கங்களை நீக்கித் தட்டையாக்கினான்.

ஃபேபர் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்பவரைப் போலத் தலையை ஆட்டினார்.

"மோன்டாக், உன்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறதா?"

"கொஞ்சம், நானூறு, ஐந்நூறு டாலர்கள். ஏன்?"

"அதைக் கொண்டுவா. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், எங்களுடைய கல்லூரி மலரை அச்சிட்டுக் கொடுத்த ஒருவரை எனக்குத் தெரியும். ஒரு புதிய அரையாண்டுத் தொடக்கத்தில் வகுப்புக்கு வந்து, 'அக்கிலிஸிலிருந்து ஓ'நீல்வரை நாடக இலக்கியம்' என்ற பாடத் திட்டத்தை ஒரே ஒரு மாணவன்தான் தேர்ந்தெடுத்தான் என்பதை நான் பார்த்த ஆண்டுதான் அது. புரிகிறதா? சூரிய வெப்பத்தில் உருகி ஓடும் ஒரு அழகிய பனிக்கட்டிச் சிலையைப் போல எப்படி இருந்தது அது! செய்தித்தாள்கள் பிரம்மாண்ட விட்டில் பூச்சிகளைப் போல இறந்து கொண்டிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. அவை திரும்ப வர வேண்டும் என்று ஒருவரும் **விரும்பவில்லை**. அவை இல்லாததையும் யாரும் உணரவில்லை. காமவெறி பிடித்த உதடுகளையும், வயிற்றில் பதியும் முஷ்டியையும் பற்றி மட்டுமே படிக்கும் மக்களைப் பெற்றிருப்பது தனக்கு எவ்வளவு அனுகூலமாக இருந்தது என்பதைப் பார்த்த அரசாங்கம், உங்களுடைய நெருப்பு விழுங்கிகளைக் கொண்டு அந்த நிலைமை

யைச் சுற்றிவளைத்துக்கொண்டது. ஆகவே மோன்டாக், இப்போது வேலையில்லாத இந்த அச்சிடுபவர் ஒருவர் இருக்கிறார். சில புத்தகங்களை நாம் தொடங்கி, இப்போதிருக்கும் போக்கைப் போர் தடுத்து நிறுத்தி நமக்குத் தேவையான உந்துதலை அளிக்கும்வரை காத்திருப்போம். கொஞ்சம் வெடிகுண்டுகள் போதும். இந்த சுவர்தொலைக்காட்சி 'குடும்பங்கள்' சர்க்கஸ் கோமாளி எலிகளைப் போல வாயை மூடிக்கொள்ளும். அந்த மௌனச் சூழலில் நம்முடைய நாடக மேடை கிசுகிசுப்பு பலமாகக் கேட்கும்."

மேஜையின் மேலிருந்த புத்தகத்தைப் பார்த்தபடி அவர்கள் இருவரும் நின்றார்கள்.

"நானும் ஞாபகம் வைத்துக்கொள்ளத்தான் முயன்றிருக்கிறேன்" என்றான் மோன்டாக். "ஆனால், தலையைக் கொஞ்சம் திருப்பியவுடனேயே எல்லாம் போய்விடுகிறது. கடவுளே, கேப்டனிடம் சொல்ல ஏதாவது வேண்டும் என்று எவ்வளவு ஆசைப்படுகிறேன். அவர் வேண்டிய அளவு படித்திருப்பதால் எல்லாவற்றுக்கும் பதில் வைத்திருக்கிறார், அல்லது வைத்திருப்பதைப் போலத் தோன்றுகிறார். வெண்ணெய் போல இருக்கிறது அவருடைய குரல். பேசிப்பேசியே முன்பு நான் இருந்த நிலைக்கு என்னைத் திரும்பக் கொண்டுவந்துவிடுவார் என்று எனக்குப் பயமாக இருக்கிறது. ஒரு வாரத்துக்கு முன்புதான் மண்ணெண்ணெய்க் குழாயைப் பீய்ச்சிக்கொண்டிருந்தபோது, 'ஹையா, என்ன குதூகலம்!' என்று நினைத்துக்கொண்டேன்."

முதியவர் தலையை அசைத்தார். "எதையுமே கட்டி உருவாக்காதவர்கள் எரிக்கத்தான் செய்வார்கள். வரலாறு, சிறார் குற்றம் போல அவ்வளவு பழமையானதுதான் இதுவும்."

"ஆகவே, அப்படித்தானா நானும்?"

"நம் எல்லாரிடமுமே இந்த அம்சம் ஓரளவு இருக்கிறது."

மோன்டாக் வாசல் கதவை நோக்கிப் போனான்.

"கேப்டனை இன்றிரவு எதிர்கொள்ள எனக்கு நீங்கள் எப்படியாவது உதவ முடியுமா? மழையிலிருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ள எனக்குக் குடை வேண்டும். என்னை அவர் மீண்டும் பிடித்துவிட்டால் மூழ்கிப் போய்விடுவேனோ என்று பயப்படுகிறேன்."

முதியவர் ஒன்றும் சொல்லாமல், மீண்டும் ஒருமுறை நடுங்கியபடியே தன்னுடைய படுக்கையறையைப் பார்த்தார். அவர் பார்வையின் போக்கை மோன்டாகும் கவனித்துவிட்டான். "அப்படியென்றால்?"

முதியவர் மூச்சை நன்றாக உள்ளே இழுத்து, அடக்கி, பிறகு வெளியே விட்டார். இன்னும் ஒரு முறை மூச்சை இழுத்து, கண்களை மூடி,

வாயை இறுக்கிக்கொண்டு, ஒரு வழியாக மூச்சை வெளியே விட்டார். "மோன்டாக்..."

இறுதியில் அவர் திரும்பி, சொன்னார், "என்னுடன் வா. பார்க்கப் போனால், என் வீட்டிலிருந்து நீ வெளியேறிப் போக விட்டிருந்திருப் பேன். நான் ஒரு கோழையான, வயதான முட்டாள்."

ஃபேபர் படுக்கையறைக் கதவைத் திறந்தார். அதற்குள் இருந்த சிறிய அறைக்கு மோன்டாகை அழைத்துச்சென்றார். அங்கே குவியலாக இருந்த நுண்ணிய முடி போன்ற கம்பிகள், மிகச் சிறிய கம்பிச் சுருள்கள், உருளைகள், ஸ்படிகங்கள் இவற்றுக்கு நடுவே பல உலோகக் கருவிகளும் ஒரு மேஜைமேல் இருந்தன.

"இதெல்லாம் என்ன?" மோன்டாக் கேட்டான்.

"என்னுடைய பயங்கரக் கோழைத்தனத்துக்குச் சான்றுகள். இவ்வளவு ஆண்டுகளாக, என் கற்பனையின் உதவியால் படிமங்களைச் சுவர்களில் வீசி எறிந்துகொண்டே தனியாக வாழ்ந்துவிட்டேன். மின்னணுப் பொருட் களைக் குடைந்துகொண்டிருப்பதும், வானொலி ஒலிபரப்பில் ஏதாவது செய்துகொண்டு இருப்பதும் என்னுடைய பொழுதுபோக்கு. தன்னுடைய நிழலுக்குள்ளேயே வாழ்ந்துகொண்டிருந்த புரட்சி ஆர்வத்தை நிறைவு செய்யும் வேட்கையாகவே என்னுடைய கோழைத்தனம் இருந்ததால் இதை உருவாக்க நான் உந்தப்பட்டேன்."

0.22 எண் தோட்டாவின் அளவே இருந்த ஒரு சிறிய பச்சை நிற உலோகப் பொருளை அவர் பொறுக்கியெடுத்தார்.

"இதையெல்லாம் நானே காசு கொடுத்து வாங்கினேன்—எப்படி? வேலையிழந்த, ஆபத்தான அறிவுஜீவியின் இறுதிப் புகலிடமான பங்குச் சந்தையில் பந்தயம் வைத்து விளையாடித்தான், வேறெப்படி? ஆகவே, நான் சந்தையில் சூதாடினேன், இவற்றையெல்லாம் உருவாக்கினேன், காத்திருந்தேன். வாழ்நாளில் பாதி முழுவதும் யாராவது என்னிடம் வந்து பேசுவார்கள் என்று நடுங்கியபடியே காத்திருந்தேன். நான் யாரிடமும் பேசத் துணியவில்லை. அன்றொரு நாள் பூங்காவில் நாம் ஒன்றாக உட் கார்ந்திருந்தபோது, என்றாவது ஒருநாள் நீ என்னைப் பார்க்க வருவாய் என்று எனக்குத் தெரிந்திருந்தது—நெருப்புடனா, நட்புடனா என்றுதான் எளிதில் ஊகிக்க முடியவில்லை. இந்தச் சிறிய பொருள் என்னிடம் பல மாதங்களாகவே தயாராக இருந்தது. ஆனாலும், நான் கிட்டத்தட்ட உன்னைப் போக விட்டுவிட்டேன், எனக்கு **அவ்வளவு** பயம்!"

"கிளிஞ்சல் வானொலிக் கருவி ஒன்றைப் போல அது இருக்கிறது."

"இன்னும் ஒரு படி மேலே! அது கேட்கும்! மோன்டாக், உன் காதில் அதை நீ பொருத்திக்கொண்டால், நான் சௌகரியமாக வீட்டுக்குள் உட்கார்ந்துகொண்டு, பயந்துவிட்ட என் எலும்புகளுக்கு வெதுவெதுப்பை அளித்து, தீயணைப்பவர்களின் உலகத்தைப் பற்றிக் கேட்டறிந்து, பகுத்து ஆராய்ந்து, எனக்கு ஆபத்து இல்லாத வகையில் அந்த உலகத்தின் பல வீனங்களைக் கண்டுபிடிப்பேன். தேன் கூட்டில் பாதுகாப்பாக இருக்கும் ராணித் தேனீ நான். நீ ஆண் தேனீயாக, நடமாடும் காதாக இருப்பாய். போகப்போக, நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் பல விதமான மனிதர்கள் கேட்டுக்கொண்டும், மதிப்பீடு செய்துகொண்டும் இருக்கும் வகையில் காதுகளைப் பொருத்திவைக்க என்னால் முடியும். ஆண் தேனீக்கள் இறந்துவிட்டாலும், நான் இன்னமும் வீட்டில் பாதுகாப்பாக, பெருமளவு சௌகரியமாகவும் மிகக் குறைந்த அளவே அபாயத்தை எதிர்கொண்டும் இருப்பேன். நான் எவ்வளவு ஜாக்கிரதையாகச் செயல்படுகிறேன், எவ்வளவு வெறுக்கத்தக்கவனாக இருக்கிறேன், பார்த்தாயா?"

அந்தப் பச்சை நிறத் தோட்டாவை மோன்டாக் தன்னுடைய காதில் வைத்துக்கொண்டான். அதே போன்ற ஒரு சிறிய பொருளை முதியவர் தன்னுடைய காதுக்குள்ளும் பொருத்திக்கொண்டு, தன் உதடுகளை அசைத்தார்.

"மோன்டாக்!"

அந்தக் குரல் மோன்டாகின் தலைக்குள் ஒலித்தது.

"நீங்கள் பேசுவது எனக்குக் கேட்கிறது."

முதியவர் சிரித்தார். "உன் குரலும் பிரமாதமாகக் கேட்கிறது!" ஃபேபர் கிசுகிசுத்தார், ஆனால் அந்தக் குரல் மோன்டாகின் தலைக்குள் தெளிவாக ஒலித்தது. "உன்னுடைய நேரம் வந்தவுடன் தீயணைப்பு நிலையத்துக்குப் போ. நான் உன்னுடன் இருப்பேன். கேப்டன் பியாட்டி சொல்வதை நாம் இருவரும் சேர்ந்து கேட்போம். அவரும் நம்மிடையே ஒருவராகவும்கூட இருக்க முடியும். கடவுளுக்குத்தான் வெளிச்சம். அவரிடம் சொல்வதற்காகச் சில விஷயங்களை நான் உனக்கு அளிப்பேன். ஒரு நல்ல காட்சியை அவருக்கு நிகழ்த்திக் காட்டுவோம். என்னுடைய இந்த மின்னணுக் கோழைத்தனத்துக்காக நீ என்னை வெறுக்கிறாயா? உன்னுடைய தலை துண்டிக்கப்படும்போது நீ பேசுவதைக் கேட்பதற்காக என்னுடைய இந்தப் பாழாய்போன காதுகளுடன் போர் முனைக்குப் பின்னால் இருந்துகொண்டு, இந்த இரவில் உன்னை வெளியே அனுப்பிவிட்டு நான் இங்கே இருக்கிறேன்."

"நாம் எல்லோருமே செய்வதைச் செய்துகொண்டிருக்கிறோம்," என்றான் மோன்டாக். விவிலியத்தை முதியவர் கையில் கொடுத்தான். "பார்க்

கலாம். எனக்குப் பதிலாக வேலைக்கு வேறொருவரை அனுப்ப முயல்கிறேன். நாளை—"

"அந்த வேலையில்லாத அச்சிடுபவரை நான் போய்ப் பார்க்கிறேன், ஆமாம்; **அதையாவது** என்னால் செய்ய முடியும்."

"குட் நைட், பேராசிரியரே."

"குட் நைட் அல்ல. நான் உன்னுடன் இரவு முழுவதும் இருப்பேன், உனக்குத் தேவைப்படும்போது அரிப்பு மிக்க ஒரு கொசுவாக உன்னுடைய காதில் குறுகுறுத்தபடி. ஆனால், இப்போதைக்கு குட் நைட், வெற்றி கிட்டட்டும்."

கதவு திறந்து, மூடியது. மீண்டும் உலகத்தைப் பார்த்தபடி, மோன்டாக் இருண்ட வீதிக்கு வந்தான்.

அன்றிரவு, வானத்தில் போர் தயாராகிக்கொண்டிருப்பதை உணர முடிந்தது. மேகங்கள் விலகிச் சென்று திரும்பி வந்த விதம், எதிரிகளின் வட்டத் தகடுகளைப் போன்ற லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் மேகங்களின் மத்தியில் நீந்திக்கொண்டிருப்பதைப் போலத் தோன்றிய விதம், வானமே நகரத்தின் மேல் விழுந்து அதைச் சுண்ணாம்புத் தூளாக மாற்றி, நிலாவும் ஒருவிதச் சிவப்புத் தீயில் எரிந்துவிடும் என்ற உணர்வு; இம்மாதிரியான உணர்வுகளைத்தான் அந்த இரவு அளித்தது.

பாதாள ரயில் நிலையத்திலிருந்து, தன்னுடைய பாக்கெட்டில் பணத்துடன் மோன்டாக் நடந்து வந்தான். (ரோபோட் ஊழியர்களின் உதவியுடன் இரவு முழுவதும் திறந்திருக்கும் வங்கிக்கு அப்போதுதான் போய் வந்திருந்தான்.) நடக்கும்போது, தன்னுடைய ஒரு காதில் ஒலித்துக் கொண்டிருந்த கிளிஞ்சல் வானொலியைக் கேட்டுக்கொண்டிருந்தான்... "நாங்கள் ஒரு பத்து லட்சம் பேரை ஒன்றுதிரட்டியிருக்கிறோம். போர் மூண்டால் துரித வெற்றி நமக்கே..." குரலுக்கு மேலே சடாலென்று பாய்ந்த இசை வெள்ளத்தில் குரல் மறைந்துபோய்விட்டது.

"ஒரு கோடிப் பேரை ஒன்றுதிரட்டியிருக்கிறார்கள்." ஃபேபரின் குரல் அவனுடைய இன்னொரு காதில் கிசுகிசுத்தது. "ஆனால் பத்து லட்சம் என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும்."

"ஃபேபரா?"

"ஆமாம், என்ன வேண்டும்?"

"நான் சிந்தனை எதுவும் செய்யவில்லை. என்னிடம் சொல்லப்பட்டிருப்பதை மட்டும் செய்துகொண்டிருக்கிறேன், எப்போதும்போல. போய்ப் பணம் கொண்டுவா என்றீர்கள், கொண்டுவந்திருக்கிறேன்.

உண்மையில் நானாகவே அதை யோசித்துப்பார்த்திருக்கவில்லை. எல்லா வற்றையும் நானாகவே யோசித்துச் செய்வதை எப்போது ஆரம்பிக்கப் போகிறேன்?"

"நீ சற்று முன்பு சொன்னபடி பார்த்தால், ஏற்கனவே ஆரம்பித்து விட்டாய். நான் சொல்வதை நீ நம்பித்தான் ஆக வேண்டும்."

"நான் மற்றவர்களை நம்பினேன்!"

"ஆமாம், நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்றும் பார். இன்னும் கொஞ்ச காலத்துக்குக் கண்களை மூடியபடி நீ பயணம் செய்ய வேண்டும். இதோ, என் கரங்களைப் பிடித்துக்கொள்."

"நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் சொன்னால் மட் டும் போதுமென்றால், நான் கட்சி மாற வேண்டியதில்லை. நான் அப்படிச் செய்வதென்றால், மாற வேண்டியதற்குக் காரணம் எதுவும் இல்லை."

"நீ ஏற்கனவே புத்திசாலியாகிவிட்டாய்!"

நடைபாதையில் தன் வீட்டை நோக்கித் தன்னுடைய கால்கள் இட்டுச் செல்வதை மோன்டாக் உணர்ந்தான். "பேசிக்கொண்டே இருங்கள்."

"நான் உனக்குப் படித்துக் காட்டட்டுமா? உன் நினைவில் பதியும் வகையில் நான் படிப்பேன். தினமும் இரவில் ஐந்து மணி நேரம்தான் தூங்குகிறேன். செய்வதற்கு எனக்கு எதுவும் இல்லை. ஆகவே, நீ விரும் பினால் இரவில் நான் படித்துக்கொண்டே உன்னைத் தூங்கச் செய்வேன். தூங்கிக்கொண்டிருக்கும்போது யாராவது காதில் கிசுகிசுத்தார்கள் என் றால், தூங்கும்போதுகூட அறிவைப் பெற்றுத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள்."

"ஆமாம்."

"இதோ." இரவில் அந்த நகரத்தில் வெகு தொலைவில் புத்தகத்தின் பக்கம் ஒன்று திருப்பப்படும் மெல்லிய கிசுகிசுப்பு.

"யோபுடைய சரித்திரம்."

மோன்டாக் நடந்து போய்க்கொண்டிருந்தபோது, வானத்தில் நிலா மேலேறிக்கொண்டிருந்தது. அவனுடைய உதடுகள் லேசாக அசைந்தன.

இரவு ஒன்பது மணிக்கு, மோன்டாக் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது, வாசல் கதவின் மணியோசை கூடத்தில் அலறியது. வெஸுவியஸ் எரிமலை வெடிப்பிலிருந்து தப்பித்து ஓடும் உள்ளூர்வாசியைப் போல, சுவர்தொலைக்காட்சி அறையிலிருந்து மில்ட்ரெட் ஓடி வந்தாள். திரு மதி ஃபெல்ப்ஸும் திருமதி பௌல்ஸும் வாசல் கதவு வழியாக நுழைந்து, கைகளில் 'மார்டினி' மதுக்கோப்பையைப் பிடித்தபடி எரிமலையின்

வாய்க்குள் மறைந்துபோனார்கள். மோன்டாக் சாப்பிடுவதை நிறுத்தி னான். ஆயிரம் கிண்கிணி ஓசைகளை எழுப்பும் ஸ்படிகத்தினாலான ஒரு ராட்சசத் தொங்கு விளக்குக் கொத்தைப் போல அவர்கள் தோன்றினார் கள். அவர்களுடைய 'செஷயர்' பூனைச் சிரிப்புகளின் ஒளி வீட்டின் சுவர்கள் வழியாக வருவதை அவன் பார்த்தான். அங்கு நிலவிய சத்தங்களையும் மீறி அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கத்திப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

தன்னுடைய வாயில் இன்னமும் உணவை வைத்துக்கொண்டு சுவர் தொலைக்காட்சி அறை வாசலில் மோன்டாக் நின்றான்.

"எல்லோரும் அழகாக இல்லை!"

"ஆமாம்."

"நீ மிக நன்றாக இருக்கிறாய், மில்லி!"

"ஆமாம்."

"எல்லோரும் பிரமாதமாக இருக்கிறார்கள்."

"பிரமாதமாக!"

மோன்டாக் அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"பொறுமை," ஃபேபர் கிசுகிசுத்தார்.

"நான் இங்கே இருக்கக் கூடாது," கிட்டத்தட்ட தனக்குத் தானே கிசுகிசுத்துக்கொண்டான் மோன்டாக். "பணத்தை எடுத்துக்கொண்டு உங்களுடைய வீட்டுக்கு நான் வந்துகொண்டிருக்க வேண்டும்."

"போதுமான நேரம் நாளைக்கு இருக்கிறதே. ஜாக்கிரதை!"

"இந்த நிகழ்ச்சி **அற்புதமாக** இல்லை?" மில்ட்ரெட் கத்தினாள்.

"அற்புதம்."

அங்கிருந்த ஒரு சுவர்த் திரையில் பெண்ணொருத்தி ஆரஞ்சுப் பழ ரசம் குடித்துக்கொண்டு, அதே சமயம் சிரித்துக்கொண்டும் இருந்தாள். ஒரே சமயத்தில் எப்படி இரண்டையும் ஒன்றாக அவளால் செய்ய முடிந் தது என்று மோன்டாக் பைத்தியக்காரத்தனமாக நினைத்தான். மற்ற சுவர்களில், மகிழ்ச்சியில் திளைத்திருந்த அதே பெண் வயிற்றில், புத் துணர்ச்சியூட்டும் அந்தப் பானம் தன்னைக் குறுக்கிக்கொண்டு அவ ளுடைய ஆனந்தமான வயிற்றுக்குப் பயணம் செய்வதை ஊடுகதிர் படம் பிடித்துக் காட்டியது! திடீரென்று அந்த அறை ராக்கெட்டில் கிளம்பிப் பயணம் செய்து மேகங்களுக்குள் சென்று, எலுமிச்சைப் பச்சைக் கட லுக்குள் பாய்ந்தது; அங்கே சிவப்பு, மஞ்சள் நிற மீன்களை ஒரு நீல நிற மீன் விழுங்கிக்கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் கழித்து, பிரம்மாண்ட சிரிப்

பலைகள் உள்ளே வந்துகொண்டிருக்க, வெண்ணிறக் கேலிச்சித்திரக் கோமாளிகள் மூன்று பேர் பரஸ்பரம் தங்களுடைய உடல் அங்கங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, அந்த அறை நகரத்துக்கு வெளியே ஏறிப் பாய்ந்தது; ஒரு மைதானத்தில் முரட்டுத்தனமாகச் சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டிருந்த ஜெட் கார்கள் ஒன்றையொன்று இடித்தும், பின்வாங்கியும், மீண்டும் ஒன்றையொன்று இடித்தபடியும் இருந்தன. பல உடல்கள் காற்றில் தெறிப் பறப்பதை மோன்டாக் பார்த்தான்.

"மில்லி, நீ அதைப் பார்த்தாயா?

"நான் பார்த்தேன், நான் பார்த்தேன்!"

மோன்டாக் சுவர்தொலைக்காட்சி அறைக்குள் கையை நீட்டி, மெயின் ஸ்விட்சை அணைத்தான். பதறிக் கத்திக்கொண்டிருக்கும் மீன்கள் நிறைந்த ஒரு பிரம்மாண்டப் படிகக் கோப்பையிலிருந்து நீர் இறந்து விடப்பட்டதைப் போல, திரை பிம்பங்கள் வடிந்தன.

அந்த மூன்று பெண்களும் லேசாகத் திரும்பி, வெளிப்படையான எரிச்சலையும், பின்னர் தங்களுடைய வெறுப்பையும் கலந்து மோன்டாகைப் பார்த்தார்கள்.

"போர் எப்போது தொடங்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்றான். "உங்களுடைய கணவர்கள் இங்கு இல்லை என்பதைப் பார்க்கிறேன்."

"அதுவா, அவர்கள் வருவார்கள் போவார்கள், வருவார்கள் போவார்கள்," என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ். 'மீண்டும் உள்ளே, மீண்டும் வெளியே ஃபின்னெகான்' பாடலைப் போல. ராணுவம் பீட்டரை நேற்று அழைத்தது. அடுத்த வாரம் அவர் திரும்பி வந்துவிடுவார். ராணுவத்தில் அப்படித்தான் சொல்லப்பட்டது. துரிதப் போர். நாற்பத்தியெட்டு மணி நேரம்தான் என்று சொன்னார்கள், எல்லோரும் வீட்டுக்குத் திரும்பி விடுவார்கள். அப்படித்தான் ராணுவம் சொன்னது. துரிதப் போர். பீட்டர் நேற்று பேசினார். அவர் அடுத்த வாரம் திரும்பிவிடுவார் என்று சொன்னார்கள். துரித..."

இருப்புக்கொள்ளாமல் இருந்த அந்த மூன்று பெண்களும் மண் நிறத்திலிருந்த வெற்றுச் சுவர்களைப் படபடப்புடன் பார்த்தார்கள்.

"நான் கவலைப்படுவதே இல்லை," என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ். "கவலைப்படுவதையெல்லாம் பீட்டருக்கு விட்டுவிட்டேன்." அவள் இளித்தாள். "எல்லாக் கவலைகளையும் அந்த பீட்டருக்கே விட்டுவிட்டேன். எனக்கு இல்லை. நான் கவலைப்படவில்லை."

"ஆமாம்" என்றாள் மில்லி. "கவலைப்படுவதையெல்லாம் பீட்டரே படட்டும்."

"இறந்துபோவது எப்போதுமே வேறொருவருடைய கணவர் என்று சொல்வது வழக்கம்."

"அதையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்து, போரில் கொல்லப்பட்டு இறந்துபோனவர் என்று ஒருபோதும் எவரும் இருந்ததில்லை. கட்டடங்களிலிருந்து குதித்து இறந்துவிட்டவர்களா, ஆமாம், அது உண்டு, போன வாரம் க்லோரியாவின் கணவரைப் போல, ஆனால் போரில் இறந்தவர்களா? இல்லை, கிடையாது."

"போரினால் இல்லை," என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ். "எதுவாக இருந் தாலும் பீட்டரும் நானும் எப்போதும் சொல்வோம், கண்ணீர்விடக் கூடாது, அதைப் போல வேறெதுவும் கூடாது என்று. எங்கள் இருவருக் குமே இது மூன்றாவது திருமணம். நாங்கள் சுதந்திரமாகவே இருக்கி றோம். சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எப்போதுமே சொல்லிக்கொள்வோம். அவர் சொல்லியிருக்கிறார், நான் கொல்லப்பட்டு விட்டால் நீ பாட்டுக்கு உன் வழியில் போ, அழாதே, மீண்டும் திருமணம் செய்துகொள், என்னைப் பற்றி நினைக்காதே."

"ஆமாம், இப்போது ஞாபகம் வருகிறது," என்றாள் மில்ட்ரெட். "உங்கள் வீட்டுச் சுவர்தொலைக்காட்சியில் நேற்றிரவு க்லாரா டோவின் ஐந்து நிமிடக் காதல் கதையைப் பார்த்தீர்களா? அதாவது, அந்தப் பெண் என்ன செய்தாளென்றால்—"

மோன்டாக் ஒன்றும் சொல்லாமல், முன்பொருமுறை தான் குழந் தையாக இருந்தபோது விசித்திரமான தேவாலயம் ஒன்றுக்குப் போய் அங்கிருந்த புனிதர்களின் முகத்தைப் பார்த்ததைப் போல, இந்தப் பெண் களின் முகத்தைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். அந்தப் புனிதர் களுடன் அவன் பேசிக்கொண்டு, தேவாலயத்தில் வெகு நேரம் நின்று கொண்டிருந்தாலும், அந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருக்க முயன்றாலும், அந்த மதத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முயன்றாலும், அந்த இனிய வழிபாட்டுத் தூபத்தையும் அந்த இடத்தின் தூசியையும் தன்னுடைய நுரையீரல்களுக்குள்ளும், அதன் மூலம் தன்னுடைய இரத்தத்துக்குள்ளும் கிரகித்துக்கொண்டு, பீங்கான் கண்களும் மாணிக்கச் சிவப்பு உதடுகளும் கொண்ட வண்ணமயமான ஆண், பெண்களின் உள்ளர்த்தத்தைப் பற்றி அக்கறை கொண்டு நெகிழ்ச்சி அடைய முயன்றாலும், அந்த ஜீவன்களின் எனாமல் முகங்கள் பொருளற்றவையாகவே அவனுக்கு இருந்தன. அங்கு எதுவுமே இருக்கவில்லை, எதுவுமே; வேறெதோ பல்பொருள் அங்காடி யில் உலாவுவதைப் போல, அவனிடமிருந்த பணம் வினோதமாகவும்

அந்த இடத்தில் பயனற்றதாகவும், அங்கிருந்த மரம், சுண்ணாம்புக் காரை, களிமண் இவற்றைத் தொட்டுப் பார்த்தபோது அவனுடைய வேட்கை ஜீவனற்றும் இருந்தது. அதைப் போலவே அவன் தன் வீட்டுக் கூடத் திலேயேயும் உணர்ந்தான்: தன்னுடைய கண்களுக்கு முன்னால் நாற்காலி யில் வளைந்து நெளிந்துகொண்டு சிகரெட்டுகளைப் பற்றவைத்துப் புகையை ஊதிக்கொண்டும், வெயிலில் சுட்டுப் பொசுங்கிய முடியைத் தொட்டுக்கொண்டும், இவனுடைய பார்வை பட்டே தீப்பற்றிக் கொண்டுவிட்டதைப் போல ஜொலித்த தங்களுடைய விரல் நகங் களைப் பரிசீலித்துக்கொண்டும் இருந்த இந்தப் பெண்கள் இடையே. மௌனத்தினால் அவர்கள் முகம் பேயறைந்ததைப் போலக் காணப் பட்டது. தன்னுடைய கடைசி வாய் உணவை மோன்டாக் விழுங்கும் சத்தம் எழுந்தபோது முன்புறம் சாய்ந்தார்கள். ஜுர வேகத்தில் அவன் மூச்சுவிடுவதைக் கேட்டார்கள். கனவுகள் தீர்ந்துபோய்த் தூங்கிக்கொண் டிருக்கும் ராட்சசர்களின் வெளிறிய புருவங்களைப் போல இருந்தன அந்த அறையின் மூன்று வெற்றுச் சுவர்கள். முறைத்துப் பார்த்துக்கொண் டிருந்த அந்த மூன்று புருவங்களையும் தொட்டால் விரல் நுனிகளில் வியர்வையின் லேசான உப்பை உணர முடியும் என்று மோன்டாக் நினைத்தான். இறுக்கமடைந்து குமுறிக்கொண்டிருக்கும் அந்தப் பெண்க ளிடையே, அவர்களைச் சுற்றி நிலவிய மௌனத்தில், கேட்பு எல்லைக்குக் குறைவாக ஏற்பட்டுக்கொண்டிருந்த நடுக்கத்தில் அந்த வியர்வை பெருகிக் கொண்டிருந்தது. எந்தச் சமயத்திலும் சடசடக்கும் 'புஸ்'ஸென்ற சத்தம் அவர்களிடமிருந்து கிளம்பி வெடிக்கலாம்.

மோன்டாகின் உதடுகள் அசைந்தன.

"நாம் ஏதாவது பேசுவோமே."

அந்தப் பெண்கள் நடுங்கி வெறித்துப் பார்த்தார்கள்.

"உங்கள் குழந்தைகள் நன்றாக இருக்கிறார்களா, திருமதி ஃபெல்ப்ஸ்?" என்று அவன் கேட்டான்.

"எனக்குக் குழந்தைகள் இல்லையென்று உங்களுக்குத் தெரியுமே! ஆண்டவனுக்கே தெரியும், சுவாதீனத்துடன் இருக்கும் யாருமே குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று!" என பதிலளித்தாள் திருமதி ஃபெல்ப்ஸ், ஏன் இந்த மனிதரிடம் தான் கோபமாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அவளுக்கே சற்று நிச்சயமாகத் தெரியாமலேயே.

"நான் அப்படிச் சொல்ல மாட்டேன்," என்றார் திருமதி பௌல்ஸ். "நான் சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் இரண்டு குழந்தைகள் பெற்றுக்கொண்டிருக்கிறேன். குழந்தை பெற்றுக்கொள்வதற்காக அனு பவிக்கும் எல்லா வேதனைகளாலும் எந்தப் பயனும் இல்லை. உலகத்தில்

இனப்பெருக்கம் நடக்க வேண்டுமே, இல்லையா. இனம் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். தவிர, சில சமயங்களில் குழந்தைகள் நம்மைப் போலவே இருக்கிறார்கள். அது மகிழ்ச்சியளிக்கிறது. அந்த வித்தையை இரண்டு சிசேரியன் சிகிச்சைகள் செய்துவிட்டன. ஆமாம். என்னுடைய மருத்துவர் சொன்னார், சிசேரியன் அவசியமில்லை; உன் இடுப்பு போதுமான அளவுக்கு வலுவாக இருக்கிறது, எல்லாமே சரியாக இருக்கின்றன என்று. நான்தான் பிடிவாதமாக இருந்தேன்."

"சிசேரியனோ, வேறெதுவோ, குழந்தைகள் நம்மை அழித்துவிடுவார்கள்; உனக்கு மூளை சரியில்லை" என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ்.

"நான் பத்தில் ஒன்பது நாட்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் போட்டுவிட்டு வந்துவிடுகிறேன். மாதத்தில் மூன்று நாட்கள் அவர்கள் வீட்டுக்கு வரும்போது அவர்களைப் பொறுத்துக்கொள்கிறேன்; அது ஒன்றும் அவ்வளவு மோசம் இல்லை. சுவர்தொலைக்காட்சி அறைக்குள் அவர்களைத் தூக்கிப் போட்டுவிட்டு, ஸ்விட்ச்சை முடுக்கிவிடுங்கள். துணிகளை வெளுப்பதைப் போலத்தான் அது; அழுக்குத் துணிகளை உள்ளே திணியுங்கள், மூடியை அடித்துச் சாத்துங்கள்." திருமதி பௌல்ஸ் நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள். "கொஞ்ச நேரத்திலேயே, அவர்கள் என்னை உதைக்கவும் முத்தமிடவும் செய்வார்கள். நல்ல வேளை, என்னாலும் திருப்பி உதைக்க முடியும்."

அந்தப் பெண்கள் நாக்கு தெரியும்படி சிரித்தார்கள்.

மில்ட்ரெட் கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள், பிறகு, மோன்டாக் இன்னும் நுழைவாயிலிலேயே நின்றுகொண்டிருப்பதைப் பார்த்துக் கைகளைத் தட்டினாள். "மோன்டாகைக் குஷிப்படுத்த நாம் அரசியல் பேசுவோம்."

"நல்ல யோசனை," என்றாள் திருமதி பௌல்ஸ். "போன தேர்தலில் நான் வாக்களித்தேன், எல்லோரையும் போலவே, அதிபர் நோபிலுக்காக எதையும் இழக்கத் தயாராக இருந்தேன். அதிபராக வந்தவர்களிலேயே பார்ப்பதற்கு மிகவும் அழகானவர் அவர்தான்."

"சரி, ஆனால் அவருக்கெதிராகப் போட்டியிட்டவரும் சாமானியமானவர் இல்லையே!"

"அவர் ஒன்றும் அவ்வளவு பிரமாதம் இல்லை, இல்லையா? குட்டையாக, நம் குடும்பத்தில் ஒருவரைப் போல, முகத்தை நன்றாக மழித்துக் கொள்ளாமலும், தலையை ஒழுங்காகச் சீவிக்கொள்ளாமலும்."

"என்ன நினைத்து எதிர்க்கட்சியில் அவரை நிறுத்தினார்கள்? நல்ல உயரமான மனிதரை எதிர்த்து இவ்வளவு குட்டையான மனிதரை யாரும் நிறுத்த மாட்டார்கள். தவிர, அவர் தன் வாய்க்குள்ளேயே பேசிக்

கொள்வார். பாதி நேரம் அவர் சொல்வதில் ஒரு வார்த்தைகூட எனக்குக் கேட்காது. அப்படித் தவறிப்போய்க் கேட்ட சொற்களோ எனக்குப் புரியவே இல்லை."

"மேலும், ரொம்ப குண்டு. அதை மறைக்கும் வகையில் உடுத்திக் கொள்ளவும் மாட்டார். வின்ஸ்டன் நோபிலுக்கு அமோக வெற்றி கிடைத்ததில் வியப்பில்லை. அவர்களுடைய பெயர்கள்கூட இவருக்குச் சாதகமாக இருந்திருக்கின்றன. பத்து நொடிகள் வின்ஸ்டன் நோபில் என்ற பெயரை ஹ்யுபெர்ட் ஹோாக் என்ற பெயருடன் ஒப்பிட்டுப்பாருங்கள், தேர்தல் முடிவு என்னவாக இருக்க முடியும் என்று உங்களுக்குப் புரியும்."

"நாசமாய்ப்போக!" என்று கத்தினான் மோன்டாக். "ஹோாகைப் பற்றியோ, நோபிலைப் பற்றியோ உங்களுக்கு என்ன தெரியும்?"

"ஏன் தெரியாது? ஆறு மாதங்களுக்கு முன்பு அவர்களைச் சுவர் தொலைக்காட்சியில் பார்த்தோமே. ஒருவர் தன் மூக்கை நோண்டிக் கொண்டே இருந்தார்; எனக்கு அது பயங்கர எரிச்சலூட்டியது."

"சரி, திரு. மோன்டாக் அவர்களே," என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ். "அது போன்ற ஒரு மனிதருக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டும் என்கிறீர்களா?"

மில்ட்ரெட்டின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது, "மோன்டாக், பேசாமல் இங்கிருந்து போய்விடு. எங்களைப் பதற்றப்படுத்தாதே."

ஆனால், அங்கிருந்து போன மோன்டாக் உடனேயே தன் கையில் ஒரு புத்தகத்துடன் திரும்பி வந்தான்.

"மோன்டாக்!"

"நாசமாய்ப்போக! எல்லாம் நாசமாய்ப்போக!"

"அங்கே என்ன வைத்திருக்கிறீர்கள்? அது புத்தகம்தானே? இப்போதெல்லாம் எல்லாவித விசேஷப் பயிற்சிகளும் தொலைக்காட்சி மூலம் அளிக்கப்படுகிறது என்றுதான் நினைத்தேன்." திருமதி ஃபெல்ப்ஸ் கண்களைக் கொட்டினாள். "தீயணைப்பவர்களுக்கான கையேடுதானே அது?"

"கையேடா, அட ஆண்டவனே?," என்றான் மோன்டாக். "இது கவிதை."

"மோன்டாக்," ஒரு கிசுகிசுப்பு.

"என்னைத் தனியாக இருக்க விடுங்கள்!" தன்னைச் சுற்றி வட்டமிட்ட ஒரு பெரிய ஆர்ப்பரிப்பு, கூச்சல், முணுமுணுப்பு இவற்றுக்கு மத்தியில் தான் சுழன்றுகொண்டிருப்பதாக மோன்டாக் உணர்ந்தான்.

"மோன்டாக், கொஞ்சம் பொறு. வேண்டாம்..."

"அவர்கள் பேசுவதைக் கேட்டீர்களா? இந்தப் பிசாசுகள் மற்ற பிசாசு களைப் பற்றிப் பேசிக்கொள்வதைக் கேட்டீர்களா? மக்களைப் பற்றியும், தங்கள் குழந்தைகளைப் பற்றியும், தங்களைப் பற்றியும் அவர்கள் உளறுவதையும், தங்களுடைய கணவர்கள், போர் இவற்றைப் பற்றி எப்படிப் பேசிக்கொள்கிறார்கள் என்பதைக் கேட்கும்போது, ஆண்டவனே! இங்கே நின்றுகொண்டிருக்கும் என்னால் அதை நம்பவே முடியவில்லை."

"எந்தப் போரைப் பற்றியும் நான் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை, தெரிந்துகொள்ளுங்கள்," என்றாள் திருமதி ஃபெல்ப்ஸ்.

"கவிதையைப் பொறுத்தவரை, நான் அதை வெறுக்கிறேன்," என்றாள் திருமதி பௌல்ஸ்.

"கவிதை எதையாவது ஒருமுறையாவது கேட்டது உண்டா?"

"மோன்டாக்," ஃபேபரின் குரல் அவனை உரசிச் சென்றது. "நீ எல்லாவற்றையும் கெடுத்துவிடப்போகிறாய். வாயை மூடு, முட்டாளே!"

மூன்று பெண்களும் எழுந்து நின்றார்கள்.

"உட்காருங்கள்!"

அவர்கள் உட்கார்ந்தார்கள்.

"நான் வீட்டுக்குப் போகிறேன்," நடுங்கிக்கொண்டே சொன்னாள் திருமதி பௌல்ஸ்.

"மோன்டாக், மோன்டாக், தயவுசெய்து சொல், என்ன செய்யப் போகிறாய்?" என்று மன்றாடினார் ஃபேபர்.

"உங்களுடைய அந்தச் சிறிய புத்தகத்திலிருந்து எங்களுக்காக ஒரு கவிதை படிப்பீர்களா?" திருமதி ஃபெல்ப்ஸ் தலையை ஆட்டினாள். "அது சுவாரஸ்யமாக இருக்கும் என்று நினைக்கிறேன்."

"அது சரியல்ல," என்று புலம்பினாள் திருமதி பௌல்ஸ். "நாம் அப்படியெல்லாம் செய்யக் கூடாது."

"மோன்டாகைப் பாருங்கள், அவர் கவிதை படிக்க விரும்புகிறார், எனக்கு அது நன்றாகத் தெரிகிறது. நாம் அமைதியாக அதைக் கேட்டோமென்றால், அவர் மனநிறைவு அடைந்துவிடுவார். அதற்குப் பிறகு நாம் நம் வேலையைப் பார்க்கலாம்." தங்களைச் சுற்றியிருந்த சுவர்களின் வெறுமையை நோக்கி அவள் பதற்றத்துடன் தன் பார்வையை வீசினாள்.

"மோன்டாக், நீ இப்படியே தொடர்வதானால் நான் தொடர்பைத் துண்டித்துவிடுவேன், நான் உன்னை விட்டுப் போய்விடுவேன்." கரு

வண்டு அவனுடைய காதில் அழுந்தியது. "இதனால் என்ன பயன், எதை நிரூபிக்கப்போகிறாய்!"

"அவர்களைப் பயமுறுத்த வேண்டும், அதுதான் என் நோக்கம், தங்களை அறியாமல் கழியும் வகையில் பயமுறுத்த வேண்டும்."

மில்ட்ரெட் வெற்று வெளியை வெறித்துப் பார்த்தாள். "கை, **யாரிடம்** நீ பேசுகிறாய்?"

வெள்ளி ஊசி ஒன்று அவனுடைய மூளையைத் துளைத்தது. "மோன்டாக், கேள், தப்பிக்க ஒரே ஒரு வழிதான், இதை ஒரு விளையாட்டு என்று சொல்லி மூடி மறைத்துவிடு. உனக்குப் புத்தி பேதலித்துப்போகவில்லை என்று பாசாங்கு செய். பிறகு—சுவரில் இருக்கும் எரியூட்டிக்குள் புத்தகத்தைத் தூக்கியெறிந்துவிடு!"

இதையே தன் நடுங்கும் குரலில் மில்ட்ரெட் எதிர்நோக்கியிருந்தாள். "தோழிகளே, ஒவ்வொரு ஆண்டும் தீயணைப்பவர்கள் அந்தக் காலப் புத்தகம் ஒன்றை வீட்டுக்குக் கொண்டுவந்து, அது எவ்வளவு மடத்தனமானது என்றும், அவை போன்றவை எப்படி எல்லோரையும் பதற்றமடையச் செய்து, பித்துப் பிடிக்கவைக்கும் என்றும் தங்கள் குடும்பத்தினருக்குக் காட்ட அனுமதிக்கப்படுவார்கள். எல்லாவற்றையும் எப்படிப் போட்டுக் குழப்பியிருக்கிறார்கள் என்பதன் மாதிரி ஒன்றை நமக்குப் படித்துக்காட்டி, ஆகவே இம்மாதிரியான குப்பையை நம்முடைய மண்டைக்குள் போட்டுக்கொண்டு ஒருபோதும் நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதே இல்லை என்று காட்டுவதுதான் மோன்டாக் அளிக்கப் போகும் வியப்பு. **சரிதானே, கண்ணே?"**

மோன்டாக் அந்தப் புத்தகத்தைத் தன் கையில் வைத்துக் கசக்கினான்.

"ஆமாம்" என்று சொல்."

அவனுடைய வாய் ஃபேபரின் வாயைப் போல அசைந்தது:

"ஆமாம்."

மில்ட்ரெட் சிரித்தபடியே புத்தகத்தைப் பிடுங்கினாள். "இதோ! இதைப் படித்துப்பாருங்கள். வேண்டாம், அது வேண்டாம். நீ உரக்கப் படித்த வேடிக்கையான அந்த ஒன்று இதோ இங்கே இருக்கிறது. தோழிகளே, உங்களுக்கு ஒரு வார்த்தைகூடப் புரியாது. 'கெக்கெ-பிக்கெ' வென்று இருக்கும். சரி, ஆரம்பி மோன்டாக், அந்தப் பக்கத்தைப் படி."

திறந்திருந்த அந்தப் பக்கத்தை அவன் பார்த்தான்.

ஈ ஒன்றின் சிறகுகள் அவனுடைய காதில் லேசாகப் படபடத்தன. "படி."

"அதன் தலைப்பு என்ன, நண்பரே?"

"டோவர் கடற்கரை." அவனுடைய உதடுகள் மரத்துவிட்டிருந்தன.

"இப்போது நல்ல, தெளிவான குரலில் படி, மெதுவாக."

அறை வெப்பத்தில் தகித்துக்கொண்டிருந்தது, அவன் ஒரே அனலாக இருந்தான், ஒரே பனியாக இருந்தான்; வெறுமையான ஒரு பாலைவனத்தின் மத்தியில் மூன்று நாற்காலிகளில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். திருமதி ஃபெல்ப்ஸ் தன்னுடைய ஆடையின் விளிம்பை நேர்செய்யும் வரையிலும், திருமதி பௌல்ஸ் தன்னுடைய விரல்களைத் தன் முடியிலிருந்து எடுக்கும் வரையிலும் காத்திருந்து, பக்கவாட்டில் மாறிமாறி அசைந்தவாறு மோன்டாக் நின்றிருந்தான். தொடக்கத்தில் அமுங்கியும், தடுமாறிக்கொண்டும், படிக்கத் தொடங்கிய அவன் குரல் ஒரு வரியிலிருந்து இன்னொரு வரிக்குப் போகப்போக, உறுதியாக வெளிப்பட்டது. பாலைவனத்தைக் கடந்து, வெண்மையை நோக்கி, அந்தப் பிரம்மாண்ட வெப்ப வெறுமையில் உட்கார்ந்திருந்த மூன்று பெண்களையும் சுற்றிக் கொண்டு ஒலித்துச் சென்றது அவனுடைய குரல்.

நம்பிக்கைக் கடல்
முன்பொரு காலத்தில் நிரம்பித் ததும்பியது
உருண்டையான பூமியின் கரையும்
சுருட்டிக் கட்டிய பிரகாசமான மடிப்புகளாய்.
இப்போது என் காதுக்கு எட்டுவதோ
இரவுக் காற்றின் மூச்சுடன் இணைந்து உள்வாங்கி,
பரந்த, இருண்ட, பிரம்மாண்டமான கரைகளின் வழியே
உலகின் மூடப்படாத அக்கிக் கொப்புளங்களினூடே
ஒலிக்கும் அதன் சோகமான, நீண்ட, அடங்கி ஒலிக்கும் உறுமல் மட்டுமே.

நாற்காலிகள் அந்த மூன்று பெண்களுக்குக் கீழே முனகின. மோன்டாக் உரக்கப் படித்து முடித்தான்:

அன்பே, நாம் ஒருவருக்கொருவர்
விசுவாசமாக இருப்போம்!
வகைவகையாக, மிக அழகாக, மிகப் புதிதாக
நம் முன் கனவுப் பிரதேசமாகக் கிடப்பதுபோல்
தோன்றும் இந்த உலகம்
உண்மையிலேயே மகிழ்ச்சியற்று, அன்பற்று,
ஒளியற்று, நிச்சயமற்று, அமைதியற்று
வலிக்கு நிவாரணமுமற்று இருக்கிறது.
நாமோ இங்கே

போராட்டத்தின், தப்பிஓடுதலின் குழப்பமான
அபயக் குரல்கள் வீசும்,
குருட்டுச் சேனைகள் இருளில் மோதிக்கொண்டிருக்கும்
அந்தி கருக்கும் பாலைவெளியில்.

திருமதி ஃபெல்ப்ஸ் அழுதுகொண்டிருந்தாள்.

பாலைவனத்தின் நடுவிலிருந்த மற்றவர்கள் அவளுடைய அழுகை பல மாவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவளுடைய முகம் தன் வடிவத்தை அழுகையில் நசுக்கிக்கொண்டிருந்தது. அவளது தோற்றத்தால் குழம்பிப்போய், அவளைத் தொடாமல் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவள் அடக்க முடியாமல் விசும்பிக்கொண்டிருந்தாள். மோன்டாக் கூட ஆச்சரியத்தில் அதிர்ந்துபோயிருந்தான்.

"ச்சு, ச்சு," என்றாள் மில்ட்ரெட். "ஒன்றும் ஆகிவிடவில்லை, க்லாரா, இதோ பார் க்லாரா, அழுவதை நிறுத்து! க்லாரா, உனக்கு என்ன **ஆயிற்று?"**

"எனக்கா?—எனக்கு...," திருமதி ஃபெல்ப்ஸ் விசும்பிக்கொண்டிருந்தாள், "தெரியவில்லை, தெரியவில்லை, எனக்குச் சுத்தமாக எதுவும் தெரியவில்லை, ஓ..."

திருமதி பௌல்ஸ் எழுந்து நின்று, மோன்டாகை வெறித்துப் பார்த்தாள். "பார்த்தீர்களா? எனக்குத் தெரியும், இதைத்தான் நான் நிரூபித்துக் காட்ட விரும்பினேன்! இப்படி நடக்கும் என்று எனக்கு ஏற்கனவே தெரியும்! நான் எப்போதும் சொல்லியிருக்கிறேன், கவிதையும் கண்ணீரும், கவிதையும் தற்கொலையும், அழுகையும் மோசமான உணர்வுகளும், கவிதையும் நோயும், இந்த **உணர்ச்சிச் சிக்கல்கள்** எல்லாம்! இப்போது, எனக்கு இது நிரூபிக்கப்பட்டுவிட்டது. நீங்கள் **மோசமானவர்**, திரு. மோன்டாக், மோசமானவர்."

ஃபேபர் சொன்னார்: "இப்போது..."

மோன்டாக் திரும்பி, சுவரிலிருந்த திறப்பை நோக்கி நகர்ந்து, பித்தளை விளிம்பு கொண்ட ஓட்டை வழியாக, தயாராக எரிந்துகொண்டிருந்த சுவாலைகளுக்குள் புத்தகத்தைத் தானே போடுவதை உணர்ந்தான்.

"மடத்தனமான சொற்கள், மடத்தனமான சொற்கள், மோசமாகப் புண்படுத்தும் மடத்தனமான சொற்கள்," என்றாள் திருமதி பௌல்ஸ். "மனிதர்கள் ஏன் மனிதர்களையே புண்படுத்த விரும்புகிறார்கள்? உலகத்தில் போதுமான வலி இல்லையா, இது போன்ற விஷயங்களைக் கொண்டு இன்னும் அவர்களை நோகடிக்கத்தான் வேண்டுமா?"

"க்லாரா, இதோ பார் க்லாரா," அவளுடைய புஜத்தை இழுத்துக் கெஞ்சினாள் மில்ட்ரெட். "இதோ, மகிழ்ச்சியாக இருப்போம், வா, இந்த 'குடும்பத்தை' இப்போதே முடுக்கிவிடுவோம். உம், ஆகட்டும். இப்போது சிரித்து, மகிழ்ச்சியாக இருப்போம், அழுவதை நிறுத்து, ஜாலியாக இருப்போம்."

"வேண்டாம்," என்றாள் திருமதி பௌல்ஸ். "நான் நேராக வீட்டுக்கு ஓடப்போகிறேன். என் வீட்டையும், 'குடும்பத்தையும்' பார்க்க வருவதானால் நல்லது. ஆனால் என் வாழ்நாளில் இனிமேல் இந்தத் தீயணைப்பவரின் பைத்தியக்கார வீட்டுக்கு மீண்டும் ஒருமுறை வர மாட்டேன்."

"வீட்டுக்குப் போங்கள்," மோன்டாக் மௌனமாக அவளை உற்றுப் பார்த்தான். "வீட்டுக்குப் போய், விவாகரத்து செய்துவிட்ட உங்களுடைய முதல் கணவரையும், ஜெட் விமானத்தில் இறந்துபோன இரண்டாவது கணவரையும், தன் தலையில் சுட்டுக்கொண்டு இறந்த மூன்றாவது கணவரையும் பற்றி எண்ணிப்பாருங்கள், வீட்டுக்குப் போய் நீங்களே செய்துகொண்ட ஒரு டஜன் கருக்கலைப்புகளைப் பற்றி எண்ணிப் பாருங்கள், வீட்டுக்குப் போய் இவை எல்லாவற்றையும், பாழாய்ப்போன உங்களுடைய சிசேரியன் சிகிச்சைகளையும், உங்களுடைய துணிச்சலை வெறுக்கும் உங்களுடைய குழந்தைகளையும் எண்ணிப்பாருங்கள்! வீட்டுக்குப் போய் இவையெல்லாம் எப்படி நடந்தன என்றும், இவற்றைத் தடுத்து நிறுத்த நீங்கள் என்ன செய்தீர்கள் என்றும் நினைத்துப்பாருங்கள்! வீட்டுக்குப் போங்கள், வீட்டுக்குப் போங்கள்! உங்களைக் கீழே தள்ளி, கதவுக்கு அப்பால் உதைத்துத் தள்ளுவதற்கு முன்னால்," என்று கத்தினான்.

கதவுகள் அடித்துச் சாத்திக்கொள்ள, வீடே வெறுமையாக மாறியது. தொலைக்காட்சி அறைச் சுவர்களில் அழுக்கான பனியின் நிறம் படந்திருக்க, அந்தக் குளிர்கால வானிலையில் மோன்டாக் தனியாக நின்றுகொண்டிருந்தான்.

குளியலறையில் நீர் கொட்டியது. தூக்க மாத்திரைகளை மில்ட்ரெட் தன் கைக்குள் உலுக்கிப் போட்டுக்கொண்டிருந்தது அவனுக்குக் கேட்டது.

"முட்டாள் மோன்டாக், முட்டாள், முட்டாள், அட ஆண்டவனே, முட்டாள் மோன்டாக்..."

"வாயை மூடுங்கள்!" காதுக்குள்ளேயிருந்து பச்சைத் தோட்டாவை இழுத்துத் தன் பாக்கெட்டில் திணித்துக்கொண்டான்.

அது ஈனமாகச் சரசரத்தது: "... முட்டாள்... முட்டாள்..."

அவன் வீடு முழுவதும் தேடி, புத்தகங்களை மில்ட்ரெட் குளிர்சாதனப் பெட்டிக்குப் பின்னால் அடுக்கி வைத்திருந்தாள் என்பதைக் கண்டுபிடித்தான். சில காணாமல் போயிருந்தன. வீடு முழுவதும் வெடியை,

கொஞ்சம்கொஞ்சமாக, ஒவ்வொரு குழலாகப் பிரித்து வைக்கும் அவளுடைய வேலையை அவள் தொடங்கிவிட்டிருந்தாள் என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் இப்போது அவனுக்குக் கோபம் இல்லை. அயர்ந்து போயும் தன்னைக் குறித்துக் குழம்பிப்போயும் மட்டுமே இருந்தான். புத்தகங்களை வீட்டின் புழக்கடைக்கு எடுத்துச்சென்று, பக்கவாட்டு வேலிக்கருகில் இருந்த புதர்களிடையே ஒளித்து வைத்தான். இன்றிரவு மட்டும்தான், இன்னும் வேறெதாவது எரிக்கும் வேலையை அவள் செய்ய முனைவதற்கு முன்னால், என்று தன் மனதில் நினைத்துக்கொண்டான்.

மீண்டும் வீட்டுக்குள் வந்தான். "மில்ட்ரெட்?" இருட்டாக இருந்த படுக்கையறையின் வாசலில் நின்று அழைத்தான். எவ்விதச் சத்தமும் இல்லை.

வெளியே, புல்தரையைக் கடந்து தன்னுடைய வேலைக்குப் போகும் வழியில் க்லாரிஸ் மெக்லெல்லனின் வீடு எவ்வளவு இருண்டு, ஆள் அரவம் இல்லாமல் இருந்தது என்று பார்ப்பதைத் தவிர்க்க முயன்றான்...

தான் செய்துவிட்டிருந்த பயங்கரத் தவறினால் முற்றிலும் தனித்து விடப்பட்டிருந்ததால், இரவில் அவனுடன் பேசக்கூடிய மென்மையான, பழகிய குரலிலிருந்து கிடைக்கப்பெறும் கதகதப்பின், பரிவின் தேவையை உணர்ந்தான். ஏற்கனவே, குறுகிய சில மணி நேரத்திலேயே ஃபேபரை வாழ்நாள் முழுவதுமே தனக்குத் தெரிந்திருந்ததைப் போல அவனுக்குத் தோன்றியது. இப்போது அவனே இரண்டு பேர் என்று அவனுக்குத் தெரிந்தது. அதாவது, எல்லாவற்றுக்கும் மேலாக, தான் மோன்டாக், தனக்கு ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை, தான் ஒரு முட்டாள் என்பதைக்கூட அறியாத, ஆனால் அப்படி இருக்கக்கூடுமோ என்று சந்தேகப்பட்ட மோன்டாக். தன்னுடன் பேசிய முதியவரும், நீண்ட பயணத்தின் குமட்டும் மூச்சிரைப்புடன் நகரத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை உறிஞ்சி இழுத்துச் சென்ற ரயிலில் தன்னுடன் பேசிய முதியவரும் 'அவனேதான்' என்பதும் அவனுக்குத் தெரிந்தது. இனி வரவிருந்த நாட்களில், வானத்தில் நிலா இல்லாத இரவுகளிலும், வானத்திலிருந்து பூமியின் மேல் பிரகாசமான ஒளி வீசிய நிலா இரவுகளிலும் இந்த முதியவர் இந்தப் பேச்சைத் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கப்போகிறார்—சொட்டுசொட்டாக, கல் கல்லாக, சில்லு சில்லாக. கடைசியில், அவனுடைய மனம் ஒருவழியாக நிரம்பி வழியும்; அவன் இனியும் மோன்டாகாக இருக்க மாட்டான். இதை அந்த முதியவர் சொன்னார், உறுதியளித்தார், வாக்குத் தந்தார். இனி அவன் மோன்டாகும் ஃபேபருமாக, நெருப்பும் நீருமாக இருந்து, பிறகு ஒருநாள் அவை எல்லாம் கலந்து, மெல்லிய தணலாகி மௌனமாகச் செயல்பட்ட பின்னால் அங்கே நெருப்பும் இருக்காது, நீரும் இருக்காது, வைன் மட்டுமே இருக்கும்.

தனித்தனியான, எதிர்மறையான இரண்டிலிருந்து மூன்றாவதாக ஒன்று. பின்னொரு நாள் அவன் அந்த முட்டாளைத் திரும்பிப் பார்த்து, முட்டாளை இனம்கண்டுகொள்வான். இப்போதேகூட, தன் நீண்ட பயணத்தின் தொடக்கத்தை, விடைபெறுதலை, முன்பிருந்த 'தானிலிருந்து' விலகிச் செல்வதை உணர்ந்தான்.

வெப்ப ஆவி சூழ்ந்த பாதாள ரயில் நிலையத்திலிருந்து தீயணைப்பவர்களின் உலகத்தை நோக்கி வெளிவரும்போது, இந்த நடு இரவில் முதலில் அவனைத் திட்டியும், பிறகு அவனைச் சமாதானப்படுத்தியும் கருவண்டாக ஒலித்த அந்த முதியவரின் மெல்லிய குரலையும், தூக்கக் கலக்கக் கொசுவின் ரீங்காரத்தையும், நுண்ணிய வேலைப்பாடு மிக்க முணுமுணுப்பையும் கேட்பது அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

"இரக்கப்படு மோன்டாக், இரக்கம். அவர்களுடன் பேரம் பேசி நச்சரிக்காதே; சற்று முன்புவரைகூட அவர்களில் ஒருவனாக நீ இருந்திருக்கிறாய். எல்லாம் இப்படியேதான் ஓடிக்கொண்டிருக்கும் என்ற பெரும் நம்பிக்கையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கப்போவதில்லை. பிரபஞ்ச வெளியில் அழகான நெருப்பை மூட்டி, பெரிதாகக் கொழுந்துவிட்டெரியும் எரிகல்தான் இவையெல்லாம் என்பதோ, என்றாவது ஒருநாள், அதுவும் தரையில், விழுந்தே ஆக வேண்டும் என்பதோ அவர்களுக்குத் தெரியாது. நீ பார்த்ததைப் போலவே அந்தக் கொழுந்தை, அந்த அழகிய நெருப்பை மட்டுமே அவர்கள் பார்க்கிறார்கள்.

"மோன்டாக், வேர்க்கடலையின் தோலைப் போல நொறுங்கிவிடும் தங்களுடைய எலும்புகளைப் பராமரித்துக்கொண்டு, பயந்தபடி வீட்டிலேயே முடங்கியிருக்கும் முதியவர்களுக்குக் குறைகூறும் உரிமை இல்லை. ஆனால் ஆரம்பிக்கும்போதே எல்லாவற்றையும் கிட்டத்தட்டக் கொன்றுவிட்டாய். கவனமாக இரு! நான் உன்னுடன் இருப்பேன், நினைவிருக்கட்டும். அது எப்படி நடந்தது என்று எனக்குப் புரிகிறது. உன்னுடைய கண்மூடித்தனமான ஆவேசம் என்னை உத்வேகப்படுத்தியது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆஹா, எவ்வளவு இளமையாக நான் உணர்ந்தேன்! ஆனால் இப்போது—நீ உன்னையே முதியவனாக உணர வேண்டும் என்று விரும்புகிறேன். என்னுடைய கோழைத்தனத்தில் ஒரு பகுதி உனக்குள் இன்றிரவு வடிக்கப்பட வேண்டும். அடுத்த சில மணி நேரத்துக்கு, கேப்டன் பியாட்டியை நீ சந்திக்கும்போது, ஓசையின்றி அவரைச் சுற்றி வா, உன் சார்பில் அவர் சொல்வதை நான் கேட்க விடு, நிலைமையை நான் அறிந்துணர விடு. உயிர்பிழைத்திருப்பதுதான் நம் வெற்றிக்கான ஒரே வழி. பாவம், அந்த மூடப் பெண்களை மறந்துவிடு..."

"பல ஆண்டுகளாக இல்லாத வகையில் இப்போது அவர்களைச் சோக மடையச் செய்துவிட்டேன் என்று நினைக்கிறேன்," என்றான் மோன் டாக். "திருமதி ஃபெல்ப்ஸ் அழுததைப் பார்த்தது எனக்கு அதிர்ச்சியளித் தது. ஒருவேளை, அவர்கள் சொல்வது சரியாக இருக்கலாம். எதையுமே எதிர்கொள்ளாமல் ஓடிக்கொண்டே, உல்லாசமாக இருப்பதே மேலான தாக இருக்கலாம். தெரியவில்லை, நான்தான் குற்றவாளி என்று உணர் கிறேன்—"

"கூடாது. அப்படி உணரக் கூடாது! போரே இல்லாமல் இருக்கு மென்றால், உலகத்தில் அமைதி நிலவுமென்றால், நல்லது, அப்படியே உல்லாசமாக இருங்கள் என்பேன்! ஆனால், மோன்டாக், நீ சாதாரணத் தீயணைப்பவராக இருப்பதற்காகத் திரும்பிப் போகக் கூடாது. உலகத் தில் எல்லாமே சரியாக இருக்கிறது என்று சொல்ல முடியாது."

மோன்டாகுக்கு வியர்த்தது.

"மோன்டாக், கேட்டுக்கொண்டிருக்கிறாயா?"

"என் பாதங்கள்," என்றான் மோன்டாக், "என்னால் அவற்றை நகர்த்த முடியவில்லை. என்னையே நான் கேவலமாக உணர்கிறேன். என் பாதங் கள் நகர மறுக்கின்றன!"

"கேள், கொஞ்சம் நிதானமாக இரு," என்றார் முதியவர் மென்மையாக. "புரிகிறது, எனக்குப் புரிகிறது. தவறுகள் செய்துவிடுவோமோ என்று பயப் படுகிறாய். பயப்படாதே. தவறுகளும் பயனளிக்க முடியும். நான் இளை ஞனாக இருந்தபோது, என்னுடைய அறியாமையை மற்ற மனிதர்கள்மீது திணித்தேன். அவர்கள் என்னைக் குச்சியால் அடித்தார்கள். நான் நாற் பது வயதை அடைந்தபோது, என்னுடைய மழுங்கிய கருவி நன்றாகத் தீட்டப்பட்டு, வெட்டுவதற்கு ஏற்ற விதத்தில் கூர்மையாக ஆகிவிட்டிருந் தது. உன்னுடைய அறியாமையை ஒளித்து வைத்தாயென்றால் யாரும் உன்னை அடிக்கவும் மாட்டார்கள், நீ கற்றுக்கொள்ளவும் மாட்டாய். ஆகவே, இப்போது உன் கால்களை நகர்த்தித் தீயணைப்பு நிலையத்துக் குள் போ. இப்போது நாம் இரட்டையர், இனியும் நாம் தனித்தவர்கள் அல்ல, நமக்கிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாமல் வெவ்வேறு சுவர் தொலைக்காட்சி அறைகளில் பிரிக்கப்பட்டு இருப்பவர்கள் அல்ல. பியாட்டி உன்னைத் துருவிப் பார்க்கும்போது உனக்கு உதவி தேவைப் பட்டால், நான் இங்கேயே உன்னுடைய செவிப்பறையில் உட்கார்ந்த படி குறிப்புகளை எடுத்துக்கொண்டிருப்பேன்!"

முதலில் தன்னுடைய வலது பாதமும், பிறகு இடது பாதமும் அசை வதை மோன்டாக் உணர்ந்தான்.

"முதியவரே, என்னுடனேயே இருங்கள்," என்றான்.

அந்த இயந்திர வேட்டைநாய் போய்விட்டிருந்தது. அதனுடைய கூண்டு காலியாக இருந்தது. தீயணைப்பு நிலையம் சுவர்ப் பூச்சின் மௌனத்தில் இருந்தது, ஆரஞ்சு நிற சலமாண்டர் வண்டி தன் வயிற்றில் மண்ணெண்ணெயுடன் தூங்கிக்கொண்டிருந்தது; அக்னி-ஏவுகுழாய்கள் அதன் பக்கவாட்டில் ஒன்றுடன் ஒன்று சுருண்டு இருந்தன. மோன்டாக் அந்த அமைதியினூடே நடந்துபோய், பித்தளைத் தூணைத் தொட்டு, இருட்டில் வழுக்கியபடி மேலே ஏறிப் போனான்—வெறுமையான நாய்க் கூண்டைத் திரும்பிப் பார்த்தபடி. இதயம் படபடத்து, ஒரு கணம் நின்று, மீண்டும் படபடக்க. இப்போதைக்கு, அவனுடைய காதில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு சாம்பல் வண்ண விட்டிலாக மட்டுமே ஃபேபர் இருந்தார்.

மேல்தளத்தில் பித்தளைத் தூண் வரும் ஓட்டையின் அருகே காத்துக் கொண்டு, ஆனாலும் காத்துக்கொண்டிருக்காததைப் போல முதுகைத் திருப்பிக்கொண்டு பியாட்டி நின்றிருந்தார்.

"இதோ," என்றார் அவர் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தவர்களிடம். "எல்லா மொழிகளிலுமே முட்டாள் என்று அழைக்கப்படும் விநோதமான ஒரு பிராணி இங்கே வந்திருக்கிறது."

உள்ளங்கை மேல் நோக்கி இருக்க, வெகுமதியை வேண்டித் தன் கையை ஒரு பக்கமாக அவர் நீட்டினார். அந்தக் கையில் மோன்டாக் புத்தகத்தை வைத்தான். அதன் தலைப்பைக்கூடப் பார்க்காமல் குப்பைத் தொட்டியில் அந்தப் புத்தகத்தை பியாட்டி வீசியெறிந்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார். " 'ஓரளவு ஞானம் மட்டுமே உள்ளவர்கள் சிறந்த முட்டாள்களாக இருக்கிறார்கள்.' நல்வரவு, மோன்டாக். உன்னுடைய காய்ச்சல் மறைந்து, நோயும் குணமாகிவிட்டதால் எங்களுடனேயே இருப்பாய் என்று நம்புகிறேன். சீட்டு விளையாட்டுக்கு ஒரு கையாக நீ உட்காருகிறாயா?"

அவர்கள் உட்கார்ந்த பிறகு சீட்டுகள் குலுக்கிப் போடப்பட்டன. தன்னுடைய கைகளில் படிந்திருந்த குற்றத்தை பியாட்டியின் பார்வையில் அவன் உணர்ந்தான். தன்னுடைய விரல்கள் ஏதோவொரு தீங்கிழைத்து விட்டு இப்போதும் சும்மா இருக்காமல், பியாட்டியின் எரிசாராயச் சுவாலை போன்ற முறைப்பின் முன் அசைந்துகொண்டே பாக்கெட்டுக்குள் மறைந்தும், ஓயாமல் அளைந்துகொண்டும் எதையாவது பொறுக்கிக்கொண்டும் ஒரு ஃபெர்ரெட்[7] விலங்கைப் போல இருப்பதை உணர்ந்தான். பியாட்டி அவற்றின் மேல் லேசாக மூச்சு விட்டாலே போதும், தன்னுடைய அந்தக் கைகள் தொய்ந்துபோய், பக்கவாட்டில்

7 கூர்மையான மூக்கையும் சற்று நீளமான உடலையும் கொண்ட சிறு விலங்கு. எலிகளையும் முயல்களையும் வேட்டையாடப் பயன்படும்.

திரும்பி, மீண்டும் திடீரென்று சுரணை வராமலேயே இருந்துவிடுமோ என்றும், தன்னுடைய மீதி வாழ்நாள் முழுவதும் தன்னுடைய கோட்டின் கைப்பகுதிக்குள்ளேயே மறைக்கப்பட்டுப் புதைந்துவிடுமோ என்றும் நினைத்தான். ஏனென்றால், இதே கைகள்தான், தன்னுடைய உடலின் ஒரு பாகமாக இல்லாமல், தாங்களாகவே செயல்பட்டன; முதன்முதலில் ஜோப், ரூத், ஷேக்ஸ்பியர் புத்தகங்களைத் தூக்கி எறியும்போது அவனுடைய குறுகுறுத்த மனம் இந்தக் கைகளில்தான் வெளிப்பட்டது. இப்போது, இந்தத் தீயணைப்பு நிலையத்தில் இரத்தக் கறை படிந்த கையுறைகளோடு இருப்பதைப் போல இந்தக் கைகள் தோன்றின.

அரை மணி நேரத்துக்குள் இரண்டு முறை விளையாட்டின் நடுவே மோன்டாக் எழுந்து கைகளைக் கழுவுவதற்காகக் கழிப்பறைக்குப் போக வேண்டியிருந்தது. திரும்பி வந்தவுடன் தன் கைகளை மேஜைக்கடியில் மறைத்துக்கொண்டான்.

பியாட்டி சிரித்தார்: "உன் கைகள் பார்வையில் படும்படி இருக்கட்டும், மோன்டாக். உன்னை நாங்கள் நம்பவில்லை என்பதில்லை, புரிந்து கொள், ஆனால்—"

எல்லோரும் சிரித்தார்கள்.

"நல்லது," என்றார் பியாட்டி, "நெருக்கடி முடிந்துவிட்டது, எல்லாம் நலம், திசை தப்பி ஓடிய ஆடு மந்தைக்குத் திரும்பி வந்துவிட்டது. நாம் எல்லாருமே சில சமயங்களில் மந்தையை விட்டு விலகிச் செல்லும் ஆடுகள்தான். கூட்டிக்கழித்துப் பார்த்தால், உண்மைதான் உண்மை என்று நாம் உரக்கச் சொல்லியிருக்கிறோம். உன்னதமான எண்ணங்கள் துணையாக வரும் எவருமே தனித்து இருப்பதில்லை என்று நமக்கு நாமே உரக்கச் சொல்லிக்கொண்டோம். 'இனிமையாகச் சொல்லப்படும் அறிவு இனிமையான உணவு' என்றார் சர் ஃபிலிப் சிட்னி. 'இலைகளைப் போன்றவை சொற்கள் / எங்கெல்லாம் அவை அடர்ந்திருக்கின்றனவோ / அங்கெல்லாம் தென்படுவது அரிது / பொருள் செறிந்த பழங்கள்,' அலெக்ஸான்டர் போப். நீ அதைப் பற்றி என்ன நினைக்கிறாய், மோன்டாக்?"

"தெரியவில்லை."

"ஜாக்கிரதை," என்று தொலைவில், வேறொரு உலகத்திலிருந்து கிசுகிசுத்தார் ஃபேபர்.

"அல்லது இதைப் பற்றி? 'அரைகுறை அறிவு ஆபத்தானது / 'பியரியன்' ஊற்றிலிருந்து நன்றாகக் குடி அல்லது சுவைக்காதே / சிறு மிடறுகள் மூளைக்குப் போதையேற்றும் / நிறையக் குடித்தால் மீண்டும் தெளிவு பிறக்கும்'—போப். அதே கட்டுரையில். இதில் உன்னுடைய நிலைப்பாடு எங்கே இருக்கிறது?"

மோன்டாக் உதட்டைக் கடித்துக்கொண்டான்.

"உனக்குச் சொல்கிறேன், கேள்," என்றார் பியாட்டி, தன் சீட்டுகளைப் பார்த்துப் புன்னகை செய்தபடி. "உனக்குச் சற்று நேரத்துக்கு முன் அது போதையேற்றியிருக்கிறது. சில வரிகளை மட்டுமே படித்துவிட்டு, மலையின் விளிம்புக்கும் அப்பால் போகிறாய். டமால். உலகத்தையே வெடி வைத்துத் தகர்க்க, தலைகளைச் சீவ, பெண்களையும் குழந்தைகளையும் அடித்து வீழ்த்த, அதிகார வர்க்கத்தை ஒழித்துவிடத் தயாராகிறாய். எனக்குத் தெரியும். எனக்கும் இவையெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன."

"எனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை," என்றான் மோன்டாக்.

"அவமானப்படாதே. நான் உன்னை உசுப்பவில்லை. உண்மையாகவே, நான் அப்படிச் செய்யவில்லை. உனக்கு ஒன்று தெரியுமா, ஒரு மணி நேரத்துக்கு முன் எனக்கு ஒரு கனவு வந்தது. குட்டித் தூக்கம் போடுவதற்காக நான் படுத்தேன். அப்போது, அந்தக் கனவில், மோன்டாக், நீயும் நானும் புத்தகங்களைப் பற்றிக் காரசாரமான ஒரு விவாதத்தில் ஈடுபட்டோம். நீ ஆவேசத்தில் உயரப் போய், என்னை நோக்கி மேற்கோள்களை உரக்கக் கூவினாய். உன்னுடைய ஒவ்வொரு தாக்குதலையும் நான் அமைதியாகச் சமாளித்தேன். 'அதிகாரம்' என்றேன் நான். நீயோ, டாக்டர் ஜான்ஸனை மேற்கோள் காட்டி, 'அறிவு, அதிகார சக்தியைவிட மேலானது!' என்றாய். நான் சொன்னேன்: டாக்டர் ஜான்ஸன் இப்படியும் சொல்லியிருக்கிறார், 'நிச்சயமாக இருப்பவற்றை விடுத்து நிச்சயமின்மையைத் தேடிப் போகிறவன் புத்திசாலி அல்ல' என்று. தீயணைப்பவர்களுடனேயே இரு, மோன்டாக். மற்ற எல்லாமே சோக மூட்டமான குழப்பம்!"

"அவர் சொல்வதைக் கேட்காதே," என்று கிசுகிசுத்தார் ஃபேபர். "அவர் உன்னைக் குழப்ப முயல்கிறார், நழுவுகிறார், உஷாராக இரு!"

பியாட்டி தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்: "நீ மேற்கோள் காட்டிச் சொன்னாய், 'உண்மை வெளிச்சத்துக்கு வந்தே தீரும், கொலையை நீண்ட காலம் ஒளித்துவைக்க முடியாது!' நானும் சிரித்த படியே சொன்னேன், 'ஆண்டவனே, இவர் தன்னுடைய தரப்பைப் பற்றி மட்டும்தான் பேசுகிறார்!' தவிர, 'தனக்கு வேண்டும் என்றால் சாத்தான்கூட வேதம் ஓதும்!' நீ பதிலுக்குக் கத்தினாய், 'ஞானத்தின் கல்விக்கூடத்தில் இருக்கும் எளிமையான சாதுவைவிடத் தங்க முலாம் பூசிய முட்டாளே மேல் என்று நினைக்கும் காலம் இது!' நான் மென்மையாகக் கிசுகிசுத்தேன், 'அளவுக்கு மீறி வரும் எதிர்ப்புகளில் உண்மையின் கண்ணியம் தொலைந்துபோகிறது.' நீ கத்தினாய், 'கொலைகாரனைப் பார்த்த பிரேதங்களில் இரத்தம் சொட்டுகிறது!' நான் உன் கையைத் தட்டிக்

கொடுத்து, 'என்ன! உன்னை வாயடைத்துப் போகச்செய்கிறேனா?' என் றேன். நீயோ, 'அறிவுதான் சக்தி!' என்றும், 'ராட்சச மனிதனின் தோள் மீது இருக்கும் குள்ளனால்தான் அந்த மனிதனைவிட வெகு தூரம்வரை பார்க்க முடியும்!' என்றும் அலறினாய். கடைசியில் என் தரப்பை நிறைவு செய்யும் வகையில் அபூர்வ சாந்தத்துடன் நான் சொன்னேன்: 'ஒரு உருவகத்தை நிரூபணமாகவும், பெரிய வார்த்தைகளின் பொழிவைப் பிரதான உண்மைகளின் ஊற்றாகவும், தன்னை ஒரு தீர்க்கதரிசியாக வும் கருதும் மடமை நம் எல்லோருக்குமே உடன்பிறந்த குணம்' என்று பிரெஞ்சுக் கவிஞர் போல் வாலெரி சொல்லியிருக்கிறார்."

மோன்டாகுக்குக் குமட்டுவதைப் போலத் தலைசுற்றியது. தன்னு டைய புருவங்கள், கண்கள், மூக்கு, உதடுகள், முகவாய், தோள்கள், தூக்கிய கைகள் இவற்றின் மேல் இரக்கமின்றி அடிக்கப்படுவதைப் போல உணர்ந்தான். "இல்லை, வாயை மூடுங்கள், எல்லாவற்றையும் குழப்பு கிறீர்கள், நிறுத்துங்கள்" என்று கத்த விரும்பினான். பியாட்டி தன்னுடைய லாவகமான விரல்களை மோன்டாகின் மணிக்கட்டைப் பற்றிக்கொள் வதற்காக நீட்டினார்.

"அட ஆண்டவனே, நாடி எப்படித் துடிக்கிறது! உன்னைத் தவறாக எண்ணிவிட்டேன், அப்படித்தானே, மோன்டாக்? அட, ஏசு பிரானே, போருக்கு அடுத்த நாள் இருப்பதைப் போல உன்னுடைய நாடித் துடிப்பு இருக்கிறதே. சங்குகள், மணியோசை இவைதான் இல்லை! நான் இன்னும் கொஞ்சம் பேசட்டுமா? உன்னுடைய மிரண்ட பார்வை எனக்குப் பிடித்திருக்கிறது. ஸ்வாஹிலி, இந்தியன், ஆங்கில இலக்கியம், இதெல்லாம் நான் பேசுவேன். அற்புதமான ஒருவித ஊமைச் சொல் லாடல், வில்லி!"

"மோன்டாக், கொஞ்சம் தாக்குப் பிடி!" அந்த விட்டில் பூச்சி மோன் டாகின் காதில் உரசியது. "அவர் குட்டையைக் குழப்புகிறார்!"

"ஆ, நீ ரொம்ப அதிகமாகப் பயந்துவிட்டாய்," என்றார் பியாட்டி, "ஏனென்றால், ஒவ்வொரு வாதத்திலும் உன்னைத் தோற்கடிக்க நீ நம்பி யிருந்த அதே புத்தகங்களை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள் ளும் ஒரு பயங்கர வேலையைச் செய்துவிட்டேன்! புத்தகங்கள் எப்பேர்ப் பட்ட துரோகிகளாக இருக்க முடியும்! அவை உன்னை ஆதரிப்பதாக நினைக்கிறாய், ஆனால் அவை உனக்கு எதிராகத் திரும்பிவிடுகின்றன. மற்றவர்களும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். நீயோ பரந்த புதர்க்காடு ஒன்றில், பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை போன்ற வற்றின் ஒழுங்கற்ற குவியலுக்கு இடையே திக்குத் தெரியாமல் இருந்தாய். என் கனவின் முடிவில் அந்த சலமாண்டர் வண்டியுடன் நான் அங்கே

வந்து 'என்னுடன் வருகிறாயா?' என்று கேட்டேன். நீ வண்டியில் ஏறிக் கொண்டாய். பேரானந்தமான சாந்தத்துடன் அமைதியில் தீயணைப்பு நிலையத்துக்குப் போனோம். எல்லாம் படிப்படியாகக் குறைத்து அமைதி யடைந்துவிட்டது." பியாட்டி மோன்டாகின் மணிக்கட்டைத் தளர்த்தி, அவனுடைய கை மேஜைமேல் துவண்டு விழும்படி செய்தார். "இனிதே முடிபவை எல்லாம் இனிதே."

மௌனம். வெண்ணிறக் கல்லில் செதுக்கிவைக்கப்பட்டதைப் போல மோன்டாக் உட்கார்ந்திருந்தான். அவனுடைய மண்டை ஓட்டுக்குள் விழுந்த கடைசி சுத்தியலின் எதிரொலி, இதைப் போன்ற எதிரொலி ஓய்வதைக் கேட்பதற்காகக் காத்துக்கொண்டு ஃபேபர் உட்கார்ந்திருந்த கருமையான குகைக்குள் மெதுவாக ஓய்ந்து அடங்கியது. பிறகு, மோன் டாகின் மனதில் கிளம்பியிருந்த தூசி ஓய்ந்து படிந்துவிட்ட பிறகு, ஃபேபர் மெதுவாகத் தொடங்கினார், "எல்லாம் சரி, தான் சொல்ல வந்ததை பியாட்டி சொல்லிவிட்டார். அதை நீ உள்வாங்கிக்கொள்ள வேண்டும். அடுத்த சில மணி நேரத்தில் என் பங்குக்கு நான் சொல்ல வேண்டியதையும் சொல்வேன். நீ அதையும் உள்வாங்கிக்கொள்ள வேண் டும். இரண்டையும் எடைபோட்டு, எந்தப் பக்கம் குதிப்பது, அல்லது விழுவது என்ற முடிவை நீதான் எடுக்கப்போகிறாய். ஆனால், அது என்னுடையதாகவோ, கேப்டன் பியாட்டியினுடையதாகவோ இல்லா மல், உன்னுடைய முடிவாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உண்மைக்கும், சுதந்திரத்துக்கும் பயங்கர எதிரியான, பெரும்பான்மை யினரின் திரண்ட, சற்றும் அசைந்துகொடுக்காத மந்தையைச் சேர்ந்தவர் பியாட்டி என்பதை நினைவுகொள். எவ்வளவு பயங்கரமானது, இந்தப் பெரும்பான்மையின் கொடுங்கோன்மை! மீட்டுவதற்கு நம் எல்லோரிட மும் அவரவரின் இசைக்கருவி இருக்கிறது. ஆனால் எந்தக் காதால் அதைக் கேட்பது என்பதைத் தெரிந்துகொள்வது உன் பொறுப்பு."

ஃபேபருக்குப் பதிலளிக்க மோன்டாக் தன் வாயைத் திறந்தான். ஆனால், அப்போது நிலைய மணி அடித்ததால் மற்றவர்கள் முன்னிலை யில் இந்தத் தவறைச் செய்வதிலிருந்து தப்பித்தான். கூரையிலிருந்த அபாய மணி ஒலித்தது. அறையின் மறுகோடியிலிருந்து அபாய அறிவிப்புத் தொலைபேசி முகவரி ஒன்றைத் தட்டச்சுச் செய்யும் 'டக்-டக்' சத்தம் கேட்டது. ஒரு கையில் சீட்டுகளுடன், மிகைப்படுத்திய நிதானத்துடன் தொலைபேசியை நோக்கி நடந்த பியாட்டி, பொறியில் வந்த அறிக்கை முடிந்தபின் அந்தக் காகிதத்தை உருவி எடுத்தார். சட்டென்று அதைப் பார்த்த அவர், தன்னுடைய பாக்கெட்டில் அதைத் திணித்துக்கொண் டார். திரும்பி வந்து உட்கார்ந்தார். மற்றவர்கள் அவரைப் பார்த் தார்கள்.

"இன்னும் சரியாக நாற்பது நொடிகள்தான், அதற்குள் உங்களுடைய பணத்தையெல்லாம் நான் எடுத்துக்கொண்டுவிடுவேன்," என்றார் பியாட்டி, மகிழ்ச்சி பொங்க.

மோன்டாக் தன்னுடைய சீட்டுகளைக் கீழே வைத்தான்.

"அசதியாக இருக்கிறதா, மோன்டாக்? ஆட்டத்திலிருந்து விலகிக் கொள்கிறாயா?"

"ஆமாம்."

"கொஞ்சம் பொறு. ஒரு சின்ன யோசனை, நாம் இந்த ஆட்டத்தைப் பிறகு முடிக்கலாம். சீட்டுகளைக் கவிழ்த்து வைத்துவிட்டு, நம்முடைய சாதனங்களைத் தயார்செய். மடமடவென்று ஆகட்டும்." பியாட்டி மீண்டும் எழுந்தார். "மோன்டாக், உன்னைப் பார்த்தால் என்னவோ போல் இருக்கிறதே? நீ மீண்டும் காய்ச்சலில் படுத்துவிடுவாய் என்று நினைக்க எனக்குப் பிடிக்கவில்லை..."

"எனக்கு ஒன்றும் ஆகாது."

"நீ பிரமாதமாகவே இருப்பாய். இது ஒரு விசேஷமான அழைப்பு. உடனே வா, வாய்ப்பை விடாதே!"

அவர்கள் மேல்நோக்கி எம்பி, ஏதோ தங்களுடைய கால்களுக்குக் கீழே பொங்கிவரும் பிரம்மாண்ட அலையிலிருந்து தப்பிக்க உதவும் இறுதி வாய்ப்பைப் போலத் தோன்றிய பித்தளைத் தூணைப் பற்றி னார்கள்; ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் அந்தப் பித்தளைத் தூண் இருளை நோக்கி, நச்சு வாயு வெடிப்புடன் இரு மலும், உறிஞ்சலுமாக கர்ஜனையுடன் உயிர்ப்புக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த டிராகனுக்கு அவர்களைச் சறுக்கியபடியே இட்டுச் சென்றது!

"ஹேற!"

இடி முழக்கம், சங்கொலி, டயர்களின் அதிர்வு, ரப்பரின் கிறீச்சிடல், பளபளக்கும் பித்தளைத் தொட்டியில் ராட்சதன் வயிற்றிலுள்ள உண வைப் போலக் குலுங்கும் மண்ணெண்ணெய்—இவற்றுடன் அவர்கள் தெருமுனையில் திரும்பும்போது, வண்டியின் பளபளக்கும் கிராதியி லிருந்து விரல்கள் அதிர்ந்து விடுபட, குளிர்ந்த காற்றில் அவை நடுங்க, காற்றின் விசை தலைமுடியைப் பின்புறமாக இழுக்க, மோன்டாகின் பற்களிடையே காற்று விசிலடித்தது. அவனோ தன்னுடைய வீட்டுச் சுவர்தொலைக்காட்சி அறையின் நியான் விளக்குகளின் ஒளி வெள்ளத் தில், தானியங்களை அடித்து விலக்கிய பிறகு மீதமிருந்த உமியைப் போல இருந்த பெண்களைப் பற்றியும், அவர்களுக்குப் போய்த் தான்

மடத்தனமாகப் புத்தகத்தைப் படித்துக்காட்டியதைப் பற்றியும் ஓயாமல் நினைத்துக்கொண்டிருந்தான். பீச்சாங்குழலால் தண்ணீரை அடித்துப் பெரும் நெருப்பை அணைக்க முயல்வதைப் போல எவ்வளவு அறிவற்ற, பைத்தியக்காரத்தனமான செயல்! ஏற்கனவே இருப்பதிலிருந்து வேறொரு ஆக்ரோஷத்துக்கு இட்டுச்செல்லும் ஒருவித ஆக்ரோஷம். ஒரு கோபத்துக்குப் பதிலாக இன்னொரு கோபம். ஒரேயடியாக உணர்ச்சிவசப்படுவதை நிறுத்திவிட்டு சாந்தமாக, உண்மையிலேயே சாந்தமாக எப்போது அவன் மாறப்போகிறான்?

"இதோ போய்க்கொண்டிருக்கிறோம்!"

மோன்டாக் நிமிர்ந்து பார்த்தான். பியாட்டி பொதுவாக ஒருபோதும் வண்டியை ஓட்டுவதில்லை. ஆனால் அன்றிரவு, சலமாண்டர் வண்டியைத் திருப்பங்களில் வேகமாகத் திருப்பி, வண்டியின் இன்ஜின், அந்தப் பித்தளை எண்கள் இவற்றுக்கு மேல், காற்றை முழுவதுமாக உள்ளுக்கு இழுத்துக்கொண்டு பறந்துகொண்டிருந்த கரிய பெரும் வௌவாலோ அவர் என்று நினைக்கும் விதத்தில் மழைக்கோட்டு போல இருந்த தன்னுடைய பிரம்மாண்ட நீண்ட அங்கி முதுகுக்குப் பின்னால் காற்றில் படபடக்க வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தார்.

"மோன்டாக், உலகத்தை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்காக இதோ நாம் போய்க்கொண்டிருக்கிறோம்!"

வெளிர்சிவப்பு நிறத்தில் பளபளத்துக்கொண்டிருந்த பியாட்டியின் கன்னங்கள் அந்த இரவின் இருளில் மின்னின, அவர் ஆவேசமாகப் புன்னகைத்தார்.

"இதோ, வந்துவிட்டோம்!"

சலமாண்டர் வண்டி தன்னிடமிருந்த மனிதர்களை அவர்கள் சறுக்கியபடியும், தட்டுத் தடுமாறிக் குதித்தபடியும் வெளியே எறிந்தது. மோன்டாகின் விரல்களின் பிடியிலிருந்த ஜில்லிட்ட, பளபளக்கும் கிராதிகளின் மேல் அவனுடைய கோபமான கண்களின் பார்வை பதிந்தது.

என்னால் இதைச் செய்ய முடியாது, என்று நினைத்துக்கொண்டான். இன்று இடப்பட்டிருக்கும் பணியை நான் எப்படி மேற்கொள்வது, எல்லாவற்றையும் எப்படி நான் எரித்துக்கொண்டே இருப்பேன்? இந்த இடத்துக்கு என்னால் போக முடியாது.

இதுவரை தான் விரைந்து வந்த காற்றின் மணம் தன் மேல் வீச, பியாட்டி மோன்டாகின் பின்னால் இருந்து சொன்னார். "சரி, வா, மோன்டாக்."

மற்ற ஆட்கள் ஊனமுற்றவர்களைப் போல, தங்களுடைய அசிங்கமான பூட்ஸ்களில் ஓடினார்கள், சிலந்திகளைப் போல, மௌனமாக.

கடைசியில், மோன்டாக் பார்வையை உயர்த்தித் திரும்பினான். பியாட்டி அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"ஏதாவது பிரச்சினையா, மோன்டாக்?"

"என்ன இது," என்றான் மோன்டாக் மெல்ல. "என் வீட்டுக்கு முன் அல்லவா நாம் நிற்கிறோம்!"

பாகம் 3

சுவாலையின் பிரகாசம்

அங்கு நடக்கப்போகும் கேளிக்கைக்கான ஏற்பாடுகளை வேடிக்கை பார்ப்பதற்காகத் தெரு நெடுகிலும் வீட்டுக் கதவுகள் திறக்கப்பட்டு, விளக்குகள் மின்னின. இன்னும் சற்று நேரத்தில் தீப்பந்தங்களைத் தூக்கி யெறிந்து நெருப்பை விழுங்கும் சாகச விளையாட்டுகள் நடக்கப்போகும் பிரதான வட்டத்தில், தங்களுக்கு முன்னால் இருக்கும் வீட்டை பியாட் டியும் மோன்டாகும் பார்த்தார்கள்: வறட்டுத் திருப்தியுடன் ஒருவரும், கண்களை நம்ப முடியாமல் மற்றவரும்.

"சபாஷ்," என்றார் பியாட்டி. "இப்போது நீ சாதித்துவிட்டாய். பழைய மோன்டாக் சூரியனுக்கு மிக அருகில் பறக்க விரும்பி, இப்போது பாவம், தன் இறக்கைகள் எரிந்த பிறகு ஏன் என்ற வியப்பில் இருக்கிறார். வேட்டைநாயை உன்னுடைய இருப்பிடத்திற்கு நான் அனுப்பியபோதே மறைமுகமாக நான் தெரிவித்திருக்கவில்லையா?"

மோன்டாகின் முகம் மரத்துப்போய் எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் இருந்தது; தன் வீட்டுக்குப் பக்கத்தில் பிரகாசமான மலர்கள் வரம்பாக அமைந்த இருண்ட இடத்தை நோக்கி, கல்லில் செதுக்கப்பட்ட உருவம் ஒன்றைப் போலத் தன் தலை திரும்புவதை உணர்ந்தான்.

பியாட்டி உறுமினார்: "அட கஷ்டமே, அந்தச் சிறிய முட்டாளின் அன்றாட வழக்கத்தைப் பார்த்து நீ ஏமாந்துவிடவில்லையே, சொல், ஏமாந்துவிட்டாயா? மலர்கள், பட்டாம்பூச்சிகள், இலைகள், சூரிய அஸ்த மனங்கள், அட சே! அவளுடைய கோப்பில் இவை எல்லாமே இருக் கின்றன. தொலைந்தேன், என் குறி தப்பவில்லை! உன் முகம் பேயறைந் தாற்போல இருக்கிறது. சில மெல்லிய புற்களும், பிறை நிலவும். என்ன குப்பை! அவற்றை வைத்துக்கொண்டு அவளால் உருப்படியாக என்ன தான் *செய்ய* முடிந்தது?"

ஜில்லென்று இருந்த டிராகனின் தடுப்புக் கம்பிகளின் மேல் உட்கார்ந்து தலையை இடதுபுறம் அரை அங்குலமும், வலதுபுறம் அரை அங்குலமும் அசைத்தபடி இருந்தான்—இடம், வலம், இடம், வலம், இடம்...

"எல்லாவற்றையும் அவள் கவனித்தாள். அவள் யாருக்கும் எதுவும் செய்யவில்லை. எல்லோரையும் தங்கள் போக்கில் விட்டபடி மட்டுமே அவள் இருந்தாள்."

"தங்கள் போக்கிலா, நாசமாய்ப்போக! அவள் உன்னைச் சுற்றிச்சுற்றி வந்து உன்னை அரித்தாள், இல்லையா? அதிர்ச்சியுற்ற தோரணையில், நான்-உன்னைவிட-உன்னதமானவள்-பார்! எனும்படியான மௌனத் துடன், மற்றவர்களிடம் குற்ற உணர்வைத் தூண்டும் திறமை ஒன்றும் மட்டுமே இருந்த 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ரகத்தில் ஒருத்தி. அட கடவுளே, தூக்கத்தில்கூட ஒருவரை வியர்க்கச் செய்யும் நள்ளிரவில் எழும் சூரியனைப் போல் கிளம்புகிறார்கள் அவர்கள்."

முன்வாசல் கதவு திறந்தது; முன்புற நடைபாதையை ஒட்டியபடி கரு வண்டு-டாக்ஸி ஒன்று 'புஸ்' என்ற ஒலியுடன் வந்த அதே சமயத்தில், கனவில் தாவிப் பற்றிக்கொள்பவளின் இறுக்கத்துடன் கையில் பெட்டி ஒன்றைப் பிடித்துக்கொண்டு படிகளில் ஓடியபடி இறங்கி வந்தாள் மில்ட்ரெட்.

"மில்ட்ரெட்! "

பவுடர் அப்பிய முகத்துடன், உதட்டுச் சாயம் இல்லாததால் வெறுமை யாக இருந்த வாயுடன், உடலையும் விறைப்பாக வைத்துக்கொண்டு அவள் அவனைக் கடந்து ஓடினாள்.

"மில்ட்ரெட், அபாய அறிவிப்பு மணியை நீ ஒலிக்கவில்லையே?"

காத்துக்கொண்டிருந்த கருவண்டு-காரில் பெட்டியைத் தூக்கி யெறிந்து, வண்டியில் ஏறி, "ஐயோ பாவம், இந்தக் குடும்பம், பாவம், இந்தக் குடும்பம், ஐயோ எல்லாம் போய்விட்டதே, இப்போது எல்லாம் போய்விட்டது..." என்று முணுமுணுத்தபடியே உட்கார்ந்தாள்.

அந்தக் கார் சீறிப் புறப்பட்டுத் தெருவின் மறு கோடியை அடைந்து, மணிக்கு எழுபது மைல் வேகத்தை எட்டி, மறைந்துபோயிற்று; பியாட்டி மோன்டாகின் தோளைப் பிடித்து இழுத்தார்.

வளைவுகளால் ஆன கண்ணாடி, நிலைக்கண்ணாடி, முக்கோணப் படி கங்கள் ஆகியவற்றால் ஆன கனவின் பாகங்கள் சிதைந்து விழுவதைப் போல ஏதோ நொறுங்கியது. புரிபடாத இன்னுமொரு புயலால் திருப்பி விடப்பட்டதைப் போல மெல்ல நகர்ந்த மோன்டாக், தன்னுடைய சக ஊழியர்கள் ஸ்டோன்மேனும் பிளாக்கும், காற்றோட்டத்துக்கு உதவும் வகையில் ஜன்னல்களின் கண்ணாடிகளை நொறுக்குவதற்காகக் கோடா லியை வீசிக்கொண்டிருப்பதைப் பார்த்தான்.

ஜில்லிட்ட கறுப்புத் திரையின் மேல் மண்டையோட்டுச் சின்னம் போன்ற விட்டில் பூச்சியின் உரசல். "மோன்டாக், ஃபேபர் பேசுகிறேன். நான் பேசுவது கேட்கிறதா? என்ன நடக்கிறது?"

"எனக்கே இந்த மாதிரி நடந்துகொண்டிருக்கிறது" என்றான் மோன்டாக்.

"என்ன குரூரமான ஆச்சரியம்," என்றார் பியாட்டி. "இப்போதெல்லாம் தனக்கு எதுவுமே ஒருபோதும் நேராது என்று எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது, எல்லோரும் முற்றிலும் நிச்சயமாக இருக்கிறார்கள். மற்றவர்கள் இறப்பார்கள், நான் வாழ்ந்துகொண்டே இருப்பேன். பின்விளைவுகளோ, பொறுப்புகளோ எதுவுமே இருக்காது. ஆனால் அவை நிச்சயம் உண்டு. அதைப் பற்றியெல்லாம் நாம் பேச வேண்டாம், சரியா? பின்விளைவுகள் நம்மை எட்டிப் பிடிக்கும்போது காலம் தாழ்ந்துவிடுகிறது, இல்லையா மோன்டாக்?"

"மோன்டாக், நீ அங்கிருந்து ஓடிப்போய்விட முடியுமா?" என்று கேட்டார் ஃபேபர்.

மோன்டாக் நடந்தான். ஆனால் சிமெண்ட் தரையிலேயோ அல்லது இரவின் புல்தரையிலேயோ தன் பாதங்கள் படுவதை அவனால் உணர முடியவில்லை. பியாட்டி தனக்கு அருகிலிருந்த தீமூட்டியைச் சொடுக்கினார். அதனுடைய சிறிய ஆரஞ்சு நிறச் சுவாலை ஆர்வம் மிகுந்த அவருடைய பார்வையைத் தன்பால் ஈர்த்தது.

"நெருப்பில் அவ்வளவு அற்புதமாக என்னதான் இருக்கிறது? எந்த வயதிலுமே நம்மை அதன்பால் ஈர்ப்பது எது?" பியாட்டி அந்தச் சுவாலையை ஊதி அணைத்துவிட்டு, மீண்டும் பற்ற வைத்தார். "அதன் ஓயாத சலனம்; மனிதன் கண்டுபிடிக்க ஆசைப்பட்டு, கண்டுபிடிக்காமலே போய்விட்ட ஒன்று. அல்லது, கிட்டத்தட்ட நிரந்தரம் எனும்படியான சலனம். அதை அப்படியே போகவிட்டால் நம் வாழ்நாள் முழுவதையுமே எரித்துவிடும். நெருப்பு என்பது என்ன? அது ஒரு புதிர். மூலக்கூறுகள், உராய்வு என்றெல்லாம் அறிவியலாளர்கள் புரியாத பாஷையில் என்னவோ சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இதைப் பற்றி உண்மையில் எதுவும் தெரியாது. அதனுடைய உண்மையான சிறப்பு என்னவென்றால் அது பொறுப்புகளையும் விளைவுகளையும் அழித்துவிடுகிறது. பெரிய சுமையாக ஏதாவது பிரச்சினை இருக்கிறதா, அதைக் காளவாய்க்குள் தூக்கியெறி. இப்போது மோன்டாக், நீ ஒரு சுமை. உன்னை என் தோள்களிலிருந்து நெருப்பு கச்சிதமாக, துரிதமாக, நிச்சயமாகத் தூக்கி விட்டுவிடும்; அழுகிப்போக எதுவும் மிஞ்சி இருக்காது; அது ஒரு உயிர்முறி, அழகியல்ரீதியானது, நடைமுறைக்கேற்றது."

முணுமுணுக்கும் அண்டைவீட்டார் குரல்களாலும், சிதறிக்கிடக்கும் கண்ணாடித் தூள்களாலும் அந்த இரவு வேளையில் விநோதமாக ஆக்கப் பட்டுவிட்ட இந்த விசித்திரமான வீட்டை இப்போது பார்த்துக் கொண்டு மோன்டாக் அங்கே நின்றான்; அட்டைகள் பிய்ந்துபோய், அன்னப் பறவையின் சிறகுகளைப் போலத் தரையில் சிதறி மிக அற்ப மாக, அவற்றுக்காகக் கவலைப்படுவதற்குக்கூட லாயக்கற்ற அற்பப் புத்த கங்களைப் பார்த்தான்—கறுப்பு அச்சு, பழுப்பேறிய காகிதம், பிய்ந்து விட்ட கட்டு இவற்றைத் தவிர வேறெதுவும் இல்லாத புத்தகங்களை.

மில்ட்ரெட், நிச்சயமாக அவள்தான். புத்தகங்களை அவன் தோட்டத் தில் ஒளித்துவைத்ததை அவள் பார்த்து, அவற்றை உள்ளே கொண்டு வந்திருக்க வேண்டும். மில்ட்ரெட், மில்ட்ரெட்.

"மோன்டாக், இந்த வேலையைத் தனியாக நீ மட்டுமே செய்ய வேண் டும் என்று ஆசைப்படுகிறேன். மண்ணெண்ணெய், நெருப்புக் குச்சி இவற்றால் அல்ல, கொஞ்சம்கொஞ்சமாக, தீப்பந்தக் கணையை வீசி. இது உன் வீடு. நீயே துப்புரவு செய்."

"மோன்டாக், உன்னால் ஓட முடியாதா, ஓடிப் போய்விடு!"

"முடியாது," என்று கத்தினான் மோன்டாக் நிர்க்கதியாக. "அந்த வேட்டைநாய்! வேட்டைநாய் இருப்பதால் முடியாது!"

அவன் சொன்னது ஃபேபருக்குக் கேட்டது, தன்னிடம்தான் சொல்கி றான் என்று நினைத்த பியாட்டிக்கும் கேட்டது. "ஆமாம், அந்த வேட்டை நாய் இங்கேதான், இந்தச் சுற்றுவட்டாரத்தில் எங்கேயோ இருக்கிறது, ஆகவே நீ எதுவும் செய்ய முயலாதே. தயாரா?"

"தயார்." மோன்டாக் தீப்பந்தக் கணையின் பாதுகாப்புக் கொக்கியை விடுவித்தான்.

"தீயை மூட்டு!"

உரக்கும் வாயுடன் பெரும் தீப்பந்து ஒன்று வெளியே பாய்ந்து புத்த கங்களை நக்கிச் சுவைத்து அவற்றைச் சுவரின் மேல் தூக்கியடித்தது. படுக்கையறைக்குள் நுழைந்த அவன் இரண்டு முறை நெருப்பைப் பாய்ச்சினான். அங்கே இருந்த இரட்டைப் படுக்கைகள் அடக்க முடி யாத குமுறும் முணுமுணுப்புடன் அவன் நினைத்ததைவிட அதிக மாகவே உஷ்ணத்தையும் ஆவேசத்தையும் ஒளியையும் கொண்டிருந்த தியில் பற்றியெரிந்தன. அங்கிருந்த நாற்காலிகள், மேஜைகள், சாப்பாட்டு அறையிலிருந்த வெள்ளி உபகரணங்கள், பிளாஸ்டிக் தட்டுகள் இவை எல்லாவற்றையும்—நாளையே அவனை மறந்துவிடக்கூடியவளும், ஏற் கனவே வெளியேறிச் சென்று அவனை மறந்துவிட்டவளும், கிளிஞ்சல் ரேடியோ தன்மீதும் தனக்குள்ளும் கொட்டித்தீர்ப்பதைக் கேட்டபடி

தனியாக நகரத்தைக் கடந்து பயணம் செய்துகொண்டிருந்தவளுமான அந்த அந்நியப் பெண்ணுடன் இந்த வெறுமையான வீட்டில்தான் தான் வசித்தோம் என்பதைக் காட்டும் எல்லாவற்றையும்—அவன் மாற்ற விரும்பியதால், படுக்கையறைச் சுவர்களையும், ஒப்பனைச் சாமான்கள் இருந்த இழுப்பறையையும் எரித்தான். முன்பெல்லாம் இருந்ததைப் போலவே எரிப்பது மனதுக்குப் பிடித்தமாக இருந்தது; தானே நெருப்பில் பொங்கி எழுவதையும் தாவிப் பிடித்து, நெருப்பால் வெட்டி, கிழித்தெறிவதையும், அர்த்தமில்லாத பிரச்சினைகளை அகற்றி விடுவதையும் உணர்ந்தான். தீர்வு என்று எதுவுமே இருந்திருக்கவில்லையென்றால், பிரச்சினை என்பதும் இப்போது இல்லாமல் ஆகிவிட்டது. நெருப்பே எல்லாவற்றுக்கும் மிக உகந்தது.

"மோன்டாக், அந்தப் புத்தகங்கள்!"

இறக்கைகளில் சிவப்பும் மஞ்சளுமாக இருந்த இறகுகள் கொழுந்து விட்டெரிய, வறுபட்ட பறவைகளைப் போலப் புத்தகங்கள் எம்பிக் குதித்து நடனமாடின.

அதன் பிறகு அவன் சுவர்த்தொலைக்காட்சி அறைக்கு வந்தான்; அந்தப் பெரிய மடப் பிசாசுகள் தங்களுடைய வெளிறிப்போன சிந்தனைகளுடனும் பனிக் கனவுகளுடனும் அங்கே உறங்கிக்கொண்டிருந்தன. மூன்று வெற்றுச் சுவர்கள் ஒவ்வொன்றையும் நோக்கித் தீப்பிழம்பைப் பாய்ச்சினான். அங்கிருந்து வெறுவெளி அவனை நோக்கிச் சீறியது. வெறுமை, அதைவிட வெறுமையான சீட்டி ஒலியை, அர்த்தமில்லாத ஒரு அலறலைக் கிளப்பியது. இன்மை தன் ஆட்டத்தை நிகழ்த்தியிருந்த அந்த வெறுவெளியை யோசித்துப்பார்க்க முயன்றான்; ஆனால் முடியவில்லை. அந்த வெறுவெளி தன்னுடைய நுரையீரல்களுக்குள் புகுந்துவிடக் கூடாது என்பதற்காக மூச்சைப் பிடித்துக்கொண்டு இருந்தான். அந்தப் பயங்கர வெறுமையைத் துண்டித்துவிட்டு, சற்றுப் பின்வாங்கி அந்த அறை முழுவதற்கும் பிரம்மாண்டமான, பிரகாசமான நெருப்பின் மஞ்சள் மலர் ஒன்றைப் பரிசாக அளித்தான். எல்லாவற்றின் மேலும் இருந்த தீப்பிடிக்காத பிளாஸ்டிக் பூச்சு பெரிதாகக் கிழிக்கப்பட்டு, வீடே தீச்சுவாலையில் நடுங்கத் தொடங்கியது.

அவனுக்குப் பின்னாலிருந்து பியாட்டி சொன்னார்: "உன் வேலையை முடித்தவுடன், நீ கைது செய்யப்படுவாய்."

சிவப்புத் தணல்களாக, கறுப்புச் சாம்பலாக வீடு சரிந்தது. தூங்கி வழிந்த வெளிர்சிவப்புச் சாம்பல் நிறக் கங்குகளின் படுக்கைமேல் வீடு விழுந்து. அதன் மேல் ஒரு புகைச் சிறகு மேலெழும்பி வீசி, ஆகாயத்தில் முன்னும்பின்னுமாக மெல்ல அலைந்தது. அப்போது மணி காலை மூன்று

முப்பது. கூட்டம் வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டது. சர்க்கஸ் காட்சி யின் பெரும் கூடாரங்கள் கரித்துண்டுகளாகவும் உடைசல்களாகவும் சரிந்து காட்சி முற்றாக முடிவுக்கு வந்துவிட்டது.

தீப்பந்தக் கணையைப் பற்றியிருந்த தளர்ந்த கைகள், வியர்வையில் நனைந்த பெரும் தீவுகளாக அக்குள்கள், கரித் துகள் படிவம் அப்பியிருந்த முகம் இவற்றுடன் மோன்டாக் அங்கே நின்றிருந்தான். அவனுக்குப் பின்னால், இருட்டில், அஸ்திவாரத்திலிருந்து கனன்றுகொண்டிருந்த ஒளி தங்கள் முகத்தில் லேசாக விழ, மற்ற தீயணைப்பாளர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

மோன்டாக் இரண்டு முறை பேசத் தொடங்கி, கடைசியில் ஒரு வழியாகத் தன் எண்ணத்தைச் சீரமைத்துக்கொண்டான்.

"அபாய அறிவிப்பு மணியை என் மனைவியா ஒலித்தாள்?"

பியாட்டி தலையசைத்தார். "ஆனால், அதற்கும் முன்பே அவளுடைய தோழிகள் அபாய அறிவிப்பு மணியை ஒலித்திருந்தனர். நான் அதை அப் போது பொருட்படுத்தவில்லை. எப்படியும் ஏதோ ஒருவிதத்தில் உனக்கு இப்படி நேர்ந்திருக்கும். கவிதையை அந்த மாதிரி சரளமாகவும், சுதந்திர மாகவும் நீ படித்தது சுத்த மடத்தனம். பெரிய மனுஷத் தோரணையுடன் இருப்பவனின் முட்டாள்தனமான செயல் அது. கவிதை வரிகள் சில வற்றை ஒரு மனிதனிடம் கொடுத்துவிட்டால் போதும், தான்தான் எல் லாப் படைப்புகளுக்கும் அரசன் என்று நினைத்துக்கொள்வான். உன்னு டைய புத்தகங்களின் உதவியுடன் நீர் மேல் நடக்க முடியும் என்று நீ நினைக்கிறாய். பார்க்கப்போனால், அவை இல்லாமலே உலகம் நல்லபடி யாகவே தன் போக்கில் போகும். அவை உன்னை எங்கே கொண்டுவந்து விட்டிருக்கின்றன பார், உதடுவரை சகதி. என் சுண்டுவிரலால் அந்தச் சகதியை நான் கிளறினால், நீ மூழ்கிவிடுவாய்!"

மோன்டாகினால் அசைய முடியவில்லை. நெருப்புடன் ஒரு மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டு வீட்டை அது தரைமட்டமாக்கியிருந்தது; அதற்கடியில் மில்ட்ரெட் இருந்தாள், அவனுடைய வாழ்க்கை முழுவதும் இருந்தது, அவனால் அசைய முடியவில்லை. அந்த நிலநடுக்கம் இன்ன மும் அவனுக்குள் அதிர்ந்துகொண்டும், விழுந்துகொண்டும், நடுங்கிக் கொண்டும் இருந்தது; அசதி, திகைப்பு, கோபம் இவற்றின் பெரும் சுமையினால் முழங்கால்கள் பாதி மடங்கிய நிலையில், கையைச் சற்றும் தூக்காமலேயே பியாட்டி தன்னை அடிக்க அனுமதித்துக்கொண்டு அவன் நின்றிருந்தான்.

"மோன்டாக், ஏ மடையா, மோன்டாக், சரியான முட்டாள்; நிஜ மாகவே நீ ஏன் இப்படியெல்லாம் செய்தாய்?"

மோன்டாக் காதில் அது விழவில்லை, மிகத் தொலைவில் இருந்தான், தன் எண்ணங்களுடன் ஓடிக்கொண்டிருந்தான், கரும்புகை பூசிய, உயிரற்ற இந்த உடலை மட்டும் ஆவேசமாக அலறும் இன்னொரு முட்டாளுக்கு முன்னால் ஆடிக்கொண்டிருக்க விட்டுவிட்டு, அவன் போய் விட்டிருந்தான்.

"மோன்டாக், அங்கிருந்து போய்விடு," என்றார் ஃபேபர். மோன்டாக் கேட்டுக்கொண்டிருந்தான்.

பியாட்டி அவன் தலையில் போட்ட ஒரு அடியில் அவன் சுழன்று பின் சென்றான். ஃபேபரின் குரல் கிசுகிசுத்தும் கத்திக்கொண்டும் இருந்த அந்தப் பச்சை நிறத் தோட்டா நடைபாதையில் விழுந்தது. பியாட்டி இளித்துக்கொண்டே அதைத் தாவியெடுத்தார். பாதி உள்ளேயும் பாதி வெளியேயும் இருக்கும்படி தன் காதில் அதைப் பிடித்துக்கொண்டிருந்தார்.

தொலைவிலிருந்த குரல் தன்னை அழைப்பதை மோன்டாக் கேட்டான். "மோன்டாக், உனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லையே?"

அந்தப் பச்சைத் தோட்டாவின் குரலை நிறுத்திய பியாட்டி அதைத் தன் பாக்கெட்டில் திணித்துக்கொண்டார். "அப்படியானால்—நான் நினைத்ததைவிட இங்கே ஏதோ கூடுதலாகவே இருக்கிறது. நீ தலையைச் சாய்த்து எதையோ கேட்பதை நான் பார்த்தேன். கிளிஞ்சல் வானொலிச் சாதனம்தான் வைத்திருந்தாயோ என்று நான் முதலில் நினைத்தேன். ஆனால் அதற்குப் பிறகு நீ சாமர்த்தியமாக மாறியபோது, எனக்கு வியப்பாக இருந்தது. நாங்கள் இதனுடைய சுவடைப் பின் தொடர்ந்து, உன் நண்பரைச் சந்திப்போம்."

"இல்லை, கூடாது!" என்றான் மோன்டாக்.

மோன்டாக் தீப்பந்தக் கணையின் பாதுகாப்புக் கொக்கியை விடுவித்தான். பியாட்டி உடனேயே மோன்டாகின் விரல்களை நோக்கிப் பார்வையை வீசினார், அவருடைய கண்கள் சற்று விரிந்தன. அவற்றின் வியப்புணர்ச்சியைப் பார்த்த மோன்டாக், தன்னுடைய கைகள் அப்படிப் புதியதாக என்னதான் செய்துவிட்டன என்று பார்ப்பதற்காக அவனும் அவற்றைப் பார்த்தான். பல நாட்கள் கழித்து அதை நினைவுகூரும்போது, கொலை செய்வதற்கான இறுதி உந்துதலைத் தனக்களித்தது அதே கைகள்தானா அல்லது அந்தக் கைகள் பியாட்டியிடம் தோற்றுவித்த எதிர்வினையா என்று அவனால் ஒருபோதும் அறுதியிட்டுச் சொல்ல முடிந்ததில்லை. நிலச்சரிவில் உருண்டு, அவனைத் தீண்டாமலேயே அவனுடைய காதுகளில் இறங்கிய கடைசி இடியோசை.

தன்னால் முடிந்த மிகக் கவர்ச்சியான இளிப்பையே இம்முறை பியாட்டி செய்தார். "சரிதான், நம் பேச்சைக் கேட்பதற்கு ஆள் சேர்க்க இது ஒரு நல்ல உத்தி. துப்பாக்கி முனையில் ஒரு மனிதனை மடக்கி உன்னுடைய பேச்சைக் கேட்கும்படி வற்புறுத்து. பேசித் தள்ளு. இந்த முறை அது என்னவாக இருக்கப்போகிறது? தடுமாறிக்கொண்டிருக்கும் பெரிய மனுஷா, நீ என்மேல் ஏன் ஷேக்ஸ்பியரைக் கொட்டக் கூடாது? 'உன்னுடைய மிரட்டல்களைக் கண்டு பயம் எதுவுமில்லை, கேஸியஸ், ஏனென்றால் நேர்மை என்ற என் கவசம் மிக வலுவாக இருப்பதால், நான் சற்றும் மதிக்காத வெற்றுக் காற்றைப் போல அவை என்னைக் கடந்து செல்கின்றன.' இது எப்படி இருக்கிறது? அரைகுறைப் படிப்பாளியே, உம், ஆகட்டும், விசையை இழு." மோன்டாகை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தார்.

" நாம் ஒருபோதும் **சரியானவற்றை** எரிக்கவில்லை..." என்று மட்டும் மோன்டாக் சொன்னான்.

"என்னிடம் அதைக் கொடுத்துவிடு, மோன்டாக்," என்றார் பியாட்டி, உறைந்துவிட்ட புன்முறுவலுடன்.

அடுத்து, அவர்மேல் மோன்டாக் திரவ நெருப்பை விடாமல் பொழிந் ததில், பியாட்டி இனியும் மானிட உருவமோ தெரிந்த அடையாளமோ இல்லாமல் புல் தரையில் துடிக்கும் சுவாலையாகக் குதித்துக்கொண்டும் உளறிக்கொண்டும் இருந்த தேன்சிட்டைப் போல், கூச்சலிடும் தீப்பிழம் பாக மட்டுமே இருந்தார். பழுக்கக் காய்ந்த அடுப்பில், வாய் நிறைய இருக்கும் எச்சில் வேகமாக வந்து அடிக்கும்போது, ஒரு ராட்சதக் கறுப்பு நத்தையின் மீது உப்புத் தூளைக் கொட்டுவதால் அது கொப்பளித்து நுரைத்து, மஞ்சள் நுரையில் பொங்கும்போது எழும் 'உஸ்'ஸென்று சீறும் ஒலி எழுந்தது. மோன்டாக் தன் கண்களை மூடிக்கொண்டு, கத்திக் கத்திக் கைகளால் காதுகளை இறுக மூடிக்கொள்ள முயன்று, சத்தத்தைத் துண்டித்துவிடப் போராடினான். பியாட்டி இப்படியும்அப்படியுமாக மாறிமாறித் துள்ளி, கடைசியாக, கருகிவிட்ட மெழுகுப் பொம்மையைப் போலத் தனக்குள்ளேயே சுருண்டு ஓசை எதுவும் எழுப்பாமல் விழுந்து விட்டார்.

மற்ற இரண்டு தியணைப்பாளர்கள் அசையவே இல்லை.

தீப்பந்தக் கணையை எறிவதற்காகக் குறிபார்க்கும்வரை தன்னுடைய குமட்டல் உணர்வை அடக்கிக்கொண்டான். "திரும்புங்கள்!"

வெந்த இறைச்சியைப் போன்ற வெளிறிய முகங்களுடனும், வழிந் தோடிய வியர்வையுடனும் அவர்கள் திரும்பினார்கள்; அவர்களுடைய தலையில் பலமாக அவர்களுடைய தலைக் கவசங்கள் விழும்படி அடித்து,

அவர்களைத் தங்கள் மீதே சரிந்து கீழே விழவைத்தான். அவர்கள் விழுந் தார்கள், விழுந்தவர்கள் அசையாமல் கிடந்தார்கள்.

காற்றில் அடித்துவரப்பட்ட பழுத்த ஒற்றை இலை.

அவன் திரும்பியபோது இயந்திர வேட்டைநாய் அங்கே இருந்தது.

நிழலிலிருந்து கிளம்பி, புல்தரையில் பாதி தூரம் வந்துவிட்டிருந்த அது, அவன் இருந்த திசையை நோக்கிச் சத்தமின்றி முகத்தில் அடிக்கும் பெரிய, அடர்த்தியான கருஞ்சாம்பல் நிறப் புகை-மேகத்தைப் போல ஊசலாடும் லாவகத்துடன் அசைந்து வந்துகொண்டிருந்தது.

இறுதியாக மேலெழும்பி, ஒரே தாவலில் மோன்டாகின் தலைக்கு மேல் மூன்றடி உயரத்திலிருந்து கீழே வந்து, சிலந்திக் கால்கள் நீண்டு, தன்னுடைய ப்ரோகேன் ஊசியின் ஆக்ரோஷமான ஒற்றைப் பல்லைச் சட்டென்று விடுவித்தது. அந்த உலோக நாயைச் சுற்றி, மஞ்சள், நீல, ஆரஞ்சு நிற இதழ்கள் கொண்ட ஒரு அற்புதப் பூங்கொத்தைப் போல இருந்த நெருப்பு மலருக்குள் அதைப் பிடித்து, புதியதொரு கவசத்தை அதற்கு மோன்டாக் அணிவித்த அதே நேரத்தில் அது அவன்மேல் மோதி, தீப்பந்தக் கணையுடன் அவனையும் சேர்த்து பத்து அடி தொலைவி லிருந்த மரத்தின் தண்டுமீது தூக்கியெறிந்தது. நெருப்பு அந்த வேட்டை நாயை ஆகாயத்தில் தூக்கியடித்து, உலோகத்தினால் ஆன எலும்பு மூட்டு களை வெடிக்கச் செய்து, தரையிலேயே பிணைக்கப்பட்ட வாணத்தைப் போல ஒரு பெரிய சிவப்பு நிற ஓட்டத்தில் அதனுடைய உள்உறுப்பு களை வெளியேறச் செய்வதற்கு முன், அந்த நாய் தன்னுடைய கால் களால் துழாவி, அவனுடைய ஒரு காலைப் பற்றி, ஒரு கணம் ஊசி யைச் செலுத்தியது. பாதி உயிருடன் இருந்த அது காற்றில் தன் அங் கங்களை ஆட்டியபடியே இறந்துபோவதைப் படுத்தவாறே மோன்டாக் பார்த்துக்கொண்டிருந்தான். இன்னும் அவன்மேல் பாய்ந்து அவனுடைய கால் சதையில் ஏற்கனவே வேலைசெய்துகொண்டிருந்த மருந்து ஊசியை முழுவதுமாக ஏற்றி முடிக்க அந்த மிருகம் இப்போதும் விரும்பியதைப் போலத் தோன்றியது. மணிக்குத் தொண்ணூறு மைல் வேகத்தில் விரைந்துகொண்டிருந்த காரின் முன்பகுதி முழங்காலில் மட்டும் இடிக்கு மாறு கடைசி நொடியில் தன் காலை இழுத்துக்கொண்டதைப் போன்ற பயத்தையும் ஆசுவாசத்தையும் அவன் உணர்ந்தான். எழுந்து நிற்க பயப் பட்டான், மயக்க மருந்து ஏற்றப்பட்டிருக்கும் காலுடன் எழுந்து காலூன்றி நிற்க முடியாமல் போய்விடுமோ என்று பயந்தான். மரத்து விட்டிருக்கும் ஒன்றுக்குள் குடையப்பட்டு மரத்துவிட்ட உணர்வின் மரத்தல்… …

சரி, இனிமேல்…?

காலியாகிவிட்ட தெரு, பழைய நாடக மேடைக் காட்சி அமைப்பின் ஒரு பகுதியைப் போல எரிந்துபோயிருக்கும் வீடு, இருளில் மற்ற வீடுகள், இங்கே வேட்டைநாய், அங்கே பியாட்டி, இன்னொரு இடத்தில் மற்ற இரண்டு தீயணைப்பாளர்கள், தவிர சலமாண்டர் வண்டி...? அந்தப் பெரிய இயந்திரத்தை வெறித்துப் பார்த்தான். அது அழிந்துபோக வேண்டும், அதுவும்.

சரி, நான் எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறேன் என்று பார்ப் போம், என்று நினைத்தான். எழுந்து நில். மெதுவாக, மெதுவாக... **ஆ, அப்படித்தான்.**

அவன் நின்றான். அவனுக்கு ஒரே ஒரு கால்தான் இருந்தது. தெரிந் திராத ஏதோ ஒரு பாவச் செயலுக்கான பரிகாரமாகத் தான் சுமந்து சென்ற எரிந்த பைன் மரக்கட்டையைப் போல இருந்தது மற்றொரு கால். தன்னுடைய உடலின் கனம் அதன் மேல் விழுந்தபோது, கெண்டைக் கால் வழியே வெள்ளி ஊசிகள் மழைபோல் பொழிந்து முழங்கால் வழியே வெளியேறின. அவன் அழுதான். சீக்கிரம்! சீக்கிரம் ஆகட்டும், இங்கேயே நீ இருக்கக் கூடாது!

சில வீடுகளிலிருந்து விளக்கு வெளிச்சம் மீண்டும் தெருவில் பாய ஆரம்பித்தது; அது இப்போது நடந்து முடிந்த நிகழ்வுகளாலா அல்லது சண்டை ஓய்ந்து நிலவிய அசாதாரண மௌனத்தாலா என்பது மோன் டாகுக்குத் தெரியவில்லை. மோசமான கால் பின்தங்கியபோது அதைப் பிடித்துக்கொண்டும், பேசி முனகி, கத்தி அதற்குக் கட்டளைகளைப் பிறப்பித்தபடியும், இப்போது அவனுக்கு அத்தியாவசியமாக இருக்கும் போது அது சரியாக இயங்க வேண்டும் என்று திட்டியும், மன்றாடியும் இடிபாடுகளுக்கிடையே நொண்டிக்கொண்டே போனான். இருட்டில் நிறைய பேர் கூப்பாடு போட்டுக்கொண்டும் கத்திக்கொண்டும் இருப் பதைக் கேட்டான். வீட்டின் பின்புறத்தை அடைந்து, சிறிய சந்துக்கு வந்தான். பியாட்டி, இனி நீங்கள் ஒரு பிரச்சினை அல்ல என்று தனக்குள் நினைத்துக்கொண்டான். பிரச்சினையை எதிர்கொள்ளாதே, எரித்துவிடு என்று நீங்கள் எப்போதும் சொல்வீர்கள். ஆகவே, இப்போது நான் இரண்டையுமே செய்துவிட்டேன். போய்வாருங்கள், கேப்டன்!

இருளில் அந்தச் சிறிய சந்து வழியே தடுமாறிக்கொண்டே போனான்.

தன்னுடைய காலைக் கீழே வைக்கும் ஒவ்வொரு முறையும் துப் பாக்கிக் குண்டு காலில் வெடித்ததைப் போல உணர்ந்தான். தனக்குள் நினைத்துக்கொண்டான்: நீ ஒரு முட்டாள், மோசமான முட்டாள், அசிங்கமான முட்டாள், மடையன், அசிங்கமான மடையன், மோசமான மடையன், முட்டாள், கேடுகெட்ட முட்டாள்; இங்குள்ள அசிங்கத்தைப்

பார், வீடு துடைக்கும் துணி எங்கே, இந்த அசிங்கத்தைப் பார், என்ன செய்யப்போகிறாய்? கர்வம், நாசமாய்ப்போக, போதாக்குறைக்கு முன் கோபம், நீ எல்லாவற்றையும் கெடுத்துவிட்டாய். ஆரம்பத்திலிருந்தே எல்லோர் மேலும், உன் மேலும் வாந்தியெடுத்துவிட்டாய். ஆனால் எல்லாமே ஒரே சமயத்தில், எல்லாமே ஒன்றன் மேல் ஒன்றாக, பியாட்டி, அந்தப் பெண்கள், மில்ட்ரெட், க்லாரிஸ், எல்லாமே. இருந்தாலும் சொல்வதற்கு உனக்குச் சாக்கு எதுவுமில்லை. முட்டாள், கேடுகெட்ட முட்டாள், போய் சரணடைந்துவிடு.

இல்லை, எதெல்லாம் முடியுமோ, அதையெல்லாம் காப்பாற்றுவோம், இன்னும் என்ன மிஞ்சியிருக்கிறதோ, அதைச் செய்வோம். எரித்துத்தான் ஆக வேண்டுமென்றால், இன்னும் சிலவற்றை நம்முடன் எடுத்துச்செல்வோம்.

தோட்டத்தில் வேலி அருகே, அவன் விட்டுச் சென்றிருந்த இடத்திலேயே சில புத்தகங்களைப் பார்த்தான். மில்ட்ரெட், இறைவன் அவளைக் காப்பாற்றுவாராக, சில புத்தகங்களை விட்டுவைத்திருந்தாள். அவன் வைத்த இடத்திலேயே ஒளிந்தபடி இன்னும் நான்கு புத்தகங்கள் இருந்தன. இரவில் பல குரல்கள் கூக்குரலிட, பிரகாசமான ஒளிக் கற்றைகள் சுற்றிச்சுற்றி வந்தன. இன்னும் சில சலமாண்டர் வண்டிகள், அவற்றின் இன்ஜின்களுடன் தொலைவில் கர்ஜித்தன. காவலர் ஊர்திகள் தங்களுடைய சங்குகளை ஒலித்தபடி நகரில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தன.

அந்த நான்கு புத்தகங்களையும் எடுத்துக்கொண்ட மோன்டாக், குறுகிய சந்து வழியே தத்தித்தத்தி, தூக்கித்தூக்கிப் போட்டு, தத்தியபடி, ஏதோ திடீரென்று அவனுடைய தலை துண்டிக்கப்பட்டு உடல் மட்டும் அங்கேயே கிடப்பதைப் போலக் கீழே விழுந்தான். விழுந்த இடத்திலேயே, சரளைக் கற்கள்மீது, கண்மூடித்தனமாக முகத்தைப் புதைத்து, கால்களை மடக்கி, விம்மிக்கொண்டே கிடந்தான்.

பியாட்டி சாக விரும்பினார்.

அவனுடைய அழுகைக்கும் நடுவில் உண்மை அதுதான் என்று மோன்டாகுக்குத் தெரிந்தது. பியாட்டி சாக வேண்டும் என்று விரும்பியிருந்தார். அங்கே சும்மா நின்றுகொண்டு, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயலாமல், வெறுமனே தமாஷ்செய்துகொண்டும், உசுப்பிவிட்டுக்கொண்டும் நின்றார் என்று அவன் நினைத்தான்; அந்த நினைப்பே அவனுடைய விம்மலை அமுக்கி நிறுத்தி, மூச்சு விட சிறிது அவகாசம் அளித்தது. ஆயுதம் தாங்கிய ஒருவன் தன்னைச் சுற்றி நடந்து வருவதைக் கண்டுகொள்ளாமல், உயிரோடு பிழைத்திருப்பதற்காக வாயை மூடிக்

கொண்டு இருப்பதற்குப் பதிலாக, மற்றவர்களுக்குக் கோபம் தலைக் கேறும்வரை அவர்களைப் பார்த்துக் கத்தியும், கிண்டல்செய்துகொண் டும். பிறகு... சாவை எந்த அளவுக்கு அவர் தேடிப்போயிருக்கிறார் என்பது எவ்வளவு வியப்பாக இருக்கிறது!

சற்றுத் தொலைவில், ஓடும் கால்களின் ஓசை.

மோன்டாக் எழுந்து உட்கார்ந்தான். இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும். சரி, ஆகட்டும், எழுந்திரு, எழுந்து நில், நீ வெறுமனே உட் கார்ந்துகொண்டே இருக்க முடியாது! ஆனால் அவன் இன்னும் அழுது கொண்டே இருந்தான், முதலில் அழுது முடிக்க வேண்டும். அது கொஞ் சம்கொஞ்சமாக நின்றுகொண்டிருந்தது. அவன் எவரையும் கொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை, பியாட்டியையும் கூடத்தான். அவ ருடைய சதை அவரை இறுகப் பற்றி, அமிலம் ஒன்றில் முக்கியெடுத்த தைப் போலச் சுருங்கியது. வாயடைத்து நின்றான். புல் தரையில் அசையா மல், படபடத்து மடிந்துகொண்டிருந்த பியாட்டியையும், தீப்பந்தத்தை யும் பார்த்தான். தன் மணிக்கட்டைக் கடித்துக்கொண்டான். மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும், கடவுளே மன்னிக்க வேண்டும்...

அவன் நடந்த எல்லாவற்றையும் ஒருவாறு புரிந்துகொள்ள முயன் றான்; குறுகிய அந்தச் சில நாட்களுக்கு முந்தைய வழக்கமான பழைய வாழ்க்கை நியதிக்குத் திரும்பிப் போக முயன்றான்: சல்லடைக்கும் மண லுக்கும், டென்ஹாமின் பற்பசை, விட்டில் பூச்சிக் குரல்கள், மின்மினிப் பூச்சிகள், அபாய மணி அறிவிப்புகள், அதைத் தொடர்ந்து வெளியே போனது—இந்தக் கடந்த சில குறுகிய நாட்களில் நிறையவே நடந்துவிட்டன; நிச்சயமாக, ஒரு வாழ்நாள் முழுவதற்குமே.

குறுகிய சந்துக்கு முன்னால் கால்கள் ஓடும் சத்தம்.

"எழுந்து நில்," தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். "அட கஷ் டமே, எழுந்து நில்லுங்கள்!" என்று தன் கால்களிடம் சொல்லிவிட்டு, பிறகு நின்றான். அவனுடைய வலிகள் முட்டியில் அறையப்பட்ட ஆணி களாக, பிறகு தையல் ஊசிகளாக, பிறகு சட்டையில் குத்திக்கொள்ளும் சாதாரண ஊசிகளாக மாறின; பின்னர் ஒரு ஐம்பது முறை தத்திக் குதித்து, வேலியிலிருந்த சிறுசிறு சிலாம்புகள் தன் கைகளில் நிரம்பி யிருக்க, கொதிக்கும் நீரை யாரோ அந்தக் கால்மீது பீச்சியடித்ததைப் போல அந்தக் குத்துவலி மாறியது. ஒருவழியாக அந்தக் கால் அவனு டைய சொந்தக் காலாக ஆகிவிட்டது. ஓடும்போது, 'லொடலொட' வென்று இருந்த அவனுடைய கணுக்கால் உடைந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருந்தான். இப்போது இரவின் இருளை முழுமையாக உள்ளிழுத்துக்கொண்டு, வெளிறிய மூச்சாக அதை வெளியே விட்டுக்

கொண்டிருந்ததால், எல்லாவிதக் கருமையும் பெரும்சுமையாக அவனுள் இருக்க, சீரான கதியில் கிளம்பி அவன் ஓடினான். புத்தகங்களைக் கையில் வைத்துக்கொண்டிருந்தான்.

ஃபேபரை மனதில் நினைத்துக்கொண்டான்.

உருகி, ஆவி கிளம்பிக்கொண்டிருந்த தாருக்கு மத்தியில் பெயரோ அடையாளமோ இல்லாத நிலையில் ஃபேபர் அங்கே இருந்தார். அவன் ஃபேபரையும் எரித்துவிட்டான். அந்தச் சிறிய பச்சை நிறக் குப்பிக்குள் கரப்பான் பூச்சியைப் போலச் சுட்டுப் பொசுங்கி, தாரால் ஆன தசை நாண்களால் இழுத்துக் கட்டப்பட்ட எலும்புக் கூடாக மட்டுமே இருந்த மனிதரின் சட்டைப் பாக்கெட்டுக்குள் திணிக்கப்பட்டுத் தொலைந்து போய்விட்ட ஃபேபர் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்று அவன் நினைத்தபோது அவன் திடீரென்று அதிர்ச்சியடைந்தான்.

அவர்களை நீ எரி, இல்லாவிட்டால், உன்னை அவர்கள் எரித்துவிடு வார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று நினைத்தான். இந்தத் தருணத்தில், எதுவுமே அவ்வளவு எளிதாகத்தான் இருந்தது.

தன்னுடைய பாக்கெட்டுக்குள் துழாவினான், பணம் அங்கேயே இருந்தது. குளிர்ந்த இருண்ட காலை வேளையில் அந்த நகரம் தனக்குத் தானே பேசிக்கொள்ளும் வழக்கமான கிளிஞ்சல் வானொலி இன்னொரு பாக்கெட்டில் இருந்தது.

"காவல்துறை அறிவிப்பு: காணவில்லை—நகரில் தப்பியோடிக்கொண் டிருக்கும் குற்றவாளி. கொலையும் தேசவிரோதக் குற்றங்களும் செய்த வன். பெயர்: கை மோன்டாக். தொழில்: தீயணைப்பவன். இதற்கு முன் கடைசியாகப் பார்த்த... "

குறுகிய சந்தில் ஆறு கட்டடங்களைக் கடந்து ஒரே சீராக அவன் ஓடி னான். பத்துத் தடங்கள் அகலத்தில், ஆளற்ற பெருஞ்சாலையில் அந்தச் சந்து கொண்டுபோய் விட்டது. உயரத்திலிருந்த விளக்குகளின் கண் கூசும் வெண்மையான பிரகாசத்தில் படகுகள் இல்லாத, உறைந்துவிட்ட நதி யைப் போல அந்தப் பெருஞ்சாலை இருந்தது; அதைக் கடக்க முயன்றால் மூழ்கிவிட நேரும் என்று அவனுக்குப் பட்டது; அவ்வளவு விசாலமாக, அவ்வளவு பரந்து இருந்தது. குறுக்கே ஓடும்படி தனக்கு அழைப்பு விடுத்த, காட்சியமைப்பு எதுவுமற்ற பிரம்மாண்ட மேடை; கண் கூசும் ஒளி வெள்ளத்தில் எளிதில் அவனைப் பார்த்து, எளிதில் அவனைப் பிடித்து, எளிதில் அவனைக் கொல்ல உதவும் மேடை.

கிளிஞ்சல் வானொலி காதுகளில் முணுமுணுத்தது.

"... தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் மனிதன் எங்கே தென்படுகிறான் என்று கவனமாகப் பாருங்கள்... தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் மனிதன்

எங்கே தென்படுகிறான் என்று கவனமாகப் பாருங்கள்... தனியாக ஓடும் மனிதன்... கவனம்..."

மோன்டாக் நிழலில் ஒதுங்கினான். நேர் எதிரே பெட்ரோல் நிலையம் ஒன்று இருந்தது: ஒரு பெரிய பீங்கான் பனிக்கட்டி ஒளிர்ந்துகொண்டிருக்க, இரண்டு வெள்ளி நிற வண்டுக் கார்கள் பெட்ரோல் நிரப்பிக்கொள்வதற்காக வந்து நின்றன. ஓடாமல் மெதுவாக நடந்து, அகலமான அந்தப் பாதையின் குறுக்கே பதற்றமில்லாமல் போக விரும்பினால், அதற்கு அவன் சுத்தமாக, பார்க்கும்படியாகத் தோன்ற வேண்டும். தன் பாதையில் தொடர்ந்து போவதற்கு முன்னால், முகம், கை கால் கழுவி, தலையை வாரிக்கொண்டால் இன்னும் சற்றுப் பாதுகாப்புடன் போக முடியும், ஆனால் எங்கே போவது...?

ஆமாம், நான் எங்கே **ஓடிக்கொண்டிருக்கிறேன்**? என்று நினைத்தான்.

எங்குமில்லை. போவதற்கு இடமிருக்கவில்லை, ஆதரவளிக்க நண்பர் இல்லை, உண்மையிலேயே, ஃபேபரைத் தவிர. பார்க்கப்போனால் உள்ளுணர்வினால் உந்தப்பட்டு அவன் ஃபேபரின் வீட்டை நோக்கித்தான் ஓடிக்கொண்டிருந்தான் என்பதைப் பின்னர் உணர்ந்தான். ஆனால் ஃபேபரால் அவனை ஒளித்து வைக்க முடியாது; அதற்கு முயல்வதேகூடத் தற்கொலைக்குச் சமமாக ஆகிவிடும். இருந்தபோதிலும், சில நிமிடங்களுக்காகவாவது அவரைப் பார்க்கப் போவான் என்று அவனுக்குத் தெரியும். உயிர் பிழைத்திருக்கத் தனக்கிருந்த திறமையில் தற்போது வேகமாகத் தீர்ந்துகொண்டுவந்த நம்பிக்கை என்ற எரிபொருளை நிரப்பிக்கொள்ளப் பொருத்தமான இடம் ஃபேபரின் வீடுதான். ஃபேபரைப் போல ஒரு மனிதர் இந்த உலகில் இருந்தார் என்பதைத் தெரிந்துகொள்ளவாவது விரும்பினான். உடல் என்ற கூட்டில் அடைத்து வைக்கப்பட்டு எரிந்துபோய் அங்கேயிருந்த இன்னொரு உடலைப் போல அல்லாமல், உயிருடன் இருந்த அந்த மனிதரைப் பார்க்க விரும்பினான். தவிரவும், தன் வழியில் தான் ஓடிப்போய்விட்ட பிறகு, இன்னும் செலவுக்குத் தன்னிடமிருந்த பணத்தை ஃபேபரிடம் கொடுத்துவிட வேண்டும். கிராமப்புறத்தின் திறந்த வெளிக்குச் சென்று, நதியிலோ அதற்கு அருகிலோ அல்லது நெடுஞ்சாலையை ஒட்டிய வயல்களிலோ, குன்றுகளிலோ வாழலாம்.

வானத்தில் சுழன்றுகொண்டிருந்த பெரிய முணுமுணுப்பொலி ஒன்று அவனை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

காவல்துறை ஹெலிகாப்டர்கள் அவ்வளவு தொலைவில் கிளம்பிக்கொண்டிருந்ததால் காய்ந்த டான்டிலியன் மலரின் சாம்பல் நிற இதழ்களை யாரோ பலமாக ஊதிவிட்டிருந்ததைப் போலத் தோன்றியது. மூன்று மைல்களுக்கு அப்பால், நிச்சயமின்றி, இங்குமங்குமாக இரண்டு

டஜன் ஹெலிகாப்டர்கள் இலையுதிர் காலத்தில் வியப்படைந்த பட்டாம் பூச்சிகளைப் போல அலைந்தன; பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக, இங்கு மங்குமாக டமாலென்று தரையில் இறங்கி, சிறிய கார்களாக மாறி, அகன்ற தெருக்களைப் பிசைவதுபோல் அங்கும்இங்கும் நகர்ந்து, கிறிச் சிட்டுக்கொண்டும், அல்லது திடீரென்று உயரத் தாவித் தங்களுடைய தேடலைத் தொடர்ந்துகொண்டும் இருந்தன.

இதோ இங்கே ஒரு பெட்ரோல் நிலையம். அதன் ஊழியர்கள் வாடிக் கையாளர்களைக் கவனிப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். நிலையத் தின் பின்புறமாக வந்த மோன்டாக், ஆண்கள் குளியலறையில் நுழைந் தான். வானொலிக் குரல் ஒன்று அங்கிருந்த தடுப்புச் சுவர் ஊடாகக் கேட்கும் வகையில், "போர் அறிவிக்கப்பட்டுவிட்டது" என்றது. வெளியே குழாய் வழியாக பெட்ரோல் செலுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. வண்டிக் கார்களில் இருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்க, ஊழியர்க ளும் கார் இன்ஜின், பெட்ரோல், செலுத்தப்பட வேண்டிய பணம் இவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வானொலியின் சாவ தானமான அறிவிப்பின் அதிர்ச்சியைத் தனக்குள் உணர மோன்டாக் முயன் றாலும், முடியவில்லை. அவனுடைய கோப்பில் இடம்பெறுவதற்குப் போர் இன்னும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டும்.

சத்தம் எதுவும் எழாமல் தன் முகத்தையும் கைகளையும் கழுவிக் கொண்டு ஈரம் போகும்படி துண்டால் துவட்டிக்கொண்டான். குளிய லறையிலிருந்து வெளியே வந்து, கதவைக் கவனமாகச் சாத்திவிட்டு, இரு ளுக்குள் நடந்து போனான். இறுதியாக மீண்டும், ஆளரவமின்றி இருந்த அகன்ற சாலையின் ஓரத்தில் வந்து நின்றான்.

அவன் விளையாடி வெற்றிபெற வேண்டியிருந்த பௌலிங் விளை யாட்டுத் தடம் குளிர்ந்த காலைப் பொழுதில் அங்கே இருந்தது. அடை யாளம் தெரியாத சில கொல்லிகளும் சில பெயரற்ற பலிகளும் வருவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்பாக இருக்கும் களத்தின் பரப்பைப் போல அந்த அகன்ற சாலை சுத்தமாக இருந்தது. பரந்த அந்த கான்கிரீட் நதி யின் மேலேயும், சுற்றியும் இருந்த காற்று மோன்டாகின் உடலிலிருந்து கிளம்பிய வெதுவெதுப்பில் நடுங்கியது. தன்னைச் சூழ்ந்திருந்த உலகம் முழுவதையும் தன் உடல் வெப்பம் எப்படி அதிரச் செய்தது என்பதை உணர்ந்தான் என்பதே நம்ப முடியாமல் இருந்தது. இருளில் ஒளிரும் ஒரு இலக்காக அவன் இருந்தான்; அவனுக்கு அது தெரிந்திருந்தது, அதை உணர்ந்தான். அவனுடைய சிறிய நடைப் பயணத்தை இப்போது அவன் தொடங்க வேண்டும்.

மூன்று பெரிய கட்டடங்களைத் தாண்டியதும் சில கார் விளக்குகள் பளிச்சிட்டன. மோன்டாக் மூச்சை நன்றாக இழுத்துப் பிடித்தான். தன்னுடைய நெஞ்சில் தணல் வீசும் கரிகளாக அவனுடைய நுரையீரல்கள் இருந்தன. ஓடியதால் அவனுடைய வாய் வறண்டுவிட்டிருந்தது. ரத்தத்தில் தோய்ந்த இரும்பைப் போலத் தொண்டையில் ஒரு சுவை. துருப் பிடித்த எஃகாகப் பாதங்கள்.

சரி, அதோ, அந்த விளக்குகளை எப்படிச் சமாளிப்பது? நடக்க ஆரம்பித்துவிட்டால், அந்த வண்டுக் கார்கள் எவ்வளவு விரைவில் இதுவரை வரக்கூடும் என்று கணிக்க வேண்டும். எதிர்ப் பக்கம் நடைபாதையின் விளிம்பு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? கிட்டத்தட்ட நூறு கஜம் போலத் தோன்றியது. நூறாக இல்லாமலும் இருக்கலாம், அப்படியே இருக்கும் என்று வைத்துக்கொள்வோம், மெதுவாக, சாவகாசமாக நடந்தால் அவ்வளவு தூரம் நடந்து போக முப்பது அல்லது நாற்பது நொடிகள் ஆகலாம். அந்தக் கார்கள்? அவர்கள் கிளம்பிவிட்டால் அந்த மூன்று பெரிய கட்டடங்களைப் பதினைந்து நொடிகளில் கடந்துவிடுவார்கள். ஆகவே, பாதி தூரம் கடந்து போன பிறகு அவன் ஓட ஆரம்பித்தால்...?

அவன் முதலில் வலது காலை எடுத்து வைத்துப் பிறகு இடது காலையும், மீண்டும் வலது காலையும் எடுத்து வைத்தான். காலியாக இருந்த சாலையில் நடந்தான்.

சாலை முற்றிலும் காலியாக இருந்தாலும்கூட பாதுகாப்பாகக் கடக்க முடியும் என்பது நிச்சயமில்லைதான். ஏனென்றால், நான்கு பெரிய கட்டடங்களுக்கு அப்பாலிருந்து மேட்டில் ஏறி வரும் கார் ஒன்று ஒரு மனிதர் மீது, அவர் பன்னிரெண்டு முறை மூச்சுவிடுவதற்குள், ஏறி அவரைக் கடந்து சென்றுவிடக்கூடும்.

எடுத்து வைக்கும் எட்டுகளை எண்ணப்போவதில்லை என்று முடிவு செய்தான். இடது புறமோ, வலது புறமோ திரும்பிப் பார்க்கக்கூட இல்லை. தலைக்கு மேலே இருந்த விளக்குகளின் ஒளி நண்பகல் சூரியன் அளவுக்கு வெளிச்சம் அளித்தபடியும், எதையும் மறைக்க முடியாமலும், அதே அளவுக்குச் சூடாகவும் இருந்தது.

அவனுக்கு வலது புறத்தில் இரண்டு பெரிய கட்டடங்களுக்கு அப்பால் கார் ஒன்றின் வேகம் அதிகரிக்கப்படும் சத்தம் கேட்டது. திருப்பும் வசதி கொண்ட கார் விளக்கு முன்னும்பின்னுமாக அசைந்து திடீரென்று மோன்டாகைக் கண்டுபிடித்தது.

போய்க்கொண்டே இரு.

மோன்டாக் சற்றுத் தடுமாறினான், புத்தகங்களை இறுகப் பற்றி, உறைந்துபோகாமல் இருக்கத் தன்னைத் தயார்செய்துகொண்டான். உள்

ஞுணர்வின் உந்துதலில் சில துரித எட்டுகள் எடுத்து வைத்து, ஓடி, பிறகு சத்தமாகத் தனக்குத் தானே பேசிக்கொண்டு, மீண்டும் சாவதானமாக நடக்க ஆரம்பித்தான். இப்போது அவன் சாலையில் பாதி தூரம் வந்து விட்டிருந்தான், ஆனால் வேகத்தை அதிகரித்த அந்த வண்டுக் கார் எஞ்சின் இன்னும் பெரிதாக உறுமியது.

காவல்துறையினர்தான், நிச்சயமாக. அவர்கள் என்னைப் பார்க்கிறார்கள். ஆனால் மெதுவாக, இப்போது மெதுவாக, அமைதியாக, ஓடாதே, பார்க்காதே, எதைப் பற்றியும் கவலைப்படாதவனைப் போல் இரு. நட, ஆமாம் அப்படித்தான், நட, நட....

அந்த வண்டுக் கார் விரைந்துகொண்டிருந்தது. வண்டுக் கார் கர்ஜித்தது. வண்டுக் கார் வேகத்தைக் கூட்டியது. வண்டுக் கார் முனகியது. வண்டுக் கார் இடியாக முழங்கியது. வண்டுக் கார் சாலைக்குச் சற்று மேலாகப் பறந்து வந்தது. வண்டுக் கார் பார்வைக்குப் புலப்படாத ஏதோ துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டதைப் போல், நேரே, ஊதல் சத்தத்துடன் பறந்து வந்துகொண்டிருந்தது. மணிக்கு 120 மைல் வேகத்தில் வந்தது. அல்லது குறைந்தபட்சம் 130 மைல் வேகத்தில். மோன்டாக் தாடைகளை இறுக்கிக்கொண்டான். விரைந்துகொண்டிருந்த வண்டி விளக்குகளின் வெப்பம் தன்னுடைய கன்னங்களை எரித்து, இமைகளைத் துடிக்க வைத்து, தன் உடல் முழுவதிலிருந்தும் உப்பு வியர்வையை வெளியேற்றிக்கொண்டிருந்ததைப் போல அவனுக்குத் தோன்றியது.

அவன் முட்டாள்தனமாக முன்னும்பின்னுமாகத் தயங்கி, காலை இழுத்துவைத்து, தனக்குத் தானே பேச ஆரம்பித்து, திடீரென்று நிறுத்தி, ஓடத் தொடங்கினான். கால்களைத் தன்னால் முடிந்த அளவு எட்டிப் போட்டு, கீழே கொண்டுவந்து, மறுபடியும் நீட்டி, கீழே கொண்டு வந்து, பின்னுக்கு இழுத்து, மீண்டும் நீட்டி, கீழே கொண்டுவந்து, பின்னுக்கு இழுத்து... அட கடவுளே! புத்தகம் ஒன்றைக் கீழே நழுவ விட்டுவிட்டான், வேகத்தைக் குறைத்தான், கிட்டத்தட்ட திரும்பினான், பிறகு மனம் மாறி முன்நோக்கி விரைந்தான். கான்கிரீட் வெறுமையில் கத்திக்கொண்டு, ஓடும் இரைக்குப் பின்னால் வண்டுக் கார் துரத்த, இரு நூறு, நூறு அடிகளுக்கு அப்பால், தொண்ணூறு, எண்பது, எழுபது அடிகளே இருக்க, மோன்டாகுக்கு மூச்சிரைக்க, கைகளை வீசிக்கொண்டு, கால்களை உயர்த்தி நீட்டிக் கீழே கொண்டுவந்து, கார் இன்னும் அருகே, அருகே, ஒலியெழுப்பி அழைக்க, பளிச்சிடும் அதன் ஒளியை நேருக்கு நேர் பார்ப்பதற்காகத் தலையை ஆட்டிய அவனுடைய கண்கள் எரிச்சலடைந்து கூசின; இப்போது வண்டுக் காரை அதன் ஒளியே விழுங்கியது. இப்போது அது அவன்மேல் பாய்ந்த ஒளி வெள்ளமாக மட்டுமே

இருந்தது; ஒரே சத்தம், ஒரே இரைச்சல். இப்போது—கிட்டத்தட்ட அவன் மேலேயே!

தடுமாறிக் கீழே விழுந்தான்.

தொலைந்தேன்! எல்லாமே முடிந்துவிட்டது!

ஆனால் விழுந்தது எல்லாவற்றையும் வேறு விதமாகத் திருப்பிவிட்டது. அவனை எட்டிப் பிடிப்பதற்கு ஒரு கண நேரத்துக்கு முன்னால், அந்த முரட்டு வண்டுக் கார் ஒடித்துத் திசை திரும்பிவிட்டது. அங்கிருந்து போய்விட்டிருந்தது. தலையைக் குப்புற வைத்துத் தரையோடு தரையாக மோன்டாக் கிடந்தான். வண்டுக் காரிலிருந்து வெளிப்பட்ட நீலநிறக் கழிவுப் புகையுடன் சிரிப்பலைகள் அவன் இருந்த திசையை நோக்கி வந்தன.

தரையை ஒட்டி அவனுடைய வலது கை நீண்டிருந்தது. தன் கையை அவன் உயர்த்திப் பார்க்கும்போது அவனுடைய நடு விரலின் நுனி முடிந்த இடத்தில், ஒரு அங்குலத்தில் பதினாறு பங்கு தூரத்தில் அவனைக் கடந்துபோன கார் டயரின் அடையாளம் தெளிவற்ற கறுப்புக் கோடாகத் தென்பட்டது. எழுந்து நின்றபோது, நம்ப முடியாத வியப்புடன் அந்தக் கறுப்புக் கோட்டைப் பார்த்தான்.

அது காவல்துறை வண்டி இல்லை என்று நினைத்தான்.

அகன்ற அந்தத் தெருவைப் பார்த்தான். இப்போதுதான் அவனுக்குத் தெளிவாயிற்று. காருக்குள் விசிலடித்துக்கொண்டும், கத்திக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டும் பல வயதிலும், பன்னிரெண்டு முதல் பதினாறு வரை இருக்கலாம், ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம், இருந்த சிறுவர்கள் அசாதாரணமான காட்சியொன்றை, அபூர்வமாக மனிதன் ஒருவன் நெடுஞ்சாலையில் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்து, தப்பியோடிக் கொண்டிருக்கும் மோன்டாக் அவன்தான் என்பது தெரியாமல், 'அவன் மேல் மோதுவோமா' என்று மட்டும் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள். இரவில் ஐநூறு அல்லது அறுநூறு மைல் தூரம் நிலவொளியில், குளிர்ந்த காற்று முகத்தில் அடிக்க, சில மணி நேரம் காரில் விரைந்து, விடியும்போது உயிருடனோ அல்லது உயிரில்லாமலோ, திரும்பி வருவதோ அல்லது வராமல் போய்விடுவதோதான் அவர்களுடைய வீர சாகச விளையாட்டு.

கிழிப்பட்டுத் தூசியில் இன்னமும் அதிர்ந்து, காயமடைந்த அவனுடைய கன்னத்தை வருட, சற்றே சாய்ந்திருந்த மோன்டாகுக்கு அவர்கள் தன்னைக் கொன்றுவிட்டிருக்கக்கூடும் என்று தோன்றியது. சுத்தமாக, எந்தவிதக் காரணமும் இல்லாமலே அவர்கள் என்னைக் கொன்றிருப்பார்கள்.

தொலைவிலிருந்த நடைபாதை விளிம்புவரை நடந்துகொண்டே இருக்கும்படி தன் கால்களைப் பணித்துக்கொண்டே நடந்தான். இறைந்த புத்தகங்களை எப்படியோ பொறுக்கியெடுத்திருந்தான்; தான் குனிந்ததாகவோ, அவற்றைத் தொட்டதாகவோ அவனுக்கு நினைவில் இல்லை. தன் கையிலிருந்த, தனக்குப் புரியாத போக்கர் விளையாட்டுச் சீட்டுகளைப் போல அவற்றை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு மாற்றியபடி இருந்தான்.

க்லாரிஸைக் கொன்றது அவர்களாக இருக்கலாமோ என்று எனக்குத் தோன்றுகிறது.

அவன் நின்றான், அவனுடைய மனம் மீண்டும் அதையே உரக்கச் சொன்னது.

க்லாரிஸைக் கொன்றது அவர்களாக இருக்கலாமோ என்று எனக்குத் தோன்றுகிறது!

கத்திக்கொண்டே அவர்களுக்குப் பின்னால் ஓட விரும்பினான்.

கண்களில் நீர் வடிந்தது.

தரையோடு ஒட்டிப் படுத்ததுதான் அவனைக் காப்பாற்றியிருந்திருக்கிறது. மோன்டாக் படுத்திருந்ததைப் பார்த்த ஓட்டுநர், கார் போன வேகத்தில் படுத்திருக்கும் உடலின் மேல் ஏற்றினால் அது அந்தக் காரையே கவிழ்த்துவிட்டு அதிலிருந்தவர்களை வெளியே தூக்கியெறிந்துவிடக் கூடிய சாத்தியக்கூறைத் தன் உள்ளுணர்வு மூலம் உணர்ந்திருந்தார். நிமிர்ந்து நிற்கும் ஒரு இலக்காக மோன்டாக் இருந்திருந்தால்...?

மோன்டாகுக்கு மூச்சுத் திணறியது.

அகன்ற சாலையில் வெகு தூரத்துக்கு அப்பால் நான்கு பெரிய கட்டடங்களைத் தாண்டி வண்டுக் கார் வேகத்தைக் குறைத்து, இரண்டு சக்கரங்களால் திரும்பி இப்போது சாலையின் எதிர்த் திசையில் சாய்வாக வேகத்தை அதிகரித்து விரைந்தது.

ஆனால் மோன்டாக் அங்கிருந்து போய்விட்டிருந்தான், எந்தச் சந்தின் பாதுகாப்பை நாடி நீண்ட பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தானோ அங்கே மறைந்துவிட்டான், ஒரு மணியா அல்லது ஒரு நிமிஷத்துக்கு முன்பா? வண்டுக் கார் விரைந்து சாலையின் மையப் பகுதிக்குச் சறுக்கிக்கொண்டே வந்து சுற்றிலும் சிரிப்பலைகளைக் கிளப்பியபடி போய்விட்டதைத் திரும்பிப் பார்த்து, அந்த இரவில் நடுங்கியபடி அவன் இருந்தான்.

இருளிலேயே இன்னும் கொஞ்ச தூரம் போன பிறகு தொலைவில், இனி வரப்போகும் நீண்ட பனிக் காலத்தின் முதல் பனித்துகள்கள் விழுவதைப் போல ஹெலிகாப்டர்கள் இறங்குவதைப் பார்த்தான்...

அந்த வீடு அமைதியாக இருந்தது.

வீட்டின் பின்புறமாக, இரவின் கனத்த ஈரத்தில் நனைந்து, டாஃபடில்ஸ், ரோஜா மலர்களிலிருந்தும் ஈர மண்ணிலிருந்தும் கிளம்பிய வாசனையினூடே ஊர்ந்தபடி மோன்டாக் வீட்டை நெருங்கினான். பின் புறமிருந்த திரைக் கதவைத் தொட்டான், அது மூடப்படாமலிருந்ததைப் பார்த்தான், உள்ளே நழுவினான், உன்னிப்பாகக் கேட்டபடி நிழற்குடையின் கீழ் நடந்தான்.

திருமதி ப்ளாக், நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கிறீர்களா? என்று நினைத்தான். இது சரியில்லைதான், ஆனால் உங்களுடைய கணவர் மற்றவர்களுக்கு இதைத்தான் செய்தார், ஆனால் ஒருபோதும் அதைக் குறித்துக் கேள்வி கேட்கவோ, வியப்படையவோ, கவலைப்படவோ இல்லை. இப்போது நீங்கள் தீயணைப்பவர் ஒருவரின் மனைவியாதலால், சற்றும் யோசிக்காமல் உங்கள் கணவர் இதுவரை எரித்திருந்த வீடுகளுக்குப் பதிலாக, அவர் புண்படுத்திய மக்களுக்குப் பதிலாக, இப்போது உங்களுடைய முறை, உங்களுடைய வீடு.

வீட்டிலிருந்து பதில் இல்லை.

புத்தகங்களை அவன் சமையலறையில் ஒளித்து வைத்துவிட்டு, வீட்டிலிருந்து மீண்டும் பின்புறச் சந்துக்கு வந்து திரும்பிப் பார்த்தான்; வீடு இருளில் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது.

நகரத்தின் குறுக்கே போன வழியில், கிழிந்த காகிதத் துண்டுகளைப் போல ஹெலிகாப்டர்கள் வானத்தில் படபடத்துக்கொண்டிருக்க, இரவு நேரம் என்பதால் மூடியிருந்த ஒரு கடையின் வாசலில் இருந்த தொலைபேசிக் கூண்டிலிருந்து அபாய அறிவிப்பைத் தொலைபேசி மூலமாகச் சொன்னான். பிறகு தீயணைப்பு நிலையச் சங்குகள் ஒலியெழுப்பி அலற, சலமாண்டர் வண்டிகள் வர, திரு. ப்ளாக் வேலைக்குப் போயிருக்கும் போது அவருடைய வீட்டை எரித்து, அவருடைய மனைவி அந்தக் காலை வேளையில் நடுங்கியபடி நின்றுகொண்டிருக்க, நெருப்பில் எரிந்து கூரை விடுபட்டுக் கீழே நெருப்பில் விழுவதற்காகக் காத்துக்கொண்டு இரவின் குளிர்காற்றில் மோன்டாக் நின்றிருந்தான். ஆனால், தற்சமயம் அவள் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தாள்.

"குட் நைட், திருமதி ப்ளாக்," அவன் நினைத்துக்கொண்டான்.

"ஃபேபர்!"

இன்னொரு தட்டல், கிசுகிசுப்பு, நீண்ட காத்திருத்தல். ஒரு நிமிஷத்துக்குப் பின் ஃபேபரின் சிறிய வீட்டுக்குள் ஒரு சிறிய விளக்கு மின்னியது. இன்னுமொரு இடைவெளிக்குப் பிறகு, பின்கதவு திறந்தது.

ஃபேபரும் மோன்டாகும் அரை வெளிச்சத்தில் ஒருவரையொருவர் பார்த்தபடி, மற்றவர் உயிரோடு இருப்பதை இருவருமே நம்பாததைப் போல, இருந்தார்கள். ஃபேபர் முதலாவதாக நகர்ந்து தன் கையை நீட்டி மோன்டாகைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு, அவனை உட்கார வைத்து, திரும்பிப் போய் வாசலில் நின்று உன்னிப்பாகக் கேட்டார். தொலைவில் சங்குகளின் ஒலி தேய்ந்து மறைந்தது. அவர் உள்ளே வந்து கதவுகளை மூடினார்.

மோன்டாக் சொன்னான்: "நான் ஆரம்பத்திலிருந்தே முட்டாளாக இருந்துவிட்டேன். நிறைய நேரம் இங்கே இருக்க முடியாது. நான் போகு மிடம் ஆண்டவனுக்குத்தான் தெரியும்."

"குறைந்தபட்சம் சரியான விஷயங்களுக்காகத்தானே நீ மடையனாக இருந்திருக்கிறாய்," என்றார் ஃபேபர். "நீ இறந்துவிட்டாய் என்றே நான் நினைத்தேன். நான் உனக்குக் கொடுத்த ஒலிக் குப்பி—"

"எரிந்துவிட்டது."

"கேப்டன் உன்னிடம் பேசியதைக் கேட்டேன், திடீரென்று எந்தச் சத்தமும் வரவில்லை. உன்னைத் தேடிக்கொண்டு நானே வெளியே வர விருந்தேன்."

"கேப்டன் இறந்துவிட்டார். அந்த ஒலிக் குப்பியைக் கண்டுபிடித்து விட்டார், உங்கள் குரலைக் கேட்டார், அதன் மூலத்தைத் தேடவிருந்தார். நான் தீப்பந்தக் கணையை எறிந்து அவரைக் கொன்றுவிட்டேன்."

ஃபேபர் உட்கார்ந்தார், சற்று நேரம் பேசவில்லை.

"கடவுளே, இதெல்லாம் எப்படி நடந்தது?" என்றான் மோன்டாக். "ஒரு இரவில் எல்லாமே நன்றாக இருந்திருக்கிறது, உடனேயே நான் மூழ்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். எவ்வளவு முறை ஒருவன் மூழ்கி, பின்னரும் உயிருடன் இருக்க முடியும்? என்னால் மூச்சு விட முடியவில்லை. அங்கே பியாட்டி இறந்துவிட்டார், ஒருகாலத்தில் அவர் எனக்கு நண்பர், அதோ, மில்லியும் போய்விட்டாள், அவள் என் மனைவி என்று நினைத்தேன், இப்போது எனக்குத் தெரியவில்லை. வீடு முழு வதும் எரிந்துவிட்டது, எனக்கு வேலை போய்விட்டது. நான் ஓடிக் கொண்டிருக்கிறேன், வழியில் தீயணைப்பவன் ஒருவன் வீட்டில் புத்த கத்தைத் திட்டமிட்டு வைத்துவிட்டேன். ஏசுவே, ஒரே வாரத்தில் என்ன வெல்லாம் செய்துவிட்டேன்!"

"நீ என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்தாய். ரொம்ப காலமாகவே இது நடக்கவிருந்தது."

"ஆமாம், நானும் அப்படித்தான் நினைக்கிறேன், நம்புவதற்கு வேறெதுவும் இல்லையென்றால். நடக்க வேண்டும் என்பதற்காகவே

காத்துக்கொண்டிருந்தது. ரொம்ப காலமாகவே என்னால் அதை உணர முடிந்தது. எதையோ சேமித்து வைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் எதையோ உணர்ந்தும், வேறெதையோ செய்தும் போய்க்கொண்டிருந் தேன். கடவுளே, இதெல்லாமே அங்கேயேதான் இருந்திருக்கிறது. ஆனால் உடல் கொழுப்பைப் போல, அது என்னிடம் தென்படவில்லை. இதோ, நான் இப்போது உங்கள் வாழ்க்கையையும் குளறுபடியாக்கிக்கொண் டிருக்கிறேன். அவர்கள் என்னைப் பின்தொடர்ந்து இங்கே வரலாம்."

"பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் நான் முதல்முறையாக உயிர்த்துடிப்புடன் இருப்பதாக உணர்கிறேன்," என்றார் ஃபேபர். "ஒரு வாழ்நாளுக்கு முன்னமேயே என்ன செய்திருக்க வேண்டுமோ அதை இப்போது செய்வதாக உணர்கிறேன். கொஞ்ச நேரமாவது நான் பய மில்லாமல் இருக்கிறேன். ஒருவழியாக இப்போது சரியான ஒன்றையே செய்கிறேன் என்பதால் இருக்கலாம். யோசிக்காமல் அவசரமாக ஏதோ செய்துவிட்டு உனக்கு முன்னால் கோழையாகத் தோன்றக் கூடாது என்ப தாலும் இருக்கலாம். என் நோக்கத்தில் தோல்வியடைவதை வெளிப் படையாக்கி, மீண்டும் பயப்படாமல் இருக்க இதைவிட வன்முறையான வற்றையும் நான் செய்ய வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன், உன் திட்டங்கள் என்ன?"

"ஓடிக்கொண்டே இருப்பதுதான்."

"போர் நடந்துகொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?"

"கேள்விப்பட்டேன்."

"ஆண்டவனே, இது வேடிக்கையாக இல்லை?" என்றார் முதியவர். "நமக்கு நம்முடைய பிரச்சினைகளே இருப்பதால், போர் அவ்வளவு தொலைவில் இருப்பதைப் போலத் தோன்றுகிறது."

"யோசிக்க எனக்கு நேரம் இல்லை." மோன்டாக் நூறு டாலர்களை வெளியே எடுத்தான். "இது உங்களிடம் இருக்கட்டும். நான் போன பிறகு, உங்களுக்கு உபயோகமாக இருக்கும். எப்படி வேண்டுமானாலும் இதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்."

"ஆனால்—"

"நான் நண்பகலுக்கு முன் இறந்துவிடலாம். இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

ஃபேபர் தலையை ஆட்டினார். "முடிந்தால் நீ ஆற்றை நோக்கிப் போவது நல்லது, அதன் போக்கிலேயே போ, ஊருக்கு வெளியே செல்லும் பழைய இருப்புப்பாதையைப் பார்த்தால் அதைத் தொடர்ந்து போ. சொல்லப்போனால், இந்தக் காலத்தில் எல்லாமே ஆகாய மார்க்கமாகப்

போவதால் பல தடங்கள் கைவிடப்பட்டாலும் இருப்புப்பாதைகள் இன்னும் அப்படியே இருக்கின்றன, துருப்பிடித்து. கிராமப்புறங்களில் பரவலாக இங்குமங்கும் நாடோடி முகாம்கள் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்; நடமாடும் முகாம்கள் என்று சொல்வார்கள். தவிர, கவனமாகப் பார்த்தால், பழைய ஹார்வர்டு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பலர் இந்த இடத்துக்கும் லாஸ் ஏஞ்சலெஸ்ஸுக்கும் இடையே இருப்புப் பாதை நெடுகிலும் தென்படுவார்கள். அவர்களில் பலர் நகரங்களில் தேடப்பட்டும் துரத்தப்பட்டும் இருப்பவர்கள். அவர்கள் பிழைத்து உயிருடன்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படி நிறைய பேர் இல்லை, அவர்களின் பின்னால் ஓடி, துரத்திப் பிடிக்கும் அளவுக்கு ஆபத்தானவர்களாக அவர்களை அரசு கருதவில்லை என்றே தோன்றுகிறது. அவர்களிடையே கொஞ்ச காலம் தங்கியிருந்து பிறகு சேன்-லூயிஸில் என்னுடன் தொடர்புகொள். ஓய்வுபெற்ற அச்சிடுபவர் ஒருவரைச் சந்திக்க இன்று காலை ஐந்து மணிப் பேருந்தில் நான் புறப்படுகிறேன்; நானும் ஒருவழியாக வெளியுலகுக்கு வருகிறேன். இந்தப் பணம் நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தப்படும். நன்றி. கடவுள் அருள் உனக்குக் கிடைக்கட்டும். கொஞ்ச நேரம் தூங்க வேண்டுமா?"

"நான் ஓடிப்போவதே மேல்."

"இரு. பார்ப்போம்."

அவர் அவசரமாக மோன்டாகை படுக்கையறைக்கு அழைத்துப் போய், அங்கிருந்த சட்டம் போட்ட படம் ஒன்றை அப்புறப்படுத்தி அஞ்சல் அட்டை அளவே இருந்த தொலைக்காட்சித் திரை ஒன்றைக் காட்டினார். "நான் எப்போதுமே இதுபோல மிகச் சிறியதாக ஒன்றை விரும்பினேன், நடக்கும்போது எடுத்துச்செல்ல முடிந்த ஒன்று, தேவைப்பட்டால் என் உள்ளங்கையில் மூட முடிந்த ஒன்று, சத்தம் போட்டு எதுவும் என்னை அடக்கக் கூடாது, பூதாகாரமாக பெரிதாக எதுவும் இருக்கக் கூடாது. ஆகவேதான், இதோ பார்." அதைச் சொடுக்கினார்.

"மோன்டாக்" என்றபடி அந்தத் தொலைகாட்சி சாதனம் ஒளி பாய்ச்சியது. "மோன்டாக்". ஒரு குரல் அந்தப் பெயரை எழுத்துக்கூட்டிச் சொல்லிற்று. "கை மோன்டாக். இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறார். காவல்துறை ஹெலிகாப்டர்கள் வானில். வேறொரு மாவட்டத்திலிருந்து ஒரு புதிய இயந்திர வேட்டைநாய் கொண்டுவரப்பட்டிருக்கிறது—"

மோன்டாகும் ஃபேபரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"—இயந்திர வேட்டைநாய் **ஒருபோதும்** தவறியதில்லை. முதல் முறை துப்பறியும் சோதனையில் அது ஈடுபடுத்தப்பட்டதிலிருந்து இந்த அற்

புதக் கண்டுபிடிப்பு ஒரு தவறுகூடச் செய்ததில்லை. இன்றிரவு, தன்னுடைய இலக்கை நோக்கி வேட்டைநாய் போக ஆரம்பித்ததிலிருந்து அதை ஹெலிகாப்டர் காமெரா மூலம் கண்காணிக்கும் வாய்ப்புக் கிடைத்ததைக் குறித்து எங்கள் தொலைக்கட்சி அமைப்பு பெருமை கொள்கிறது—"

ஃபேபர் இரண்டு கண்ணாடி டம்ளர்களில் விஸ்கியை ஊற்றினர்.

"நமக்கு இது தேவைப்படும்."

அவர்கள் குடித்தார்கள்.

"—பத்தாயிரம் மனிதர்களிடையே இருக்கும் பத்தாயிரம் விதமான மணங்களை, இயந்திரத்தை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே, இயந்திர வேட்டைநாய் மோப்பம் பிடித்து அடையாளம் கண்டுகொள்ளும் அளவுக்கு நுண்ணுணர்வு கொண்டது அதனுடைய நாசி!"

ஃபேபரின் உடலில் ஒவ்வொரு அங்கமும் நடுங்கியது, தன் வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டார்—சுவர்கள், கதவு, கதவின் குமிழ், இப்போது மோன்டாக் உட்கார்ந்திருக்கும் நாற்காலி. அந்தப் பார்வையை மோன்டாக் கவனித்தான். அவர்கள் இருவருமே வேகமாக வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள்; தன் நாசித்துவாரங்கள் விரிவடைவதைப் போல உணர்ந்த மோன்டாக், தன் பாதையின் சுவடைக் கண்டறிய முயன்றான்; அந்த அறையின் சூழலில் தான் வந்த பாதையை முகர்ந்துணரும் திறன் திடீரென்று அவனுடைய நாசிக்கு ஏற்பட்டது; கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் பெரிய கொத்து விளக்கின் அலங்கார மணிகளைப் போல அவன் கையின் வியர்வை கதவின் குமிழிலிருந்து தொங்கியது; எல்லாவற்றுக்கும் உள்ளே, வெளியே, சுற்றிலும் வியாபித்திருந்த அவன் ஒருவித ஒளிரும் மேகமாக, சுவாசிப்பதையே மீண்டும் இயலாமல் செய்துவிட்ட ஆவியாக இருந்தான். அந்த ஆவியின் மூச்சுக்காற்றினாலும், ஓடிக்கொண்டிருந்த மனிதனின் வாடையினாலும் அந்தப் பேயைத் தன்னுடைய உடலுக்குள்ளே இழுத்துக்கொண்டு மாசுபட்டுவிடுவோமோ என்ற பயத்தில் ஃபேபரும் தன்னுடைய மூச்சை இழுத்துப்பிடித்துக்கொண்டிருந்ததை அவன் பார்த்தான்.

"—அந்த இயந்திர வேட்டைநாய் நீ விபத்து நடந்த இடத்தில் இப்போது ஹெலிகாப்டரிலிருந்து இறங்கிக்கொண்டிருக்கிறது!"

மிகச் சிறிய அந்தத் தொலைக்காட்சித் திரையில், எரிந்த வீடும் மக்கள் கூட்டமும் துணியால் மூடப்பட்ட ஏதோ ஒன்றும் காணப்பட்டன, கோமாளித்தனமான ஒரு மலரைப் போல வானத்திலிருந்து ஒரு ஹெலிகாப்டர் வெளிப்பட்டது.

அப்படியானால் அவர்கள் தங்கள் விளையாட்டை ஆரம்பித்துவிட்டார்கள், என்று நினைத்தான் மோன்டாக். இந்த சர்க்கஸ் நடத்தப்பட்டாக வேண்டும், அடுத்த ஒரு மணியிலேயே போர் தொடங்குவதாக இருந்தாலும்...

அந்தக் காட்சியினால் கவரப்பட்டு, நகர விரும்பாமல் அதைப் பார்த்தான். தனக்குத் தொலைவில், தன்னுடன் தொடர்பே இல்லாததைப் போலத் தோன்றியது; தன்னிடமிருந்து விலகித் தனியாக நிகழும் ஒரு நாடகம், பார்ப்பதற்கு அற்புதமானது, விசித்திரமான மகிழ்ச்சிக்குக் குறைவே இல்லாதது, இதெல்லாம் எனக்காகத்தான் என்றுகூட நினைக்கலாம், கடவுளே, இங்கு நடப்பதெல்லாம் எனக்காக மட்டுமே.

அவன் மட்டும் விரும்பினால் கூடக் கொஞ்ச நேரம் இங்கே இருக்கலாம், இந்த வேட்டை முழுவதையும்—சந்துகள் வழியாக, சாலைகளைக் கடந்து, ஆளரவமற்ற அகன்ற வீதிகள் வழியாக, நிறைய விளையாட்டுத் திடல்களைத் தாண்டி, அவ்வப்போது விளம்பர இடைவேளைகளுடன், இன்னும் சில சந்துகள் வழியாக ஓடி, ப்ளாக் தம்பதிகளின் எரிந்துகொண்டிருக்கும் வீடுவரை—அடுத்தடுத்த துரித கட்டங்களாக, தொடர்ந்து திரையில் பார்க்கலாம்; இறுதியாக ஃபேபரும் அவனும் உட்கார்ந்துகொண்டிருக்கும் வீட்டுக்கு வந்து, அவர்கள் குடித்துக்கொண்டிருக்கும்போது அந்தக் கடைசித் தடயத்தையும் மோப்பம்பிடித்து, மெல்ல அசைந்து நெருங்கும் சாவைப் போலச் சறுக்கியபடி அந்த மின்வேட்டைநாய் ஜன்னலுக்கு வெளியே வந்து நிற்கும்வரை. மோன்டாக் விரும்பினால், அதற்குப் பிறகும் எழுந்து ஜன்னல்வரை போய், தொலைக்காட்சித் திரையில் ஒரு கண் வைத்துக்கொண்டே ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்த்து, திரும்பிப் பார்த்து, தன்னை அவர்கள் நாடகப்படுத்துவதை, விவரிப்பதை, வெளியுலகிலிருந்து பார்க்கப்படும் காட்சிப் பொருளாகப் பிரகாசமான சிறிய தொலைக்காட்சித் திரையில் தான் மாற்றப்படுவதைப் பார்க்க முடியும்; மற்ற சுவர்தொலைக்காட்சியில் வாழ்க்கையில் உள்ள அளவுகளிலேயே, பல வண்ணங்களில், கச்சிதமான பரிமாணங்களுடன், புறவய நோக்குடன் பார்க்கத் தகுதியான நாடகம்! தவிர, நிரந்தர மறதியில் தான் ஆழ்வதற்கு ஒரு கணம் முன்பு, தத்தம் வீட்டு வரவேற்பறைகளில் பெரிய சங்கொலியுடன் இந்தப் பெரிய விளையாட்டை, வேட்டையை, ஒற்றை மனிதன் பங்கேற்கும் கொண்டாட்டத்தைப் பார்க்க அழைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பிரிய குடிமக்களின் திருப்திக்காகத் தான் ஊசி குத்திக் கொல்லப்படுவதையும் துரிதமாகக் கூர்ந்து கவனித்தால் அவனேகூடப் பார்க்கலாம்.

சொற்பொழிவு நிகழ்த்த அவனுக்கு நேரம் இருக்குமா? பத்து, இருபது அல்லது முப்பது மில்லியன் மக்கள் கண்ணெதிரே அந்த இயந்திர

வேட்டைநாய் அவனைப் பிடிக்கும்போது, தன்னுடைய வாழ்க்கை முழு வதையும் ஒரே ஒரு வாக்கியத்திலோ அல்லது ஒரு வார்த்தையிலோ சுருக்கமாகச் சொல்ல, இயந்திர வேட்டைநாய் தன்னுடைய உலோகத் தாடைகளில் அவனைக் கவ்விக்கொண்டு, தொலைவில் அற்புதமாகக் கொஞ்சம்கொஞ்சமாகத் தேய்ந்து மறையும் அந்தக் காட்சியை நிலையாக இருந்து இயங்கிய காமெரா படம் பிடித்ததற்குப் பிறகும் வெகு நேரம் பார்வையாளர்களின் நினைவில் நிற்கும்படியாகச் சொல்ல அவனால் முடியுமா? என்ன! அவர்களுடைய முகங்களை உணர்ச்சிவசப்பட வைத்து உசுப்பும் அளவுக்கு ஒரே ஒரு சொல்லில் அல்லது மிகக் குறைந்த சொற்களில் அவனால் என்னதான் சொல்ல முடியும்?

"அதோ," என்று கிசுகிசுத்தார் ஃபேபர்.

இயந்திரம் அல்லாமலும், மிருகம் அல்லாமலும், உயிரற்று இல்லா மலும், உயிருடன் இல்லாமலும் வெளிர்பச்சை நிற ஒளியில் பளபளத்துக் கொண்டு ஏதோ ஒன்று ஹெலிகாப்டரிலிருந்து மிதந்து வெளியே வந் தது. இன்னும் புகை வந்துகொண்டிருந்த மோன்டாகின் வீட்டின் இடி பாடுகளுக்கருகில் அது வந்து நிற்க, அவன் விட்டுச் சென்றிருந்த தீப்பந்தக் கணையைச் சில ஆட்கள் வேட்டைநாயின் மூக்கருகில் வைத்தார்கள். 'சர்' என்ற நீண்ட அதிர்வு, 'க்ளிக்' ஓசை, முனகல்.

மோன்டாக் எழுந்து நின்று மீதமிருந்த விஸ்கியைக் குடித்தான். "நேரமாகிவிட்டது. இப்படி நடந்ததெற்கெல்லாம் என்னை மன்னிக்க வேண்டும்."

"எதைப் பற்றிச் சொல்கிறாய்? நானா? இந்த வீடா? எனக்கும் இதெல் லாமே தேவைதான். ஓடிவிடு, தயவுசெய்து. அவர்களை நான் இங்கே பிடித்து தாமதப்படுத்துகிறேன்—"

"பொறுங்கள். அவர்களிடம் நீங்கள் மாட்டிக்கொள்வதில் எந்தப் பய னும் இல்லை. நான் போன பிறகு, நான் தொட்ட இந்தப் படுக்கை விரிப்பை எரித்துவிடுங்கள். வரவேற்பறை நாற்காலியைச் சுவரில் பொருத் தப்பட்டிருக்கும் எரியூட்டில் போட்டு எரித்துவிடுங்கள். அறைகலன் களையும் கதவுக் குமிழிகளையும் எரிசாராயத்தால் துடைத்துவிடுங்கள். தொலைக்காட்சியறைத் தரைக் கம்பளத்தை எரித்துவிடுங்கள். எல்லா அறைகளிலும் குளிர்சாதனப் பெட்டியை முழுவீச்சில் இயக்கி, பூச்சிக் கொல்லி மருந்து உங்களிடம் இருந்தால் வீடு முழுவதும் பரவும்படி அதைத் தூவச் செய்யுங்கள். பிறகு, புல்தரையில் நீர் தெளிப்பானை முழுவது மாகத் திறந்து வீட்டைச் சுற்றிப் பக்கவாட்டில் நீரைப் பாய்ச்சுங்கள். அதிர்ஷ்டம் நம் பக்கம் இருந்தால், இங்கே கிடைக்கக்கூடிய தடயங் களை எப்படியும் நாம் அழித்துவிடலாம்."

ஃபேபர் அவன் கையைக் குலுக்கினார். "நான் இதெல்லாமே செய்கி றேன். வாழ்த்துகள். நாம் இருவரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருந் தால், அடுத்த வாரமோ அதற்கடுத்த வாரமோ, செயின்ட் லூயிஸில் என் னுடைய தபால் பெட்டியில் தொடர்புகொள். இந்த முறை செவிக்கருவி வழியாக உன்னுடன் வர என்னால் முடியாமல் போனதற்கு வருந்துகி றேன். இருவருக்குமே அது செளகரியமாக இருந்தது. ஆனால் நான் கண்டு பிடித்த சாதனம் போதுமானதாக இல்லை. அதைப் பயன்படுத்த வேண் டிய அவசியம் எனக்கு வரும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. என்ன முட்டாள்தனமான கிழவன்! முன்யோசனையே இல்லை. முட் டாள், முட்டாள். இப்போது உன் காதுகளில் பொருத்துவதற்கேற்ற மாதிரியான பச்சைத் தோட்டா இன்னொன்று என்னிடம் இல்லை. சரி, இப்போது கிளம்பு."

"கடைசியாக ஒரு விஷயம். சீக்கிரம் ஆகட்டும். பயணப் பெட்டி ஒன்றை எடுத்து, அதில் மிக அழுக்கடைந்த உங்களுடைய துணிகளை யும், கோட்-சூட்டையும், எல்லாம் மிக அழுக்காக இருந்தால் மிக நல் லது, ஒரு சட்டை, பழைய காலணிகள், காலுறைகள்... இவற்றால் நிரப்புங்கள்."

ஃபேபர் போய் ஒரு நிமிடத்தில் திரும்ப வந்தார். கெட்டி அட்டை யினாலான அந்தப் பெட்டியைப் பசை நாடாவைக் கொண்டு இறுக மூடினார்கள். "ஃபேபரின் கடந்த கால வாடையை இதற்குள் போட்டு வைப்பதற்குத்தான்," என்றார் ஃபேபர், அந்த வேலையினால் வியர்வை சொட்டச்சொட்ட.

பெட்டியின் வெளிப்புறத்தில் மோன்டாக் கொஞ்சம் விஸ்கியைத் தெளித்தான். "இரண்டு வெவ்வேறு வாசனைகளை அந்த வேட்டைநாய் ஒரே சமயத்தில் மோப்பம் பிடிக்கக் கூடாது. மீதமுள்ள இந்த விஸ்கியை நான் எடுத்துக்கொள்ளலாமா? இது எனக்குத் தேவைப்படும். கடவுளே, இது வேலை செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்!"

அவர்கள் மீண்டும் கைகுலுக்கிவிட்டு, கதவைத் தாண்டிப் போகும் போது தொலைக்காட்சியைத் திரும்பிப் பார்த்தார்கள். வேட்டைநாய் தன் பாதையில் போய்க்கொண்டிருந்தது, வட்டமிடும் ஹெலிகாப்டர் காமெராக்கள் பின்தொடர, மௌனமாக, மௌனமாக, இரவின் சூழலை மோப்பம் பிடித்தபடி. முதல் சந்து வழியாக இப்போது அது ஓடிக்கொண்டிருந்தது.

"போய்வருகிறேன்!"

பாதி காலியாக இருந்த பெட்டியுடன் மோன்டாக் பின்புறக் கதவு வழியாக ஓசையின்றி ஓடினான். அவனுக்குப் பின்னால் புல்தரைக்கு நீர்

தெளிக்கும் சாதனம் வேகமாக இயங்கி, இருளில் லேசான மழையைப் போலப் பெய்யத் தொடங்கி பிறகு கன மழையாக மாறி வீட்டுக்கு இருபுறமும் இருந்த பாதைகளில் கொட்டி, வடிகால் வழியாக நீர் சந்து வரை சென்றது. இந்த மழையின் சில நீர்த்துளிகளை முகத்தில் தெளித்துக்கொண்டான். முதியவர் விடை கூறுவதைத் தான் கேட்டதைப் போல அவனுக்குத் தோன்றியது. ஆனால் நிச்சயமாகத் தெரியவில்லை.

வீட்டிலிருந்து விலகி வெகு வேகமாக ஆற்றை நோக்கி ஓடினான்.

மோன்டாக் ஓடினான்.

வேட்டைநாய் உணர்ச்சியற்று, உயிரற்று, இலையுதிர் காலத்தைப் போல் விரைந்து வருவதை அவன் உணர்ந்தான்; புற்களை அசைக்காமல், ஜன்னல் கதவுகளை அடித்துக்கொள்ளச் செய்யாமல், கடந்து போகும் போது நடைபாதையில் இலைகளின் நிழலைக்கூட அசைக்காத இலை யுதிர் காலக் காற்றைப் போல. வேட்டைநாய் உலகத்தைத் தொட வில்லை. தன்னுடைய மௌனத்தை அந்த வேட்டைநாய் தானே சுமந்து வந்துகொண்டிருந்ததால், நகரம் முழுவதும் மக்கள் தங்கள்மீது இறுக் கத்தை அதிகரிக்கும் மௌனத்தை உணர்ந்தார்கள். இறுக்கம் அதிகமாகிக் கொண்டே வருவதை உணர்ந்த மோன்டாகும் ஓடினான்.

ஆற்றுக்குப் போகும் வழியில், மூச்சு வாங்கிக்கொள்வதற்காகவும், தூக்கத்தில் எழுப்பிவிடப்பட்ட வீடுகளில் மங்கலாக வெளிச்சம் தென் பட்ட ஜன்னல்கள் வழியாகப் பார்ப்பதற்காகவும் நின்றான். உள்ளே தொலைக்காட்சியறைச் சுவர்களைப் பார்த்துக்கொண்டிருந்த நிழலுரு வங்களைப் பார்த்தான்; சுவர்களில் தோன்றியும் மறைந்தும், தோன்றியும் மறைந்தும் அந்த வேட்டைநாய், ஒரு நியோன் வாயு மூச்சு, சிலந்திக் கொண்டிருந்தது! இதோ, இப்போது, எல்ம் டெர்ரஸ், ஓக் பார்க் வழியாக ஃபேபரின் வீட்டுக்குச் செல்லும் சந்தில்!

அதைக் கடந்து போ, மோன்டாகின் மனம் எண்ணியது. நிற்காதே, போய்க்கொண்டே இரு, திரும்பி உள்ளே போகாதே!

தொலைக்காட்சியறைச் சுவரில், இரவின் சூழலில், வீட்டைச் சுற்றி நீர் தெளிக்கும் சாதனத்தின் இயக்கத்துடன் இருந்த ஃபேபரின் வீடு.

வேட்டைநாய் நின்றது, உதறிக்கொண்டு.

கூடாது! மோன்டாக் ஜன்னல் விளிம்பைப் பற்றிக்கொண்டு நின்றான். இந்தப் பக்கம்! இதோ!

ப்ரோகேன் மயக்க ஊசி ஒன்றிரண்டு முறை வெளியே நீண்டு, உள்ளே போயிற்று. வேட்டைநாயின் நாசிக்குள் இழுக்கப்பட்டு மறைவதற்கு முன்னால் கனவுக்குள் ஒருவரைத் தள்ளும் தெள்ளிய ஒரு துளி அந்த ஊசியிலிருந்து சிந்தியது.

கையால் நெஞ்சை இறுகப் பற்றியதைப் போல மோன்டாக் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டான்.

வேட்டைநாய் திரும்பி, ஃபேபரின் வீட்டிலிருந்து விலகி மீண்டும் சந்துக்குள் இறங்கிப் போயிற்று.

மோன்டாக் சட்டென்று வானத்தை நோக்கிப் பார்வையைத் திருப்பினான். ஹெலிகாப்டர்கள் நெருங்கிவந்திருந்தன, ஒற்றை விளக்கைச் சுற்றி வட்டமிடும் பூச்சிக் கூட்டத்தைப் போல.

ஆற்றை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும்போது வேடிக்கைபார்ப்பதற்கான ஏதோ ஒரு புனைவுக் கதை அல்ல இது என்பதை, சற்று முயன்று, மோன்டாக் தனக்குத் தானே நினைவுபடுத்திக்கொண்டான்; உண்மையில், அவன் பார்த்துக்கொண்டிருந்தது தன் வாழ்வு என்ற சதுரங்க விளையாட்டின் ஒவ்வொரு நகர்த்தல்களையும்தான்.

இந்தக் கடைசி வீட்டு ஜன்னலிலிருந்தும், அங்கே ஆவி உலகத்துடன் தொடர்புகொள்வதற்காக நடந்துகொண்டிருந்த கூட்டத்திலிருந்தும் தூர விலகிப் போவதற்குத் தேவையான உந்துதலைத் தனக்குத் தானே அளித்துக்கொள்வதற்காக உரக்கக் கத்தினான்! **நாசமாய்ப்போக!** அவன் தான் அங்கிருந்து போய்விட்டானே. ஒரு சந்து, தெரு, சந்து, தெரு, பின்னர் ஆற்றின் மணம். காலை உயர்த்தி, கீழே கொண்டுவந்து, உயர்த்தி, கீழே கொண்டுவந்து. ஓடிக்கொண்டிருக்கும் இரண்டு கோடி மோன்டாகுகள், இதோ விரைவில், காமெராக்களின் பார்வையில் அவன் பட்டுவிட்டால். அந்தக் காலத்து மௌனத் திரைப்படங்களில் குதித்துக்குதித்து ஓடும் போலீஸ், திருடர்கள், துரத்துபவர்கள், துரத்தப்படுபவர்கள், வேட்டையாடுபவர்கள், வேட்டையாடப்பட்டவை போன்றவற்றைப் போல. ஓடிக்கொண்டிருக்கும் இரண்டு கோடி மோன்டாகுகள், பல ஆயிரம் தடவை அவன் பார்த்திருந்த படங்களைப் போல. அவனுக்குப் பின்னால் மௌனமாகக் குரைத்துத் துரத்தும் இரண்டு கோடி வேட்டைநாய்கள்; எல்லாத் தொலைக்காட்சி அறைகளிலும் எதிரொளித்து, பில்லியர்ட்ஸ் மேஜையின் மூன்று மிருதுவான பக்கங்களில் பந்து மோதித் திரும்பிச் செல்வதுபோல, வலது சுவரிலிருந்து நடுச்சுவருக்கு, நடுச்சுவரிலிருந்து இடது சுவருக்கு, வலது, நடு, இடது சுவர்கள். மீண்டும் காணோம். பின்னர் மறைந்துவிட்டன.

கிளிஞ்சல் வானொலியை மோன்டாக் காதுக்குள் திணித்துக் கொண்டான்.

"எல்ம்ஸ் டெர்ரஸ் பகுதியில் இருக்கும் மக்கள் அனைவருக்கும் காவல் துறையினரின் வேண்டுகோள்: ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் ஒவ்வொருவரும் முன்கதவையோ பின்கதவையோ,

ஒரு ஜன்னலையோ திறந்துவைத்துப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அடுத்த ஒரு நிமிடத்துக்கு எல்லோரும் தத்தம் வீடுகளிலிருந்து பார்த்துக் கொண்டே இருந்தால், ஓடுபவன் தப்பிக்க முடியாது. தயாரா!"

உண்மைதான்! இதை ஏன் அவர்கள் முன்னமேயே செய்திருக்க வில்லை! இத்தனை ஆண்டுகளாக இந்த விளையாட்டை ஏன் முயன்று பார்க்கவில்லை? எல்லோரும் எழுந்து, எல்லோரும் வெளியே! அவனைத் தவறவிடவே முடியாது! இரவில் நகரத்தில் தனியாக ஓடும் ஒரே மனிதன், கால்களின் சக்தியைக் காட்டும் ஒரே மனிதன்!

"பத்துவரை எண்ணப்போகிறோம்! ஒன்று, இரண்டு!" நகரமே எழுந் திருப்பதை அவன் உணர்ந்தான்.

"மூன்று."

நகரம் தன் ஆயிரக்கணக்கான கதவுகளை நோக்கித் திரும்பியதை அவன் உணர்ந்தான்.

வேகம், இன்னும் வேகமாக! கால் மேலே, கால் கீழே!

"நான்கு."

ரேழி வழியே தூங்கிக்கொண்டே அசைந்துசென்ற மக்கள்.

"ஐந்து."

கதவுக் குமிழிகளின் மேல் அவர்கள் கையை அவன் உணர்ந்தான்!

ஆற்றின் மணம் குளுமையாகவும், கெட்டியான ஒரு மழையைப் போலவும் இருந்தது. ஓட்டத்தினால் அவனுடைய தொண்டை எரிந்து துருப்பிடித்து, கண்களிலிருந்து நீர் வெளியேறிக் கண்கள் உலர்ந்துவிட் டிருந்தன. உரக்கக் கத்தினான், அந்தக் கத்தலே அவனைப் பலமாக உந்தி, கடைசி நூறு கஜங்களுக்கு அவனைத் தூக்கியெறிய வேண்டும் என்ப தைப் போலக் கத்தினான்.

"ஆறு, ஏழு, எட்டு!"

ஐந்தாயிரம் கதவுகளின் குமிழிகள் திருப்பப்பட்டன.

"ஒன்பது!"

கடைசியாக இருந்த வீடுகளின் வரிசையைத் தாண்டி, அடர்த்தியாக ஓடிக்கொண்டிருந்த கருமைக்கு இட்டுச் செல்லும் இறக்கத்தில் ஓடினான்.

"பத்து!"

கதவுகள் திறந்தன.

பல ஆயிரக்கணக்கான முகங்கள் உற்றுநோக்குவதைக் கற்பனைசெய்து பார்த்தான்—திடல்களில், சந்துகளில், வானத்தில், திரைச்சீலைகளுக்குப் பின்னாலிருந்த முகங்கள் வெளிறிப்போய்; இரவில் பயந்துவிட்ட முகங்

கள், மின்சாரக் குகைகளிலிருந்து எட்டிப் பார்க்கும் சாம்பல் நிற மிருகங் களைப் போல, சாம்பல் நிறத்தில் வெளுத்துப்போன கண்களுடன் இருந்த முகங்கள், முகத்தின் மரத்துப்போன சதை வழியாக எட்டிப் பார்த்த வெளிறிய நாக்குகளும் தெளிவற்ற எண்ணங்களும் கொண்ட முகங்கள்.

ஆனால், அவன் ஆற்றை வந்தடைந்துவிட்டான்.

காலால் தொட்டுப்பார்த்தான். அது உண்மைதான் என்று உறுதிசெய்து கொள்வதற்காக, நீரில் இறங்கி, இருட்டில் தன் ஆடைகளை முற்றிலுமாகக் களைந்துவிட்டு, தன்னுடைய உடலில், கைகளில், கால்களில், தலையில் விஸ்கியைத் தெளித்துக்கொண்டான்; கொஞ்சம் அதைக் குடித்துவிட்டு, மூக்கிலும் விட்டுக்கொண்டான். பிறகு, ஃபேபரின் பழைய ஆடைகள், காலணிகள் இவற்றை அணிந்துகொண்டான். தன்னுடைய ஆடைகள் அனைத்தையும் ஆற்றில் தூக்கியெறிந்து அவை அடித்துச் செல்லப்படு வதைப் பார்த்தான். பிறகு, பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஆற்றில் இறங்கி, கால் பாவாத ஆழம்வரை நடந்து போய், பின்னர் இருளில் அடித்துச் செல்லப்பட்டான்.

ஆற்றின் போக்கில் முன்னூறு கஜ தூரம் அவன் போன பிறகுதான் வேட்டைநாய் ஆற்றை வந்தடைந்தது. தலைக்கு மேலே பெரிய, சத்த மான விசிறிகளுடன் ஹெலிகாப்டர்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. ஒளிப் புயல் ஒன்று ஆற்றைத் தாக்கியது, மேகங்களைப் பிளந்துகொண்டு வெளிப்பட்ட சூரியனைப் போல இருந்த பெரும் ஒளிப் பிரகாசத்தில் மோன்டாக் நீருக்குள் பாய்ந்தான். ஆற்றின் போக்கில், இன்னும் சற்று தூரம் இருளுக்குள் இழுத்துச்செல்லப்படுவதை உணர்ந்தான். பிறகு அந்த விளக்குகள் நிலத்தை நோக்கித் திரும்ப, வேறு ஏதோவொரு தடயத் தைக் கண்டுபிடித்துவிட்டதைப் போல ஹெலிகாப்டர்களும் நகரத்தை நோக்கித் திரும்பின. அவை போய்விட்டன. வேட்டைநாய் போய் விட்டது. இப்போது இருந்தவையெல்லாம் குளுமையான ஆறு; நகரம், விளக்குகள், விரட்டல் இவற்றுக்கப்பால், எல்லாவற்றுக்கும் அப்பால், திடீரென்று நிலவிய அமைதிச் சூழலில் மிதந்துகொண்டிருந்த மோன் டாக்.

தனக்குப் பின்னால் ஒரு நாடக மேடையையும் சில நடிகர்களையும் விட்டுவிட்டு வந்ததைப் போல அவன் உணர்ந்தான். ஆவிகளுடன் தொடர்புகொள்ளும் ஒரு மாபெரும் கூட்டத்தையும் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் ஆவிகளையும் விட்டுவிலகி வந்ததைப் போல அவன் உணர்ந்தான். தன்னைப் பயமுறுத்திய நிஜமின்மை ஒன்றிலிருந்து விலகி, புதிதாக இருந்ததாலேயே நிஜமற்றதைப் போலத் தோன்றிய யதார்த் தத்துக்குச் சென்றுகொண்டிருந்தான்.

இருண்ட ஆற்றங்கரைகள் இருபுறமும் நழுவிக்கொண்டிருக்க, மலைகளுக்கிடையே இருந்த கிராமப்புறத்துக்குள் போய்க்கொண்டிருந்தான். பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக, நீர்சக்கரங்கள் சுழலும் பெரும் ஊர்வலத்தைப் போல நட்சத்திரங்கள் அவனுடைய தலைக்கு மேலே வந்தபடி இருந்தன. நட்சத்திரங்களினால் ஆன பெருந்திரள் ஒன்று வானத்தில் உருவாகி அவன் மீதேறி அவனை நசுக்க மிரட்டுவதைப் போலத் தோன்றியது.

மல்லாந்து அவன் மிதந்தபோது, பெட்டியில் நீர் நிரம்பி, அது முழுகி விட்டது; நிழல்களைக் காலைச் சிற்றுண்டியாகவும், நீராவியை மதிய உணவாகவும், ஆவிகளை இரவிலும் உட்கொள்ளும் மக்களிடமிருந்து விலகி அந்த ஆறு மிதமாகவும் சாவதானமாகவும் ஓடிக்கொண்டிருந்தது. ஆறு நிஜம்; சௌகரியமாக அவனை ஏந்திக்கொண்டு, இந்த மாதத்தையும் இந்த ஆண்டையும் பல ஆண்டுகள் கொண்ட வாழ்நாள் முழுவதையும் எண்ணிப்பார்க்கத் தேவையான அவகாசத்தை ஒருவழியாக அவனுக்குக் கொடுத்தது. தன் இதயத் துடிப்பின் வேகம் குறைந்துகொண்டுவருவதைக் கேட்டான். அவனுடைய சிந்தனையும் இரத்தத்துடன் சேர்ந்து கொதிப்பதை நிறுத்தியது.

வானத்தில் நிலா இப்போது தாழ இருந்ததைப் பார்த்தான். அங்கே இருக்கிறதே நிலா, அதற்கு ஒளியை அளிப்பது எது? சூரியன்தான், சந்தேகமில்லை. சூரியனுக்கு ஒளியை அளிப்பது? அதனுடைய அக்னியேதான். சூரியனும் தன் வேலையைச் செய்துகொண்டே இருக்கிறது, ஒவ்வொரு நாளும், எரிந்துகொண்டு, எரிந்துகொண்டு. சூரியன், காலம். சூரியனும் காலமும் எரிந்துகொண்டே. ஆறு அவனை மெதுவாகத் தாலாட்டியபடி கொண்டுசென்றது. எரிந்து கொண்டே. சூரியனும் பூமியிலிருக்கும் ஒவ்வொரு கடிகாரமும். எல்லாம் சேர்ந்து அவனுடைய மனதில் ஒருமித்து ஒன்றாயின. நிலத்தில் நீண்ட காலமும், ஆற்றில் கொஞ்ச நேரமும் மிதந்த பிறகு, இனி மீண்டும் எதையும் ஒருபோதும் ஏன் எரிக்கக் கூடாது என்பதைத் தெரிந்துகொண்டான்.

சூரியன் தினமும் எரிந்தது. அது காலத்தை எரித்தது. உலகம் ஒரு வட்டப்பாதையில் விரைந்து, தன்னையே அச்சாகக் கொண்டு சுழல, அவனிடமிருந்து எந்த உதவியையுமே வேண்டாமல் காலம் தன் போக்கில் ஆண்டுகளையும் மனிதர்களையும் எரிப்பதில் மும்முரமாக இருந்தது. ஆகவே, தீயணைப்பவர்களுடன் சேர்ந்து அவனும் எல்லாவற்றையும் எரித்தால், மேலும் சூரியனும் காலத்தை எரித்தால், எல்லாமே எரிந்துகொண்டிருக்கின்றன என்றுதான் பொருள்.

இவர்களில் யாராவது ஒருவர் எரிப்பதை நிறுத்த வேண்டும். சூரியன் நிறுத்தாது, அது நிச்சயம். ஆகவே, அதைச் செய்ய வேண்டியது மோன்

டாகும், சில மணி நேரத்துக்கு முன் அவனுடன் சேர்ந்து வேலை செய்த வர்களாகவும்தான் இருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. எல்லாவற்றையும் எரியாமல் எங்கேயாவது தனியாக எடுத்துவைத்துப் பாதுகாக்கும் வேலை தொடங்கப்பட வேண்டும், பாதுகாத்துப் பத்திர மாக வைத்திருப்பதை யாராவது செய்ய வேண்டும், ஏதோ ஒரு வகை யில், புத்தகங்களாகவோ, இசைத்தட்டுகளாகவோ, மக்களின் தலைகளுக் குள்ளேயோ, பாதுகாப்பாக இருக்கும் பட்சத்தில் எப்படி வேண்டுமானா லும், கறையான், ராமபாணப் பூச்சி, துரு, உலர்ந்து பொடியாதல் இவற் றிலிருந்தும், தீக்குச்சி வைத்திருக்கும் மனிதர்களிடமிருந்தும் காப்பாற்றப் பட்டு. எல்லா விதங்களிலும் எல்லாப் பரிமாணங்களிலும் உலகம் முழுவதிலும் எரிவது நடந்துகொண்டே இருக்கிறது. தீப்பிடிக்காத ஆஸ் பெஸ்டாஸை நெய்பவர்களின் கூட்டமைப்பு தன் வேலையை ஆரம் பிக்க வேண்டிய தருணம் இதுதான்.

தன்னுடைய குதிகால் தரையில் இடித்து, கூழாங்கற்களையும் பாறை களையும் தொட்டு, மணலில் உராய்வதை அவன் உணர்ந்தான். ஆறு அவனைக் கரையை நோக்கி ஒதுக்கியிருந்தது.

கண்களோ ஒளியோ இல்லாமல், ஒழுங்கான வடிவம் எதுவுமில்லா மல், நிற்க விரும்பாமல், தனக்காகக் காத்துக்கொண்டிருந்த புற்கள் நிறைந்த மலைகள், காடுகளினூடே பல ஆயிரம் மைல்களுக்கு நீண்டு போய்க் கொண்டிருந்த அந்தப் பிரம்மாண்ட கரிய உருவத்தை உற்றுப் பார்த் தான்.

சுகமான அந்த நீரின் போக்கிலிருந்து வெளியே எழுந்துவரத் தயங் கினான். வேட்டைநாய் அங்கே இருக்கலாம் என்று எதிர்பார்த்தான். திடீரென்று ஹெலிகாப்டரின் பலத்த காற்றில் மரங்கள் வேகமாக வீசக் கூடும்.

ஆனால் தலைக்கு மேலே வழக்கமான இலையுதிர் காலக் காற்று மட் டுமே வீசிக்கொண்டிருந்தது, இன்னொரு ஆற்றைப் போல. வேட்டை நாய் ஏன் ஓடிக்கொண்டிருக்கவில்லை? தேடல் ஏன் உட்புறமாகத் திரும் பியது? மோன்டாக் **உற்றுக்** கேட்டான். எதுவுமில்லை.

மில்லி, அவன் நினைத்துப்பார்த்தான். இதோ, இங்கே இருக்கும் இந்தக் கிராமப்புறம். உன்னிப்பாகக் கேள்! எதுவுமே இல்லை. இத்தனை அமைதி, மில்லி, இதை நீ எப்படி எதிர்கொள்வாய்? வாயை மூடுங்கள், வாயை மூடுங்கள் என்று கத்துவாயா? மில்லி, மில்லி. அவன் சோகத்தில் ஆழ்ந்தான்.

மில்லி இங்கேயில்லை, வேட்டைநாயும் இங்கேயில்லை, ஆனால், தொலைவிலிருந்து வீசிய காய்ந்த வைக்கோலின் வாடை மோன்டாக்

நிலத்தின் மீது இருப்பதை உணர்த்தியது. நிஜமின்மையின் ஏழு திரைகளுக்குப் பின்னால், தொலைக்காட்சியறைச் சுவர்களுக்கு அப்பால், நகரைச் சூழ்ந்திருக்கும் தகர அகழிக்கு அப்பால், எங்கேயோ பசுக்கள் புல்லை மேயும் என்றும், நண்பகலில் வெதுவெதுப்பான குட்டைகளில் பன்றிகள் அமிழ்ந்திருக்கும் என்றும், மலைச்சரிவில் வெண்ணிறச் செம்மறியாடுகளுக்குப் பின்னால் நாய்கள் குரைத்துக்கொண்டிருக்கும் என்றும் அவன் தெரிந்துகொண்ட தன்னுடைய இளம் வயதின் அரிய நேரங்கள் ஒன்றில் அவன் பார்த்திருந்த பண்ணை ஒன்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

சத்தம் நிறைந்த நெடுஞ்சாலைகளிலிருந்து விலகி, அமைதியான பண்ணை வீட்டுக்குப் பின்னால், கடந்துபோய்விட்டிருந்த வருடங்களின் ஒலியைப் போலத் தலைக்கு மேலே சுற்றிக்கொண்டிருந்த பழைய காற்றாலைக்குக் கீழே இருந்த தனிமையான கொட்டிலில் புது வைக்கோலில் தூங்கியதை இங்கிருந்த வைக்கோலின் வாடையும், நீரின் சலசலப்பும் இப்போது நினைவூட்டின. அப்போது தொலைவிலிருந்து வந்த மிருகங்களின், பூச்சிகளின், மரங்களின் ஓசையையும், சிறு அசைவுகள், சலசலப்புகள் இவற்றையும் இரவு முழுவதும் கேட்டவாறு உயரத்திலிருந்த வைக்கோல் பரணில் படுத்திருந்தான்.

இரவில் பரணுக்கடியில் காலடியோசையைப் போல ஏதோ ஒன்று அவனுக்குக் கேட்கக்கூடும் என்று அவன் மனம் நினைக்கும். அவன் சற்று பயந்து எழுந்து உட்காருவான். அந்த ஓசை தூரப் போகும். அவன் மீண்டும் படுக்கப்போய், இரவில் வெகு நேரம் கழித்துப் பரணின் ஜன்னல் வழியாகப் பண்ணை வீட்டில் விளக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக அணைவதைப் பார்ப்பான்—விளக்கு வெளிச்சமில்லாத ஜன்னல் ஒன்றில் தன் கூந்தலைப் பின்னிக்கொண்டிருக்கும் அழகான இளம் பெண் ஒருத்தி வந்து உட்காரும்வரை. அவளைப் பார்ப்பது சிரமமாக இருந்தாலும் அவளுடைய முகம் தன்னுடைய இப்போதைய கடந்த காலத்தில் எப்போதோ பார்த்த பெண்ணின் முகத்தைப் போல இருக்கும்; வானிலையை முன்கூட்டியே அறிந்திருந்தவள், ஒருமுறை கூட மின்மினிப்பூச்சியால் எரிக்கப்படாதவள், முகவாயில் டான்டிலியன் மலரின் மகரந்தம் ஒட்டிக்கொண்டால் அதற்கென்ன பொருள் என்பதைத் தெரிந்துவைத்திருந்தவள். பிறகு, அவள் அந்தக் கதகதப்பான ஜன்னலிலிருந்து விலகி, மாடியில் நிலா வெளிச்சத்தின் வெண்மையில் இருந்த அறையில் மீண்டும் தென்படுவாள். அதன் பிறகு, சாவின் ஓசையாகத் தொடுவானத்துக்கு அப்பால் வானத்தை இரண்டு கறுப்புத் துண்டங்களாகப் பிரித்த ஜெட் விமானங்களின் ஓசையின் பின்னணியில், விடியலின் மென்மையான நிறத்திலிருந்து தப்பி, பூமியின் விளிம்புக்கு அப்பால் இருந்த வினோத

மான புதிய நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டே, மறைவாகவும் பத்திரமாகவும் அவன் பரணில் படுத்திருப்பான்.

முழுக்கமுழுக்கக் கிராமப்புற இரவின் கதகதப்பான வாடைகளும் காட்சிகளும் அவனை இளைப்பாற்றித் தூங்க வைத்திருந்ததால் காலையில் இன்னும் தூங்க வேண்டும்போல அவனுக்குத் தோன்றாததோடு, தன் கண்கள் அகல விரிந்திருப்பதையும், வாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டபோது அதில் அரைகுறையான புன்முறுவல் இருப்பதையும் உணர்வான்.

தவிர, பண்ணையின் வைக்கோல் பரணின் படிக்கட்டுக்கு அடியில் நம்ப முடியாத ஒரு விஷயம் அவனுக்காகக் காத்திருக்கும். தான் பயப்படும் உலகத்தைப் பற்றிய முழுப் பிரக்ஞையுடன், அதிகாலையின் வெளிர்சிவப்பு வெளிச்சத்தில் படிகளில் மிகக் கவனமாக இறங்கி வந்து அந்தச் சிறிய அற்புதத்துக்கு முன்னால் நின்று, அதைத் தொடுவதற்காகக் குனிவான்.

படிக்கட்டுக்கு அடியில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு டம்ளர் குளுமையான புதிய பால், சில ஆப்பிள் பழங்கள், பேரிக்காய்கள்.

தற்சமயம் அவன் விரும்பியிருக்கக்கூடியவை எல்லாம் இவைதான். இந்தப் பிரம்மாண்ட உலகம் தன்னை ஏற்றுக்கொண்டு, தான் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அனைத்தையும் பற்றி யோசிக்கத் தேவையான நீண்ட அவகாசம் அவனுக்குக் கிடைக்கும் என்பதற்காக ஏதாவது ஒரு அறிகுறி.

ஒரு டம்ளர் பால், ஒரு ஆப்பிள், ஒரு பேரிக்காய்.

ஆற்றிலிருந்து வெளியே வந்தான்.

நிலம் அவனை நோக்கி விரைந்தது, ராட்சச அலையைப் போல. இருளும், கிராமப்புறத்தின் தோற்றமும், அவனுடைய உடலைச் சில்லிட்டுப் போக வைத்த காற்றில் மிதந்து வந்த லட்சக்கணக்கான வாடைகளும் அவனை அழுத்தின. இருளும் ஒலியும் வாசனைகளும் கலந்த அலைச் சுருளுக்கடியில் காதில் ஒரு பேரோசையோடு விழுந்தான். சுழன்றான். கொழுந்து விட்டெரியும் எரிகற்களைப் போல நட்சத்திரங்கள் அவனுடைய பார்வையின் மீது பொழிந்தன. மீண்டும் நீரில் குதித்து, இன்னும் தொலைவில் வேறெங்கேயாவது, தான் எதுவும் செய்யாமல் தன்னை அந்த ஆறு பாதுகாப்பாகக் கொண்டுபோய் விட வேண்டும் என்று விரும்பினான். சிறு வயதில் ஒருமுறை அவன் நீந்தச் சென்றபோது, அதுவரை தன் நினைவில் தான் பார்த்திராத ஒரு பேரலை எங்கிருந்தோ வந்து மோதி, அடர்பச்சை இருளிலும் உப்பு மணலிலும் தன்னை அழுத்தி, வாயிலும் மூக்கிலும் கடல் நீர் எரிச்சலையூட்டி வயிற்றைக் கலக்கிக் குமட்டியதால்

தான் அலறிய அந்த தினத்தை, மேலெழும்பி வந்த இருண்ட நிலம் அவனுக்கு நினைவூட்டியது. ஏகப்பட்ட நீர்!

ஏகப்பட்ட நிலப்பரப்பு!

அவனுக்கு முன்னால் தென்பட்ட இருண்ட சுவரில் ஒரு கிசுகிசுப்பு. ஏதோ ஒரு உருவம். உருவத்தின் நடுவில் இரண்டு கண்கள். அவனைப் பார்த்துக்கொண்டிருக்கும் இரவு. அவனைப் பார்த்துக்கொண்டிருந்த காடு.

வேட்டைநாய்!

இவ்வளவு நேரம் ஓடி, விரைந்து, வியர்த்துக்கொட்டி, பாதி முழுகிப் போய், இவ்வளவு தூரம் வந்து, இவ்வளவு கடுமையாகப் போராடி, பாதுகாப்பாக இருப்பதாக எண்ணி, நிம்மதிப் பெருமூச்சுடன் நிலப் பரப்புக்கு வந்து, கடைசியில் இதையா பார்க்க வேண்டும்...?

வேட்டைநாய்!

எந்த ஒரு மனிதனாலும் தாங்க முடியாத ஒரு சோதனை இது என் பதைப் போல மனஉளைச்சலுடன் கூடிய கடைசி அலறல் ஒன்று மோன் டாகிடமிருந்து வெளிப்பட்டது.

அந்த உருவம் அதிர்ந்து ஓடியது. கண்கள் மறைந்துவிட்டன. காய்ந்த இலைக் குவியல்கள் காற்றில் பறந்து பொழிந்தன.

அந்த வனாந்தரத்தில் மோன்டாக் தனித்திருந்தான்.

ஒரு மான். அந்தப் பிராணியிடமிருந்து வெளிப்பட்ட கனமான மூச்சு, இரத்தம் இவற்றுடன் பலமான கஸ்தூரியின் மணத்தைப் போன்ற வாசனையையும் முகர்ந்தான்; அவனுடைய கண்களுக்குப் பின்னால், இதயத்தின் துடிப்புக்கேற்ப அவனை நோக்கி மரங்கள் ஓடிவந்து, விலகி, ஓடிவந்து, விலகிப் போய்க்கொண்டிருந்த இந்த மாபெரும் இருளில் ஏலக்காய், பாசி, 'ராக்வீட்'[8] மகரந்தங்கள் கலந்த வாசனை.

தரையில் லட்சக்கணக்கான இலைகள் இருந்திருக்க வேண்டும்; சூடான கிராம்பு, வெதுவெதுப்பான தூசி இவற்றின் மணம் கலந்திருந்த ஒருவித வறண்ட நதியில் காலைத் தோய்த்தபடி நடந்தான். மேலும், பிற மணங்கள்! இரவில் பெரும்பாலும் நிலவின் ஒளி பட்டதால் பசுமையாக, குளிர்ச்சியாக, வெண்மையாக இருந்த நிலப்பரப்பு முழுவதிலும் நறுக் கிய உருளைக் கிழங்கின் மணம் வீசியது. ஊறுகாய் புட்டியிலிருந்து வரும் மணமும், சாப்பாட்டு மேஜைமேல் இருக்கும் கொத்தமல்லி போன்ற பார்ஸ்லியின் மணமும் வீசியது. ஜாடியில் இருக்கும் கடுகுப்

---

8 ராக்வீட்: அமெரிக்காவில் காணப்படும், காய்ச்சலை வரவழைக்கும் மகரந்தங்கள் நிரம்பிய களை.

பசையைப் போன்ற மெல்லிய மஞ்சள் மணமும் வந்தது. அடுத்த வீட்டுத் தோட்டத்திலிருந்து வரும் 'காரனேஷன்' மலர்களை ஒத்த வாசனையும் இருந்தது. அவன் கையை மேலிருந்து கீழே கொண்டுவந்தபோது, குழந்தை தடவுவதைப் போல ஒரு தாவரம் அவனுடையக் கையைத் தடவியது. அவனுடைய விரல்களில் அதிமதுரத்தின் மணம் வீசியது.

நன்றாக சுவாசித்துக்கொண்டு நின்றான். ஒவ்வொரு முறையும் மூச்சோடு சேர்த்து அந்த நிலத்தை உள்ளே இழுக்கஇழுக்க, நிலத்தின் எல்லா விவரங்களும் அவன் நெஞ்சை நிரப்பின. அவனுக்குள் வெறுமை இருக்கவில்லை. அவனுக்குள் நிரப்பப்பட வேண்டியவை தேவைக்கு அதிகமாகவே இங்கே இருந்தன. தேவைக்கு மேலேயே எப்போதும் இங்கே இருக்கும்.

இலைகளின் சிறிய அலைகளுக்கு மத்தியில் தட்டுத்தடுமாறி நடந்து போனான்.

வினோதமானவற்றுக்கு நடுவே பரிச்சயமான ஒன்று.

அவனுடைய காலில் பட்ட ஏதோ ஒன்று மெலிதாக ஒலித்தது.

இந்தப் பக்கம் ஒரு கஜ தூரத்துக்கும், அந்தப் பக்கம் ஒரு கஜ தூரத்துக்குமாகத் தரையில் கையால் தடவினான்.

இருப்புப்பாதை.

நகரத்திலிருந்து வெளியே வந்து, நிலப்பரப்பின் மேல் துருப்பிடித்துப் போய், காடுகள், மரங்களினூடாக ஆற்றின் அருகில் இப்போது கைவிடப்பட்டிருக்கும் இருப்புப்பாதை.

அவன் எங்கே போவதென்றாலும் இதோ இதுதான் பாதை. முட்புதர்கள் வழியாக, மணங்களும் உணர்வுகளும் ஸ்பரிசங்களுமாக இருக்கும் ஏரிகள் வழியாக, கிசுகிசுத்தபடி வீசிய இலைகளின் மத்தியில் அவன் தொட்டுப் பார்த்துத் தன் கால்களுக்கடியில் உணரக்கூடிய ஒரே ஒரு பொருள், இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தனக்குத் தேவைப்படும் மாய தாயத்து இங்கே இருந்தது.

பாதையில் தொடர்ந்து நடந்தான்.

தன்னால் நிரூபிக்க முடியாத ஒரு உண்மையைப் பற்றி எப்படித் திடீரென்று தான் இவ்வளவு நிச்சயமாக இருந்தான் என்று அவனுக்கே வியப்பாக இருந்தது: முன்பொரு காலத்தில், அவன் இப்போது நடந்துகொண்டிருந்த இடத்தில்தான் க்லாரிஸ் நடந்துபோயிருந்திருக்கிறாள்.

அரை மணி நேரத்துக்குப் பிறகு குளிரில் நடுங்கியபடி, தன்னுடைய உடல் முழுவதையும் குறித்த—முகம், வாய், இருள் கப்பியிருந்த கண்கள்,

பலவித ஓசைகளால் நிரம்பியிருந்த காதுகள், முட்களும் காட்டு இலை களும் ஏற்படுத்திய சிராய்ப்புகளுடனான கால்கள் இவற்றைக் குறித்த— முழுப் பிரக்ஞையுடன் இருப்புப்பாதை வழியாகக் கவனமாகச் சென்ற போது, தனக்கு முன்னால் நெருப்புச் சுவாலை ஒன்று தெரிவதைப் பார்த்தான்.

கண் சிமிட்டுவதைப் போல அந்தச் சுவாலை மறைந்துபோய் மீண் டும் தோன்றியது. தான் விடும் ஒரு மூச்சில் அந்த நெருப்பை அணைத்து விடுவோமோ என்று அவன் பயந்து நின்றான். ஆனால் நெருப்பு அங் கேயேதான் இருந்தது. அவன் வெகு தொலைவிலிருந்து ஜாக்கிரதை உணர்வோடு அதை நெருங்கினான். அதற்கு வெகு அருகில் வருவதற்கு அவனுக்குக் கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள்வரை ஆனது. அவன் மறைவிலிருந்து அதைப் பார்த்துக்கொண்டே நின்றான். அந்தச் சிறிய சலனம், வெண்மையும் சிவப்பு நிறமும் கலந்து, அவனைப் பொறுத்தவரை முற்றிலும் மாறுபட்ட பொருளைத் தந்த விநோதமான நெருப்பு.

அது எரிக்கவில்லை, **கதகதப்பு** அளித்தது.

அதன் கதகதப்பை நாடிப் பல கைகள் இருப்பதைப் பார்த்தான். இருட்டில் மறைந்துவிட்டதால் புஜங்கள் இல்லாத கைகள். கைகளுக்கு மேலே முகங்கள், நெருப்பின் ஒளியினால் மட்டுமே அசைந்து எழும்பி மினுக்மினுக்கென்று இருந்ததைத் தவிர மற்றபடி சலனமற்று இருந்த முகங்கள். நெருப்பு இந்த மாதிரித் தோற்றமளிக்கும் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. தான் எடுத்துக்கொள்வதைப் போலவே அது கொடுக்கவும் செய்யும் என்று தன் வாழ்நாளில் அவன் எண்ணிப்பார்த் ததே இல்லை. அதனுடைய மணம்கூட வித்தியாசமாக இருந்தது.

எவ்வளவு நேரம் அப்படி நின்றிருந்தான் என்று அவனுக்கே தெரி யாது. ஆனால் நெருப்பினால் கவரப்பட்டுக் காட்டிலிருந்து வந்த ஒரு மிருகத்தைப் போலத் தான் இருப்பதாக, முட்டாள்தனமாக ஆனால் மனத்துக்குப் பிடித்த, ஒரு பிரக்ஞை அவனுக்குள் இருந்தது. ரோமமும் கண்ணாடிக் கண்களும் கம்பளியும் நீண்ட மூக்கும் குளம்பும் கொண்ட உயிரினமாக, வெட்டித் தரையில் போட்டால் இலையுதிர் காலத்தைப் போல வாடையளிக்கும் இரத்தமும் கொம்புகளும் கொண்ட உயிரினமாக அவன் இருந்தான். அங்கே வெகு நேரம் அவன் நின்றான், சுவாலையின் கதகதப்பான சடசடப்பைக் கேட்டுக்கொண்டே.

அங்கிருந்த நெருப்பை மௌனம் சூழ்ந்திருந்தது. அங்கிருந்த ஆட்க ளின் முகங்களில் அந்த மௌனம் இருந்தது. அவகாசமும் இருந்தது: மரங்களுக்கடியில் துருப்பிடித்துக்கொண்டிருந்த இருப்புப்பாதையருகே உட்கார்ந்து, உலகத்தைப் பார்ப்பதற்கு, காய்ச்சியடித்து வடிவம் கொடுப்

பதற்காக நெருப்பின் நடுவே அவர்கள் பிடித்துக்கொண்டிருக்கும் இரும்பைப் போன்றது இந்த உலகம் என்பதைப் போல, அதைக் கண்ணெதிரே திருப்பித்திருப்பிப் பார்ப்பதற்குப் போதுமான அவகாசம் இருந்தது. வித்தியாசமாக இருந்தது நெருப்பு மட்டுமல்ல, மௌனமும்தான். உலகத்தில் இருந்த அனைத்தினிடமும் அக்கறை கொண்டிருந்த பிரத்தியேகமான அந்த மௌனத்தின் திசையில் மோன்டாக் நகர்ந்தான்.

பிறகு, சில குரல்கள் ஒலிக்கத் தொடங்கின, அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தக் குரல்கள் என்ன சொல்லிக்கொண்டிருந்தன என்று அவனால் கேட்க முடியவில்லை, ஆனால், அந்த ஒலி எழும்பி மெல்ல இறங்கியது. அந்தக் குரல்கள் உலகை உற்றுப் பார்த்துப் புரட்டிப் போட்டன; அந்த நிலமும், மரங்களும், ஆற்றை ஒட்டிச் சென்ற இருப்புப் பாதையின் முடிவிலிருந்த நகரமும் அவற்றுக்குத் தெரிந்திருந்தன. அந்தக் குரல்கள் எல்லாவற்றையும் பற்றிப் பேசின; அந்தப் பேச்சின் கதி, சலனம், இடைவிடாமல் கிளறப்பட்ட ஆர்வம், அவர்களிடம் தென்பட்ட வியப்பு இவற்றிலிருந்து அவர்களல் பேச முடியாதது எதுவுமே இருக்காது என்று அவனுக்குப் புரிந்தது.

அதன் பிறகு, அந்த ஆட்களில் ஒருவர் நிமிர்ந்து, முதல் முறையாகவோ அல்லது ஒருவேளை ஏழாவது முறையாகவோ, அவனைப் பார்த்தார். மோன்டாகைக் குரல் ஒன்று அழைத்தது.

"பரவாயில்லை. இப்போது நீங்கள் வெளியே வரலாம்."

மோன்டாக் நிழலுக்குள் பின்வாங்கினான்.

"பரவாயில்லை," என்றது குரல். "இங்கே நீங்கள் தாராளமாக வரலாம்."

ஆழ்ந்த நீல நிற டெனிம் கால்சட்டையும் கோட்டும் ஆழ்ந்த நீல நிறச் சட்டையும் அணிந்து அங்கே உட்கார்ந்திருந்த வயதான ஐந்து ஆண்களையும் நெருப்பையும் நோக்கி மோன்டாக் மெதுவாக நடந்தான். அவர்களிடம் என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

"உட்காருங்கள், கொஞ்சம் காப்பி குடிக்கிறீர்களா?" என்றார், அந்தச் சிறிய குழுவின் தலைவரைப் போலத் தோன்றிய ஒருவர்.

மெல்லிய தகரத்தால் ஆன மடக்குக் கோப்பை ஒன்றில் ஆவி பறக்கும் காப்பியை ஊற்றி, அவனுக்கு உடனே கொடுக்கப்படுவதைப் பார்த்தான். அதை மெதுவாகச் சப்பிக் குடித்தபோது மற்றவர்கள் ஆர்வத்துடன் அவனைப் பார்ப்பதை உணர்ந்தான். அவனுடைய உதடுகள் சுட்டுவிட்டன, ஆனால் இதமாக இருந்தது. அவனைச் சுற்றியிருந்த முகங்களில் தாடி வளர்ந்திருந்தாலும் அது சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய கைகள் சுத்தமாக இருந்தன. விருந்தாளி ஒருவரை

வரவேற்பதைப் போல எழுந்து நின்ற அவர்கள் மீண்டும் உட்கார்ந்தார்கள். மோன்டாக் மெதுவாகக் காப்பியைக் குடித்தான்.

"நன்றி. மிக்க மிக்க நன்றி," என்றான்.

"மகிழ்ச்சி மோன்டாக். என் பெயர் க்ராஞ்சர்." நிறமற்ற திரவம் இருந்த சிறிய புட்டி ஒன்றை அவர் நீட்டினார். "இதையும் குடித்துவிடுங்கள். உங்களுடைய வியர்வையின் வேதியியல் அடையாளத்தை இது மாற்றிவிடும். இன்னும் அரை மணி நேரத்தில் வேறு இரண்டு பேரைப் போன்ற வாடை உங்கள்மேல் இருக்கும். வேட்டைநாய் உங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருப்பதால், புட்டி முழுவதையும் காலி செய்வது மிகவும் நல்லது."

கசப்பான அந்தத் திரவத்தை மோன்டாக் குடித்தான்.

"காட்டுப் பூனையின் துர்நாற்றம் உங்களிடம் வீசும், ஆனால் அது பரவாயில்லை," என்றார் க்ராஞ்சர்.

"உங்களுக்கு என் பெயர் தெரிந்திருக்கிறது" என்றான் மோன்டாக்.

நெருப்பின் அருகே, மின்கலத்தில் இயங்கும் சிறிய தொலைக்காட்சிப் பெட்டியைத் தலையசைத்துக் காட்டினார். "துரத்தலை நாங்கள் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆற்றின் தென்புறத்தில் நீங்கள் வந்தடைவீர்கள் என்று கணக்கிட்டோம். காட்டில் ஓடிவந்து, குடிபோதையில் இருந்த மானைப் போல ஆற்றில் நீங்கள் பாய்ந்தது காதில் விழுந்தபோது, எப்போதும் செய்வதைப் போல நாங்கள் ஒளிந்துகொள்ளவில்லை. ஹெலிகாப்டர் நகரத்தை நோக்கித் திரும்பிப் பறந்தபோது, நீங்கள் ஆற்றில் இருந்திருப்பீர்கள் என்று ஊகித்தோம். அதில் ஒரு தமாஷ் இருக்கிறது. துரத்தல் இன்னும் போய்க்கொண்டிருக்கிறது. வேறு திசையில் என்றாலுங்கூட."

"வேறு திசையிலா?"

"பார்ப்போமே."

க்ராஞ்சர் தொலைக்காட்சியை முடுக்கினார். சிறிதாக்கப்பட்டு, எளிதாகக் கைக்கு கை மாறி, சுழலும் வண்ணங்களும் ஓட்டமும் நிரம்பிய அந்தக் காட்சி கொடிய கனவாக இருந்தது. குரல் ஒன்று அலறியது:

"நகரத்தின் வடக்குப் பகுதியில் துரத்தல் தொடர்ந்துகொண்டிருக்கிறது! காவல்துறை ஹெலிகாப்டர்கள் நிழற்சாலை 87ஐயும், எல்ம் க்ரோவர் பூங்காவையும் சுற்றிவளைக்கின்றன!

க்ராஞ்சர் தலையை அசைத்தார். "அவர்கள் நடிக்கிறார்கள். ஆற்றுக்கு வந்தபோது உங்களை அவர்கள் தவறவிடும்படி செய்துவிட்டீர்கள். அவர்களால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. இன்னும் கொஞ்ச நேரம்தான்

பார்வையாளர்களைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்று அவர்களுக் குத் தெரியும். இந்த நிகழ்ச்சி சட்டென்று முடிவுக்கு வர வேண்டும், உடனே! அந்தப் பாழாய்ப்போன ஆறு முழுவதிலும் தங்கள் தேடலை அவர்கள் தொடங்கினால் இரவு முழுவதும் அது நீடிக்கும். ஆகவே, எல்லாவற்றையும் டமாலென்று முடிக்க பலிகடா ஒன்றை மோப்பம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். கவனியுங்கள். அடுத்த ஐந்து நிமிடங் களில் மோன்டாகை அவர்கள் பிடித்துவிடுவார்கள்!"

"ஆனால், எப்படி—"

"பார்த்துகொண்டே இருங்கள்."

ஹெலிகாப்டரின் அடிவயிற்றில் சுற்றிக்கொண்டிருந்த காமெரா ஆளர வமற்ற ஒரு தெருவை நோக்கித் திரும்பியது.

"அதைப் பார்த்தீர்களா?" க்ராஞ்சர் கிசுகிசுத்தார். "அது நீங்களாக இருக்கப்போகிறீர்கள்; அந்தத் தெருவின் கோடியில் இருப்பவர் நம் முடைய இரை. காமெராவின் பார்வை எப்படிக் குவிகிறது பார்த்தீர்களா? நாடகம் கட்டமைக்கப்படுகிறது. திகிலுற்ற எதிர்பார்ப்பு. தொலைதூரப் படப்பிடிப்பு. தற்சமயம், உலாவுவதற்காக யாரோ ஒரு அப்பாவி வீட் டிலிருந்து வெளியே வந்திருக்கிறான். அரிதான ஒன்று. அபூர்வமான நிகழ்வு. இவனைப் போன்ற வினோதமான எளிய இலக்குகளின் பழக் கங்களைப் பற்றிக் காவல்துறைக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கா தீர்கள். காலை வேளையில் சும்மா எந்தக் குறிக்கோளும் இல்லாமலோ அல்லது தூக்கம் வராததனாலோ உலாவ வருபவர்கள். எப்படி இருந்தா லும் பல மாதங்களாக, வருடங்களாகக் காவல்துறையினர் அவனைக் கண்காணித்துவந்திருக்கிறார்கள். இது போன்ற தகவல்கள் எப்போது கைகொடுக்கும் என்றுகூடத் தெரியாது. தற்சமயம் பயன்படுத்திக் கொள்ள உண்மையிலேயே அது மிகவும் சௌகரியமாக அமைந்துவிட் டது. மானம் போகாமல் இருக்கும். அட கடவுளே, அங்கே பாருங்கள்!"

நெருப்பருகே இருந்தவர்கள் முன்புறமாகக் குனிந்தார்கள்.

திரையில் ஒருவன் தெரு முனையில் திரும்பி வந்துகொண்டிருந்தான். திடீரென்று, பார்வைச் சட்டத்துக்குள் இயந்திர வேட்டைநாய் முன் னோக்கிப் பாய்ந்தது. ஹெலிகாப்டர் விளக்குகளிலிருந்து பாய்ச்சப்பட்ட ஒரு டஜன் பிரகாசமான ஒளித்தூண்கள் கூண்டுபோல அந்த மனிதனைச் சூழ்ந்தன.

குரலொன்று கத்தியது, "அதோ மோன்டாக்! தேடல் முடிந்தது!"

கையில் புகைந்துகொண்டிருந்த சிகரெட்டுடன் அந்த அப்பாவி மனி தன் திடுக்கிட்டு நின்றான். அந்த வேட்டைநாயை, அது என்னவென்று தெரியாமல், முறைத்துப் பார்த்தான். அவனுக்கு அது தெரியாமலேயே

கூட இருந்திருக்கலாம். வானத்தையும், அலறிக்கொண்டிருந்த சங்குகளையும் நிமிர்ந்து பார்த்தான். காமெராவின் வியக்கத்தக்க அழகுடன் இருந்த தாள கதி, காலப் பிரக்ஞை இவற்றுடன் வேட்டைநாய் மேலெழும்பிக் குதித்தது. அதனுடைய ஊசி வெளியே நீண்டது. எல்லோருடைய கவனத்தையும் கவரும் வகையில் சற்று நேரம் அந்தரத்தில் இருந்தது—பலியின் முகத்தில் தென்பட்ட பெரும் திகிலுற்ற பார்வையையும், ஆளரவமற்று இருந்த தெருவையும், இலக்கை நோக்கிப் பறக்கும் குண்டைப் போன்ற அந்த எஃகு மிருகத்தையும் நகரம் முழுவதும் பரந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் ரசிக்கப் போதுமான கால அவகாசம் அளிப்பதைப் போல.

"மோன்டாக், அசையாதே!" என்றது ஒரு குரல், வானத்திலிருந்து.

பலியின் மேல் வேட்டைநாய் விழுந்த அதே சமயத்தில் காமெராவும் அவன்மேல் இறங்கியது. இரண்டுமே அவனை ஒரே சமயத்தில் அடைந்தன. இறுக்கமான சிலந்திப் பிடி ஒன்றில் வேட்டைநாயும் காமெராவும் அவனை இறுகப் பற்றின. அவன் அலறினான், அலறினான், அலறினான்!

இருட்டடிப்பு.

நிசப்தம்.

இருட்டு.

அமைதியினூடே மோன்டாக் கத்தி, திரும்பிக்கொண்டான்.

நிசப்தம்.

அதற்குப் பிறகு, முகங்களில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் நெருப்பைச் சுற்றி ஆட்கள் உட்கார்ந்திருக்க, சற்று நேரத்துக்குப் பின் இருண்ட திரையில் அறிவிப்பாளர் சொன்னார்: "தேடல் முடிந்தது. மோன்டாக் இறந்துவிட்டான்; சமூகத்துக்கு எதிரான குற்றத்துக்குப் பழி வாங்கப்பட்டுவிட்டது."

இருள்.

"இப்போது ஹோட்டல் லக்ஸில் இருக்கும் 'ஸ்கை ரூம்' அரங்கத்துக்கு, 'விடியலுக்குச் சற்று முன்' என்ற அரை மணி நேர நிகழ்ச்சிக்காக உங்களை அழைத்துச்செல்கிறோம்"

க்ராஞ்சர் அதை அணைத்தார்.

"அந்த மனிதனுடைய முகத்தின் மேல் பார்வை குவியும்படியாக அவர்கள் காட்டவில்லை. அதை நீங்கள் கவனித்தீர்களா? அது நீங்கள்தானா என்று உங்களுடைய மிகச் சிறந்த நண்பர்களால்கூடச் சொல்ல முடியாது. வேண்டுமென்றே அதைக் கலைத்துப்போட்டு மீதத்தைக் கற்ப

னைக்கு விட்டுவிட்டார்கள். நாசமாய்ப்போக," அவர் கிசுகிசுத்தார், "நாசமாய்ப்போக".

மோன்டாக் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், நடந்ததைப் பற்றி நினைத்து நடுங்கியபடியே கறுப்புத் திரையில் அவனுடைய பார்வை அசையாமல் இருந்தது.

க்ராஞ்சர் மோன்டாகின் புஜத்தைத் தொட்டார். "இறந்தவர் உலகிலிருந்து மீண்டு வந்தவரை வரவேற்கிறோம்." மோன்டாக் தலையசைத்தான். க்ராஞ்சர் தொடர்ந்தார். "இனி நீங்கள் எல்லோரையும் தெரிந்து கொள்ளலாம். இவர் ஃப்ரெட் க்லெமென்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் அணுசக்திப் பொறியியல் கல்லூரியாக மாறுவதற்கு முன் தாமஸ் ஹார்டி இருக்கையின் முன்னாள் பேராசிரியர். மற்றவர் லாஸ் ஏஞ்சலெஸில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலிருந்து வந்த முனைவர் சிம்மன்ஸ், ஆர்டெகா யி கேஸேயைப் பற்றிய அறிஞர்; பேராசிரியர் வெஸ்ட், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சில வருடங்களுக்கு முன்னால், பழங்காலத் துறையாக இப்போது ஆகிவிட்ட ஒழுக்கநெறித் துறையில் பணியாற்றியிருக்கிறார். இதோ, அருட்தந்தை படோவர், முப்பது வருடங்களுக்கு முன் சில சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர், தன்னுடைய சொந்தக் கருத்துகளைச் சொன்னதற்காக ஒரே வாரத்தில் தன் விசுவாசிகளை இழந்துவிட்டவர், இப்போது சில நாட்களாக எங்களுட னேயே இருக்கிறார். என்னைப் பற்றி: '**கையுறையில் விரல்கள்: தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையேயான ஒழுங்கான உறவு**' என்ற புத்தகம் எழுதியிருக்கிறேன். இதோ, நான்! நல்வரவு, மோன்டாக்!"

"நான் உங்களோடு சேர்த்துக்கொள்ளக்கூடியவன் இல்லை," என்றான் மோன்டாக், கடைசியில் மெதுவாக. "நான் முழுக்கமுழுக்க முட்டாளாகவே இருந்திருக்கிறேன்."

"எங்களுக்கும் அது பழக்கமானதுதான். நாங்கள் எல்லோருமே சரியான தவறுகளைச் செய்தோம், இல்லையென்றால் நாங்கள் இங்கு வந்திருக்க மாட்டோம். வெவ்வேறு தனிமனிதர்களாக இருந்தபோது, எங்களிடமிருந்ததெல்லாம் பெருங்கோபம்தான். பல வருடங்களுக்கு முன் என்னுடைய புத்தக அலமாரியை எரிக்க வந்த தீயணைப்பாளரைத் தாக்கினேன். அன்றிலிருந்தே ஓடிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எங்களுடன் சேர விரும்புகிறீர்களா, மோன்டாக்?"

"ஆமாம்."

"உங்களால் என்ன அளிக்க முடியும்?"

"எதுவுமில்லை. 'பிரசங்கி'யில் ஒரு பகுதி என்னிடம் இருந்தது என்று நினைத்தேன். 'வெளிப்படுத்தின விசேஷ'த்தில் கொஞ்சம் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அதுகூட இல்லை."

" 'பிரசங்கி' இருந்தால் நல்லதுதான். எங்கே இருந்தது?"

"இங்கே" என்று மோன்டாக் தன் தலையைத் தொட்டுக் காட்டினான்.

"அப்படியா?" க்ராஞ்சர் சிரித்துத் தலையை ஆட்டினார்.

"அதிலென்ன தவறு? அது சரியில்லையா?" என்றான் மோன்டாக்.

"சரி என்று சொல்வதற்கு ஒரு படி மேலே: கச்சிதம்!" க்ராஞ்சர் அருட்தந்தையை நோக்கித் திரும்பினார். "நம்மிடம் 'பிரசங்கி' இருக்கிறதா?"

"ஒரே ஒருவரிடம். யங்ஸ்டௌனில், ஹாரிஸ் என்பவரிடம்."

"மோன்டாக்," க்ராஞ்சர் மோன்டாகின் தோளை இறுகப் பற்றினார். "நடக்கும்போது ஜாக்கிரதையாக இருங்கள். உங்கள் உடல்நலனைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். ஹாரிஸுக்கு ஏதாவது ஆகிவிட்டதென்றால், நீங்கள்தான் பிரசங்கி. இந்தக் கடைசி ஒரு நிமிடத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவராக ஆகிவிட்டீர்கள்!"

"ஆனால் எனக்கு மறந்துவிட்டதே!"

"இல்லை. எதுவுமே ஒருபோதும் தொலைந்துபோவதில்லை. நினைவுத் தளைகள் உதிர்ந்து விழுமாறு செய்ய எங்களுக்குத் தெரியும்."

"ஆனால், நினைவுபடுத்திப்பார்க்க நான் முயன்றிருக்கிறேன்!"

"முயல வேண்டாம். நமக்குத் தேவையானபோது அது தானாக வரும். புகைப்படம் போன்ற நினைவுகள் நம் எல்லோருக்குமே உண்டு. ஆனால் அதில் நமக்குத் தேவையானவையாக இருக்கும் விவரங்களையெல்லாம் எப்படித் தடுத்துவைப்பது என்று கற்றுக்கொள்வதிலேயே வாழ்நாள் முழுவதையும் கழித்துவிடுகிறோம். இங்கே இருக்கும் திரு. சிம்மன்ஸ் இருபது வருடங்களாக இதைக் குறித்து ஆய்வு செய்துவருகிறார்; நாம் ஒருமுறை படித்துவிட்டிருக்கும் எதையுமே நினைவுக்குக் கொண்டுவர உதவும் வழிமுறை ஒன்று இப்போது எங்களிடம் இருக்கிறது. மோன்டாக், என்றாவது ஒருநாள் ப்ளேட்டோவின் 'குடியரசு' படிக்க உங்களுக்கு விருப்பமா?"

"நிச்சயமாக!"

"நான்தான் ப்ளேட்டோவின் 'குடியரசு'. மார்கஸ் ஆரெலியஸ் படிக்க வேண்டுமா? சிம்மன்ஸ்தான் மார்கஸ்."

"வணக்கம்" என்றார் சிம்மன்ஸ்.

"வணக்கம்" என்றான் மோன்டாக்.

" 'கலிவரின் பயணங்கள்' என்ற தீய அரசியல் புத்தகம் இருக்கிறதே, அதன் ஆசிரியர் ஜோனாதன் ஸ்விஃப்டை இதோ நீங்கள் சந்திக்க வேண் டும். இந்த இன்னொருவர்தான் சார்லஸ் டார்வின், அதோ, அவர் ஷோபனெர், இவர், ஐன்ஸ்டீன், என்னுடைய பக்கத்தில் இருக்கிறாரே இவர், திரு. ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர், உண்மையிலேயே மிகவும் கனி வான தத்துவச் சிந்தனையாளர். மோன்டாக், இங்கே இருக்கும் நாங்கள் எல்லோருமே முறையே அரிஸ்டோ ஃபேனஸ், மகாத்மா காந்தி, கௌதம புத்தர், கன்ஃபியூஷியஸ், தாமஸ் லவ் பீகாக், தாமஸ் ஜெஃபர்ஸன். தவிர, லிங்கன்கூட. நாங்களேதான் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்."

எல்லோருமே சத்தமின்றிச் சிரித்தார்கள்.

"இது சாத்தியமில்லை" என்றான் மோன்டாக்.

"சாத்தியம்தான்," என்று சிரித்தபடி பதிலளித்தார் க்ராஞ்சர். "நாங்க ளும் புத்தகங்களை எரிப்பவர்கள்தான். புத்தகங்களைப் படித்துவிட்டு எரித்துவிடுவோம், அவை கண்டுபிடிக்கப்பட்டுவிடுமோ என்ற பயத்தில். நுண்பட முறையும் பயனில்லாமல் இருந்தது; நாங்களோ ஓயாமல் பயணம் செய்துகொண்டிருந்தோம், நுண்படத்தைப் புதைத்துவைத்து விட்டுப் பிறகு திரும்பி வர நாங்கள் விரும்பவில்லை. கண்டுபிடிக்கப் பட்டுவிடும் சாத்தியக்கூறு இருக்கவே செய்தது. யாரும் பார்க்கவோ, சந்தேகப்படவோ முடியாத இடத்தில், எங்களுடைய வயதான தலை களுக்குள் அவற்றைப் பாதுகாத்து வைப்பதே சிறந்ததாகப் பட்டது. கொஞ்சம் வரலாறு, இலக்கியம், சர்வதேசச் சட்டம், பைரன், டாம் பெய்ன், மாக்கியவெல்லி அல்லது ஏசு கிறிஸ்து இவையாக நாங்கள் எல்லோருமே இருக்கிறோம். எல்லாமே இங்கே இருக்கிறது. எங்களுக்கோ நேரமாகிக்கொண்டிருக்கிறது. போர் தொடங்கிவிட்டது. ஆக மொத்தம், நாங்கள் இங்கே இருக்கிறோம், நகரம் அங்கே இருக்கிறது, தன்னுடைய ஆயிரக்கணக்கான வண்ணங்களை அணிந்துகொண்டு. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், மோன்டாக்?"

"நான் தீயணைப்பவர்களின் வீட்டில் புத்தகங்களை ஒளித்துவைத்து, அபாய அறிவிப்பு மணியை ஒலித்து எனக்குத் தோன்றிய வழியிலேயே கண்மூடித்தனமாகப் போனேன் என்று நினைக்கிறேன்."

"எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்தீர்கள். நாடு முழுவதும் அவ்வாறு நடந்திருந்தால், பிரமாதமாக அது பயனளித்திருக்கும். ஆனால் நாங்கள் கையாண்ட வழி எளிமையானது, மேலும் சிறந்ததென்றுகூட நாங்கள் கருதுகிறோம். நாங்கள் செய்ய விரும்புவதெல்லாம் நமக்குத் தேவைப்படக்கூடிய அறிவு அனைத்தையும் பழுதடையாமல் பத்திர மாகப் பாதுகாத்து வைப்பதே. இதுவரை யாரையும் உசுப்பிவிடவோ

கோபமடையச் செய்யவோ நாங்கள் கிளம்பவில்லை. ஏனென்றால், நாங்கள் அழிந்துவிட்டால் அறிவு செத்துவிடும். ஒருவேளை நிரந்தரமாகவே. எங்களுக்கே உரிய தனி பாணியில் நாங்கள் உதாரண குடிமக்கள்; பழைய இருப்புப்பாதைகள் வழியே நடக்கிறோம், இரவில் மலைப் பகுதிகளில் உறங்குகிறோம், நகர மக்களும் எங்களை எங்கள் போக்கில் விட்டுவிடுகிறார்கள். எப்போதாவது எங்களை நிறுத்தித் தேடுகிறார்கள். ஆனால் குற்றம் சுமத்தும்படி எங்களிடம் எதுவும் இருப்பதில்லை. எளிதாக வளைந்து கொடுக்கும், நெகிழ்வான, துண்டுதுண்டாக இருக்கும் அமைப்பு எங்களுடையது. எங்களிடையே சிலர் முகத்திலும் விரல் ரேகைகளிலும் சரும மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறோம். இப்போது பயங்கர வேலை ஒன்று எங்களுக்கு இருக்கிறது; உடனே போர் தொடங்கி, அதே வேகத்திலேயே முடிந்தும் விடுவதற்காகக் காத்திருக்கிறோம். இது மகிழ்ச்சியான ஒன்று அல்ல; ஆனால், எதுவும் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை, வனாந்தரத்தில் குரல் எழுப்பிக்கொண்டிருக்கும் வினோதமான சிறுபான்மையினராக நாங்கள் இருக்கிறோம். போர் முடிந்த பிறகு, இந்த உலகத்துக்குக் கொஞ்சம் பயனுள்ளவர்களாக நாங்கள் இருப்போம்."

"அப்போது நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்பார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"இல்லையென்றால் நாங்கள் வெறுமனே காத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். புத்தகங்களை எங்களுடைய குழந்தைகளுக்கு நாங்கள் சொல்லிக்கொடுப்போம், செவி வழியாக; தங்கள் முறைக்கு குழந்தைகள் மற்றவர்களுக்காகக் காத்திருப்பார்கள். இந்த முறையில் நிறையவே தொலைந்துபோய்விடக்கூடும்தான். ஆனால் மக்களைக் கேட்கச் செய்ய நம்மால் முடியாது. நேரம் வரும்போதுதான் அவர்கள் வழிக்கு வருவார்கள், என்ன நடந்தது என்றும், தங்கள் காலத்தில் ஏன் உலகம் வெடித்துச் சிதறியது என்றும் வியந்தபடி. இது இப்படியே தொடராது."

"இப்படி எத்தனை பேர் இருக்கிறீர்கள்?"

"சாலைகளிலும் கைவிடப்பட்டிருக்கும் இருப்புப்பாதைகளிலும் ஆயிரக்கணக்கானோர் இன்று இருக்கிறார்கள், வெளித்தோற்றத்துக்குப் பரதேசிகளாகவும் உள்ளே நூலகங்களாகவும். ஆரம்பத்தில், இவையெல்லாம் திட்டமிட்டுச் செய்யப்படவில்லை. ஒவ்வொருவரிடமும் தன் நினைவில் வைத்திருக்க வேண்டிய புத்தகம் ஒன்று இருந்தது; நினைவில் வைத்திருந்தார்கள். பிறகு, கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் என்று சொல்லும்படியான காலத்தில், பயணம் செய்துகொண்டே இருந்த நாங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டு, நெகிழ்வான கூட்டு அமைப்பு ஒன்றை உருவாக்கி ஒரு திட்டம் தீட்டினோம். நாங்கள்

ஒன்றும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் இல்லை என்பதை. பண்டிதத் தனமாக இருக்கக் கூடாது என்பதை எங்களுடைய மண்டைக்குள் அடித்து இறக்குவதுதான் மிகப் பெரிய, முக்கியமான விஷயமாக இருந்தது; உலகத்திலிருக்கும் வேறு எவரையும்விடச் சிறந்தவர்களாக எங்களை நாங்களே நினைத்துக்கொள்ளக் கூடாது. புத்தகங்களுக்குப் போடப்படும் அட்டைகளைவிட நாங்கள் ஒன்றும் உயர்ந்தவர்கள் அல்ல, அதைவிட வேறு எவ்வித முக்கியத்துவமும் இல்லாதவர்கள். எங்களில் சிலர் சிறிய ஊர்களில் வசிக்கிறோம். க்ரீன் ரிவரில் தோரோவின் 'வால்டன்' புத்தகத்தின் முதல் அத்தியாயம், மெய்ன் மாநிலத்தில் வில்லோ பண்ணையில் இரண்டாவது அத்தியாயம். இவ்வளவு ஏன், மேரிலாண்டில் ஒரு சிறிய ஊர், இருபத்தியேழு பேர் மட்டுமே வசிக்கிறார்கள், எந்தக் குண்டும் ஒருபோதும் அந்த ஊரின் மேல் விழாது. அங்கே பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்ற ஒரு மனிதரின் கட்டுரைகள் முழுவதும் இருக்கின்றன. அந்த ஊருக்குப் போய், பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள், ஒவ்வொருவரிடமும் எவ்வளவு பக்கங்கள்! தவிர, ஏதோவொரு வருடம், என்றாவது ஒருநாள் போர் முடிந்த பிறகு, புத்தகங்கள் மீண்டும் எழுதப்படலாம், ஒருவர் பின் ஒருவராக எல்லோரையும் அழைத்து, அவர்களுக்குத் தெரிந்தவற்றை ஒப்பிக்கச் சொல்லி, அவற்றையெல்லாம் அச்சில் ஏற்றலாம்—மீண்டும் ஒரு இருண்ட சகாப்தம் வந்து, எல்லாவற்றையும் மறுபடியும் முதலிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும் காலம் வரும்வரை. அதுதான் மனிதனிடம் இருக்கும் அற்புதமான அம்சம்; தான் செய்வது மிக முக்கியமானது என்றும், செய்யத் தகுதி வாய்ந்தது என்றும் அவனுக்குத் தெரியும் என்பதால் இவை எல்லாவற்றையும் மீண்டும் தொடங்காமல் கைவிடுமளவுக்கு அவன் ஒருபோதும் ஊக்கமிழப்பதோ கசப்படைவதோ இல்லை."

"இன்றிரவு நாம் என்ன செய்யப்போகிறோம்?" என்று கேட்டான் மோன்டாக்.

"காத்திருப்போம்," என்றார் க்ராஞ்சர். "எதற்கும், ஆற்றின் போக்கிலேயே இன்னும் கொஞ்ச தூரம் தள்ளிப் போவோம்."

நெருப்பின் மேல் புழுதியையும் குப்பையையும் போட்டார்.

மற்றவர்கள் கை கொடுத்தார்கள், மோன்டாகும் உதவினான்; அங்கே, அந்தக் காட்டில் எல்லா மனிதர்களின் கைகளும் இயங்கின, ஒன்றாகச் சேர்ந்து நெருப்பை அணைக்க.

நட்சத்திரங்களின் ஒளியின் கீழ் ஆற்றுக்கருகில் அவர்கள் நின்றிருந்தார்கள்.

நீர்க் காப்புச் செய்யப்பட்ட தன் கைக்கடிகாரத்தின் ஒளிரும் முட்களை மோன்டாக் பார்த்தான். ஐந்து. காலை ஐந்து. மீண்டும் ஒரு மணியில் கழிந்துவிட்ட ஒரு ஆண்டு. ஆற்றின் அக்கரைக்கப்பால் காத்திருந்த விடியல்.

"நீங்கள் ஏன் என்னை நம்ப வேண்டும்?" என்றான் மோன்டாக்.

இருளில் ஒரு மனிதர் நகர்ந்தார்.

"உங்களுடைய பார்வையே போதுமானது. அண்மையில் உங்களை நீங்களே கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. தவிரவும், எங்களைக் கண்டுபிடிப்பதற்காக இது போல விரிவாகத் துரத்தி எங்களைத் தொல்லை செய்யும் அளவுக்கு அந்த நகரம் எங்களைப் பற்றி அக்கறை கொள்ளவும் இல்லை. தலைக்குள் கவிதைகளை வைத்துக்கொண்டு அலையும் மிகச் சில பைத்தியக்காரர்களால் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை; அது அவர்களுக்குத் தெரியும், எங்களுக்குத் தெரியும், எல்லோருக்குமே தெரியும். மக்கள் பெரிய அளவில், மாக்னா கார்டாவையும் அரசியல் சாசனத்தையும் மேற்கோள் காட்டிக்கொண்டு அலையாதவரை எல்லாமே சரிதான். அதையும் அவ்வப்போது மேற்பார்வை செய்யத் தீயணைப்பவர்களே போதுமானவர்களாக இருந்தார்கள். இல்லை, நகரங்கள் எங்களைத் தொந்தரவு செய்வதில்லை. இதைத் தவிர, நீங்கள் சோகமாகக் காணப்படுகிறீர்கள்."

ஆற்றங்கரை ஓரமாகத் தெற்கு நோக்கி நகர்ந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்களைப் பார்க்க மோன்டாக் முயன்றான், நெருப்பின் வெளிச்சத்தில் கோடுகளுடனும் சோர்ந்தும் காணப்பட்ட முதிய முகங்களை. அவர்களுடைய முகத்தில் தப்பித்தவறிக்கூடத் தென்படாத ஒரு பிரகாசத்தை, உறுதியை, எதிர்காலத்தை வெல்வதற்கான அறிகுறியைத் தேடினான். தங்களுக்குள்ளே இருக்கும் நெருப்பினால் விளக்குகள் பிரகாசிப்பதைப் போல, தாங்கள் சேமித்து வைத்திருந்த அறிவினால் அவர்களுடைய முகங்கள் கொழுந்துவிட்டு மினுமினுக்கும் என்று ஒருவேளை அவன் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், எல்லா வெளிச்சமும் அவர்கள் மூட்டியிருந்த நெருப்பிலிருந்து வந்ததுதான். நீண்ட தூரம் ஓடி, நீண்ட தேடலைச் செய்து, நல்லவையெல்லாம் அழிக்கப்படுவதைப் பார்த்து, இப்போது காலம் கடந்து, கேளிக்கையெல்லாம் முடிந்த பின் விளக்குகளை ஊதியணைப்பதற்காகக் காத்திருப்பவர்களிலிருந்து இவர்கள் வேறுபட்டுக் காணப்படவில்லை. தங்கள் தலைகளுக்குள் சேமித்து வைத்திருப்பவையெல்லாம் வரவிருக்கும் ஒவ்வொரு எதிர்கால விடியலையும் இன்னும் பரிசுத்தமான பிரகாசத்தில் ஒளிரச் செய்யும் என்பதைக் குறித்த எவ்வித நிச்சயமும் இல்லாமல் இருந்தார்கள்; தங்களுடைய சாந்தமான

கண்களுக்குப் பின்னால் இருந்த கோப்பில் புத்தகங்களின் பக்கங்கள் பிரிக்கப்படாமல், வரவிருக்கும் ஆண்டுகளின் வாடிக்கையாளர்களுக்காக—சுத்தமான விரல்களுடன் சிலரும், அழுக்கான விரல்களுடன் சிலருமாக இருந்த வாடிக்கையாளர்களுக்காக—காத்துக்கொண்டிருந்தன என்பதைத் தவிர வேறெதையும் பற்றி அவர்கள் நிச்சயமாக இருக்கவில்லை.

அவர்கள் நடந்துபோய்க்கொண்டிருந்தபோது, மோன்டாக் தன் கண்களை இடுக்கிக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக அந்த முகங்களைப் பார்த்தான்.

"அட்டையை வைத்து ஒரு புத்தகத்தை மதிப்பிடாதே" என்று யாரோ சொன்னார்.

ஆற்றின் போக்கிலேயே நடந்துபோன அவர்கள் எல்லோரும் சத்தமில்லாமல் சிரித்தார்கள்.

பெரிய கிறீச்சிடும் ஒலி கேட்டது. அவர்கள் நிமிர்ந்து பார்ப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்பேயே நகரத்தின் ஜெட் விமானங்கள் போய்விட்டிருந்தன. ஆற்றுக்கு மறுபுறம் வெகு தொலைவில், இப்போது வெறும் மங்கிய ஒளியில் மட்டுமே இருந்த நகரத்தை மோன்டாக் உற்றுப் பார்த்தான்.

"என் மனைவி அங்கே இருக்கிறாள்."

"இதைக் கேட்க வருத்தமாக இருக்கிறது. அடுத்த சில நாட்கள் நகரங்களுக்கு நல்ல நாட்களாக இருக்கப்போவதில்லை," என்றார் க்ராஞ்சர்.

"அவள் இல்லாமலிருப்பதை நான் உணராமல் இருப்பது வினோதமாக இருக்கிறது, எதைப் பற்றியும் நான் அதிகமாக அக்கறை கொள்ளாதது வினோதமாக இருக்கிறது," என்றான் மோன்டாக். "அவள் இறந்துவிட்டாலும்கூட நான் சோகமாக இருக்க மாட்டேனோ என்னவோ என்பதையும் சற்று முன்புதான் உணர்ந்தேன். அது சரியில்லை. என்னிடம் ஏதோ கோளாறு இருக்கிறது."

மோன்டாக் நடப்பதற்காகப் புதர்களை ஒதுக்கிவிட்டுக்கொண்டு, அவனுடைய கையைப் பிடித்துக் கூடவே நடந்து வந்த க்ராஞ்சர் சொன்னார்: "இதோ பாருங்கள், நான் சிறுவனாக இருந்தபோது என்னுடைய தாத்தா இறந்துவிட்டார், அவர் ஒரு சிற்பி. மற்றவர்களுக்கு அளிப்பதற்கென்றே பெருமளவு நேசத்தைத் தன்பால் வைத்திருந்த அன்பான அவர், எங்கள் ஊரிலிருந்த சேரியைச் சுத்தம் செய்வதற்கு உதவினார்; எங்களுக்காக விளையாட்டுச் சாமான்களைச் செய்து கொடுத்த அவர், பல லட்சக்கணக்கான விஷயங்களைத் தன் வாழ்நாளில் செய்திருந்தார்; அவருடைய கைகள் எப்போதும் துருதுருவென்று ஏதாவது செய்தபடி

இருக்கும். அவர் இறந்தபோது நான் அவருக்காக அழவில்லை என்றும், மாறாக அவர் செய்த எல்லாவற்றையும் நினைத்துதான் அழுதேன் என்றும் திடீரென்று எனக்கு உறைத்தது. மீண்டும் அவற்றையெல்லாம் அவர் செய்ய மாட்டார், மீண்டும் மரத்துண்டு ஒன்றைச் செதுக்க மாட்டார், வீட்டின் பின்கட்டில் புறாக்களை வளர்க்க எங்களுக்கு உதவ மாட்டார், தனக்கே உரித்தான வகையில் வயலினை இசைக்க மாட்டார், தன்னுடைய பாணியில் வேடிக்கைக் கதைகளைச் சொல்ல மாட்டார் என்பதற்காகவெல்லாம் அழுதேன். எங்களில் ஒருவராக அவர் இருந்தார், அவர் இறந்தபோது அவருடைய செயல்பாடுகள் எல்லாமும் செத்துவிட்டன. அவரைப் போலவே அவற்றையெல்லாம் செய்ய வேறு எவரும் இருக்கவில்லை. தனித்தன்மை வாய்ந்தவர். முக்கியமான ஒரு மனிதர். அவர் இறந்த சோகத்திலிருந்து நான் ஒருபோதும் மீளவில்லை. அவர் இறந்துவிட்ட பிறகு என்னென்ன பிரமாதமான சிற்ப வேலைகளெல்லாம் உயிர்பெறாமல் இருக்கின்றன என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. உலகத்தில் இல்லாமல் போய்விட்ட நகைச்சுவைக் கதைகள் எத்தனை, அவருடைய கை ஸ்பரிசம் இல்லாமலேயே திரும்ப கூட்டுக்குள் பறந்து வரும் புறாக்கள் எத்தனை! உலகத்தை அவர் வடிவமைத்தார். உலகத்துக்குப் பல விஷயங்களை அளித்தார். அவர் இறந்தபோது பல லட்சக்கணக்கான ரம்மியமான விஷயங்களை இழந்து இந்த உலகம் திவாலாகிவிட்டது."

மோன்டாக் அமைதியாக நடந்தான். "மில்லி, மில்லி," என்று கிசுகிசுத்தான், "மில்லி!"

"என்ன?"

"என் மனைவி என் மனைவி, பாவம் மில்லி, மில்லி ரொம்பப் பாவம். என்னால் எதையும் நினைவுபடுத்திப்பார்க்க முடியவில்லை. அவளுடைய கைகளை நினைத்துப்பார்க்கிறேன், ஆனால் அவை எதையும் செய்துகொண்டிருப்பதை என்னால் பார்க்க முடியவில்லை. அவளுக்குப் பக்கவாட்டில் இருபுறமும் அவை வெறுமனே தொங்கிக்கொண்டிருக்கின்றன, அல்லது அவளுடைய மடியில் படுத்திருக்கின்றன, அல்லது அந்தக் கையில் சிகரெட்டு இருக்கிறது. ஆனால், அவ்வளவுதான்."

மோன்டாக் திரும்பி, பார்வையை வீசினான்.

நகரத்துக்கு நீ என்ன கொடுத்தாய், மோன்டாக்?

சாம்பல்.

மற்றவர்கள் தங்களுக்குள் என்ன கொடுத்துக்கொண்டார்கள்?

வெறுமையை.

க்ராஞ்சரும் மோன்டாகுடன் திரும்பிப் பார்த்தபடி நின்றார். "சாகும் போது எல்லாரும் தங்களுக்குப் பின்னால் எதையாவது விட்டுச் செல்ல வேண்டும் என்று என் தாத்தா சொல்வார். ஒரு குழந்தை அல்லது ஒரு புத்தகம் அல்லது ஒரு ஓவியம் அல்லது ஒரு வீடு அல்லது தான் எழுப்பிய ஒரு சுவர் அல்லது தான் தயாரித்த ஒரு ஜோடிக் காலணிகள் அல்லது தான் வளர்த்த ஒரு தோட்டம். ஏதோ ஒரு வகையில் உங்கள் கைகளால் தொடப்பட்ட ஏதோ ஒன்று இருந்தால், உங்கள் மரணத்திற்குப் பிறகு ஆன்மா போவதற்கென்று ஒரு இடம் இருக்கும்; நீங்கள் நட்ட மரத் தையோ அல்லது ஒரு பூச்செடியையோ மக்கள் பார்க்கும்போது நீங்கள் அங்கே இருப்பீர்கள். நீங்கள் தொடாதவரை எந்த ஒரு விஷயமும் எப்படி அல்லது எதுவாக இருந்ததோ அதை நீங்கள் உங்கள் கையை எடுத்தபின் உங்களைப் போன்ற ஒன்றாக மாற்றும்வரை நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது முக்கியம் அல்ல. புல்லை வெறுமனே வெட்டுபவனுக்கும் உண் மையான தோட்டக்காரனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் அந்தக் கையின் ஸ்பரிசத்தில்தான் இருக்கிறது என்பார் என் தாத்தா. புல் வெட்டு பவன் இல்லாமலே இருந்திருந்தால்கூட ஒன்றும் ஆகியிருக்காது; ஆனால் தோட்டக்காரன் வாழ்நாள் முழுவதும் அங்கே இருப்பான்."

க்ராஞ்சர் கைகளை அசைத்து ஒரு சைகை செய்தார். "ஐம்பது ஆண்டு களுக்கு முன் ஒருமுறை என் தாத்தா V-2 ராக்கெட் திரைப்படங்களை எனக்குக் காட்டினார். அணுகுண்டு காளான் தரையிலிருந்து எழும்பு வதை இருநூறு மைல் உயரத்திலிருந்து எப்போதாவது பார்த்திருக்கிறீர் களா? காட்டுவெளி சுற்றிலும் இருக்க அது ஊசி குத்தி வைத்ததைப் போல இருக்கும், அவ்வளவே.

"என்னுடைய தாத்தா சுமார் பன்னிரெண்டு முறை V-2 படத்தை ஓட்டிப் பார்த்திருப்பார். இந்தப் பூமியில் நமக்குக் கொஞ்சம் இடமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், நாம் காட்டுவெளியில்தான் உயிர் பிழைத்திருக்கிறோம் என்பதையும், நாம் அப்படியொன்றும் உயர்ந்த ஜீவராசி அல்ல என்பதை உணர்த்துவதற்கு அது நம்மீது தன் மூச்சை விட்டோ அல்லது கடலை ஏவிவிட்டோ அந்த இடத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியும் என்பதையும் நமக்கு நினைவூட்ட நம் நக ரங்கள் இன்னும் தாராளமாகப் பசுமைக்கும் வெட்டவெளிக்கும், காட்டுவெளிக்கும் இடம் தர வேண்டும் என்று அவர் விரும்பினார். இரவு நேரங்களில் காட்டுவெளி நமக்கு எவ்வளவு அருகிலிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடும்போது, ஒருநாள் அது நெருங்கிவந்து நம் மைப் பிடித்துக்கொள்ளும் என்றும் தாத்தா சொல்வார், ஏனென்றால், அது எவ்வளவு பயங்கரமானது, நிஜமானது என்பதை நாம் மறந்து விட்டிருந்திருப்போம். இப்போது புரிகிறதா?" க்ராஞ்சர் மோன்டாகைப்

பார்த்துத் திரும்பினார். "தாத்தா இறந்து இத்தனை வருடங்கள் ஆகி விட்டாலும் என்னுடைய மண்டையோட்டைத் தூக்கிப் பார்த்தீர்க ளென்றால், ஆண்டவனே, அவருடைய பெருவிரல் ரேகையின் அச்சுகள் பெரிய வரப்புகளைப் போல என்னுடைய மூளையின் மடிப்புகளில் தென்படும். அவர் என்னைத் தொட்டிருக்கிறார். முன்பே நான் சொல்லி யிருந்ததைப் போல அவர் ஒரு சிற்பி. 'ஸ்டேடஸ் கோ' என்னும் ரோமானியனை[9] நான் வெறுக்கிறேன்!' என்று அவர் என்னிடம் சொன் னார். 'உன் கண்களை வியப்பினால் நிரப்பு. அடுத்த பத்து நொடிகளில் இறந்துவிடப்போகிறவனைப் போல் வாழ். உலகத்தைப் பார். ஆலை களில் உற்பத்தி செய்யப்பட்டு விலை கொடுத்து வாங்கப்படும் எந்தக் கனவையும்விட அற்புதமானது அது. உத்தரவாதத்தையோ பாதுகாப் பையோ கேட்காதே. அப்படி எந்த ஜீவராசியும் இருந்ததேயில்லை. அப் படி ஏதாவது இருந்தால் நாள் முழுவதும் மரத்திலிருந்து தலைகீழாகத் தொங்கிக்கொண்டு, வாழ்நாள் முழுவதையுமே தூங்கியே கழிக்கும் பெரிய 'ஸ்லாத்' வம்சத்தைச் சேர்ந்ததாகத்தான் அது இருக்கும். அதை ஒழித்துக்கட்டு. மரத்தை உலுக்கி, அந்தப் பிராணி தன் பிருஷ்ட பாகத்தில் விழும்படி செய்' என்பார் அவர்."

"அங்கே பாருங்கள்!" கத்தினான் மோன்டாக்.

அந்தக் கணத்திலேயே போர் தொடங்கி, முடிந்தும் விட்டது.

சற்று நேரம் கழித்து, மோன்டாகைச் சுற்றி இருந்தவர்களால் தாங்கள் உண்மையிலேயே எதையாவது பார்த்திருந்தார்களா என்று சொல்ல முடியவில்லை. ஒருவேளை வானத்தில் ஒளியும் சலனமும் கலந்த சிறு மின்னல் கீற்று மட்டுமாக இருக்கலாம். ஒருவேளை குண்டுகளும் விழுந் திருக்கலாம்; ஒரு கண் சிமிட்டலில் பத்து அல்லது ஐந்து அல்லது ஒரு மைல் உயரத்திலிருந்து, வானத்திலிருந்து மாபெரும் கை ஒன்று விதை களைத் தூவியதைப் போலப் பயங்கர வேகத்தில் மிதந்து வந்த குண்டு களாக, அதிபயங்கர வேகத்துடனும் அதே நேரத்தில் திடீரென்று மாறிய நிதானத்துடனும் சற்று நேரத்தில் தங்களுக்குப் பின்னால் விட்டு வந் திருந்த நகரத்தின் மீது பொழிந்த குண்டுகளாக இருக்கலாம். மணிக்கு ஐந்தாயிரம் மைல் வேகத்தில் பறந்துகொண்டிருந்த ஜெட் விமானம் அந் தக் குண்டுவீசும் விமானியிடம் எப்போது இலக்கைக் குறித்து அறிவித் ததோ, அப்போதே குண்டுவீச்சு என்பதும் முழுமையாக முடிந்திருந்தது; புல் வெட்டும் கத்திரிக்கோலின் மெல்லிய கிறீச்சிடும் ஒலியாகப் போர் முடிந்துவிட்டிருந்தது. குண்டுகளை விடுவித்த கணத்திலேயே அது முடிந்து விட்டது. வரலாற்றில் பேசப்படும் காலம் என்று சொல்லத்தக்க, குண்டு

[9] 'இருக்கும் நிலையிலேயே' என்ற பொருள் கொண்ட லத்தீன் சொற்றொடர் ஒரு ரோமானியனாகச் சித்தரிக்கப்படுகிறது.

வீச்சுக்கு முந்திய அந்த மூன்று வினாடிகளில், எதிரிகளின் கப்பல்கள் கண்ணுக்குப் புலப்படாத தோட்டாக்களைப் போல—கண்ணுக்குப் புலப்படாத காரணத்தால் தீவில் வசிக்கும் ஆதிவாசிகளால் நம்ப முடியாமல் இருக்கும் தோட்டாக்களைப் போல—கண்ணுக்குப் புலப்படும் உலகத்தைச் சுற்றிப் பாதி தூரம்வரை போய்விட்டிருந்தன; இருந்தாலும் இருதயம் திடீரென்று நொறுங்கிவிடுகிறது, வெவ்வேறு விதமாக அசைந்து உடலும் விழுகிறது, காற்றில் பீய்ச்சியடிக்கும் இரத்தம் தன்னையே பார்த்து வியப்படைகிறது; தன்னுடைய மிகச் சில நினைவுப் பொக்கிஷங்களை மூளை வீணடித்து, வியப்புற்று, இறந்துவிடுகிறது.

இது நம்ப முடியாததாக இருந்தது. ஒரு சிறிய கையசைவு மட்டுமே. தொலைவிலிருந்த நகரத்தின் மேல் ஒரு பிரம்மாண்ட உலோக முஷ்டியின் விபரீத விளையாட்டை மோன்டாக் பார்த்தான்; அதைத் தொடர்ந்து வரும் ஜெட் விமானங்களின் அலறல், வேலை முடிந்தபின் சொல்லும்: **சிதைந்துவிடு, எந்தவொரு கல்லின் மேலும் இன்னொரு கல்லை விட்டு வைக்காதே, அழிந்துபோ, இறந்துவிடு.**

பரிதவிப்புடன் தன் மனதளவில், நீட்டிய கைகளுடன் மோன்டாக் அந்தக் குண்டுகளை ஒரு கணம் வானத்தில் பிடித்துவைத்தான். "ஓடிப் போங்கள்!" என்று ஃபேபரைப் பார்த்துக் கத்தினான். "ஓடிவிடு" என்றான் க்லாரிஸிடம். மில்ட்ரெட்டிடம் "வெளியேறு, அங்கிருந்து வெளியேறிவிடு!" ஆனால் க்லாரிஸ் இறந்துவிட்டாள் என்பது ஞாபகத்துக்கு வந்தது. ஃபேபரும் **வெளியேறிவிட்டிருந்தார்**; ஒரு பாலைவனத்திலிருந்து இன்னொரு பாலைவனத்துக்குப் போய்க்கொண்டிருந்த காலை ஐந்து மணிப் பேருந்தில், அந்தக் கிராமப்புறப் பள்ளத்தாக்குகள் ஒன்றில் எங்கேயோ ஒரு பாலையின் அவலம் இன்னும் இதுவரை வந்திருக்கவில்லையென்றாலும், சூழலில் அதன் தன்மை இருந்தது, மனிதனால் அறிந்துணரக்கூடிய நிச்சயத் தன்மையுடன். அந்தப் பேருந்து நெடுஞ்சாலையில் இன்னும் ஐம்பது கஜங்கள் போயிருப்பதற்குள், அதன் சேருமிடம் அர்த்தமற்றதாக ஆகிவிட்டிருக்கும், அது புறப்பட்ட இடமோ மாநகரத்திலிருந்து குப்பை மேடாக மாறிவிட்டிருக்கும்.

மில்ட்ரெட்....

வெளியே போ, ஓடு!

அவள் இருந்த கட்டடத்திலிருந்து ஒரு கஜம், ஒரு அடி, ஒரு அங்குல உயரத்தில் குண்டுகள் இருந்த அந்த அரை வினாடியில் அவள் தன்னுடைய விடுதியின் அறையில் எங்கேயோ இருப்பதைப் பார்த்தான். நிறுத்தாமல் அவளுடன் பேசிக்கொண்டே, வண்ணங்களும் சலனங்களுமாகப் பளபளத்துக்கொண்டிருந்த தொலைக்காட்சியறைச் சுவர்களை நோக்கி, அவளுடைய பெயரைச் சொல்லி அவளைப் பார்த்துச் சிரித்து,

உளறிக்கொண்டும் அரட்டையடித்துக்கொண்டும், விடுதிக்கு மேலே ஒரு அங்குலம், அரை அங்குலம், கால் அங்குல உயரத்திலிருந்து வந்துகொண்டிருந்த குண்டைப் பற்றி ஒன்றும் சொல்லாமலும் இருந்த குடும்பத்தை நோக்கி அவள் குனிந்து பார்ப்பதை அவன் பார்த்தான். அப்படிப் பார்க்க வேண்டும் என்ற பசி ஒன்றே ஏதோ அவளுடைய தூக்கமின்மையின் அவதியின் ரகசியத்தைச் சொல்லிவிடும் என்பதைப் போல அந்தச் சுவரை நோக்கிக் குனிந்திருந்தாள். அங்கு பரவியிருந்த வண்ண பிரமாண்டத்தின் பிரகாசமான மகிழ்ச்சியில் மூழ்கிவிடுவதற்காகக் குதித்துக் கீழே வந்து விழப்போவதைப் போல மில்ட்ரெட் பதற்றத்துடன், திகிலுடன் குனிந்திருந்தாள்.

முதல் குண்டு விழுந்து தாக்கியது.

"மில்ட்ரெட்!"

யாருக்குத் தெரியும்? வண்ணமும் பிரகாசமும் மிக்க தூண்களுடனும், பேச்சு, அரட்டை இவற்றுடனும் இருந்த அந்தப் பெரிய ஒளிபரப்பு நிலையங்கள்தான் முதலாவதாக நிரந்தர அமைதிக்குள் போயிருக்கலாம்.

கீழே விழுந்து, தரையோடு ஒட்டிக் கிடந்த மோன்டாக் அந்தச் சுவர்கள் இருட்டடைவதை மில்ட்ரெட்டின் முகத்தில் பார்த்து உணர்ந்தான், அல்லது பார்த்து உணர்ந்ததைப் போலக் கற்பனை செய்துகொண்டான்; ஆருடம் சொல்லும் ஸ்படிகப் பந்துக்குப் பதிலாக முகம்பார்க்கும் கண்ணாடியில் தன் முகம் தெரிவதை, கோடியின் ஒரு பகுதியாக இருந்த அந்தச் சிறிய கணத்தில் பார்த்து அவள் அலறுவதைக் கேட்டான்; தன்னந்தனியாக அந்த அறையில் எதையும் தொடாமல், தன்னைத் தானே இரையாக்கிக்கொள்ளும் பசியுடன், கடைசியில் அது தன்னுடைய முகம்தான் என்று அடையாளம் கண்டுகொண்ட அவ்வளவு தாறுமாறான, வெறுமையான முகமாக அது இருந்தது; அவள் நிமிர்ந்து கூரையைப் பார்த்த அதே கணத்தில், அந்தக் கூரை மட்டுமின்றி, விடுதியின் மொத்தக் கட்டடமும் அவள்மேல் இடிந்து விழுந்தது; எல்லோரையும் ஒழித்துக்கட்டுவதற்காக நிலவறைத் தளத்திற்குத் தள்ளிவிடப்பட்டிருந்த, விடுதியில் இருந்த மற்றவர்களுடன் சேர்ந்துவிடுவதற்காக அவளையும், கூடவே லட்சக்கணக்கான பவுண்டு எடையுள்ள செங்கல், உலோகம், சுண்ணாம்புச் சாந்து, மரம் ஆகியவற்றையும் தனக்கே உரித்தான நியாயமற்ற முறையில், அந்தக் குண்டு வெடிப்பு எடுத்துக்கொண்டு போயிற்று.

ஆமாம், ஞாபகம் வருகிறது. மோன்டாக் மண்ணை இறுகப் பற்றினான். சிகாகோ. வெகு காலத்துக்கு முன் சிகாகோவில். மில்லியும் நானும். **அங்குதான்** நாங்கள் சந்தித்துக்கொண்டோம்! இப்போது ஞாபகம் வருகிறது. சிகாகோவில். முன்பொரு நாள்.

குண்டின் பலத்த அதிர்வு ஆற்றுக்குக் குறுக்கேயும் அதன் போக்கிலும் இருந்த சூழலைத் தாக்கி, வரிசையாக அடுக்கித் தட்டிவிடப்படும் சீட்டு களைப் போல மனிதர்களை ஆக்கி, ஆற்று நீரை மேலெழும்பிப் பீய்ச்சி யடிக்க வைத்து, தூசியைக் கிளப்பி, தெற்குத் திசையை நோக்கி அடித்த பலத்த காற்றுடன் அங்கிருந்த மரங்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. கண் களை இறுக மூடி, உடலைக் குறுக்கிக்கொண்டு மோன்டாக் தன்னைத் தரையில் அழுத்திக்கொண்டான். ஒருமுறை கண்ணைச் சிமிட்டினான். அந்த ஒரு கணத்தில், குண்டுகளுக்குப் பதிலாக நகரமே எழும்பி உயரத் தில் இருப்பதைப் பார்த்தான். அவை இரண்டும் முறையே இடம் மாறி யிருந்தன. அடுத்த சில அசாதாரணக் கணங்களுக்கு, அடையாளம் தெரி யாதபடி மீண்டும் அந்த நகரம் மறுநிர்மாணம் செய்யப்பட்டு, ஒரு போதும் எதிர்பார்த்திருக்காத அல்லது முயற்சி செய்திருக்காத அளவுக்கு உயரே சென்று, மனிதன் அதை நிர்மாணித்திருந்ததைவிட உயரத்தில், உடைந்து போன கான்கிரீட் சிதைவுகள், கிழிந்த உலோகச் சில்லுகளால் கட்டப்பட்டு, புரட்டிப்போட்ட மாபெரும் நிலச்சரிவின் சுவர்ச் சித் திரம் தொங்கவிடப்பட்டிருப்பதைப் போல, லட்சக்கணக்கான வண் ணங்கள், லட்சக்கணக்கான வினோதங்கள், ஜன்னல் இருக்க வேண்டிய இடத்தில் கதவு, அடிப்பாகத்துக்குப் பதிலாக மேல்பகுதி, பின்புறத்தின் இடத்தில் வேறு ஒரு பக்கம் என்று காட்சியளித்தது; பிறகு அந்த நகரம் சுழன்றுசுழன்று, கீழே விழுந்து இறந்தது.

மரணத்தின் ஒலி அதற்குப் பிறகுதான் கேட்டது.

மோன்டாக் அங்கே கிடந்தான், தூசிக்குப் பயந்து இறுக மூடிய கண்களுடன், மூடியிருந்த வாயின் மேல் ஈர மண் பூசப்பட்டு, மூச் சிரைத்துக்கொண்டும் அழுதுகொண்டும் இருந்த அவன் மீண்டும் எண் ணிப்பார்த்தான், எனக்கு நினைவு, ஞாபகம் வருகிறது, நினைவு வருகிறது, எனக்கு இன்னும் வேறு ஏதோ நினைவுக்கு வருகிறது. அது என்ன? ஆமாம், ஆமாம். 'பிரசங்கி' புத்தகத்தின் ஒரு பகுதி. 'பிரசங்கி'யில் ஒரு பகுதியும் 'வெளிப்படுத்தின விசேஷ'மும். அதில் ஒரு பகுதி, இதோ உடனேயே ஒரு பகுதி, அது போய்விடுவதற்குள், அதிர்ச்சி ஓய்ந்துவிடுவதற்குள், காற்று அடங்குவதற்குள். 'பிரசங்கி'. இதோ. அவனுக்குள்ளேயே மௌனமாகச் சொல்லிப்பார்த்துக்கொண்டான், நடுங்கும் தரையின் மேல் ஒட்டிப் படுத்து, அதன் சொற்களைப் பலமுறை சொல்லிப்பார்த்தபோது, அவன் அதிகம் முயலாமல் அவை கச்சிதமாக இருந்தன. எங்கேயும் டென்ஹாம் பற்பசை இருக்கவில்லை, அவன் மனதில் நின்று அவனைப் பார்த்தபடி இருந்த மதபோதகர் மட்டுமே இருந்தார்...

"அதோ" என்றது ஒரு குரல்.

புல்தரையில் போடப்பட்ட மீன்களைப் போல அந்த மனிதர்கள் மூச்சிரைத்தவாறு கிடந்தார்கள். எவ்வளவு குளுமையாகவும் உயிரற்று இருந்தாலும், என்ன நடந்திருந்தாலும் நடக்கவிருந்தாலும், விரல்களைப் புழுதியில் பதித்து, பழக்கப்பட்டவற்றைப் பற்றிக்கொண்டிருக்கும் குழந்தைகளைப் போலத் தரையோடு ஒட்டியிருந்தார்கள். செவிப்பறைகள் வெடிக்காமல் இருப்பதற்காகவும், தங்களுடைய புத்தி வெடித்துச் சிதறாமல் இருக்கவும், வாயை நன்றாகத் திறந்து, அவர்கள் எல்லோரும் தங்களுடைய முகங்களைக் கிழித்து, உதடுகளை வெடிக்கச் செய்து, மூக்கில் இரத்தம் கசிய வைத்த காற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கத்தினார்கள். மோன்டாகும் அவர்களுடன் சேர்ந்து கத்தினான்.

அந்தப் பிரம்மாண்டத் தூசி அடங்கிப் பெரும் அமைதி உலகத்தின் மேல் வந்து படிவதை மோன்டாக் கவனித்தான். ஒவ்வொரு தூசித் துகளையும், ஒவ்வொரு புல் இதழையும் தான் பார்ப்பதாகவும், இப் போது உலகத்திலிருந்து மேலெழும்பி வந்த ஒவ்வொரு கத்தலையும் அலறலையும், கிசுகிசுப்பையும் தான் கேட்பதாகவும் கிடந்திருந்த அவனுக்குத் தோன்றியது. சலிக்கப்பட்ட தூசியில் அமைதி கவிந்தது, தங்களைச் சுற்றிப் பார்த்துப் பிரக்ஞையில் இந்த நாளின் யதார்த்தத்தை உள்வாங்கிக் கொள்ளத் தங்களுக்குத் தேவைப்பட்ட அவகாசம் நிறையவே இருந்தது.

மோன்டாக் ஆற்றைப் பார்த்தான். ஆற்றின் போக்கைப் பின் தொடர்ந்து போவோம். பழைய இருப்புப்பாதைகளைப் பார்த்தான். அல்லது அந்த வழியிலும் போவோம். அல்லது நெடுஞ்சாலைகள் வழியேயும் போகலாம், எல்லா நிகழ்வுகளையும் நமக்குள் ஒழுங்குபடுத்திக் கொள்ள நமக்கு அவகாசம் இருக்கும். நமக்குள் அவை நன்றாகப் படிந்து போன பிறகு என்றாவது ஒருநாள் நம்முடைய கைகள் வழியாகவும், வாயிலிருந்தும் அவை வெளிப்படும். அவற்றில் நிறையவே தவறாக இருக்கும், ஆனாலும், தேவையான அளவு சரியானவையும் இருக்கும். இன்று நாம் சும்மா நடக்கத் தொடங்கி, உலகத்தையும் அது எப்படி நடந்து கொண்டு, எப்படிப் பேசிக்கொண்டு அது இருக்கிறது என்பதையும், அது எப்படி உண்மையிலேயே காட்சியளிக்கிறது என்பதையும் பார்ப்போம். இப்போது நான் ஒவ்வொன்றையும் பார்க்க வேண்டும். நான் எனக்குள் அதை வாங்கிக்கொள்ளும்போது அதில் எதுவுமே நானாக இருக்காது. கொஞ்ச காலத்துக்குப் பிறகு எனக்குள் அவையெல்லாம் ஒன்றாகச் சேரும்போது அது நானாக ஆகிவிடும். வெளியே இருக்கும் உலகத்தைப் பார், கடவுளே, அங்கே எனக்குப் புறத்தே, என் முகத்துக்கு அப்பால் உள்ள உலகத்தைப் பார். இறுதியில் அது எங்கு நானாக மாறி, என் இரத்தத்துக்குள் சென்று நாளொன்றுக்கு ஆயிரம் முறை, பத்தாயிரம் முறை துடித்து ஓடுகிறதோ அங்கே அதை இருத்திக்கொள்

வதுதான் அந்த உலகத்தைத் தொட்டுப் பார்க்க ஒரே வழி. அது ஒருபோதும் தப்பி ஓடி விடாதபடி அதை இறுகப் பற்றிக்கொள்வேன். என்றாவது இந்த உலகத்தை இறுகப் பிடித்துக்கொள்வேன். இப்போது அதன்மேல் ஒரு விரலை வைத்துவிட்டேன்; இதுதான் தொடக்கம்.

காற்று ஓய்ந்தது.

மற்றவர்கள் சற்று நேரம் கிடந்தபடியே இருந்தார்கள். எழுந்து நெருப்பை மூட்டி, சாப்பாட்டைத் தயார் செய்து, அன்றாடக் கடமை களையும், ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு கையசைவிலும் இருந்த ஆயிரக்கணக்கான சிறு விவரங்களையும் தொடங்கத் தயாராகாமல் இன்னும் தூக்கத்தின் விடியல் விளிம்பில் கிடந்தார்கள். தூசி படிந்த தங் கள் கண் இமைகளைச் சிமிட்டியபடி படுத்திருந்தார்கள். முதலில் வேக மாகத் தொடங்கி, போகப்போக மெதுவாக அவர்கள் மூச்சுவிடுவதைக் கேட்க முடிந்தது...

மோன்டாக் எழுந்து உட்கார்ந்தான்.

இருந்தாலும், அதற்கு மேல் கொஞ்சம்கூட நகரவில்லை. மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். இருண்ட தொடுவானத்தைச் சூரியன் ஒரு மெல்லிய சிவப்பு நுனியால் தொட்டது. காற்று குளிர்ச்சியடைந்து, மழை வரவிருப்பதைப் போன்ற மணம் சூழ்ந்தது.

சத்தமில்லாமல் தன் கைகளையும் கால்களையும் தடவிப்பார்த்து, சபித்தவாறே, முணுமுணுத்துக்கொண்டே, இடைவிடாமல் சபித்துக் கொண்டு, முகத்தில் கண்ணீர் வழிந்தோட, க்ராஞ்சர் எழுந்தார். ஆறு வரை நடந்து போய் அதன் போக்கின் எதிர்த் திசையில் பார்த்தார்.

வெகு நேரம் கழித்து, "அது தரைமட்டமாக ஆகிவிட்டது," என்றார். "சமையல் சோடாக் குவியலைப் போல நகரம் இருக்கிறது. காணாமலே போய்விட்டது." இன்னும் நிறைய நேரத்துக்குப் பிறகு, "இப்படி நடக்கப் போகிறது என்று எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கும்? எத்தனை பேர் ஆச்சரியமடைந்திருப்பார்கள்?" என்றார்.

தவிர, உலகம் முழுவதிலும் இன்னும் வேறு எத்தனை நகரங்கள் அழிந் திருக்கின்றன? இங்கே நம் நாட்டிலேயே எத்தனை? நூறு? ஆயிரம்...?

யாரோ ஒருவர் தீக்குச்சி ஒன்றை உரசி, தன் பாக்கெட்டிலிருந்த சிறிய காகிதத் துண்டில் காட்டி, கொஞ்சம் புற்கள், இலைகளிடையே அதைச் சொருகிச் சற்று நேரம் கழித்து, கொஞ்சம் ஈரமாக இருந்த சிறிய குச்சி களை அதில் போட, அவை சடசடத்து ஒருவழியாகப் பற்றிக்கொண் டன. காலை வேளையில் சூரியன் இன்னும் மேலே வர, அந்த நெருப்பும் பெரிதாக, ஆற்றின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தவர்களும் சொல்வதற்கு எதுவுமில்லாமல் மெதுவாக நெருப்பை நோக்கித் திரும்பினார்கள்;

அவர்கள் குனிந்தபோது அவர்களது பிடரியில் சூரிய வெளிச்சத்தின் நிறம் படிந்தது.

மெழுகுத் தாளால் ஆன பொட்டலம் ஒன்றைப் பிரித்து, உப்புத் தடவிய பன்றிக் கறித் துண்டை க்ராஞ்சர் எடுத்தார். "இதைக் கொஞ்சம் சாப்பிடுவோம். பிறகு, ஆற்றின் ஓட்டத்துக்கு எதிர்த் திசையில் நாம் திரும்பி நடப்போம். அந்தப் பக்கம் நம்முடைய உதவி அவர்களுக்குத் தேவைப்படலாம்."

யாரோ ஒருவர் சிறிய வாணலி ஒன்றை எடுத்தார், பன்றிக் கறித் துண்டை அதில் போட்டார்கள், நெருப்பின் மேல் வாணலியை வைத்தார்கள். சற்று நேரத்தில் அந்தக் கறித் துண்டு துடிக்கத் தொடங்கி, வாணலியில் நடனமாடியது, அதன் சடசடப்பு காலை வேளைச் சூழலில் தன் மணத்தைப் பரப்பியது. அந்த மனிதர்கள் இந்தச் சடங்கை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

க்ராஞ்சர் நெருப்பை உற்றுப் பார்த்தார். "ஃபீனிக்ஸ்"

"என்ன?"

"ஏசு கிறிஸ்துவின் காலத்துக்கு முன் ஃபீனிக்ஸ் என்ற அசட்டுப் பறவை இருந்தது. சில நூறாண்டுகளுக்கு ஒரு முறை அது தானாகவே ஒரு சிதை அமைத்து, தன்னையே எரித்துக்கொள்ளும். மனிதனின் முதல் ஒன்றுவிட்ட உடன்பிறப்பாக இருந்திருக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு முறையும் தன்னை எரித்துக்கொண்ட பிறகு, சாம்பலிலிருந்து எழும்பி மீண்டும் உயிர்பெறும். நாமும் அதையேதான் செய்துகொண்டிருக்கிறோமோ என்று தோன்றுகிறது. ஆனால் ஃபீனிக்ஸிடம் இல்லாத ஒரு பாழாய்ப்போன அம்சம் நம்மிடம் இருக்கிறது. நாம் என்ன அசட்டுத்தனம் செய்துவிட்டோம் என்று நமக்குத் தெரிந்திருக்கிறது. பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே நாம் செய்திருக்கும் அசட்டுக் காரியங்கள் நமக்குத் தெரியும். நமக்கு அப்படித் தெரிந்திருக்கும்வரை, நாம் கண் கூடாகப் பார்க்கும்படி நம்மைச் சுற்றி அவையெல்லாம் இருக்கும்வரை, என்றாவது ஒருநாள் அந்தப் பாழாய்ப்போன சிதையை நாமே உருவாக்கி, அதற்குள் குதிப்பதை நிறுத்திவிடுவோம். ஒவ்வொரு தலைமுறையிலும், இதைக் குறித்த ஞாபகம் இருக்கும் மேலும் சிலரை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

நெருப்பின் மீது இருந்த வாணலியை இறக்கி, பன்றிக் கறி ஆறும்வரை பொறுத்திருந்து அவர்கள் அதைச் சாப்பிட்டார்கள், மெதுவாக, சிந்தனையில் ஆழ்ந்து.

"சரி. இப்போது ஆற்றுக்கு எதிர்த் திசையில் போவோம்," என்றார் க்ராஞ்சர். "ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்வோம்: நாம்

முக்கியமல்ல. நாம் எதுவுமே இல்லை. நம்முடன் நாம் தூக்கிச்செல்லும் சுமை யாருக்காவது பயனுள்ளதாக இருக்கும். ரொம்ப காலத்துக்கு முன், நம்மிடம் கையில் புத்தகங்கள் இருந்தபோதும், அவற்றிலிருந்து பெறப்பட்டதை நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இறந்துவிட்டவர்களைத் தொடர்ந்து அவமதித்துக்கொண்டே இருந்தோம். நமக்கு முன்னால் இறந்துவிட்ட அப்பாவி மனிதர்களின் கல்லறைகளின் மேல் தயங்காமல் துப்பிக்கொண்டே இருந்தோம். அடுத்த வாரம், அடுத்த மாதம், அடுத்த ஆண்டுகளில் இன்னும் நிறைய தனிமையான மக்களைப் பார்க்கப்போகிறோம். நம்மைப் பார்த்து நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்று அவர்கள் கேட்டால், 'நாங்கள் நினைவுபடுத்திப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்' என்று நாம் சொல்லலாம். தொலைநோக்கில் பார்த்தால் அதில்தான் நம் வெற்றி இருக்கும். அவ்வளவு விஷயங்கள் நமக்கு ஞாபகத்தில் இருக்கும் என்பதால் என்றாவது ஒருநாள் வரலாறு காணாத ஒரு ராட்சத மண்வெட்டியை உருவாக்கி, ஒரு போதும் இருந்திருக்காத அளவு பெரிய சவக்குழியைத் தோண்டி, அதற்குள் போரைத் தள்ளி மூடிவிடுவோம். வாருங்கள், முதலாவதாக நாம் போய் முகம் பார்க்கும் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணித்து, அடுத்த ஆண்டு முழுவதும் கண்ணாடிகளைத் தவிர வேறெதையும் உற்பத்தி செய்யாமல், அவற்றில் நன்றாக நீண்ட நேரம் பார்த்துக்கொள்வோம்."

சாப்பிடுவதை முடித்துவிட்டு, நெருப்பை அணைத்தார்கள். வெளிர் சிவப்பு நிற விளக்கொன்றுக்கு இன்னும் அதிகமாகத் திரி போட்டதைப் போல அந்த நாள் பொழுது பிரகாசமாகிக்கொண்டிருந்தது. மரங்களிலிருந்து வேகமாகப் பறந்து போயிருந்த பறவைகள் திரும்ப வந்து உட்கார்ந்துகொண்டன.

மோன்டாக் நடக்க ஆரம்பித்தான். சற்று நேரத்தில், வடக்குத் திசையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அவனை மற்றவர்களும் பின்தொடர்வதைப் பார்த்தான். ஆச்சரியமடைந்த அவன் விலகி க்ராஞ்சருக்கு வழிவிட்டாலும், அவர் அவனைப் பார்த்து மேலே போகும்படி தலையசைத்தார். மோன்டாக் முன்னே சென்றான். ஆற்றையும் வானத்தையும் பார்த்தான். பண்ணைகள் இருந்த இடத்துக்கு, வைக்கோல் நிரம்பியிருந்த கொட்டிலுக்கு, இரவில் நகரத்திலிருந்து திரும்பிவரும் வழியில் நிறைய பேர் நடந்துபோயிருந்த இடத்துக்கு இட்டுச்சென்ற இருப்புப்பாதையைப் பார்த்தான். பின்னர் ஒரு மாதத்திலோ அல்லது ஆறு மாதங்களிலோ, எப்படியும் நிச்சயம் ஒரு வருடத்துக்கு மேல் ஆகாமல், அவன் மீண்டும் இந்தப் பாதையில் தனியாக நடந்துபோவான். மக்கள் அனைவரிடமும் தான் போய்ச் சேரும்வரை நடந்துகொண்டே இருப்பான்.

ஆனால், தற்சமயம் மதியம்வரை நீண்ட காலைப்பொழுது முழுவதும் நடக்க வேண்டியிருந்தது. எல்லோரும் மௌனமாகவே இருந்தார்களென்றால், அது எல்லாவற்றையும் பற்றிச் சிந்திக்கவும், நிறையவே நினைவில் கொள்ளவும் வேண்டி இருந்ததால்தான். ஒருவேளை காலையில் இன்னும் சற்று நேரம் கழித்துச் சூரியன் மேலெழும்பி அவர்களுக்குக் கதகதப்பு அளித்த பின்னர் அவர்கள் பேசத் தொடங்கலாம். அல்லது தாங்கள் அங்கேதான் இருந்தார்கள் என்று உறுதிசெய்துகொள்ளவும், எல்லாமே இப்போது தங்களிடம் பத்திரமாக இருக்கிறது என்பதைச் சந்தேகமில்லாமல் உணர்வதற்காகவும் தங்களுக்கு ஞாபகம் இருப்பவற்றைப் பற்றிப் பேசலாம். தன்னுள் சொற்கள் மெதுவாக அசைந்து, மெதுவாகக் கொதிக்கத் தொடங்குவதை மோன்டாக் உணர்ந்தான். அவனுடைய முறை வரும்போது அவனால் என்ன சொல்ல முடியும், தங்கள் பயணம் இன்னும் கொஞ்சம் எளிதாக ஆவதற்கு இது போன்ற ஒரு நாளில் அவனால் என்ன அளிக்க முடியும்? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. ஆமாம். இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு. ஆமாம். மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு. ஆமாம். இவையெல்லாமேதான். தவிர, வேறு என்ன? வேறென்ன? ஏதோ ஒன்று, ஏதோ ஒன்று.

நதியின் இரு கரையிலும், பன்னிரெண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

ஆமாம், என்று மனதில் நினைத்துக்கொண்டான் மோன்டாக், நண்பகலுக்காக நான் சேமித்து வைக்கப்போவது இதுதான். நண்பகலுக்காக...

நகரத்தை நாங்கள் சென்றடையும்போது.

***   ***   ***

பின்னுரை

புத்தகங்கள் எதற்கு?

இலக்கியத்தில் புனைவு என்பது கற்பனை. கண்ணால் காண்பது காட்சி; மனத்தால் காண்பது கற்பனை. காட்சிப் பதிவுக்கு அப்பாற்பட்டது இலக்கியம். எனவே இலக்கியத்தைக் கண்ணால் மட்டுமல்ல, மனத்தாலும் படிக்கிறோம். கற்பனை பலவிதம். ஆசிரியரின் கற்பனையோடு பயணிக்கும் போது வாசிப்பவருக்கு அவர் காட்டும் காட்சி புலப்படும். உலகத்தில் இது நடக்காது என்று சாதாரணமாகக் கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட மாயக்காட்சிகளை இலக்கியம் புனையப் பயன்படுத்துவது கற்பனையில் ஒரு வகை. புராணக் கதைகளைப் போல, விஞ்ஞானப் புனைகதைகளும் இந்த வகையில் அடங்கும். ரே பிராட்பரியின் புனைவெழுத்து இந்த வகைக் கதைகளில்தான் துவங்கியது. இந்த வகைக் கற்பனைக் கதைகளை எழுதும் திறனுக்காக அவர் மிகவும் பாராட்டப்பட்டிருக்கிறார்.

கற்பனையில் மற்றொரு வகை, வருங்காலத்தில் மக்கள் எப்படி வாழ்வார்கள், வாழ வேண்டும் என்று எண்ணிப்பார்ப்பது. இந்தக் கற்பனை வாழ்க்கை புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால், அவை உருவாக்கும் எந்திரங்களால் பாதிக்கப்பட்டதாக இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். இப்படிப்பட்ட சமூகத்தைச் சொல்லும் கற்பனை இலக்கியம் அடிப்படையில் விஞ்ஞானப் புனைவிலக்கியத்திலிருந்து வேறானது அல்ல, ஆனால் இது தொழில்நுட்பத்தை மையமாகக் கொள்ளாமல், அதைப் பின்புலமாக்கி, மக்களின் எதிர்கால நடத்தையை, சிந்தனையைப் புனைந்து எழுதப்படுவதால் புதிய இலக்கிய வகை ஆகிறது. இந்த வகை இலக்கியம் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்டதாக, சமூகம்

எப்படி இருக்க வேண்டும் என்ற ஆசையைத் தெரிவிப்பதாக இருந்தால், அது இல்லாததை விழையும் ஆதங்க இலக்கியம் அல்லது கனவிலக்கியம் (Utopian literature) எனப்படும். எதிர்காலத்தைப் பற்றி அவநம்பிக்கை தருவதாக, நடந்துவிட வேண்டாம் என்று அச்சத்தைத் தெரிவிப்பதாக இருந்தால் அது மருட்சி இலக்கியம் அல்லது எச்சரிக்கை இலக்கியம் (dystopian literature) எனப்படலாம். ரே பிராட்பரியின் ஃபாரென்ஹீட் **451** என்னும் நாவல் இரண்டாவது கற்பனை வகையில் மருட்சி இலக்கியத்தைச் சேர்ந்தது. புதிய சாதனைகளை வியந்து பாராட்டும் விஞ்ஞானப் புனைகதையிலிருந்து சமூகப் போக்கின் அவலத்தை முன்னுணர்ந்து எச்சரிக்கும் மருட்சிப் புனைகதைக்கு அவர் போன விதம் நேரான பாதைதான் எனலாம். இரண்டுக்கும் இயல்பான ஒரு தொடர்பு இருக்கிறது.

ரே பிராட்பரி நிறைய எழுதியவர்; சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை, கவிதை, கட்டுரை என்று பல இலக்கிய வகைகளில் பாராட்டப்பட்ட படைப்புகளைத் தந்தவர். அவருடைய படைப்புகளில் இலக்கியக் கல்வியாளர்களின் கவனத்தைக் கவர்ந்தவற்றில், திறனாய்வாளர்கள் பாராட்டியவற்றில் முன்னிற்பது ஃபாரென்ஹீட் **451**. (மற்றொன்று 'செவ்வாய்ப் பரம்பரைக் கதைகள்' (Martian Chronicles).) ஃபாரென்ஹீட் **451** பல தலைமுறைகளாக மாணவர்கள் படித்து, வகுப்பறைகளில் விவாதித்துவரும் நாவல். திரைப்படமாக, நாடகமாக வந்து பலர் பார்த்த நாவல். இந்த ஆண்டு இந்த நாவல் காதால் கேட்க ஒலிப் பேழையில் வெளியாகியிருக்கிறது. இருப்பினும், இது திறனாய்வாளர்கள் கொண்டாடி உருவாக்கும் அமெரிக்க இலக்கிய நூல் வரிசையில் (literary canon) இடம்பெறுவதில்லை; ஒரு இலக்கிய பீரங்கியாக பிராட்பரி கருதப்படுவதில்லை. இதற்குக் காரணம் சொல்ல முடியவில்லை. விஞ்ஞானப் புனைகதைகளுக்கு இலக்கிய மதிப்பு குறைவாகத் தரப்படுவது ஒரு காரணமாக இருக்கலாம்; எதிர்காலத்தைப் பற்றிய புனைகதைகள் யதார்த்தமான இலக்கியம் அல்ல என்னும் கருத்தும் இந்தப் பார்வைக்கு ஒரு காரணமாகலாம். தமிழ் எழுத்தாளர்கள் தாங்கள் படித்ததாகச் சொல்லும் வெளிநாட்டு நாவல் பட்டியலில் இது இருப்பதில்லை. இந்த நாவல் எழுதப்பட்டு (**1953**) அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு இதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவருவது வரவேற்கப்பட வேண்டிய நிகழ்ச்சி.

1951இல் ஒரு நூலகத்தின் நிலவறையில் இருந்து ஒரே மூச்சில் எழுதிய தீயணைப்பாளன் (Fireman) என்னும் குறுநாவலின் விரிவாக்கம் இந்த நாவல். புத்தகங்கள் படிப்பதைத் தடைசெய்த ஒரு நாட்டில் புத்தகங்களை எரிக்கும் பணியில் ஈடுபட்ட ஒரு தீயணைப்பாளனுக்குத் தான்

செய்யும் தொழிலில் மகிழ்ச்சி இருந்தது. இந்தத் தொழில் மீது இருந்த பிடிப்பு வெறுப்பாக மாறித் தொழிலை உதறும் அவனுடைய மனதின் பரிணாமமே கதை. அவன் எரிக்கும் பணியிலிருந்து புத்தகங்களைச் சேர்த்துப் பாதுகாக்கும் நூலக இயக்கப் பணியில் சேருமளவு மாறுகிறான். இந்தக் கதை தீயணைப்பாளன் மோன்டாக்கின் பார்வையில் படர்க்கைக் கூற்றாகச் சொல்லப்படுகிறது. இவனே கதையின் தலைவன். கதையின் எதிர்த் தலைவி இவனுடைய மனைவி மில்ட்ரெட் எனலாம். அவளுடைய வாழ்க்கை இன்பம் தொலைக்காட்சியில். மற்றொரு எதிர்த் தலைவன் தீயணைப்புப் படையின் கேப்டன் பியாட்டி; இவனுடையது அதிகாரத்தின் குரல். இவர்கள் இருவரும் சமூகத்தின் அடையாளங்களே. எனவே, அமெரிக்கச் சமூகமே இந்த நாவலின் எதிர்த் தலைவன் என்று சொல்ல வேண்டும்.

இரண்டாவது உலகப் போர் முடிந்தபின் அமெரிக்க அரசையும் சமூகத்தையும் கம்யூனிச பயம் பற்றிக்கொண்டது. குடிமக்களின் நடவடிக்கைகள்—என்ன எழுதுகிறார்கள், என்ன படிக்கிறார்கள் என்பது உட்பட—கண்காணிக்கப்பட்டன; அவற்றுக்குத் தடைகள் விதிக்கப்பட்டன. (இன்று மத அடிப்படைவாத பயத்தால் இயற்றப்பட்டுள்ள பாதுகாப்புச் சட்டங்களையும், தகவல் பரிமாற்றக் கண்காணிப்புகளையும் இங்கே நினைத்துப்பார்க்கலாம்.) இந்தச் சூழலில் எழுதப்பட்டதுதான் ஃபாரென்ஹீட் **451**. காகிதத்தை எரிக்கும் வெப்பம் என்பதோடு, சமூகத்தையே எரிக்கும் உச்சமான எல்லாப் புத்தகங்களுக்கும் தடை விதிப்பதன் சூட்டையும் நாவலின் தலைப்பு சுட்டுகிறது. (மக்களை ஒரு பொய்யை நம்பும்படி செய்து, ஈராக்கின் மீது படையெடுத்து, அது பயங்கரவாதத்தின் மேல் போர் என்று ஏற்றுக்கொள்ள வைத்ததைப் படம்பிடித்துக் காட்டும் மைக்கேல் மூரின் ஃபாரென்ஹீட் **9/11 (2004)** என்னும் ஆவணப் படமும் அரசு மக்கள் மனதைச் சூடேற்றியதன் குறியீடுதான்.)

உலகப் போருக்குப் பிறகு, போரின் விளைவாக அமெரிக்கப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்தது. மக்களின் கையில் பணம் தாராளமாகப் புழங்கி அவர்களுடைய வாங்கும் சக்தியை அதிகரித்தது. நுகர்வுக் கலாச்சாரம் வேர் விட்டது. போருக்காக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் துணையோடு உற்பத்திசெய்யப்பட்ட நுகர்பொருள்கள் சந்தையை நிறைத்தன. அந்தப் பொருள்களில் தொலைக்காட்சி முக்கியமானது. தொலைக்காட்சி மக்களுக்குக் கேளிக்கை அளிக்கும் சாதனமாகப் பயன்பட்டது. இதை ஒட்டி ஆயிரக்கணக்கான மக்களை ஒருசேர உட்கார வைத்துக் கேளிக்கைகளில் பொழுதைப் போக்கவைக்கும் வேறு கலாச்சாரச் சாதனங்கள் தோன்றின. குடிமக்கள் நுகர்வோர் ஆயினர். சமூகச்

சிந்தனைகளிலிருந்து மக்களை விலக்கிவைக்கும் இந்த வெகுஜன கலாச் சாரம் அரசுக்கும், எதிர்ப்பின் பயம் இல்லாமல் ஆள, வசதியாக அமைந் தது. இந்த வெகுஜனக் கலாச்சாரமும் எதிர்காலச் சமூகம் பற்றிய மருட் சிக்கு ஒரு காரணம். சிந்தனைகளை ஒடுக்கும் அதிகாரமும் சிந்தனைகளை ஒதுக்கும் கலாச்சாரமும் சமூகத்தின் அழிவுக்கு அடிக்கல் என்பது நாவல் தரும் எச்சரிக்கை.

இது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பொருந்தும்; மதங்களின் குறைக ளைக் காட்டும் புத்தகங்களைத் தடை செய்யும் இன்றைய அரசியல் சூழ் நிலையில், சாதிகளைப் பற்றி எழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களைக் கேலிசெய்யும் திரைப்படங்களை முடக்கும் இன்றைய சமூகச் சூழ்நிலை யில், புத்தகங்களையும் படங்களையும் எரிக்க வேண்டும் என்னும் ஒரு ஆணை சரியானதாகவே தோன்றும். புதுமைப்பித்தனின் சில கதைகளை மாணவர்களிடமிருந்து மறைப்பது நியாயமாகத் தோன்றும். இந்த மாதிரியான சமாதானங்கள் சமூகத்தை எங்கு கொண்டுபோய் விடும் என்பதை இந்த நாவல் சுட்டுகிறது. அரசின் தடைக்கு—உருவமாக, எரிப் புக்கு—சமூகத்தின் பகுதியினர் தங்களுக்கு விருப்பம் இல்லாத எழுத்துகள் தங்கள் உணர்வுகளைக் காயப்படுத்துகின்றன என்று கொதிப்பது ஒரு காரணம் என்பது கேப்டன் பியாட்டின் வாய்வழியே நாவலில் ஒரு இடத்தில் சொல்லப்படுகிறது. இந்தியர்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு யதார்த்தம் இது.

ரே பிராட்பரியிடம் ஒருவர் நீங்கள் பெத்தண்ணாவுக்குப் பயப்படு கிறீர்களா என்று கேட்டார். பெத்தண்ணாவைவிட சின்னத் தங்கச்சிக்குத் தான் பயப்படுகிறேன் என்று பிராட்பரி பதில் சொன்னார். அதாவது, மக்களைக் கண்காணித்துச் சுதந்திரத்தைக் குறைக்கும் அரசைவிட (Big Brother) மக்களைக் கவர்ச்சியால் கிறங்கடிக்கும் ஜனரஞ்சகக் கேளிக்கை களிடம் அதிக பயம் என்றார். அவருடைய இந்தப் பயம் புத்தகம் வெளி வந்த அறுபது ஆண்டுகளில் பல்கிப் பெருகியிருக்கிறது. இப்போது வலைத்தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் ஒரு சொடுக்கில் வேண்டிய படத்தைப் பார்த்தும், பாட்டைக் கேட்டும் தன்னை, தன்னைச் சுற்றி யிருப்பவர்களை மறக்கலாம். வலையில் எந்த நேரமும் விளையாடிப் பொழுதைக் கழிக்கலாம். பள்ளிக்குச் சென்றும், புத்தகமில்லாத வீடுகள் சாதாரணமாகிவருகின்றன; வாசிப்பது பலருக்குப் பிரமப்பிரயத்தனம்; சில நிமிடங்களுக்கு மேல் ஒரு செய்தியைக் கிரகிக்கப் பலர் மனதிற்குப் பொறுமை இல்லை; ஆற்றல் இல்லை. பிராட்பரி பயந்தபடி புத்தகமில் லாத சமூகத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அவர் எச்ச

ரித்தது உண்மையாகி வருவது ஃபாரென்ஹீட் **451** இன் குறையாத மதிப்புக்குச் சான்று.

நாவலின் கதைத் தலைவன் மோன்டாக் புத்தகங்களை எரிப்பதில் இன்பம் கண்டவன். தீயை அணைப்பது துயரைத் துடைக்கும் செயல் என்பது போல, அறிவுத் தீயை அணைப்பது நன்மை செய்யும் செயல் என்னும் எண்ணம் கொண்டவன். நாவல் அவனுடைய இன்பத்தை வெளியிடுவதில் துவங்குகிறது. நாவலின் இறுதியில், ஆற்றில் தண்ணீரில் மிதக்கும்போது பார்த்த சூரியனின் நெருப்பு நிலவுக்கும் பூமிக்கும் வெளிச்சம் தருவது புரிகிறது. புத்தகங்கள் வெளிச்சம் தருகின்றன என்ற வெளிச்சம் தான் முன்பே பெற்றுப் புத்தக எரிப்புக்கு எதிரியானது அவனுக்கு மகிழ்ச்சி தருகிறது.

இந்த நாவல் ஒரு பெரிய சமூகப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறது. சமூகத்தின் போக்கு மாற வேண்டும் என்று வாசகர்களை நினைக்கத் தூண்டுகிறது. ஆனால், சமூக மாற்றத்தைப் பிரச்சாரம் செய்யும் நாவல் அல்ல இது. இது சமூகப் பிரக்ஞையைக் காட்டும் நாவல். இந்தக் காட்டல் கலையழகோடு கூடிய நாவல் இது. கலையழகும் சமூக சீர்திருத்தமும் கூடி இலக்கியமாவதைச் சாதிக்கும் நாவல். இதன் கலையழகில் நாவலின் மொழி நடை ஒரு முக்கியமான அம்சம். அதில் கண்ணை மறைக்கும் எளிமை இருக்கிறது. எளிமைக்குக் கீழே உள்ள ஆழத்தைக் காண உற்றுப் பார்க்க வேண்டும். பிராட்பரி எதையும் வெகு சுத்தமாகச் செய்பவர்; தான் எழுதியதைத் திரும்பத்திரும்பத் திருத்துபவர். இந்த உழைப்பை இவர் மொழியிலும் காணலாம்.

இந்த நாவலில் கிறித்துவ நம்பிக்கைகள் குறியீடுகளாக வருகின்றன. இவற்றைப் புரிந்துகொண்டு வாசிப்பு அனுபவத்தை வளமாக்க மோன்டாக் வளர்ந்த கலாச்சாரத்தின் பரிச்சயம் வேண்டும்.

பிராட்பரியின் நடை படிமங்கள் நிறைந்தது. மோன்டாக் ஆற்றில் மிதந்துகொண்டு காணும் காட்சியின் வருணனை வாக்கியங்கள் சிறியவை; அந்த வருணனையை சூரியன், சந்திரன், வெளிச்சம், நெருப்பு, தீ, வானம், பூமி, ஆறு முதலான படிமங்கள் நிறைக்கின்றன. நமக்குப் பாரதியின் வசன கவிதையின் நினைவு வருகிறது.

யதார்த்தத்தைப் பொதுமையாக்குவதும் பிராட்பரியின் உத்தி. அமெரிக்காவின் சோளக் கொல்லையான மத்தியப் பகுதியில் இல்லினாய் மாநிலத்தில் உள்ள இவருடைய சொந்த ஊரை முகவரி இல்லாத பச்சை நகர் (Green Town) ஆக்கித் தன் பாத்திரங்களைப் பல கதைகளில் உலாவ விடுகிறார் (ஆர். கே. நாராயணின் மால்குடி இங்கே நினைவுக்கு வருகி

றது); தன் ஊரின் இயக்கங்களை, ஆசாபாசங்களை, முரண்பாடுகளை ஊர்களின் பொதுத் தன்மை என்று காட்டுகிறார். ஃபாரென்ஹீட் **451** இலும் மோன்டாக் புத்தகங்களை எரிக்கும் ஊருக்குப் பேர் இல்லை. ஊரின் பேர் இல்லாத நாவல் எல்லா இடத்துக்கும் பொது.

நமக்கும் பொருந்தும் ஒரு சமூக விமர்சனத்தை அமெரிக்காவை வைத்துச் சொல்லும் இந்த ஆங்கில நாவல் இப்போது தமிழில் வருகிறது. நாவலின் தனி நடையை மொழிபெயர்ப்பில் கொண்டுவந்து தமிழுக்கு ஒரு தனி நடையையும் தருகிறது.

டாக்டர் இ. அண்ணாமலை
சிகாகோ